University of Jaffna
238.341
ARU
40797(AR: MAIN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

262
ARU
AY

SOUTH ASIA SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3/=

238.B41
ARU

AR

40797

SOUTH ASIA SECTION

REFERENCE
For Permanent Use in the Library

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர்நினைவுமலர்



ARCHIVES

Navalar Souvenir.

1938

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நாவலர் நினைவுமலர்

மலர் ஆசிரியர்

பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள்

செந்தமிழ்ப் பாட்டு முரையுந்
தீட்டிய செய்வெண் மலர்

40797

இது

'ஈழகேசரி' அதிபதி

நா. பொன்னையா அவர்களால் வெளியிடப்பட்டது

ARCHIVES

சுன்னாகம்

திருமகள் அச்சு யந்திரசாலை

ஈசுவர—பங்குனி

1938

பதிப்பு உரிமை]

[விலை ரூபா ஒன்று

40797

University of Jaffna
40797
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் நினைவுமலர்

உள்ளுறை

பதிப்பாளர் கருத்து			V
முன்னுரை			VII
1. என் பெருந்தவப் புதல்வன்	—	தமிழ்த்தாய்	1
2. நாவலர் வாழ்த்து	—	சுவாமி சுத்தானந்த பாரதியார்	2
3. "ஆறுமுக நாவலர்"	—	அ. குமாரசுவாமிப்புலவர்	4
4. நான் கேட்டபடி	—	டக்டர். உ. வே. சாமிநாதையர்	7
5. பனிக்காலம் நன்று	—	C. S. ஜகதீச சுந்தரம்பிள்ளை	9
6. நாவலர் பதிகம்	—	நெ. வை. செல்லையா	10
7. நமது முதற் கடமை	—	S. வையாபுரிப்பிள்ளை B. A., B. L.	12
8. தமிழர் பெருந்தகை	—	டக்டர். க. கணபதிப்பிள்ளை B. A. (Hons) Bh. D.	13
9. "பரவு புகழ் ஆறுமுகநாவலர்"	—	மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை	18
10. "சைவப் பயிர் வளர்க்கு மெழிலி"	—	,, ,,	,,
11. "சிவசிந்தாமணி"	—	,, ,,	19
12. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பேறு	—	முதலியார் செ. இராசநாயகம் J. P.	20
13. "*Navalar Day*"	—	"Hindu Organ"	25
14. நாவலரம்மானை	—	பண்டிதர் சு. இராமசாமி	26
15. நாவலரவர்களின் சால்புப் பாராட்டு	—	பேராசிரியர் S. சோமசுந்தர பாரதியார்	27
16. "உலக முவப்பத் தோன்றிய பரசமய கோளரி"	—	வித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை	29
17. "சிவமே பொருளெனத் தேர்ந்தோன்"	—	சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார்	31
18. "கருணையங்கடல்"	—	,, ,,	,,
19. "சிவபோகத் தெள்ளமுதருந்தினேன்"	—	,, ,,	32
20. நாவலரையா	—	திருமயிலை சே. வெ. ஐம்புலிங்கம்பிள்ளை	33
21. "*The Champion Reformer of Hindus*"	—	Sir. Pon. Ramanathan K. T.	35
22. தினகரன்	—	க. சோமசுந்தரப் புலவர்	35
23. "பிசாசு யார்"	—		36
24. "நாவலர் திருநாள்"	—	"இந்துசாதனம்"	37
25. தலைவன் பாங்கனை முன்னிலைப்படர்க்கை யாகக் கழற்றெதிர் மறுத்தல்	—	சிவங். கருணாலய பாண்டியப் புலவர்	39
26. சமய குரு	—	சே. சோ. ஜகதீச சுந்தரம்பிள்ளை	40
27. "பெயரா அறிவிற் பெரியோன்"	—	திரு. தியாகராசச் செட்டியார்	43
28. "என்னுளங் குடிகொண்டோன்"	—	,,	,,
29. "பேறு பெரிதடைந்தோன்"	—	,,	44
30. "பரிகாரமுத்திரையும் பரிகாமுத்திரையும்"	—		45
31. "வளருங் காயைப் பிஞ்சிலே தெரியும்"	—	அ. சதாசிவம்பிள்ளை	46
32. மணி	—	பண்டிதர் திரு. மு. நல்லதம்பி	48
33. பிறவிப்பயன் பெற்ற பெரியார்	—	தமிழ்ப் பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மாள்	49
34. "சபாப் பிரசங்க சிங்கம்"	—	'தத்துவவிசாரணி'ப் பத்திராதிபர்	51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35.	"எந்தாய்"	—	வித்துவசிரோன்மணி ச. பொன்னம்பல பிள்ளை 52
36.	நாவலர் புலமை	—	திரு. குல. சபாநாதன் 56
37.	"உத்தமோத்தமன்"	—	சி. சதாசிவக்குருக்கள் 62
38	"*A Hindu Luther*"	—	"Ceylon Patriot" 65
39.	"இப்புத்தகத்தை விட்டுவிட்டீர்கள்"	—	65
40.	நாவலர் நல்லிசைக்கும்மி	—	தா. தங்கராசன் 66
41.	நாவலரின் பெருமை	—	A. சிதம்பரநாதச் செட்டியார் M. A., 67
42.	"சற்குருநாத சுவாமிகள்"	—	"ஸ்ரீ லோகரஞ்சனி" 70
43.	"செயத்தக்க செய்த பெரியார்"	—	அ. சிவசம்புப் புலவர் 71
44.	"நாவலர் கற்ற நூல்கள்"	—	72
45.	"நாவலரைப்போல நமக்காளில்லை"	—	சை. வி. வி சங்க வெளியீடு 73
46	"தேசிக சிகாமணி"	—	சிவ. சங்கரபண்டிதர் 74
47.	"*The Hindu of Hindus*"	—	Sir. Muthu Kumaraswamy Kt. 74
48.	"நாவலரின் மாணுக்கர்கள்"	—	த. கைலாசபிள்ளை 75
49.	"சைவ மருந்து"	—	தண்டபாணி சுவாமிகள் 76
50.	"பாரதப்பதிப்பு"	—	77
51.	"நற்றமிழ்க் குரிசில்"	—	தாண்டவராய சுவாமிகள் 78
52.	"ஒழுக்கவரம்பைக் கடவாதவர்"	—	சி. செல்லையாபிள்ளை 78
53.	"நாவலர் வசனநடை"	—	79
54.	நாவலரவர்கள் கையெழுத்து மாதிரி	—	79
55.	"ஆறுமுகநாவல சற்குரு"	—	ம. க. வேற்பிள்ளைப் புலவர் 80
56.	"நாவலரைப்போல் ஒருவருமில்லை"	—	ஹைக் கோர்ட் நீதிபதி. தி. சதாசிவ ஐயர் 80
57.	"கிரிவிளக்கு"	—	அ. குமாரசுவாமிப் புலவர் 81
58.	"நாவலர் புகழை நானே சொல்ல வல்லேன்"	—	க. சரவணமுத்துப்பிள்ளை 82
59.	"*M. R. Ry. Arumuga Navalar*"	—	"Mofussil Guardian" 83
60.	"சிந்து"	—	விநாயகமூர்த்திச் செட்டியார் 84
61.	ஆறுமுக நாவலர்	—	பிரான்சிஸ் கிங்ஸ்பரி B. A., 84
62.	"நாவலரிடத்து விளங்கிய குணங்கள்"	—	அம்பலவாண நாவலர் சுவாமிகள் 85
63	ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலரவர்கள் பரிசோதித்தும், புதிதாய் இயற்றியும் புத்துரை எழுதியும் வெளியிட்டநூல்கள்	—	86
64.	"வித்வ சூடாமணி"	—	"தத்துவ விசாரணி"ப் பத்திராதிபர் 87
65.	ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலரவர்கள் சம்பந்தமான சில வரலாறுகள்	—	மு. இராமலிங்கம் 88
66.	நாவலர் கிரகநிலை	—	95
67.	நாவலர் குருபூசைத்தினம்	—	95
68.	"அவதார புருஷர்"	—	சு. பொன்னம்பலபிள்ளை 95
69.	அவர்களைப்பற்றி ஒன்றுஞ் சொல்ல முடியாது	—	பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை 96
70.	நாவலப் பெருந்தகையார்	—	வித்துவான் சி. கணேசையர் 102
71.	தமிழ் மக்களின் பெருங்கடமை	—	பொதுநிலைக்கழககுரு, சுவாமி வேதாசலம் 103
72.	நற்றமிழ் நாவலர் நயஞ்சொல் நாற்கவிகள்	—	நம. சிவப்பிரகாசம் 104
73.	நாவலர் இறந்தபின் நடந்தவை	—	மு. இராமலிங்கம் 105
74.	நாவலர் பேறு	—	நா. பொன்னையா 110
75.	வரவேற்புரை	—	பண்டிதர் கா. பொ. இரத்தினம் 111
76.	மங்கள விருத்தம்	—	116

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாளர் கருத்து

உலகத்திலே தருமங்குன்றி, அதர்மம் விருத்தியடைந்து மக்கள் ஒழுகலாற்றினின்றுந் தவறி, அல்லற் படுகுழியில் வீழ்ந்து, அலக்கணுறுங்கால், அவர்களைக் கரையேற்றி, அவர்தம் வாழ்வினைப் புதுக்கிப் புனிதமடையச் செய்ய வல்ல அவதார புருடர்கள் தோன்றுவரென ஆன்றோர் அறுதியிட்டுக் கூறுவர்.

கடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டிலே நமது நாடானது எல்லாத் துறையினும் கீழ்நிலை யடைந்திருந்த காலத்தில்—புறச்சமய இருளானது படர்ந்து மக்கள் தம் நல்வாழ்வைச் சீர்குலைத்து நின்ற சமையத்தில்—எல்லாம் வல்ல இறைவனது திருவருட் டிறத்தினாலே ஞானசூரியனும் **நாவலர் பெருமான்** திருவவதாரஞ் செய்தருளினார். மகா தியாக மூர்த்தியாய்—ஒப்பற்ற பரோபகாரியாய் அவதரித்த அப்பெருமான், தமது நாட்டினதும் மக்களதும் சமயத்தினதும் பாஷையினதும் வீழ்நிலையை உணர்ந்தார். சைவத்துக்கும் தமிழுக்கும் நாட்டுக்கும் தம்மை அர்ப்பணஞ் செய்தார். அதனால் தமது, பிறவியின் பெரும் பயனையுந் துய்த்தார். இதில் எவ்வித ஐயத்துக்கும் இடமேயில்லை.

"நல்லூரக ராறுமுக நாவலர் பிறந்திலரேற், சொல்லுதமி ழெங்கே? சுருதியெங்கே?" என ஆன்றோர் கூறியமையும் நோக்கற்பாலது. இஃதிவ்வாறாக, நாவலர் பெருமான் தம் நாட்டினதும் தாய்மொழியினதும் உண்மைச் சமயத்தினதும் உயர்வுகருதி நாட்டுடன் இரண்டறக் கலந்து தம் வாழ்வை நடத்தியமையாலன்றோ நாம் இன்றும் சைவர்களாகவும் தமிழர்களாகவும் இருக்கின்றோம். இத்தகைய மகா புருடோத்தமர்களை, மற்றைய தேசங்களில் எத்துணைச் சிறப்பாக—எத்தனை ஆயிரமாண்டுகளாக—எவ்வளவு பெருமையாகக் கொண்டாடி வருகிறார்களென்பதைக் கண்டும் கேட்டும் அறிந்திருக்கும் நாம், நாவலரவர்களுக்குச் செய்ய வேண்டிய—அவர்தம் வாழ்க்கையைப் படியெடுத்து நடக்கவேண்டிய—அவர்களது தொண்டுகளைப் பூர்த்தியாக்கவேண்டிய—கடமைகளில் தவறிவிட்டோமென்றே கூறவேண்டியிருக்கிறது.

தமிழ் நூல்களை யச்சேற்றுவதற்கு அச்சியந்திரசாலையைத் தாபித்தார்கள். கல்வியின் பொருட்டும் சமயத்தின் பொருட்டும் வித்தியாசாலைகளைத் தாபித்தும், தாபிக்கச் செய்தும் திறம்பட நடத்தினார்கள். மக்களின் பசி, பிணி முதலியவைகளைக் கண்டு அரசியலாருடன் எதிர்த்து வாதாடினார்கள். ஆலயங்களின் சீர்கேடான நிலைகண்டு அஞ்சாது போராடினார்கள். இவைகளால், தமராலும் பிறராலும் நிந்திக்கப்பட்டார்; பகைமை பாராட்டப்பட்டார். இத்தியாதி செயல்களுக்கெல்லாம் அஞ்சினாரல்லர். பொருள் வருவாய் கருதித் தம் தூய நெறியினின்றும் அணுத்துணையும் வழுவினாரல்லர். இவற்றிலொன்றையேனும் பின்பற்றி நடப்பாரிக்காலத்தி லெவரேனும் உளரோ! உளரோ!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் அவர்களின் காலம், ஒரு நூற்றாண்டு கழிந்துவிட்டது. இந்த நூற்றாண்டிலும் நாவலரவர்களின் வியாபகம் யாவரிடத்தும் நிலைபெறும் பொருட்டாக, அவர் பாதகமலங்களில் ஒரு நினைவுமலரைச் சூட்டப் பெருமுயற்சிசெய்து கொண்ட எமது நண்பரும் தமிழன்பருமான பண்டிதர் கா. பொ. இரத்தினமவர்களின் பெருந்தன்மைக்குச் சைவர்களும் தமிழர்களும் என்றுங் கடமைப்பட்டவர்களே.

இந்நினைவுமலரோ, பல பேரறிஞர்களின் உள்ளக் கமலங்களினின்றும் ஒவ்வோரிதழாகச் சேர்த்துப் பொருட்டேன் நிறைத்துச் சைவமுந் தமிழும் கமழ, அழகெலாம் நிறைத்து யாக்கப்பட்டது ஆதலின், வாடா—அழகழியா—நறுமணங் குன்றா. என்றும் தன்னைச் சூடிய நாவலர் பெருமானின் புகழ்போல நின்று நிலவ இறைவன் திருவருள் பாலித்தமைக்கு, யாங்களனைவரும் திரிகரண சுத்தியோடு வழிபாடாற்றுவோமாக.

இத்தொண்டினைச் செவ்வனே நிறைவேற்றவேண்டிய பொறுப்பு என்மேற் சுமத்தப்பட்டதாயினும், இறைவனருளால் அஃது குறைவற நிறைவுபெற்றமை இன்புறற்பாலதேயாம்.

நாவலர் பெருமான் திருவடிகள் வாழ்க!

"திருமகள் நிலயம்",
மயிலிட்டி தெற்கு.

நா. பொன்னையன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

முன்னுரை

கண்ணுதல் தந்தமுக் கண்ணன் மலரடி
மண்ணக மாந்தர் எண்ணிடில் நாளும்
வேண்டிய வேண்டியாங் கெய்துவ ரீண்டே.

உடல் பொருளாவி மூன்றனையும் செந்தமிழுக்கும் சைவசமயத்திற்கும் அர்ப்பணஞ் செய்து ஒப்பாரும் மிக்காருமின்றித் தமிழ் நாட்டில் விளங்கிய யாழ்ப்பாணத்து நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களைப் போற்றித் தங்கள் தங்களாலியன்ற கைம்மாறுகளைச் செய்தல் தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். தொல்புரம் இளைஞர் கலாவிருத்திச் சங்கத்தாரும் தங்களாலியன்ற கைம்மாற்றைச் செய்ய வெண்ணிச் சென்ற நாவலர் குருபூசைத் தினத்தன்று நாவலர் நினைவுமலரென்னும் வெளியீடொன்றை வெளியிட விரும்பி, என்னை அம்மலரினாசிரியராக விருந்து வேண்டியன செய்யுமாறு கேட்டார்கள். அன்பர் பணியை இன்புடனாற்றலே என்பணியாகக் கொண்டுளேனாதலின் யானுமதற்கிசைந்து நினைவுமலரைக் குருபூசைத் தினத்தன்று வெளியிட முயன்றேன். அறிஞர்கள் பலருடைய கட்டுரைகள் காலத்துக்குக் கிடையாமையால் குருபூசைத் தினத்தன்று மலரை வெளியிட முடியாது போயிற்று. தைப்பொங்கலுக்கிடையில் வெளியிட முயன்ற என் முயற்சி, சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் லண்டன் 'மெற்றிக்' வகுப்பில் படித்து வந்த எனது அருமைச் சகோதரன் தியாகராசாவின் சடுதி மரணத்தால் தடைபட்டது. எனினும் இறையருளாலிம்மலர் ஈசுர வருடம் முடிவதற்கிடையில் வெளியாகின்றது.

'இம்மலரை வெளியிடப் போதிய பொருளின்றித் தொல்புரம் இளைஞர் கலாவிருத்திச் சங்கத்தார் இடர்ப்படுகின்றார்கள். தாங்கள் வெளியிடின் நன்று,' என யான் கூறலும், அதற்கிசைந்து இம்மலரைச் சிறப்புற அச்சிட்டு வெளிப்படுத்தும் 'ஈழகேசரி' அதிபர், திரு. நா. பொன்னையா அவர்களுக்குச் சங்கத்தாரேயன்றித் தமிழுலகுங் கடமைப்பட்டது.

இம் மலரில், நாவலர் அவர்களைப் பற்றித் தற்கால அறிஞர்களும் நாவலர் காலத்தும் பின்பு மிருந்த அறிஞர்களும் எழுதிய கட்டுரைகள், பாக்கள், புகழுரைகள் முதலியன அடங்கியிருக்கின்றன. நாவலர் காலத்து நடந்த சில பத்திரிகைகளிலிருந்துஞ் சில பகுதிகள் எடுத்துச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலரைச் சிறப்புறச் செய்யப் பல குறிப்புகள் கூறியுதவிய பண்டிதர் ஸ்ரீமத் சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், எனது வேண்டுகோளை யேற்றுக் கட்டுரைகள், பாக்கள் அனுப்பி இம்மலரை நறுந்தேன் பிலிற்றச் செய்த பேரறிஞர்களுக்கும் நாவலர் கையெழுத்து 'Block' ஐ உதவிய திரு. த. கைலாச பிள்ளை அவர்களுக்கும் எனது நன்றியை யுரிமைப் படுத்தலன்றி வேறென் செய வல்லேன்? அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர், திரு. சு. ச. கந்தையா அவர்களும் எனது மாணவர்கள் சிலருஞ் செய்த உதவிகள் பாராட்டத்தக்கன.

ஒன்றுக்கும் பற்றாத சிறியேனை இவ்வரும் பெரும் முயற்சியிலீடுபடுத்தி நிறைவேற்றியருளிய இறைவனதுங் குருவினதும் இணை மலர்ப் பாதங்களை இறைஞ்சுகின்றேன்.

பூமணக்கும் பொழில்மணக்கும் புனிதநல்லூர் தான்மணக்கப்
பாமணக்க உரைமணக்கப் பகர்சைவ நெறிமணக்கத்
தேமணக்குந் தமிழணங்கு செய்தபெருந் தவப்பயனால்
நாமணக்க அவதரித்த நாவலன்றாள் பொலிகமன்னே.

இங்ஙனம்,

கா. பொ. இரத்தினம்.

'மணிவாசம்'
சுளிபுரம்,
ஈசுர - பங்குனி - கரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ்பவமஜி

வ்ஶபவ்ஶ்ஜிச்ஶஜி

ச்கஸ்கூ ஜிச்ர்ஸ்ழு ஸ்ரூஜிஸ்க கூத்ர்ஜி
ப்கஸ்ரூ கஸ்வ கரவகஜி கூத்ர்வ்மஜி
ப்கஸ்ரூ கஸ்ஸ்ரூ பவகச்ஶ்ப கூத்ர்ரப
ப்கஸ்கூ ர்ரரூரப ஶஜிஸ்மகஸ்ர கூத்ர்வ்ரப
ப்கஸ்கூ ஸ்ரூஜி க்கஸ்ரூமஜி கூத்ர்பஜி
கூக்க ர்ஸ்ரரப ப்ஜிஸ்ரவஜ்பஸ்க கூத்ர்ஸ்ரப
ஸ்ரூஜி ர்ஶ்ஶஜ்ரூகூ கஸ்ச்ஜிஸ்ரூம கூத்ர்ரம
.ர்ரமர்ரம ஜிஸ்ரூம ர்ஸ்ரூர்கபரகூஜி கூத்ர்வ்கவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Block by Eelakesari.

மாநீலம் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

'என் பெருந்தவப் புதல்வன்.'

(தமிழ்த்தாய்)

தொல்புரம் "இளைஞர் கலாவிருத்திச் சங்க"த்தார் **நாவலர் நினைவுமல** ரெனும் வெளியீடொன்றை வெளியிடப் போகின்றார்கள் என்பதை அறிந்து இன்பக்கடலி லாழ்ந்தேன். அந் நினைவுமலரை நறுநாற்றமுடைய பொன்மலராக்கத்தக்க ஆற்றல்படைத்த பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களை ஆசிரியராக ஏற்படுத்தியது சாலச் சிறந்ததே. நிற்க,

எனது அருந்தவத்துதித்த பெருந்தவப் புதல்வராகிய நாவலர் அவர்கள் எனது மக்கள் யாவராலும் உச்சிமேற்கொண்டு போற்றத் தக்கவர்.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக'

என, என் தவப்புதல்வராகிய திருவள்ளுவர் கூறியபடி, கற்கவேண்டிய வற்றை ஐயந்திரிபறக் கற்றுப் பின் அதற்குத் தக நின்றவர் அவர். ஈன்ற ஞான்றினும் பார்க்க என்னைப் பெரிதும் உவப்படையச் செய்த என் மக்கள் சிலரில் நாவலரும் ஒருவராவர்.

அவர், எனது அணிகள் பலவற்றைப் புதுக்கித் தந்தும், பல புது அணிகளைச் செய்து தந்தும் என்னை அணியுடன் இலங்கச் செய் திருக்கிறார். அவர் அவதரித்திராவிடில் இன்றைய உலகில் நான் பெரு மிதத்துடன் உலாவமுடியாதவளா யிருந்திருப்பேன். எனக்கும் எனது மக்கள் யாவருக்கும் அவர் செய்த பேருதவிக்கு எத்தகைய கைம்மாறுஞ் செய்ய முடியாது. எனினும், தங்கள் தங்களாலியன்ற கைம்மாறுகளைச் செய்யவேண்டியது எனது மக்களுடைய கடமையாகும். என் அறிவுடை மக்கள் பலர் தங்களாலியன்ற கைம்மாறுகளைச் செய்திருக்கிறார்கள் - செய்கிறார்கள் - செய்வார்கள். இந் நாவலர் நினைவுமலர் எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததொரு கைம்மாறாகும். இஃது நாவலரின் இசையாகிய நறு மணத்தை நானில மெங்கும் பரப்பத்தக்கது. இம்மலர் வாழ்க! நாவல ரின் இசை பெருகுக! என்மக்கள் யாவரும் வாழ்க!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் வாழ்த்து.

(சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள், புதுவை)

அன்புப் புலவ!

நாவலர் நினைவுமலர் வெளிவருஞ் செய்தி கேட்டு உளமலர் இன்பத்தேன் பிலிற்றியது. தமிழ் வளர்த்த பெரியாரில் முன்னணியில் வைத்துப் போற்றத்தகும் நன்மணிப் புலவர் பெருமானுகிய ஆறுமுகநாவலரை ஒவ்வொரு தமிழனும் உன்னவேண்டும். துன்னவேண்டும். ஓதவேண்டும். ஓதி யொழுகவேண்டும். வள்ளுவர், சேக்கிழார், கம்பர் போன்று நாவலரும் தமிழைப் பெருமைப் படுத்திய அறிவு வள்ளலாவர். அறிவுடன் ஒழுக்கமும், சிவனடி மறவாச் சிந்தையும், தவமும் பூண்ட பெரியார் நாவலர். அன்னுர் பெயரையும், உரைகளையும் உலகெலாம் அறியச் செய்யத் தமிழர் கடமைப்பட்டிருக்கிறுர்கள். பெரியபுராணம், திருக்கோவையார், திருக்குறள், சைவ சாத்திரங்கள், நன்னூல், தொல்காப்பியம் முதலியவற்றைப் பார்க்குந் தோறும் நாவலரைத் தமிழர் நினைக்காமல் இருக்க முடியாது. அப் பெரியார் நினைப்பிற்கு இந்த எளிய அன்பு மலர்களைக் காணிக்கையாகச் சூட்டுக.

1. செந்தமி ழுய்ய, சைவத் திருநெறி விளங்க வந்தோன்!
அந்தமில் கல்வி கேள்வி யாழியைக் கடைந்து, நாளும்
தந்தனன் அமுத நூல்கள்; சாவிலா வரத்தைப் பெற்ற
நந்தமி ழுள்ள மட்டு நாவலன் வாழ்க மாதோ!

2. கல்வியின் வரம்பு கண்டோன்; கடவுண்மாக் கலைக ளுக்கிங்
கெல்லையே யானேன், வான்போல் இன்னுயி ருலகுக் கெல்லாம்
செல்வத்துட் செல்வ மான சிவநெறிச் செல்வஞ் சேர்த்து
நல்கிய வள்ள லான நாவலன் வாழ்க மாதோ!

3. அங்கையி னெல்லி போலே யாகமப் பொருளு ணர்ந்தோன்
சங்கரன் அருமைச் செல்வி யாகிய தமிழ ணங்கைத்
தங்கமாம் அரியணை மீ தேற்றியே தமிழ ரான
நங்குல முய்யச் செய்த நாவலன் வாழ்க மாதோ!

4. அருந்தமிழ்க் கலைமகள் கை யாழெனும் யாழ்ப்பா ணத்தின்
பெருந்தவப் பயனே, தென்னு டிலகிடப் பிறங்குஞ் சைவ
விருந்தளி மணியே, யெங்கள் வீடொறும் விளக்கே போலப்
பொருந்தொளிர் முருக னன்பார் நாவலன் பொலிக மாதோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அச்சத்தைத் துறந்தான்; உள்ளத் தரனையே நினைந்தான் மூவர்
சொற்சுவை அணிந்தான் ஆன்றோர் தொகுத்தநன் னூல்கள் வாழ
மெச்சுநற் பணிகள் செய்தான்; வியன்றமிழ் வியாச னென்றெம்
உச்சிமேல் வைக்கத் தக்க நாவலன் ஒளிர்க மாதோ!

6. தமிழினைப் புதுக்க வந்த தத்துவப் புலவ னென்கோ!
தமிழ்ப்பணி தனை மணந்த தவமணிச் சைவ னென்கோ!
தமிழிசை பரவ வந்த தாரகக் குழலே யென்கோ!
அமிழ்திலு மினிய சொல்லான் அறுமுக நாவ லோனே!

7. நற்றமிழ்க் குரிசி லான நாவலன் வாழ்வைப் பாரீர்!
கற்றவன் புரிந்த செஞ்சொற் கனிதமிழ்த் தொண்டைக் காணீர்!
பெற்றநந் தாயின் வீரப் பெருமையை நிலை நிறுத்த
முற்றிய காத லோடு முத்தமிழ் முழக்கஞ் செய்வீர்!

8. அருந்தமிழ் வாழ்க! நாளும் அறவினை பெருகச் செய்யும்
பெருந்தகை யாளர் வாழ்க! பிறங்குக தவ வொழுக்கம்
குருந்தடி வீற்றி ருக்குங் குருமணி யருளி னாலே
திருந்தடி யார்கள் வாழ்க, சிவநெறி தழைக்க மாதோ!

யாழ்ப்பாணத்தில் தமிழ்மொழிவளர்ச்சியும் சைவசமயப் பொலிவும் பல காரணங்களால் குன்றியிருந்த காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தோன்றிப் பழைய சில நூல்களையும் உரைகளையுந் திருத்தமுறப் பதிப்பித்தும், புதியனவாகிய நூல்களையும் உரைகளையும் எழுதியும் தம் நாவன்மையால் பிரசங்கங்கள் புரிந்தும் தமிழ்க்கல்வியை வளர்த்துச் சைவசமயத்தைப் பாதுகாத்தார்கள். அவர்கள் இவ்வுலக சுகத்தைச் சற்றும் விரும்பாதவர்களாய் இங்கும் தென் இந்திய நாட்டிலுஞ் செய்த அரும் பெருந் தொண்டுகளை நாங்கள் என்றும் நினைந்து அவர்களிடத்து நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களாய் இருக்கின்றோம்.

—வழக்கறிஞர், திரு. M. S. இளையதம்பி அவர்கள்.
(Editor "Hindu Organ")

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகநாவலர்.

(சுன்னாகம், ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள்)

இவரூர் யாழ்ப்பாணத்து நல்லூர். குலம் கார்காத்த வேளாளர் குலம். மரபு ஞானப்பிரகாசர் மரபு. தந்தையார் கந்தப்பிள்ளை. பிறந்த வருடம் சாலிவாகன சகவருடம் ஆயிரத் தெழுநூற்று நாற்பத்தைந்துக்குச் சமமான சித்திரபானு வருடம். சமயம் சைவம். ஆச்சிரமம் நைட்டிகப் பிரமசரியம். கற்றுணர்ந்த பாஷைகள் செந்தமிழ், அங்கிலம், சங்கதம் என்பன. கற்றுப் பூரண பாண்டித்தியமடைந்தது செந்தமிழ். செந்தமிழில் வித்துவ சிரோமணி சேனாதிராய முதலியாருக்கும் சரவணமுத்துப் புலவருக்கும் மாணவகர். நடராசையர், பொன்னம்பலபிள்ளை முதலியோருக்கு ஆசிரியர். மற்றைய மாணவர்கள் போலக் கற்ற நூலளவிலமையாது மீண்டும் மீண்டும் நூல்களைத் தேடிக் கற்றவர். எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும் அறிவும் பெற்றவர்.

இலக்கியங்களிலும் **வல்லவர்.** இலக்கணங்களிலும் வல்லவர். நீதி நூல்களிலும் வல்லவர். நியாயநூல்களிலும் வல்லவர். சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் வல்லவர். சைவாகமங்களிலும் வல்லவர். சைவாகமப் பெருமையைச் சாதித்துப் போதித்தலிலும் வல்லவர். கலைபயில்வோருளங் கொளக் கற்பிக்குஞ் செயலிலும் வல்லவர். உலகியல்களைப் பலதலையின்றி உணர்தலிலும் வல்லவர். செந்தமிழ் நூல்களைத் திருத்தி யச்சிடும் செயலிலும் வல்லவர். செந்தமிழ் வாக்கியங்களைச் சிறப்புறத்தொடுத்துவரையுஞ் செயலிலும் வல்லவர். சைவப் பிரசங்கத்திலும் வல்லவர். புராணப் பிரசங்கத்திலும் வல்லவர். கசட்டுநெறிகளை மறுத்தெழுதுங் கண்டனங்களிலும் வல்லவர். செய்யுளியற்றுந் திறத்திலும் வல்லவர்.

கற்றதனாலாய பயனாகுங் கடவுள் வழிபாடு எனப்படுஞ் சிவபூசா கைங்கரியத்திலுஞ் **சிறந்தவர்.** சிவதீக்கையே மோக்கம் பயக்க வல்லது என்னுஞ் சிந்தனை சொற் செயல்களிலுஞ் சிறந்தவர். தேவார திருவாசக பராயணப் பற்றிலுஞ் சிறந்தவர். சிவனடியார் வழிபாட்டிலுஞ் சிறந்தவர். சைவாசாரத்திலுஞ் சிறந்தவர். சதாசாரத்திலுஞ் சிறந்தவர். சீவகாருணியத்திலுஞ் சிறந்தவர். அடைந்தோர்ப் புரக்கும் அருளிலும் சிறந்தவர். நன்றல்லதன்றே மறந்துவிடலிலுஞ் சிறந்தவர். கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் வாக்கு நலத்திலுஞ் சிறந்தவர். அவையஞ்சி மெய்விதிரா ஆண்மையிலுஞ் சிறந்தவர். சவை கூட்டிப் போதித்துப் பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை புரிதலிலுஞ் சிறந்தவர். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மைஎன்னும் ஐந்துந் தாங்கநிற்கும் நிலையிலுஞ் சிறந்தவர்.

மறைகணிந்தனை, சைவநிந்தனை பொறுமன முடையவர். உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோடு உறவு முடையவர். நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையுமுடையவர். சைவ நிந்தைகளையும் சைவநிந்தகர்களையும், புறச் சமயங்களையும் பிழைபட இயற்றும் நூலுரைகளையும் வழுநிலை காட்டிக் கண்டித்து வெறுத்தொழிக்குஞ் செயலுமுடையவர். அருமையுடைய செயலாற்றும் பெருமையுமுடையவர். மானமும் பண்பும் மறவாநிலையு முடையவர். புகழ், அதிகாரம், பொருள்வரவு முதலியன கருதி மனிதரைப் பாடுஞ் செயலிற் செல்லா விரதமு முடையவர். "தான மெவ்வகையுளுந் தக்க வித்தியாதானமே சிறந்தது சாற்றுங்காலையே" எனச் சூத சங்கிதையாற் புகழப்பட்ட வித்தியாதானப் பெருந் தருமமு முடையவர்.

இவருடைய இலக்கியப் பயிற்சி வன்மையை இவரால் அச்சிடப்பட்ட பரிமேலழக ருரை, திருக்கோவையுரை, பாரதம், சேதுபுராணம், கந்தபுராணம் முதலிய இலக்கியங்கள் காட்டும். இலக்கணப் பயிற்சி வன்மையை இலக்கணச்சுருக்கம், நன்னூற் காண்டிகை, சேனாவரையம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து முதலிய இலக்கணங்கள் காட்டும். நீதிநூல் நியாயநூல்களின் வன்மையையுஞ் சைவசித்தாந்த சாத்திர வன்மையையும் பெரியபுராண சூசனங் காட்டும். தருக்கசங்கிரகம், சைவசமய நெறியுரை முதலியனவுங் காட்டும். பரிசோதன வன்மையை அச்சிட்ட நூல்களெல்லாங் காட்டும். செந்தமிழ் வாக்கியத் தொடைவன்மையைத் திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராணவசனம் முதலியன காட்டும். கண்டன வன்மையைச் சண்டமாருதம்போற் சென்று தாக்கித் தலை குனிவிக்குஞ் சுப்பிரபோதம், போலியருட்பா மறுப்பு, மித்தியாவாத நிரசனம் முதலியன காட்டும். செய்யுளியற்றும் வன்மையை அராலிச் சித்திவிநாயகர் விருத்தம் முதலியன காட்டும்.

வித்தியாதானப் பெருந் தருமச் செயலை இவராலே தாபிக்கப்பட்டு நடந்துவரும்வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையும் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையும் பிறவுங் காட்டும். இத் தரும சிந்தனையின் பெருமையைச் செந்தமிழ் நூலுணர்ச்சியிலும் வித்தியாபிமானத்திலுஞ் சிறந்து இந்த வித்தியாசாலைகளுக்கு முறையே தலைவர்களாய் வந்து பரிபாலிக்கும் த. கைலாசப்பிள்ளை, ச. பொன்னம்பலபிள்ளை என்னும் இருவர் செயலுங் காட்டும். இவர் பெருமையையும் புகழையும் யாவரும் அறிவர். அவை தமிழ்நாடெங்குங் கிரிதீபம் போல நின்று நிலவுகின்றன. இன்னும் அவைகளை இவர் சரித்திரம் நோக்கியும் அறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரால் வசனரூபமாக எழுதப் பட்ட சிறிய பத்திரிகைகளும் பல. "உதயதாரகை", "இலங்கைநேசன்" முதலிய சஞ்சிகைகளிற் பகிரங்கஞ் செய்த விஷயங்களும் பல. அவற்றுள்ளே சில கற்பவர்க்குத் திருத்தங்கொடுக்கும் வித்தியா விடயங்கள். சில பலர்க்கும் பொதுவான திருத்தங்களையும் நன்மைகளையும் பயக்கும் விடயங்கள். சில தம்முடைய விடயங்களுக்கு மாறாய் எழுந்தவைகளைக் கண்டிக்கும் விடயங்கள். சில சைவநெறி நிறுவற் காரணமான விடயங்கள். சில பரசமய கண்டனங்கள். சில வாத விடயங்கள்.

—(தமிழ்ப்புலவர் சரித்திரம்)

தமிழரசு போய்ப் பறங்கியரசும் ஒல்லாந்தவரசும் நடந்த காலத்தில் ஈழநாட்டை மூடியிருந்த மாயாவிருளைச் சீத்து ஞானப்பிரகாசம் காலுமாறு ஞானப்பிரகாசர் மரபிலே நல்லூரிலே ஆறுமுகநாவலர் அவதரித்தனர். அவருடைய அளப்பிலா அறிவாற்றல் உலகப் பிரசித்தியாதலின் யானெடுத் துரைப்பது மிகையாம்.

—திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்.

* * *

வறக்க லிலாச்செந் தமிழ்வாழச் சைவம் வழங்கவெமர்
துறக்க லிலாக்கண் டிகைதேங்க ஞானச் சுடரையென்றும்
மறக்கலி லாறு முகநா வலனென வாழ்குரவன்
பிறக்கத் தவஞ்செய் பெரும்பேற தீழநன் மண்டலமே.

தண்டமி ழாறு முகநா வலனெங்கள் சற்குருவாங்
கொண்டல் பொழிந்த பிரசங்க மாரி குறுகியப்பால்
அண்டமுன் புக்கது பாதாளம் புக்க தஃதன்றிக்கன்
மண்டலம் புக்க திசைபுக்க தீழநன் மண்டலமே.

ஆரியதிராவிட பண்டிதர்,
ஸ்ரீமத். வே. கணபதிப்பிள்ளை அவர்கள், அல்வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கேட்டபடி.

(மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்)

தமிழ்ப் புலவர்களில் கவி, கமகன், வாதி, வாக்கியென நான்கு வகையினர் உண்டு. எந்தச் சமயத்திலும், கொடுத்த விஷயத்தைக் குறித்துத் தெளிவாகப் பேசும் ஆற்றலுடையவரை வாக்கியென்று சொல்வார்கள். வாக்வி என்ற வடசொல்லின் திரிபே அது. அதனையே 'நாவலர்' என்று தமிழிற் கூறலாம். பண்டைக் காலத்தில் கவிபாடும் ஆற்றலுடையாரையும் நாவலரென்றுவழங்கினர். இக்காலத்தில் நல்ல பிரசங்க சக்தி வாய்ந்தவர்களை நாவலரென்று சொல்வதிற் பிழையொன்றும் இல்லை.

தமிழ்நாட்டில் எவ்வளவோ நாவலர்கள் இருப்பினும் நாவலரென்று கூறிய மாத்திரத்தில் அச்சொல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையே குறிக்கும். இதற்குக் காரணம் அவர் நாவலர்களுக்குள் சிறந்தவராக விளங்கியமையேயாகும்.

நாவலரை நான் பார்த்துப் பழகுவதற்குரிய சமயம் நேர்ந்ததில்லை. ஆயினும், அவரோடு பழகியவர்களிடமிருந்தும் அவரிடம் பாடங் கேட்டவர்களிடமிருந்தும் அவரைப்பற்றிப் பல செய்திகளைக் கேட்டிருக்கிறேன். அவற்றைக்கொண்டு என் அகக்கண்ணில் ஓர் உருவத்தை அமைத்துப் பார்ப்பது என்வழக்கம்.

அவரை நினைக்கும் போதெல்லாம் அவரது வாழ்க்கைநெறி என் உள்ளத்தைக் கவரும். கல்வியறிவு மிகச் சிறந்ததே; ஆயினும் அவ்வறிவு ஒழுக்கத்தோடு இயையும் போது அதற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டாகின்றது.

நாவலருடைய தூய்மையான வாழ்க்கை யாவராலும் பாராட்டுதற்குரியது. பொருள் வருவாயையே தலைமையாகக் கருதி அவர் வாழ்வு நடத்தவில்லை. சைவமும் தமிழும் தழைத்து ஓங்கும்பொருட்டு அவர் மனமொழி மெய்களால் தொண்டு புரிந்து வந்தார். "என்கடன் பணி செய்து கிடப்பதே," என்னும் அப்பர் திருவாக்குக்கு இலக்கியமாக அவரைக் கூறலாம். அவர் நிறுவியுள்ள சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையும் யாழ்ப்பாணத்திலமைத்துள்ள நிலையங்களும் இதற்குப் போதிய சாக்ஷிகளாகும்.

அவருடையபிரசங்கசக்தி அவருக்குப் பெரும் புகழை உண்டாக்கிற்று. நாவலரென்னும் பெயரும் அதனாலே வந்ததுபோலும். "வார்த்தை பதினாயிரத்தொருவர்" என்பது ஒரு தமிழ்ச் செய்யுட் பகுதி. "படைகளோடு சென்று போர் புரிந்து சாவார் எளியர்; சபையிலே போய்த் தைரியமாகப் பேசுவோர் மிகச் சிலர்" என்று திருவள்ளுவரும் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். அத்தகைய அரிய பிரசங்க வன்மை நாவலரிடத்திலே நன்கு அமைந்திருந்தது.

அக்காலத்துக்கு முன்பு பெரும் பாலும் புராணப் பிரசங்கங்களும் வாதங்களுமே சபைகளில் நடை பெற்று வந்தன. பொதுவாக ஒரு விஷயத்தை மேற்கொண்டு முறைப் படுத்திக் காரண காரியங்களைக் காட்டி ஆக்ஷேப சமாதானங்க ளோடு பேசும் வழக்கம் தமிழ்நாட் டில் மிகக் குறைவாக இருந்தது. கிறிஸ்தவசமயப் பாதிரிமார் செய்த உபந்யாஸங்களின்முறை தெளிவாக வும் எளிதிலே யாவரும் அறிந்து சுவைப்பதற்குரியதாகவும் இருந்தது. அந்த முறையை நாவலர் பயின்று அதிற் பேராற்றல் அடைந்தார்.

தமிழ் வளர்ச்சியின் பொருட்டு அவர் செய்த அருஞ் செயல்களுக்கு அடையாளங்களாக அவர் பதிப்பித்த நூல்கள் விளங்குகின்றன. அவரு டைய பதிப்புமுறை தமிழ் நாட்டா ராற் பெரிதும் மதிக்கப்படுவது.

நூலாசிரிய முறையில், நாவலர் எழுதிய நூல்கள் இந்நாட்டில் உலவு கின்றன. பாலபாடங்கள் ஒழுக்கத் தையும் சைவசமய உணர்ச்சியை யும் உண்டாக்குவன. நன்னூலுக்கு அவர் ஒரு காண்டிகையுரை எழுதி யிருக்கின்றார். இலக்கணச்சுருக்கம் முதலிய சிற்றிலக்கண நூல்கள் சில வற்றையும் இயற்றி வெளியிட்டிருக் கின்றார். இவை தமிழிலக்கணம் பயி லும் மாணக்கர்களுக்கு மிகப் பயன் படுவனவாகும்.

சில இலக்கிய நூல்களுக்கும் அவர் உரை எழுதியிருக்கின்றனர். அவருடைய வசனநடை எளி யது; வடசொற்களோடு கலந்து அழகு பெறுவது; பாலர்முதல் பண் டிதர் ஈறாகவுள்ள யாவருக்கும் பயன் தரத்தக்கது. அவர் காலத்தில் தமி ழில் அழகிய வசனநடை எழுது வோர் மிக அரியராக இருந்தனர்.

பிறரிடம் குறைகாணின் கண் டிப்பது நாவலர் இயல்பு. பொது நிலையங்களிலும், தர்ம ஸ்தாபனங்க ளிலும் நிகழும் தவறுகளை யாருக் கும் அஞ்சாது வெளியிட்டார். அவர் எழுதிய கண்டனப் பத்திரங்கள் பல. அவற்றை ஆராய்ந்தால் ஒவ்வொரு ஸ்தாபனமும் நெறிவழாமல் நடை பெற்று வரவேண்டுமென்பதில் அவ ருக்கு இருந்த ஊக்கம் புலப்படும்.

நாவலர் வாழ்க்கையில் ஒழுக் கத்தின் உயர்வும், கல்விப் பெருமை யும், சைவ சீலத்தின் சிறப்பும் கமழ்ந் தன. அவர் சமயத் தொண்டராக வும், நாவன்மை மிக்கவராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரிய ராகவும் விளங்கினர்.

என்னுடைய தமிழாசிரியரான திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களும் நாவலரும் ஒரு காலத்தினரே. இருவ ரும் நெருங்கிப் பழகியதுண்டு. நாவல ருடைய குணதிசயங்களைப் பிள்ளை யவர்கள் அடிக்கடி பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்பொழுது தமிழ் நாட்டினருக் குத் தமிழினிடத்தில் அன்பு வளர்ச்சி பெற்று வருகின்றது. அதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் ஒரு காரணம்ஆவர். அவர்என்றும் தமிழ் நாட்டினரதுநினைவில் இருப்பவராத லின் அவருடைய புகழுடம்பு என் றும் மறைதலின்றி நிலவி ஒளிரு மென்பதில் ஐயம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிக்காலம் நன்று.

(திரு. C. S. ஜகதீச சுந்தரம்பிள்ளை அவர்கள்.)

நாவலரும், திரிசிரபுரம் மகா வித்வான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களும் ஒரு காலத்தினர். நட்புரிமையும் பூண்டவர்கள். ஒரு சமயம், நாவலர் தம் ஆழ்வலரோடு மாணவர் சூழக் காவேரிக்குச் சென்று அங்கு ஸ்நானஞ் செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது பொழுதோ அதிகாலை; காலமோ பனிக்காலம். பலருடைய தேகமும் குளிரினாலே விட விட என்று நடுங்கிற்று. நடுக்குறுதலைக் கண்ட பிள்ளையவர்கள் **பனிக்காலம் கொடிது** என்று நாவலரைப் பார்த்து நவின்றனர். உடனே கலாவிநோதராகிய நாவலர் **பனிக்காலம் நன்று** என்று விடையிறுத்தனர். இவருடைய வாக்கு நயத்தையும் விசேஷத்தையு முணராத மாணவர்கள் இரு பிரிவினராகி, 'பனிக்காலம் கொடிது, ஜலதோஷத்தை உண்டாக்கும்' என்றனர் ஒருசாரார். 'பனிக்காலம் நன்று தேகத்தைக் குளிரச்செய்யும், உஷ்ணத்தைத் தணிக்கும்' என்றனர் மற்றொருசாரார். இங்ஙனம் தத்தமக்குத் தோன்றிய அபிப்பிராயங்களைக் கூறி வாதிப்பதைக் கண்ட நாவலர், என்னென்று வினவ, மாணவர்கள் தம் ஏதுக்களைக் கூறினார்கள். நாவலர், "நானும் பிள்ளையவர்கள் கூற்றையே வலியுறுத்திக் கூறினேனன்றி, பிறிதொன்றுமில்லையே" யென்று, தாம் கூறிய பதத்தை, பனிக்கு ஆலம் நன்று என்று பிரித்துக் கூறினர்.

பனிக்கு ஆலம் நன்று = பனியை விட விஷம் நல்லது. நாவலர் பெருமான் ஹாசியமாகவும் கருத்தொத்தும் உடனுக்குடனே பதிலுரைப்பதில் வல்லுநர் என்பது இதனால் வியக்தமாகிறது.

வெண்பா.

நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே—யெல்லவரு
மேத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
யாத்தனறி வெங்கே யறை.

—ருவ்பகதூர் திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பதிகம்.

(தமிழ்ப்பண்டிதர், வண்ணை: திரு. நெ. வை. செல்லையா அவர்கள்.)

நேரிசை வெண்பா.

செல்லரித்துப் பொட்டுர்ந்து சீர்சிதைந்த வேடுகளை
யல்லலற வச்சிலிட்ட வாரறிஞன்—சொல்லுரையில்
நாத்திறமார் ஆறுமுக நாவலன் நந்தமிழ்க்கு
வாய்த்தநிதி யென்றே வழுத்து.

அறுசீர் ஆசிரியவிருத்தம்.

பூவலயந் தன்னிலிரு வேறுலகத் தியற்கையெனப் புகன்ற பொய்யில்
நாவலவன் சொற்கெதிரா விருவகையா கியசெல்வ நண்ணி மேலாங்
காவலர்கள் பணிந்தேத்தக் கலைமகளு முவந்தேத்தக் கவினுஞ் சைவ
மாவலரி யொளிவீச வந்துதித்த நாவலன்சீர் வாழ்த்து கிற்பாம். க

நல்லோர்கள் நினைந்துருகும் நல்லைநக ராறுமுக நாவல் லோன்பேர்
வல்லோர்கள் வாய்நடக்கும் புத்தகநாப் பண்ணடக்கு மதியோர் சேர்ந்த
சொல்லோரு மவைநடக்கு மிளைஞர்படிப் பகநடக்குந் தோலா நாவின்
எல்லோரு முரையாளர் பானடக்கு மவன்புகழை யேத்து கிற்பாம். உ

ஆற்றலுறு தீந்தமிழின் வசனநடை பயில்வித்தெம் மன்னை யான
போற்றலுறு யாழ்ப்பாண நன்னாடு பொன்னாத புகழ்பெற் றோங்கித்
தேற்றலுற வவதரித்த செந்தமிழ்நா வலவனுயர் செம்பொற் பாதம்
ஏற்றலுற வாழ்த்தெடுத்தல் நமரங்காள் முறைமையென விறைஞ்சு கிற்பாம். ங

பாவலர்கள் இனிப்புகழத் தமிழ்மொழியில் லாதனைத்தும் பரிசாய்த் தன்மேல்
மேவலராய்க் கொண்டதிரு வுருவுடைய பெருமானை வியூக மென்றும்
தாவலர்போ லழியாது பகலவன்போல் நிலவவைத்த தக்கோ னான
நாவலவன் தாள்பரவித் தமிழ்த்தாயை யாதரித்து நலிவு தீர்ப்பாம். ச

சும்மாதன் காலமெல்லாம் தூயதமிழ்க் கேயுழைத்துத் தோகை பாகத்
தம்மான்ற னடிச்சமய வருணெறியை நிலைநாட்டி யவல மான
தெம்மாடிச் சமயமெலாந் தேம்பலுற வாதிட்டுச் சிவமாய் நின்ற
எம்மானை ஆறுமுக நாவலன்ற னிணையடியை யேத்தெ டுப்பாம். ரு

சித்தாந்த சைவமிது சீரியநன் னெறியீது செல்வ மீது
வித்தாந்த வழியீது விழுமியமெய்ப் பொருளீது வேண்ட வீது
முத்தாந்த வழியீது மொய்ம்புடைய சாதனமும் முறையு மீது
நித்தாந்த மீதென்ற நாவலசற் குருமணியை நெஞ்சிற் கொள்வாம். சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலமுஞ் செந்தமிழு மாரியமு மிகப்பயின்று மவற்றி னுள்ள
வீங்கியபன் னூல்களெலாம் விழுங்கியெழு கொண்மூவாய் மேலாஞ் சைவத்
தோங்கியபைங் கூழ்தழைய வறிவனூல் மழைபொழிந்திவ் வுலக போக
நீங்கியசற் குருமணியை ஆறுமுக நாவலனை நினைந்து வாழ்வாம். எ

சீரிலகு யாழ்ப்பாணச் செந்தமிழும் புலவர்களுந் தெளிவுந் தேசு
மேரிலகு நூலுரையின் குறியீடும் பிரசங்க வெழிலு மச்சில்
நேரிலகு நூல்வழுவில் லாறிடனு முண்டாக நிமித்த மான
பாரிலகு பெருமானை யாறுமுக நாவலனைப் பணிந்து வாழ்வாம். அ

கைம்மாறு கருதாது தந்நலத்தை யுவர்த்தெறிந்து கச்சை கட்டிப்
பொய்ம்மாயப் படுகுழியில் வீழாது நம்மவரின் புலவு நீக்கிச்
செம்மாந்து நல்வழியில் திருநீறிட் டருணூலைத் திறக்க வைத்த
பெம்மானைப் பேர்மானை நாவலர்கள் பெருமானைப் பேணி வாழ்வாம். கூ

சற்சமய வழியறங்கள் தழுவாது மறவழியைத் தழுவி மாந்தர்
குற்சிதமா யழிவுறும்போ தெவ்வுயிர்க்கு முயிரான குழகன் தாதை
வற்சலமா யொருவரையிம் மானிலத்திற் றருவனெனும் வாய்மை யாலே
நிற்சலமா யவதரித்த வாறுமுக நாவலன்தாள் நினைதல் செய்வாம். கo

வெண்பா.

ஆரிருந்தென் னுர்சிறந்தென் னுறுமுக நாவலன்போ
லாரிருந்து போதிப்பா ரையையோ—வாரணிந்து
தேக்குமதிச் செஞ்சடிலத் தேவுருவு கொண்டாலும்
வாக்கவனைப் போல வரா.

எவ்விடமும் நின்புகழே யெவ்விடமும் நின்பேரே
யெவ்விடமு நின்சொல்லே யெய்தியபோ—லெவ்விடமு
மெக்கா லமுமில்லை யின்னினியார் நின்புகழ்க்குத்
தக்கார்சொன் னுவலநீ தான்.

கந்தவேள் செய்தவம்போற் கானுந் தவமுமவன்
மைந்தனு நாவலன்போன் மைந்தர்களுஞ்—செந்தமிழில்
வல்லவர்க ளன்னவன்போல் வந்திடுவ தும்முலகி
லில்லையில்லை யில்லை யினி.

— ஸ்ரீ. பூ. முருகேசபிள்ளை அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது முதற் கடமை.

(சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்
திரு. S. வையாபுரிப்பிள்ளை அவர்கள் B. A., B. L.)

ஸ்ரீ நாவலர் பெருமான் தமிழ் மக்களால் எக்காலத்தும் போற்றற்குரிய பெரியோர்களிலொருவர். பெருங் கல்வியாளர். சைவசமயத்தின் பொருட்டும் தமிழன்னையின் பொருட்டும் தம்மை அர்ப்பணஞ் செய்த பெருந்தகையாளர். 'தமக்கென வாழாதவர்' என இவரைக் கூறுதல் பெரிதும் ஏற்புடைத்தாகும். தமக்கென்று பொருள் முதலியவற்றை விரும்பியவரல்லர். தாம் தேடியன முழுவதையும் தமது பெருநோக்கங்கள் ஈடேறுவதற்கே பயன்படுத்தியவர்.

சைவசமயமும் தமிழும் தழைத்தோங்க வேண்டுமென்பதே இவரது பெருநோக்கம். இதன் பொருட்டுத் தம் வாழ்நாள் முழுவதும் இடைவிடாது உழைத்துவந்தார்கள். பிற சமயத்தார்களோடு சொற்போர் ஒருபால் நிகழ்த்திவந்தார்கள். ஒருபால் சமய சாஸ்திர பரிசீலனை செய்து வந்தார்கள். ஒருபால் தமிழிலக்கிய விலக்கணங்களைப் பரிசோதித்து வெளியிட்டு வந்தார்கள். ஒருபால் போதகாசிரியராயிருந்து சமய நூல்களையும் தமிழ் நூல்களையும் மாணவர்களுக்கு ஆர்வம் பிறக்கக் கற்பித்து வந்தார்கள். தமது நோக்கம் இனிது நிறைவேறுதற் பொருட்டுக் கலாசாலைகளை நிறுவினார்கள். தமது இறுதிக் காலத்திலே தமிழ்ப் பல்கலைக் கழகமொன்று நிறுவுதற்குப் பெரிதும் முயன்று வந்தார்கள்.

இங்ஙனமாகத் தமிழ்மக்களின் நன்மையின் பொருட்டுத் தம் உடல் பொருளாவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்த பெரியாரை நாம் அடிக்கடி ஞாபகத்தில் வைத்துப் போற்றுதல் நமது முதற்கடமையாகும்.

விருத்தம்.

சிவசமய கமலமதைத் தமிழ்நாடாந் திருமடுவிற் செறித்தலர்த்திப்
பவமயறந் தாங்கணுற்ற பரசமய விருள்கடமைப் பதறவோட்டித்
தவநெறியாந் தேரினிடைத் தனியூர்ந்து தற்பரனு மாழிசார்ந்தா
னவமகல வுலகுபெறு மாறுமுக நாவலனு மவுலியோனே.

—கோக்குவில், திரு. ச. சபாரத்தினப்பிள்ளை அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பெருந்தகை

[கொழும்பு, பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
டக்ரர் க. கணபதிப்பிள்ளை அவர்கள், B. A. (Hons.),Ph. D.,]

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாரதநாடு பல்வேறு கிளர்ச்சிகளுக்கும் பெரிய மாற்றங்களுக்கு மோரிலக்காக விருந்தது. மேல்நாட்டவ ராட்சிக்குள் அது ஒருங்குபட்டமையத் தொடங்கிய காலமிதுவே. அக்காலத்தில் மேல்நாட்டார் தமது எண்ணக்கருத்துக்களையுஞ் சமயக்கொள்கைகளையும் பாரத நாட்டிற் பரப்பத் தொடங்கினர். பழையனவற்றைக் கைவிடாது இறுகப்பிடித் தொழுகுதலே யியல்பாகவுடைய பாரதமக்களுக்கு இது மிக வெறுப்பாக விருந்தது. இதன் காரணமாகப் பற்பல பாகங்களிலுந் தலைவர்கள் தோன்றி, மேலைநாட்டுப் பழக்கவழக்கங்களையுஞ் சமயக் கொள்கைகளையுந் தம் நாட்டிற் புகவிடாது தடுக்கத் தொடங்கினர். இக்காலத்திற்றான் வடநாட்டில் பகவான் இராமகிருட்டினப் பரமகம்சரும், அவரது தலைசிறந்த மாணவராகிய விவேகானந்தவடிகளும் மேலைநாட்டோரால் நிலைகுலைக்கப்பட்டுநின்ற இந்துமதத்தை வழுக்களைந்துசீர்ப்படுத்த முயன்றுவந்தார்கள். அதுபோலவே தென்னாட்டிலும் பல சமயத்தலைவர்கள் தோன்றித் தமது சமயத்தைச் சீர்செய்யத் தொடங்கினர். அவர்களுள் முதன்மை பெற்றவர் ஆறுமுகநாவலர். பண்டைநாட்களிற் புத்தம் முதலாய புல்லறிவிற் பல்சமயம், தத்தம் மதங்களிற் தட்டுளுப்புப்பட்டு நின்றபோதும், அறியாமையா லேவப்பட்டவையாய்ச், சைவத்தை யடியோடொழித்துவிட வெண்ணித் தமிழருக்கு இடரிழைத்தகாலை, அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் முதலிய சமயகுரவர்கள் தோன்றிச் சைவத்துக்காக யாங்ஙனம் நனிவருந்தியுழைத்தனரோ, அங்ஙனமே மேலைநாட்டினின்றும், மிண்டிய கிறீத்துவவாத மென்னுஞ் சண்டமாருதஞ் சுழித்தடித் தார்த்தகாலை, நாவலராகிய சைவப்பெருந்தகை தமிழ்நாட்டிற் றோன்றிச் சைவசமயத்துக்காக வுழைக்கத் தொடங்கினர்.

ஆறுமுகநாவலரவர்கள் அக்காலத்திருந்த சைவசமயத் தலைவர்களுள் மேம்பட்டு விளங்கியதற்குக் காரணம் யாதென வாராய்வாம். இலங்கையானது ஆங்கிலேய ராட்சிக் குட்பட்ட பின்னர், அக்காலத்து ஐரோப்பியர் உலகத்து ஏனையபாகங்களிற் கிறீத்தவத்தை நிலைநிறுத்த முயன்றது போலவே, யாழ்ப்பாணத்திலும் (அதை நிலைநிறுத்தும் நோக்கமாக) அமரிக்கா தேசத்தினின்று பாதிரிமார் வந்து சேர்ந்தனர். அந்நாட்களில் இவர்கள் எல்லாச் சம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களும் ஒரே பொருளையே தேடு கின்றன வென்னுங் கொள்கையில ராய்க், கிறீத்துவை நம்பினோருக்கே இகலோக இராச்சியமும் பரலோக சாம்பிராச்சியமு மேற்படு மென்னுங் கடைப்பிடியால் மிகவுந்தப்பட்டவ ராய், யாழ்ப்பாணத்திலுள்ள யாவ ரையும் "அஞ்ஞானிகள்" எனக் குறியிடிட்டு, அவர்மேல் இரக்க மீதூ ரப்பெற்றவராய், அவரை எவ்வகை யானும் "மெஞ்ஞானிகள்" ஆக்க வேண்டு மென்னு மவாவாய்ப்பட்டு அல்லும் பகலும் முயலத் தொடங்கி னர். இதற்காக அவர்கள் தெருக் கள்தோறும் விரிவுரை யாற்றியும், ஆங்காங்கு கிறீத்தவாலயங்களைக் கட்டியும், தமிழ்ப்பள்ளிக்கூடங்களை யும் மருந்துச்சாலைகளையு மேற்படுத் தியும், இவைமூலமாகத் தங்கள் சம யக் கொள்கைகளைப் பரப்பலுற்ற னர். இதுவுமன்றி, ஆங்கிலக்கல்வி பரப்புவதற்காகப் பெரிய கல்லூரி யொன்றையு மமைத்துத் தங்கள் சமயத்தைத் தழுவின மாணவர்க்குக் கூலிபெறாது கல்வி பயிற்றியும், அதன்பின் அவர்க்கு அரசினரின் கீழ் வேலைபெற வுதவி புரிந்தும் வந் தனர். எனினும், இவர்கள் கிறீத் தவ குழுவினர்க் கென்று சிறப்பா கச் செய்த நன்மை, பின்னர் யாழ்ப் பாணத்தவ ரெல்லோருக்கும் பொது வாய் நலனாய் முடிந்தது.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும் வானகமு மாற்ற லரிது.

கிறீத்தவராயினோர்க்கு இவ்வா றெய்திய நன்மைகளைக் கண்ணுற்ற சைவர் பலர் கிறீத்து சமயத்தைத் தழுவத் தொடங்கினர். இதைக்கண்ட சைவப் பெரியோர் செய்வதொன் றறியாது திகைப்புற்று வலிமை யிலராய் வாளாவிருந்தனர். அவ் வமையமே ஆறுமுகநாவலர் வந்து தோற்றியது. அக்காலத்து ஆங்கி லக் கல்வியே யுணவைத் தரவல்லது என்னுங் கடைப்பிடியோடு அதைக் கற்றலில் யாவருங் காலத்தைக் கழித்து வருவதை நாவலரவர்கள் கண்டபோதும், நிலவுலகின்பம் பே ரின்ப மல்ல வென்னு முட்கோளை இளமையிலேயே தன்னுளடக்கிய ராய்ப், பொருள் சேர்ப்பதிற் சற்றே னும் விருப்பின்றித் தமிழ்க்கல்வி யையே மிகப் போற்றிக் கற்றுவந் தனர். அதன் பயனாகத் தமிழில் மிகுந்த கல்வியாளராய், இலக்கண விலக்கியங்களையுஞ் சித்தாந்த நூல் களையும் நன்காராய்ந்து மிகுந்த புலமை யுடையவரானார். அத்துடன் நில்லாது வடமொழியும் பயின்று, பின்னர் ஆங்கிலமுங் கற்றுத் தேறி னர். இதன் பயனாக அக்காலத்தில் யாழ்ப்பாணத்திருந்த பீற்றர் பெசீ வல் என்னும் பாதிரியாருக்குக்கீழ், பள்ளிக்கூடத்திற் கூலி பெறாது கல்வி கற்பித்துப், பின்னர் அவ ருக்குத் தமிழ்ப்பண்டிதரா யிருந்து, பைபிளின் தமிழ்மொழிபெயர்ப் பைத் திருத்துபவரானார். இவர் எந் நூலைக் கற்கினும் ஆழ்ந்து பார்க் கின்ற தன்மையை யியற்கையா யமைந்தவராகையின், பைபிளையுந் நுணுகியாராய்ந்து நன்கு கற்றுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறினர். அவ்வமயமே இவர் கிறீத் தவந் தழைத்தோங்குதலையும், தம் நாட்டவரின் பண்டைச் சமயமாகிய சைவமும், தம் முன்னோரின் அளப்பரிய மேலான வெண்ணக் கருத்துகளும், அன்னோர் போற்றிப் புனைந்து தமக் கன்புடனளித்த அருந்தமிழ்க் கல்வியுஞ் சீர்குலைந்து நிலைகுன்றுவதைக் கண்டனர். கண்டதும், தமிழ்த்தாயே யுருவெடுத்துத் தம் மக்கள் தமக்குத் தாமே தேடிக் கொள்ளுஞ் சீர்கேட்டினைக் கண்ணுற்று, வெகுளியினாற் பித்துப் பிடித்துப் பேராவேசங் கொண்டாள் போன்று, அவர் நாட்டவர் யாவரையும் "விழிமின், எழுமின், அறியாமையாய விருளி லாழ்ந்து துயிலாதீர், உங்கள் முன்னோ ரளித்த அருஞ் செல்வமாகிய பழமையைக் கைவிடாதீர்," எனத் தட்டியெழுப்பினர். தங்கள் நாட்டுக்கல்லாது பிறநாடுகளுக்கு மேற்றவையோ வென்று நினையாது, தங்கள் ஒழுக்கங்களே சிறந்த ஒழுக்கங்கள், தங்கள் வாழ்த லாறே சிறந்த முறை யெனக் கடைப்பிடியுடையோராய்த், தங்கள் பழக்க வழக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும் தமிழ்நாட்டில் நிலைநாட்டிச் சில்லாண்டுகளிற் றமிழரென்ற மக்கட் கூட்டத்தினர் உலகத்தில் இல்லையெனும்படி ஒழித்துவிடவந்த பாதிரிமார்களையும் போருக்கு அறைகூவினர்.

இதன்பொருட்டு நாவலர் துண்டுக் கட்டுரைகளாலும், சிறு நூல்களாலும், சொற்பொழிவுகளாலும் பாதிரிமாரைக் கண்டித்தும், சைவர்களைத் தண்டித்தும், சைவசமயப் பற்றையும், தமிழ்க் கல்வி வளர்ச்சியையும் மிக வோங்கச் செய்தனர். எனினும், பாதிரிமார் யாழ்ப்பாணத்துக்கு வந்ததால், சைவசமயத்துக்குந் தமிழ்க்கல்விக்கும் பெரிய முன்னேற்ற மேற்பட்டதென்று ஓராற்றாற் கூறலாம். ஏனெனின், அவர்கள் வராவிடின் நாவலராற்றிய அரும் பெரும் பணிகள் நிகழ்தற்குத் தருணமெழுந்திராது. அது யாங்ஙனமெனின், பள்ளிக்கூடங்க ளமைத்து மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்குங் கடமையை, பாதிரிமார்க ளில்லாவிடின் ஒருவேளை அவர் செய்திருக்க மாட்டார். சமயகாரணமாகத் தொடங்கிப் பின்னர் அவரது பள்ளிக்கூடங்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஓராணித்திறனாக விருந்தன. மேலும், அப்பள்ளிக்கூடங்களிற் பயிலுஞ் சிறுருக்காகவே முதன்முதல் அவர் அச்சு நிலையங்க ளேற்படுத்தி நூல்களைப் பிழையறத் திருத்தியச்சிடத் தொடங்கியது. இத்தொண்டு பின்னர் தமிழ் நாட்டுக்குந் தமிழ்மொழிக்கும் எத்தகைய பயனைக் கொடுத்த தென்பதை யாவருமறிவர். இங்ஙனம் அவர் திருத்தி யச்சிட்ட நூல்களே, பிற்காலத்தில் தமிழ்நூல்களை யச்சிட முன்வந்தோருக்கு ஓர் வழிகாட்டியாக விருந்தன. இவ்வரிய தொண்டாற்றியதற்குத் தமிழுலகம் அப்பெரியாருக்கு எவ்வளவு கடப்பாடுடைத்தோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயச்சண்டை நாவலருக்கும் அவர் மூலமாகத் தமிழ்மொழிக்குஞ் செய்த பேருதவி யிம்மட்டன்று. அவருக்குமுன் கோயில்களிற் படிக்கும் புராணவிதிகாசங்களுக்குத் தமிழில் விரிவுரை கூறுதலேயன்றிப் புறம்பான வொரு பொருளைப்பற்றித் தமிழில் விரிவுரை நிகழ்த்தும் வழக்கந் தமிழ்நாட்டிலிருந்ததில்லை. சைவர்கள் கிறீத்தவத்தைத் தழுவாதவண்ணந் தடுப்பதற்கும், கற்றோருங் கல்லாதோருஞ் சைவத்தின் உண்மைகளை யறிந்துகொளற் பொருட்டும், கிறீத்தவப் பாதிரிமார்கள் செய்து வந்த ஆங்கில விரிவுரைகளை முன்மாதிரியாகக்கொண்டு, சைவாகமங்களைப்பற்றியுஞ் சமயகுரவர்களைப் பற்றியும் முதன்முதல் யாழ்ப்பாணம் வைத்தீசுரன்கோயிலிலேயே விரிவுரை யாற்றத் தொடங்கினார். இதுவே தமிழில் விரிவுரையாற்றலின் முதற்றொடக்கம். இதுமுதல் அவர் மடாலயங்களிலுஞ் சிவாலயங்களிலுஞ் சைவசமயத்தைப்பற்றிப் பொழிந்துவிட்ட விரிவுரைகளுக்கு அளவில்லை. இதன் பயனாக அவர் தமிழில் விரிவுரையாற்றலில் மிகுந்த வாற்றலுடையராய்த் திகழ்ந்து விளங்கினார். இக்காரணத்தால் பின்னர் அவருக்குத் திருவாவடுதுறை யாதீனத்தில் "**நாவலர்**" என்னும் பட்டம் வழங்கப்பட்டது. அவரைப் பின்பற்றித் தமிழ்நாட்டிற் பலர் விரிவுரையாற்றலைக் கைக்கொண்டு, அதில் திறமை வாய்ந்து விளங்கினர். சிலர் அவரைப்போல் "நாவலர்" என்ற பட்டமும் பெற்றனர். ஆயினும் நாவலர் எனுஞ் சிறப்புப் பெயர் ஆறுமுகநாவலரவர்களையே குறிக்கும். இதைக் குறித்தே சேற்றூர் அருணாசலக் கவிராயரும்,

"நிலவுலகி லொருமதிய நிலவியதென் றேநிகழ்த்தப், பலகலையு நிரம்பியாழ்ப் பாணமெனும் பாற்கடலி, லிலகியெழீஇ நாவலரென் றியம்புபெய ரெவர்பெறினுங், குலவுதமை யேகுறிக்கக் கொண்டபெருங் குலப்புகழார்."

எனக் கூறினர். ஆகையின், அவராலேயே மேலைநாட்டுமொழிகளைப் போலத் தமிழ்மொழியும் விரிவுரையாற்றுதற்கோர் சிறந்த மொழியாகி விளங்குகின்றது. இப்போ தமிழில் விரிவுரையாளராய்ச் சிறந்து விளங்கும் அறிஞர்களுக்கு அவரே முதற் குரவர் எனல் மிகையாகாது.

இனிமேல் தமிழ்மொழியில் நூல் யாத்தலில் அவருக்கிருந்த திறனைப் பற்றிச் சிறிதாராய்வாம். அவர் அக்காலத்திருந்த ஏனைய புலவர்களைப் போலப், பாக்கள் பாடுவதில் நாட்களைக் கழிக்கவில்லை. எனினும் பாக்கள் யாத்தலில் வன்மையில்லாது விடவில்லை. சிலவேளைகளில் அவர் ஆசுகவிகளைப் பாடியதாகவுஞ் சொல்லுவார்கள். அதற்குப் போதிய சான்றுகளும் உள. ஆயினும், அவரின் வன்மையும் பெருமையுங் கட்டுரை வரைவதிலேயாம். இதுவுஞ் சமயச் சார்பாகவே யெழுந்தது. சமயத்தைப் பற்றிய போட்டிகளில் துண்டுக் கட்டுரைகள் விடுத்தன

Digitized by Noolaham Foundation.

ரென மேலே குறிக்கப்பட்டது. அவைதான் அவர் கட்டுரைகளுக்கு முதற்றொடக்கம். இதனை யாராயு மிடத்து ஒன்று நோக்கற்பாலது. நாவலருக்குமுன் தமிழிற் கட்டுரை நடை எழுதுவது பெரும்பாலும் வழக்கமில்லை. பாவினால் எழுதுவதே வழக்கம். கடிதங்கள்கூடப் பாவினாலேயே எழுதப்பட்டு வந்தன. இதுகாறுந் தமிழ்மொழியில் உரைநடையில் நூல்கள் மிகுதியாய் ஆக்கப்படவில்லை. பழைய நூல்களுக் கெழுதிய உரைகளிலன்றி வேறிடங்களில் உரைநடை மிகுதியாய்ப் பாவிக்கப்படவில்லை. சிலப்பதிகாரத்துக்கு எழுதப்பட்ட அடியார்க்குநல்லாருரை, இறையனாரகப்பொருளுரை, நச்சினார்க்கினியருரை முதலிய இவைகளே தமிழ்மொழியிற் காணப்படும் பழையவுரைநடைக் கெடுத்துக்காட்டுகள். இவைகளேயன்றி இதுகாறும் யாவரும் ஒரு நூலைத் தனியே உரைநடையிற் செய்ததாகத் தெரியவில்லை. நாவலர் காலத்து யாராயினும் உரைநடையில் எழுதநேருறின், பொருண்மயக்கை விளைக்குங் கடுஞ்சொற்கள் மலிந்தும், வடசொல் மிகுந்துஞ் செந்தமிழ்ச்சொல் லருகியும், இலக்கணப் புணர்ச்சி செறிந்தும், எழுதினோர்க்கேயன்றி மற்று யாவர்க்கும் பொருள் புலப்படாவண்ணம் எழுதுதல் வழக்காயிருந்தது. இதனால் அக்கட்டுரைகள் கற்றறிந்த புலவர்க்கேயன்றி மற்றையோருக்கு யாது பயனும் பயக்க முடியாததாயிருந்தன. எனினும், நாவலரவர்களின் கட்டுரைகளத்தகையவல்ல. அவர் கட்டுரையெழுதியது சைவசமயத்தைப் பாதுகாத்தற்பொருட்டு. கற்றறிந்தோரினும் பார்க்கப் பொதுமக்களுக்கே சமய அறிவு ஊட்டப்படல்வேண்டும். அங்ஙனம் சைவசமயத்தின் உண்மைகளை அவரறிந்தாற்றான் பிறசமயத்திற் சேரார். இந் நோக்கத்துடன் நாவல ரெழுதவேண்டி யிருந்தமையால், யாவர்க்கு மெளிதில் விளங்கக்கூடிய தெள்ளியமுறையில் பெரும்பாலுஞ் செந்தமிழ்ச்சொல் நிறைந்த உரைநடையை யெழுதினார். கட்டுரை வரைவதில் அவரின் முக்கிய நோக்கம் பொருட்டெளிவு. இக்கருத்தையெண்ணியே மேல்நாட்டார் பாவித்து வரும் முழுத்தரிப்பு முதலிய குறியீடுகளையும் எடுத்தாளத் தொடங்கினார். முதன்முதற் றமிழில் குறியீடுகளைக் கையாண்டவர் நாவலரவர்களே. பிற்காலத்தில் அவர் எழுதிய பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம் முதலிய நூல்களிற் காணப்படுஞ் செவ்விய நடையும், பொருட்டெளிவும், உயரிய போக்கும் ஈண்டு குறிக்கப்பட்ட காரணங்களினாலெழுந்தன. வடசொற் பாவியாது அவர் விடவில்லை. அவைகளில் யாவராலும் விளங்கக்கூடிய சொற்களையும், தமிழுருவத்தோடு பாகதவழி வந்த ஆரியச்சொற்களையுமே அவர் பாவித்திருக்கின்றனர். இன்னோரன்ன காரணங்களினாலேயே அவரைப் பரிதிமாற் கலைஞனும் "வசனநடை கைவந்த வல்லாளர்," எனக் கூறிப்போந்தனன். உண்மையில் நாவலரவர்களைக் கட்டுரை நடைக்குத் தந்தை யெனலாம். இப்பெருந்தகையின் ஓயா உழைப்பினாலன்றோ தமிழ்த்தாயும், இப்போ உலகத்தில் முன்னேற்றமடைந்த மொழிகளுள் முதன்மை பெற்றுலவுகின்றனள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திருவாவடுதுறையாதீன மகாவித்துவான்
ஸ்ரீமத் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்கள் பாடியன.)

பரவு புகழ் ஆறுமுகநாவலர்.

தரவு கொச்சகக் கலிப்பா.

அகத்தியந்தொல் காப்பியமுன் னாயபல விலக்கணமுஞ்
சகத்தியல்பல் லிலக்கியமுஞ் சாற்றுபர மதநூலு
மகத்துவமெய்ப் பொருணூலு மதியமையப் பயின்றுணர்ந்து
சுகத்தியலு மநுபூதித் தோன்றலா யமர்பெரியோன். 1.

மாறுபடு பரசமய வழியனைத்து மறமாற்றி
யாறுபடு செஞ்சடிலத் தண்ணலா ரருணெறியே
தேறுபடும் படிவளர்த்துத் திகழுமா தவமுடையோன்
வீறுபடு சிவனடியார் மேன்மைமுழு மையுமுணர்ந்தோன். 2.

கருள்விரவு தலைக்கழிக்குங் கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவு மைந்தெழுத்தும் பொருளாகக் கொண்டுவப்போன்
றெருள்விரவு சுத்தசைவ சித்தாந்தப் பெருஞ்செல்வ
னருள்விரவு பரவுபுக ழாறுமுக நாவலனே. 3.

சைவப்பயிர் வளர்க்கு மெழிலி.

விருத்தம்.

மன்னுபெருந் தமிழ்ப்பாடை யிலக்கணமு மிலக்கியமும் வரம்பு கண்டோன்
மன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன் சிவாகமநூற் பரவை மூழ்கி
யுன்னுமநு பூதியெனும் விலைவரம்பி லாமணிகை யுறக்கொண் டுள்ளா
னின்னுநய குணத்தினனாய்ச் சைவமெனும் பயிர்வளர்க்கு மெழிலி போல்வான்.

நீடுபுகழ்த் திருக்கேதீச் சரந்திருக்கோ ணாசலமிந் நிலவா நின்ற
நாடுபுகழ்த் தலம்பொலியாழ்ப் பாணத்து நல்லூர்வாழ் நகராக் கொண்டோன்
றேடுபுக ழுருவமைந்த கந்தவே டவத்துதித்த செல்வன் யாரும்
பாடுபுக ழாறுமுக நாவலனவ் வாறச்சிற் பதிப்பித் தானே. 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ சிந்தாமணி.

ஆசிரியப்பா.

கந்தவே டவத்திற் கருதரன் பான்மூன்
வந்தவே ளென்ன வந்தவ தரித்தோ
னீற்றொடு கண்மணி நிறையப் பூண்பார்ப்
போற்றொடு பொலியும் புண்ணிய புருட
னவநெறி யாய வனைத்துங் களைந்து
சிவநெறி வளர்க்குந் திப்பிய குணத்த
னெழுத்து முதலாக வியம்பிலக் கணமும்
வழுத்திலக் கியமும் வரம்புகண் டெழுந்தோன்
சமயம் விசேடந் தகுநிரு வாணமென்
றமையுமுத் தீக்கையு மடைவுறப் பெற்றோன்
சுமங்கல விசேடச் சுருதியா மூலா
கமங்களின் முப்பொருள் கருதுபே ரருளான்
யுத்தியி னமைத்துணர்ந் தோங்க ஆபூதி
சித்தியுற் றமைந்த சிவசிந் தாமணி
கற்றுணர் புலவருட் களிக்கு
முற்றுண ராறு முகநா வலனே. 6.

"தமிழ் ஆசிரியர்களிலே சென்ற நூற்றாண்டிலே, சைவசித்தாந்தத்திற்கு மறு உயிர் கொடுத்தவர், திரு. ஆறுமுகநாவலர் ஆவார். யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்கு வந்து அச்சுக்கூடம் வைத்துச் சைவநூற்கள் வெளியிட்டும், சொற்பொழிவுகள் ஆற்றியும் சைவசித்தாந்தத்தை வளர்த்தார்; தமிழுக்கும் புத்துயிர் தந்தார்."

— கீ. நாராயணசாமி முதலியார்.

* * * *

"ஆறுமுக நாவலர் அவர்கள் கண்ணோட்டமின்றி மாயாவாத முதலிய பரசமயங் கடிந்து சைவசமயத்தை நிறுத்திப் புகழ் படைத்தார்கள்."

— சபாபதி நாவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பேறு

(முதலியார் திரு. செ. இராசநாயகம் அவர்கள் J. P.)

"ஈறுமுத னடுவதிக மிணையி லாத விறைவனரு ணூற்பொருளை யெவரு முய்யத்
தேறுமுக மாத்தெளிந்து திரிபு ருமற் செவ்விதுமெய்ப் பிரசங்கஞ் செய்து மேன்மைக்
கூறுபடுகலைத்தொகையைக்கொள்வோர்க்கேற்பக்கொடுத்துநயக்குருமாண்புகுறைவின்றுற்ற
வாறுமுக நாவலனுக் களிக்கக் கைம்மா றைம்முகனு லாகுமெனி லாகுந் தானே."

(வேற்றிவேலாயுதம்)

"அமிழ்தி னினியதடி பாப்பா - எங்கள் ஆன்றோர்கள் தேசமடி பாப்பா" என்ற கவிச்சக்கரவர்த்தியின் வாக்குக் கிலக்காகிய எமது தீந்தமிழ் நாட்டில் தமிழ்ச் சான்றோர்கள் முதற் சங்கத்தினும், இடைச்சங்கத்தினும், கடைச்சங்கத்தினும் பல்லோர் குழுமி முறைமுறையாகத் தமிழ்வளர்ச்சி நாடிப் பலப்பல நூல்களை ஐயந்திரிபினறியாமை வயப்படாது மெய்யுணர்ந்து மக்கள் உய்யு நெறிகூட வியற்றிவைத்துச் சென்றார்கள். அவைகள் உதித்த காலத்து மக்களுடைய உடல்வலியும், அறிவுவலியும், அரசுநிலையும், நாட்டுநிலையும் வேறு. அவை கொண்டு அவை ஏன்றுகொளற்குரியதாயிருந்தது. அதனை அக்காலச் செய்யுள் நடையொன்று கொண்டே அநுமானிக்கலாம். ஓலை ஏடுகளில் எழுத்தாணி கொண்டெழுதிச் சுவடி செய்தகாலப் புலவர்களெல்லாரும் பரந்த கருத்தமைந்த பொருள்களைச் சுருக்கிச் செய்யுள் வடிவில் எழுதிவைத்தார்கள். எழுதுஞ் சிரமமும் பிரதிசெய்யுஞ் சிரமமுமே அவ்வாறு செய்வித்தது. அதுவே வசன நூலியற்றும் ஊக்கத்தையுந் தடுத்தது. பிற்காலத் திப்பணியினை அழகுபடுத்தி வழிகாட்டிவைத்தவர்கள் ஆறுமுகநாவலரவர்களே. இதுபற்றி யக்காலத்திலே தமிழ் நாட்டில் கவிநூல் செய்வதில் ஒப்பாரு மிக்காரு மில்லாதவர் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையென்னும் அறிஞரும், வசன நூல் செய்வதில் ஒப்பாரு மிக்காரு மில்லாதவர் ஆறுமுகநாவலருமேயெனத் தமிழ்ப் பேரறிஞர்கள் போற்றியுள்ள மணிவாக்குகளே அதனை வலியுறுத்தும்.

கடைச்சங்க காலத்தும் பிந்திய இரு நூற்றாண்டுகள் வரையும் சமயப்போர்கள் நமது நாட்டில் மக்களையிடர்ப்படுத்தில. மணிவாசகப் பெருமான் காலத்தில் வைணவம், புத்தம் ஆகிய இருமதங்களும் சைவத்துக்குப் பேரிடர் விளைத்து நின்றதாகத் தெரிகிறது. அதனை அவர் செய்த திருவாசகம், திருக்கோவை யென்னும் இரு நூல்களாலும் அறியலாம். அக்காலவிடர் அடிகளால் ஒருவாறு அமைதிபெற்று வரலாயிற்று. பின் 6-ம், 7-ம் நூற்றாண்டில் சமணமதத்தால் ஒரு சூறைக்காற்று வலிகொண்டுவீசத் தொடங்கிற்று. அக்காலத்தே ஞானசம்பந்தமூர்த்திகளென்னும் இளந்தென்றலானது எழுந்து அதனை யடக்கி வலிகெடச் செய்து நாட்டின் நலிவைத் தீர்த்துவைத்தது. பின், காலத்துக்குக் காலம் சந்தானகுரவர்களும், முனிவர்களுந் தோன்றிச் சைவசித்தாந்தம் உறுதிபெறுவதற்கு ஏற்ற சாதனங்களை மலையிலிட்ட அடியுரமாக்கினர். மேலே கூறிய காலங்களில் உதித்தோர் யாவரும் அவ்வக்காலங்களில் ஒவ்வோர் அரசரது துணைவலியைக் கொண்டே, பெரும்பாலும் சமயப்போரில் எதிர்த்து வெற்றிபெற்றிருக்கின்றார்கள். ஆனால் நாவல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவர்கள் சமயப்போரில் தலையிட்டு அரும் பாடு பட்டதற்கு அவர்களது அறிவும் திருவருளுமே துணையாயிருந்தன.

மக்களது மனப்பான்மையும், அறிவும், ஒழுக்கங்களும் எந்நாட்டினுஞ்சரி ஒருபடித்தாய் எக்காலமும் இருப்பதில்லை. கல்வி நிலையும் அவ்வாறே. நமது யாழ்ப்பாணத்தின் சமயநிலையும் கல்விநிலையும் 100 வருடங்களின் முன்னே இருந்த தன்மையை ஒருவர் அறியவிரும்பின் "யாழ்ப்பாணச் சமயநிலை" என்னும் நூலை ஒருமுறை வாசித்தால் அவை தெரியவரும். இத்தகைய சமயத்தில் ஒருவர் திருவருளால் அவதாரஞ் செய்யவேண்டியது அவசியமாயிருந்தது. அவ்வாறே ஆறுமுகநாவலர் அவதரிக்கலாயினர். சமயாசாரியராய் இருந்ததோடு மாத்திரம் நில்லாது கல்வி விஷயத்தில் நாவலரவர்கள் செய்த வேலை அளப்பில. நாவலருடைய திறமைகளையும், மேன்மைகளையும், வேலைகளையும் பற்றி இனிமேல் புகழவாவது எழுதவாவது இடமில்லை. ஏனெனில்,எல்லாவழியினும், பாவலர்களும், நாவலர்களும், புலவர்களும், மடாதிபதிகளும், குறுநில மன்னரும் தமிழ்ச்சொற்களையும் கருத்துக்களையும் எடுத்துப் புகழ்ந்து முடித்துவிட்டார்கள். அதனால் புதிதாக ஏதும் வெளிவரின் பழைய சரக்கறையில் தொடாமல் வரமுடியாது.

சிலநாட்களுக்குமுன் வெளிவந்த "ஞானசாகரம்," மலர் - கஅ, இதழ் - சரு, பக்கம் கரு-ல் "ஆறுமுகநாவலரவர்கள் சைவசித்தாந்தம் நன்குணர்ந்த பெரியாரேயாயினும் அவர் பெரும்பாலும் 'புராணப் பிரசங்கம்' புரிவதிலேயே முனைந்து நின்றார். சைவ வைணவ மாயாவாதக் கொள்கைகளின் வேறுபாடுகளை விளங்கக்காட்டி, அவற்றுட் பொருந்துவதிது பொருந்தாததிதுவென்று பலரறிய மலைவறுத்துச் சொல்லிச் சைவசித்தாந்தத்தைப் பரவச் செய்தவரல்லர்" எனத் தமது குரு சோமசுந்தர நாயகர் வரலாறு எழுதிச் செல்லும் சுவாமி வேதாசலம் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அது குருவினது பெருமைகளை மிகுத்துக் கூறுதற்கு எடுத்துக் கொண்ட ஒரு மாணவ மரபு. அஃதன்றி ஆராய்ச்சித் துணிவுட்பட்டதல்ல.

"கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானை யல்லா லறியாக் குலமகள்போல்"

என்பதைச் சார்ந்தது.

"சைவமே நிறுத்துஞ் சைவா சாரியர் நால்வ ரோடுங், கைவரு மெந்த நூலுங் கண்டுரை கற்றோர்க் கின்பஞ், செய்வகை யெழுத வல்லா சிரியர்க ளுல்வ ரோடு, மைவரா மென்ன யார்க்கு மதிசய மதிக மாக"

என்று சேற்றூர் அருணாசலக் கவிராயர் அவர்கள் இயற்றிய "நாவலர் சரித்திரம்" ௩௦-ம் பாட்டு அதற்கு ஒருவாறு விடையாகுமென நினைக்கின்றேன்.

1932-ல் கொழும்பு விவேகானந்த சபையாரால் எழுதுவிக்கப்பட்டுப் பரிசில் பெற்ற "நாவலர் வசன நடை" யென்னும் நூலில் 19-ம் பக்கத்தில் "இவ்வாறு நாவலரவர்கள் பல நூல்களை யியற்றி, தண்டமிழ் மக்களுக்குப் பெரும் பயன் செய்தவாறுபோல, பிற்றைக் காலத்திருந்த சிவஞான முனிவரும் ஒருவாற்றான் செய்தனராக எண்ணப்படுகிறார்" என்று எழுதப்பட்டிருப்பதில், நாவலருக்குப் பிற்பட்டவர் சிவஞான முனிவர் என்று கருத இடமளித்துவிட்டது. சிவஞான முனிவர் சிவகதியடைந்து 37 வருடங்களின் பின் நாவலர் பிறந்திருக்கிறார். இவ்வாறு வரும் அபிப்பிராய பேதங்களும் ஏகதேசமுள்ளவைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் அவர்கள் தமிழ்க்கலையாக்க விசித்திர மாளிகையினுட் புகுந்து, ஆங்குள்ள பொருள் விநோதங்களைக் கண்டு களித்துண்டு வீங்குதற் குறுதுணையா யம் மாளிகையி னுயரிய வொப்பற்ற மணிக் கதவமாயுள்ள தமிழ் நூல்களையே முதன் முதல் ஆராய்ந்து செப்பனிட்டு அச்சேற்றி வெளியிட்டார்கள். இவ்வுயர்ந்த பெருமை அவர்களுக்கே யுரியது. அவற்றோடு அச்சுப் பிழையற்ற பதிப்பு வழக்காற்றையும் தமிழ்நாட்டில் பழக்கப்படுத்தியவர்கள் அவர்களே. அவர்கட்கிருந்த ஆங்கிலமொழி யறிவுக்கந்நாளில் அரசசேவையிலமர்ந் திருப்பார்களேயாயின் பொருட்செல்வ மாதிய பல்வளங்களினும் மேம்பாடுற்றுப் பிரபுவாயிருந்திருப்பர். ஆனால் அதை யொருபொருளாய் மதியாது கல்வி நலத்தில் கவின் பெற விளங்கி,

"நிலையிற் சலியா நிலைமை யானும்
பலவுல கெடுத்த ஒருதிறத் தானும்
நிறையும் பொறையும் பெறுநிலை யானும்
தேவர் மூவருங் காவ லானும்
தமனியப் பராரைச் சைலம் ஆகியும்."

[அறம் பொருள் இன்பம் வீடென்னும் நெறிகளினின்று அசையாத நிலைமையினாலும், உலகம் பலவுங் கைக்கொண்ட ஒப்பற்ற கூறுபாட்டானும், அறிவும் பொறுமையும் உண்டாகும் நிலைமையானும், பிரமா, விட்டுணு, உருத்திரன் என்னும் முத்தேவரும் காவலாயிருத்தலானும், நின்ற நிலையிற் றளங்காத நிலைமையும் பலவுலகுக்கு மாதாரமாகு மொப்பற்ற கூறுபாடும், இவ்வளவகலமுயரமென்பதும், பலபொருளையுந் தாங்கலும் பெற்ற நிலைமையும், மூவர்க்கு இருப்பிடமாதலு முடைத்தாய பரிய வரையினையுடைய மகாமேருவாகியும்- என்பது இதன் பொழிப்புரை.]

நால்வகை நெறிகளையும் மக்கட்கெடுத்துத் தடைவிடைகளான் விளக்கலானும், தமிழ் நாட்டின் பலவிடங்களினுள்ளாரும் கைக்கொள்ளுமாறு ஒழுக்கங் கூறலானும், சிறந்த அறிவும் பொறுமையும் பெற்றிருந்தமையானும், சிவலிங்கபூசை எழுந்தருளுவித் தாற்றிவந்த நியம விசேடத்தான், முத்தேவருஞ் சிவலிங்கத்தில் அமைதியுற்றிருத்தலால் அவர்கள் காவல் பெற்றிருந்தமை பெறப்படுதலானும், நைட்டிகப் பிரமசரிய நிலையினின்று வழுவாமையும், எதற்குங் கலங்காத திடசித்தமும் கொண்டிருந்தமையானும், இவை நாவலரவர்கள்பால் ஆக்கம் பெற்று நின்றன.

"அளக்கவென் றமையாப் பரப்பின தானும்
அமுதமும் திருவும் உதவுத லானும்
பலதுறை முகத்தோடு பயிலுத லானும்
முள்ளிடைக் கோட்டு முனையெறி சுறவம்
அதிர்வளை தடியும் அளக்க ராகியும்."

[இவ்வளவு பொருளுளவென்று ஆராயப்படாத விரிவானும், அமுதமுந் திருவுமென்று மங்கலமொழி தருதலானும், பல பொருண் மார்க்கமும் தன்னிடத்திற் பயிலுதலானும், ஒருவராலு மளக்கப்படாத பரப்பினையும் அமுதத்தினையும் திருமகளையுந் தருதலும் ஏற்றுமதி யிறக்குமதியுடைய பலதுறை யிடத்தோடு பொருந்துதலு முடைத்தாகிய இருமருங்கும் முள்ளினையுடைய கோட்டினால் பகையைவெல்லாநின்ற சுறவம், முழங்கானின்ற சங்கத்தை வெல்லுதற்கிடமாகிய கடலாகியும் - என்பது இதன் பொழிப்புரை.]

இவ்வளவு கல்வியறிவுண்டென்று அறியமுடியாமையானும், அமுதம்போன்ற நூற்பொருள்களை யாவர்க்கும் விளங்க வுரைத்துப் பெருஞ் செல்வத்தையடையச் செய்தமையானும் பலதிறப்பட்ட நூற் பொருள்களையும், மார்க்கவுண்மையினையும் பயின்றிருந்தமையானும், சமயவாதிகளும் தார்க்கிகரும் அஞ்சிப் பின்னிட வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் பன்னூலறிவும் கடல்போலள விடற்கரிதாயிருந்தமையானும், இவை நாவலரவர்கள்பால் ஆக்கம் பெற்று நின்றன.

"நிறையுளங் கருதி நிகழ்ந்தவை நிகழ்பவை
தருதலின் வானத் தருஐந்து ஆகியும்."

[நிறைந்த அவரவருள்ளத்தில் எப்பொருள் நிகழ்ந்தவை நிகழ்பவை அப்பொருள்களை அவரவரறிவுக்குத் தக்கதாய்க் கருதக் கொடுத்தலானும் அவரவருள்ளங் குறைபடாமற் கருதியவருள்ளத்தினிகழ்ந்த பொரு ளெப்பொரு ளப்பொருள்களைக் கொடுக்கும் வானத்தின்கணுள்ள ஐந்தருவாகியும் - என்பது இதன் பொழிப்புரை.]

தன்பால் கற்கவரும் மாணவர்க்கும், தனது விரிவுரையைக் கேட்கவரும் மக்களுக்கும் அவரவர் அறிவின் வன்மை மென்மைக்கும் நிலைக்குந் தக்கவாறு நூற்பொருள்களை மனங்கொளச் சொல்லிக் கொடுத்தலானும், கருதிச்சென்ற ஐயங்களை மயக்கமறக் கொடுத்தலானும் இவை நாவலரவர்கள்பால் ஆக்கம் பெற்று நின்றன.

"மறைவெளிப் படுத்தலின் கலைமகள் இருத்த
அகமலர் வாழ்தலின் பிரமன் ஆகியும்."[லின்

[இரகசியப் பொருளை வெளிப்படுத்தலானும், சரஸ்வதி குடியாக விருத்தலானும், இதயகமலத்தில் தங்குதலானும், வேதத்தை வெளிப்படுத்தச் சரஸ்வதியோடு பொருந்தித் தாமரையிடத்திலிருக்கும் பிரமனாகியும் - என்பது இதன் பொழிப்புரை.]

அரிய நூற்பொருள்களைவெளிப்படுத்தலானும், பொச்சாப்பின்றிக் கற்றதுங் கேட்டதுமாகிய நூற்களை வேண்டியபோது எடுத்துக் கூறுந் தரத்ததாய் மனத்தில் நிலைகொண்டிருந்தமையானும், இருதய கமலத்தில் கலைமகள் இனிது வீற்றிருந்தமையானும் இவை நாவலரவர்கள்பால் ஆக்கம் பெற்று நின்றன.

"உயிர்பரிந்து அளித்தலின் குலமிசைபோக்கலி
படிமுழுது அளந்த நெடியோன் ஆகியும்."[ன்

[உயிர்கள் விரும்பி வேண்டிய பொருள்களைக் கொடுத்தலானும், அவரவர்க் கடங்காதறிவை மேற்போக்கலானும் உயிர்களை விரும்பிக் காத்தலும் அறிவுக்கு மேலாகக் காணப்படுதலுமுடைய உலகமுழுதும் அளந்த திருமாலாகியும் - என்பது இதன் பொழிப்புரை.]

முன்னமே எத்தனஞ் செய்யாது மக்கள் விரும்பியதை அரங்கினின் றவ்வப்போது சொற்பொழிவு செய்து கொடுத்தமையானும், * தம்மை எதிர்த்தோர்க்குத் தாழாது அவர்களை யடக்கித் தமது கொள்கையினையே மேம்படுத்தி வந்தமையானும், தீய வொழுக்கங்களைக் கடிந்து மக்களை நல்வழியிற் காத்தமையானும், உலகமெங்குந் தன்புகழால் அளந்தமையானும், இவை நாவலரவர்களிடத்தே ஆக்கம் பெற்று நின்றன.

"இறுதியிற் சலியாது இருத்த லானும்
மறுமைதந் துதவும் இருமை யானும்
பெண்ணிடங் கலந்த புண்ணியன் ஆகியும்."

[கற்பவிறுதியில் அசைவின்றி இருத்தலானும், ஆறங்கத்தையுந் தன்னிடத் துண்டாக்கி எல்லாருமறிய வுதவும் பெருமையானும், எல்லாத் தேவரு மொடுங்குங் காலவிறுதியி லேகமா யசைவின்றி யிருத்தலுந் தொழுத விம்மையிற் சீவன் முத்தராய் மறுமைப்பயன் றந்துதவும் பெருமையுமுடைய பார்வதியை யிடப்பாகத்தில் வைத்த சிவபெருமானாகியும் - என்பது இதன் பொழிப்புரை.]

* நாவலரவர்கள் முதற்செய்த பிரசங்கம் "நானின்று ஆயத்தமில்லை" யென்று கூறிய சொற்றொடரையே பீடிகையாகவைத்துச் செய்தமையைச் சரித்திரத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இறுதிக் காலத்தில் சிவத் தியானத்தில் அழுந்தி அசைவின்றி யிருந்த மையானும், சிவபூசாகாலங்களினும், பிர சங்ககாலங்களினும் பூண்டொளிரும் சிவ வேடப் பொலிவினைக் கண்டோர் சிவபெரு மானே எம்மனோரை வாழ்விக்க மானுடச் சட்டை சாத்தி வந்தாராகல் வேண்டுமென வணங்கும் பெருமையானும், மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதி, நிருத் தம், சோதிடம் என்னும் ஆறங்கங்களும் தெரிந்திருந்தமையானும் இவை நாவலரவர்க ளிடத்தே ஆக்கம் பெற்று நின்றன.

"அருள்வழி காட்டலின் இருவிழி ஆகியும்."

[எல்லாவுயிர்கண் மேலுஞ் செல்வதா கிய கருணையையும், வீட்டுநெறியைக்காட்டு மருட்பார்வையையும்கொடுத்தலால் இருவிழி யாகியும் - என்பது இதன் பொழிப்புரை.]

கொல்லாமை மேற்கொண்டொழுகும் நல்லாற்றை மக்கட் கெடுத்து விளக்கி எல்லா வுயிர்களிடத்தும் அன்புபேணிய கரு ணைத்திறன் கொண்டிருந்தமையானும் சைவ சித்தாந்த வழியி னுயர்வையும், அவற்ரு னன்றி வீட்டுநெறியை மக்கள் எய்தாப் பெருமையையும் தடைவிடைகளான் காட்டி அதனை யாவரும் அறியவைத்தலில், இரு விழிபோன்றிருந்தமையான், இவை நாவல ரவர்களிடத்தே ஆக்கம் பெற்று நின்றன.

"கொள்ளுநர் கொள்ளக் குறையா தாகலின்
நிறையுளம் நீங்கா துறைஅருள் ஆகியும்."

[கற்பார் கற்றதனால் குறையாது அறிவு பொருந்திய உள்ளத்தை விட்டுப் பிரியாம லுண்டாதலால், ஒன்ரொன் ரொவ்வாத சமயநெறியிலுள்ளாரெல்லாரு மளவைக ளான் ஆராய்ந்துகொள்ள வேறுபடாமல் அறிவினையுடைய உள்ளத்தை நீங்காது உறையும் அருளாகியும் - என்பது இதன் பொழிப்புரை.]

தன்னிடத்தே வந்து கற்பார் யாவரும் குறைவின்றி நாவலராயும், பாவலராயும், புலவராயும் விளங்குவதற் கேற்பத் தான் குறையாத அறிவினோடும் அருளொழுக்கத் தோடும் நின்று கற்பித்தும், நூல்களை அணி பெற அச்சிட்டுதவியும், வேறுபட்ட சமய வாதிகளெல்லாருந் தொடுக்கு மாசங்கைகட் கெல்லா மரியவிடை யுரியவகையி னிறுத் துக்கொள்கையின் வேறுபடாத வுள்ளத் தினராய் விளங்கி நின்றமையான் இவை நாவலரவர்களிடத்தே ஆக்கம் பெற்று நின்றன.

"அவைமுத லாகி யிருவினை கெடுக்கும்
புண்ணியக் கல்வி யுண்ணிகழ்." (நாவலன்)

நல்லவை * நிறையவை † யென்னும் இரண்டு சபைக்கு முதன்மையாகி நல்வினை தீவினைகளைக் கெடுக்கும் தரும முதலாகிய கல்விகளை யாவரும் கருதானின்ற நாவலர் பெருமான் எனவே, கல்விக்குரியதா யிக் கல்லாடச் செய்யுளிற் கூறிய குணநலங்கள் யாவும் ஆறுமுகநாவலரிடம் பொருந்தி யிருந்தமையான் கல்வியே யொரு மனிதவுரு வாய் விளங்கியிருந்ததாகக் கொள்ள வமையும்.

---

* நல்லவை:–

"புகழுந் தருமநெறி நின்ரோர் பொய்காம
மிகழுஞ் சினஞ்செற்ற மில்லோர்–நிகழ்கலைக
ளெல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்ரோ
நல்லா ரவைக்கு நலம்."

† நிறையவை:–

"நலனடக்கஞ்செம்மைநடுநிலைநான்குங்
குலனென்றிவையுடையோர்கோதில்-புலனில்
[லோர்
சென்று-மொழிந்தனவுங் கேட்டோர் செறிந்த
மன்ரோ நிறைந்த வவை" [விட

இச்செய்யுளிரண்டினுங் கூறப்பட்ட நல்லவை நிறையவைக் குணங்கள் யாவும் நாவலர் பெருமானுக்கு ஆக்கச் சொல்லா யமைந்து அணிசெய்து நின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAVALAR DAY.

Editorial "Hindu Organ" (25-11-37.)

WE feel it a proud privilege to add to the glowing tributes that will be offered today from many a public platform in Jaffna to the memory of **Sri La Sri Arumuga Navalar**, the great Hindu Reformer and Tamil man of letters. He was undoubtedly the most dynamic personality in the nineteenth century Tamil world Such an Olympian figure is born only once in an age. We cannot do justice in the space of this article to every aspect of his personality or attempt a review of his many-sided labours. At this distance of time when the heat of religious conflict which his labours excited has long since cooled down, we can view his personality in the right perspective. In that perspective he becomes an imposing national leader, a passionate champion of Tamil and Saiva religion, an inveterate opponent of all hypocrisy and sham. The determined fight he put up was directed not so much against any particular creed as against hypocrisy, apathy and corruption in general. He renounced all personal ambitions and took to Bramacharya in order to consecrate his gigantic powers and extra-ordinary intellectual gifts for the revival of Tamil learning and Hinduism with an indomitable courage and fervour which only the great figures of history have exhibited in equal measure. His labours in the cause of Tamil literature and education will alone entitle him to a conspicuous place among our patriots and men of letters He is the creator of modern Tamil prose and the master of a chaste, vigorous and simple literary style. He did pioneer work in bringing out critical editions of Tamil classics and in writing school textbooks.

But it is as a Hindu reformer that his work claims our chief attention. Great as his enthusiasm for Tamil was, his devotion to Hinduism was even greater. In his own day Hinduism was passing through a great crisis, thanks to the activities of foreign missions and the apathy of the Hindus themselves. But for the weight of his mighty personality the history of Hinduism in Jaffna would have been far different. Through lectures and pamphlets he awakened his countrymen to a sense of the degradation into which they had fallen and spared no pains to expose the religious hypocrisy and corruption of his day. His labours provoked a storm of opposition in influential quarters but his unflinching courage and zeal proved fully equal to it. The air of Jaffna was charged with the heat of conflict and Jaffna witnessed a revival such as it never witnessed before or since. The great Navalar has passed into history, but his personality will ever stand as a beacon, inspiring the Tamil world to a life of unselfishness.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரம்மானை.

(பண்டிதர் திரு. சு. இராமசாமி அவர்கள்.)

பாவலர் தாமென்றே பசப்பும் பொய்ப்புலவர்
நாவலர் தாமாக நண்ணினர்யார் அம்மானை.
நாவலர் தாமாக நண்ணினவர் நல்லூரின்
நாவலர் தாமென்றே நவிலுவாய் அம்மானை.
நாமுமவர் புகழ்பாடி யாடுதுங்காண் அம்மானை. 1.

மாறுமுகங் கொண்டெழுந்த மறுசமயத் தானெந்தார்
ஆறுமுக மாக அளித்தவர்யார் அம்மானை.
ஆறுமுக மாக அளித்தவர்தாம் நல்லூரின்
ஆறுமுக நாவலரென் றறைகுவாய் அம்மானை.
அவர்தம் புகழ்பாடி யாடுதுங்காண் அம்மானை. 2.

அமிழ்தின் சுவைதெரியார்க் கிதுவென் றதினினிய
தமிழின் சுவைதெரித்த தன்மையர்யார் அம்மானை.
தமிழின் சுவைதெரித்த தன்மையார் நல்லூரில்
அவதரித்த ஆறுமுக நாவலர்காண் அம்மானை.
அவர்தம் புகழ்பாடி யாடுதுங்காண் அம்மானை. 3.

நீறுமணி கண்டிகையும் நேர்போன வைந்தெழுத்தும்
வீறுமணி யாக விரும்பினர்யார் அம்மானை.
வீறுமணி யாக விரும்பினவர் நல்லூரின்
ஆறுமுக நாவலரென் றறைகுவாய் அம்மானை.
அவர்தம் புகழ்பாடி யாடுதுங்காண் அம்மானை. 4.

பொன்னும் புவியும் பொற்கொடியு மென்றின்ன
எந்நலமு மென்னலமென் றிகந்தவர்யார் அம்மானை.
எந்நலமு மென்னலமென் றிகந்தவர் நல்லூரின்
இன்பமிகு நாவலரென் றியம்புவாய் அம்மானை.
என்றுமவர் புகழ்பாடி யாடுதுங்காண் அம்மானை. 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்களின் சால்புப் பாராட்டு.

(அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
திரு. S. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M. A., B. L.)

யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் ஒரு அவதார புருஷர். இடையிருட் கடைக்காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளிபோல தமிழகத்தில் தளரும் சைவமும் தமிழும் தழைய, அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவார். முன்னே பலகாலங்களிலும் தமிழகத்திலிருந்து தான்பெற்ற சில சிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி, ஒருகாலத்து ஒருமுகமாகப் பழங்கடனைத் தீர்த்து என்றுந் தீர்க்கொணாவாறு தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலரென்றால், அது மிகையாது.

முழுதும் தன் முயற்சியால் தமிழ், ஆங்கிலம், ஆரியம் ஆகிய மூன்று மொழிகளையுங் கற்று அகன்றாழ்ந்த நூற்கல்வித் திட்பத்துடன், நுண்ணிய அறிவின் ஒட்பத்தையும் பெற்றுப் புலவர் திலகராய் விளங்கினார். தான் பிறந்த நாட்டில் தமிழ்ப் பயிற்சியையும், சிவநெறியையும் புதுக்கிப் பெருக்கிப் பரவச் செய்ததோடமையாமல், தமிழகத்தையும் துயிலுணர்த்தி உயர்வுள்ள ஊக்கிய பெரியாரும் இவரேயாவர். உலகத்தோடொவ்வாது கல்வியைக் கையாண்டு வந்த புலவர் போலாது, வாழ்க்கையை வளம்படுத்துமாறு கல்வித்துறைகளைப் புதுமுறையில் திருத்தியமைத்து வழிகாட்டிய தமிழ்ப் பேராசிரியரும் நாவலரவர்கள்தான். கற்றோர் மற்றவர்க்கு எளிதில் அரிய பல செய்திகளை அறிவுறுத்தும் மேல் நாட்டுப் பேச்சு முறையைத் தமிழிலுங் கையாளலாமென்று முதலிற் காட்டிய பெருமை இவர்களுக்கே உரிமையாகும். இனிய உரைநடையில் தமிழ்க் கட்டுரைக ளெழுதும் புலமை நலன் தொல்காப்பியரால் பண்டைத்தமிழுலகில் நிலவியதெனக் குறிக்கப்படுவதல்லால், அறவே ஆட்சியற்றிருந்த தமிழகத்தில் அத்துறையை, உவப்பும், வியப்பும், ஒருங்குதவ, தமிழுக்கும் தமிழருக்கும் பரந்த பயன்விளைய, நாவலரவர்கள் தானே வழிகாட்டியாயும் தீர்க்கதரிசியாயும் துவக்கி, தமிழுரை நடைக்கு இறவாப் பெருவாழ்வு நல்கினார்கள். உள்ளத் தூய்மையிலும், சொல்வன்மையிலும், தன் காலத்தவருள் ஒப்புயர்வற்று விளங்கிய நாவலரவர்களின் தலைசிறந்த ஒழுக்கச் செல்வி அவர்கள் பகைவரின் பொறாமையையும் அவித்து, அவர் வணக்கத்தையும் புகழையும் கொள்ளை கொண்டது. அவர்கள் காலத்தில் தமிழகத்தில் கல்வி நலன் துய்த்த பொன்னுச்சாமித் தேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவர்கள் போன்ற குறுநிலமன்னரும், சீலமும், தமிழும் சிறக்கப் பிறந்த திருவாவடுதுறைப் பண்டாரச்சந்நிதி சுப்பிரமண்ய தேசிகரவர்களும் இவர்கள் பெருமையை உணர்ந்து பாராட்டி, இவர்களின் தமிழ்ச்சைவத் தொண்டுகளை வாழ்த்தி வளம்பட ஊக்கியுதவினார்கள். திருவாவடுதுறை ஆதீனம் இவர்களுக்கு நாவலரென்ற பட்டஞ் சூட்டி மெய்ப்புலமையையும், தன்புகழையும் பெருக்கிய பெற்றி பாராட்டத் தகுந்தது.

தொன்று தொட்டு என்றும் கணக்கர்யர் எண்ணிறந்தோர் பிறந்து சிறந்த தமிழ் நாட்டில் "கணக்காய"ரென்பது சிறப்பாக நக்கீரர் தந்தையையே சுட்டுமாப் போல "நாவலர்" என்ற பேர்க்குத் தனியுரிமை பெற்ற பெருந்தகையார் இப் புலவர்பெருமான் ஒருவரே என்பது யாவரு மறிந்த செய்தி. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய், உளத்துறவும், மாசற்ற ஒழுக்கமும், நிறைந்த கல்வியும், மதி நுட்பமும், ஊறஞ்சா உரனும், "ஒல்லும் வாயெல்லாம் ஓவாதறஞ்செய்யும்" தாளாண்மையும், அறிவும், திருவுமாகிய தன் இருபெருநிதியும் இவரு மல் விரும்புவோர்க்களிக்கும் வள்ளன்மையும், தன்னொடு நாளும் வளரப் பிறர்நலம் பேணுதலே துறவின் பயன் எனும் மெய்யறத்தைத் தன் வாழ்க்கையால் வற்புறுத்தி, ஊராண்மைசெய்த உபகாரி நல்லோர் நாவலரவர்களைத் தமிழகம் போற்றுவதில் வியப்பொன்றில்லை. அவர்கள் புகழ் நாடொறும் அவர்கள் விரும்பி வளர்த்த தமிழ்ச்சைவ நிலைபோல வளருவதாக.

வில்லூர் மாட நல்லூர் வாண
னெழுத்து முதலாக வழுத்திலக் கணமெலாங்
கடைபோக வுணர்ந்த தடையறு மறிஞன்
தாதலம் புகழ்சிவ புராணச் செல்வஞ்
சமயங் களினுயர்ந் தமைவுபெற் றோங்கித்
தெய்வத் திறம்பொலி சைவ மென்னப்
பலபல கலையெலா நிலவுற வுணர்ந்த
புலவரி லுயர்ந்தொளிர் நலமலி பெருமான்
புகலருஞ் சீர்த்தி பொத்துஞ்
சகமகி ழாறு முகநா வலனே.

—திரு. ச. தெய்வநாயகம்பிள்ளை அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமுவப்பத் தோன்றிய பரசமயகோளரி.

(மேலைப் புலோலி, வித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்.)

ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே, கார்காத்த வேளாளர் மரபிலே, பாண்டிமளவர் குடியிலே, சாலிசகம் கஎசரு-க்குச் சரியான கிறிஸ்து வருடம் கஅஉஉ-ம் வரு மார்கழி மாதத்திலே, உலக முவப்பத் தோன்றினர். இவரது தந்தையார் நாமம் கந்தப்பிள்ளை. தாயார் பெயர் சிவகாமியம்மையார். ஆறுவது புத்திரராகத் தோன்றிய இப் புலவர்பெருமான் ஐந்தாம்வயதிலே வித்தியாரம்பம் செய்யப்பெற்று யாழ்ப்பாணத்திலே யிருந்த சுப்பிரமணிய உபாத்தியாயரிடஞ் சிலவருடங் கல்விபயின்று, அப்பால் வேலாயுத முதலியார் என்னும் புலவரையடுத்து, அவர் புத்திரராகிய சம்பந்தப் புலவருடன் கூடிக்கற்றுப் பின்னர், இருபாலையென்னு மூரிலிருந்த மகா வித்துவ சிரோமணியாகிய சேனாதிராய முதலியார் அவர்களிடத்தும், வண்ணையிலிருந்த 'நன்னூற் கருப்பை' 'வேதாந்தசுயஞ்சோதி' முதலிய அரிய நூல்களைச் செய்து இலக்கிய இலக்கணக் கடலாய் விளங்கிய சரவணமுத்துப் புலவர் அவர்கள் இடத்துங் கற்று வடமொழி தென்மொழிகளில் மகா பாண்டித்திய மடைந்தனர். இலக்கியம், இலக்கணம், தருக்கம், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய கலாசாகரங்களையுண்ட பரசமயகோளரி ஆகிய இவர் சைவசித்தாந்த சமயத்தைப் பரிபாலிக்கவும் அச்சமய நூல்களைப் பிரசுரிக்கவும் அவைகளைப் போதிப்பதற்கு வித்தியாசாலைகளைத் தாபிக்கவும் சித்தாந்த வுண்மைகளைப் பிரசங்கிக்கவும் புறமதவிருள்களை யோட்டவுமே யெண்ணினர். அங்ஙனமே சிவஞானபோதம், கந்தபுராணம், சேதுபுராணம், திருவள்ளுவர் குறள் (பரிமேலழகருரை) அகத்தியர் தேவாரத்திரட்டு, திருக்கோவையாருரை, தொல்காப்பியம் சேனாவரையருரை, தருக்கசங்கிரகம் அன்னம்பட்டியம், தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கணக்கொத்து, பிரயோக விவேகம், நன்னூற் காண்டிகையுரை, விருத்தியுரை, சூடாமணிநிகண்டு, சிவத்துவவிவேகம், பதினோராந் திருமுறை, பெரியபுராணம், திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கருவை வெண்பாவந்தாதி, உவமானசங்கிரகம், திரிகடுகம், தாயுமானசுவாமிபாடல் முதலிய அரிய பெரிய நூல்கள் அழியாவண்ணம் பல பிரதிகளைத் தருவித்து நன்கு பரிசோதித்து வழுவறப் பதிப்பித்தனர். அன்றி, பெரிய புராணத்துக்குச் சூசனமும், கோயிற்புராணம், சைவசமயநெறி, திருமுருகாற்றுப்படை, திருச்செந்தினிரோட்டக யமக வந்தாதி, சிவதருமோத்தரம் என்னுமிவையிற்றிற்கு உரைகளுஞ் செய்தனர். இவையன்றி, முதலாம், இரண்டாம், மூன்றும், நான்காம் பாலபாடங்களையும், இலங்கைப் பூமிசாஸ்திரத்தையும் தம்மாற் றாபிக்கப்பட்ட வித்தியாசாலைகளினும், அவைபோன்ற வித்தியாசாலைகளினும் படிப்பிக்குமாறு தக்கவிதமாக இயற்றிப் பதிப்பித்தனர். முதலாஞ் சைவவினாவிடை, சிவாலய தரிசனவிதி, சிதம்பரமான்மியம், பெரியபுராணவசனம், இலக்கண வினாவிடை, இலக்கணச்சுருக்கம், கந்தபுராணவசனம் என்னுமிவைகளையும் இவைபோன்ற இன்றியமையா நூல்களையும் வசன நடையில் இயற்றினர். வில்லிபுத்தூராழ்வார் பாரதம் என்னும் காப்பியத்தை வைணவர்கள் சிலர் சேர்ந்து, சிவபெருமானைப் புகழ்ந்து ஆங்காங்குச் செய்யப்பட்டுள்ள அருஞ் செய்யுட்களையெல்லாம்நீக்கிப் பிரசுரித்தகாலத்து, அக்குறைவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தி, உள்ளவாறே பதிப்பித்தனர். இராமலிங்கபிள்ளை என்பவர் தாஞ் செய்த பாடல்களுக்கு அருட்பா என்றும், தமக்குத் திருவருட்பிரகாசவள்ளலார் என்றும் பெயரிட்டு பாடல்களில் ஆங்காங்குத் தாம் ஓதாதுணர்ந்தேம் என்றும், செத்தவரை எழுப்புதல், தண்ணீரால் விளக்கிடல், சாக்கிரத்தில் நடேசருடன் பேசுதல், இரசவாதஞ் செய்தல் ஆதிய அற்புதச் செய்கைகளைச் செய்தேமென்றும், செய்வேமென்றும் தற்புகழ்ச்சி செய்துலவிய காலத்து, இவர் அங்ஙனம் அற்புதச் செய்கைகளைச் செய்யவில்லையென்றும், அங்ஙனம் செய்யின் பல அறிவினர் சமுகத்திற் செய்து உலகைத் திருத்த வெளிவரலாமென்றும், அவ்வாறின்றிப் பொய்யாயினவற்றை மெய்யெனச் சொல்வதன்றிப் பாட்டுக்களினும் சேர்த்துவிடின், சமயகுரவர்களுஞ் சந்தான குரவர்களுஞ் செய்த உண்மையான அற்புதங்களும் இங்ஙனமாக உலகத்தவரால் எண்ணப்படுதலால் அதிபாதகஞ் சேருமென்றும், தேவாரதிருவாசகம் முதலியவை அருட்பாவென்றும், திருமுறைகளென்றும் பெயர் பெறுமென்றும், சிவபெருமானே திருவருட்பிரகாசவள்ளலார் என்னுந் திருநாமத்திற்குத்தகுந்தவர் எனவும் பிரபல நியாயங்கள் காட்டி போலியருட்பா மறுப்பு என்னும் புத்தகத்தை வெளியிடுவித்தனர். இதனால் வாய்பூட்டப்பட்ட இராமலிங்கபிள்ளையும் அவர் சீடர்களும் பொறாமை கொண்டனர் என்ப. இராமலிங்கபிள்ளையவர்கள் போன்ற சைவப்பயிர் தழைக்க இன்சொன் மழை பொழியுஞ் சித்தாந்த மேகங்கள் தோன்றுவோவென்று சொப்பனத்துந் தம்மனத்தெண்ணுங் கிடக்கை வாய்ந்த நம் நாவலர் பெருமானவர்கள் இராமலிங்கபிள்ளை அவர்கள் பாடலாற் பொறாமை கொண்டாரென்பது உலகமொப்பாத தொன்றே. அது கடவுளே யறியுமென்க. இவையன்றி நல்லறிவுச் சுடர்கொளுத்தல், யாழ்ப்பாணச் சமயநிலை, சைவ தூஷண பரிகாரம் முதலிய சில புத்தகங்களையும் இயற்றினர். யாழ்ப்பாணத்திலே வண்ணார்பண்ணை யென்னுமூரினும் கோப்பாய் என்ற ஊரினும் புலோலி என்னும் ஊரினும் இந்தியாவிலே சிதம்பர க்ஷேத்திரத்திலும் ஒவ்வோர் பாடசாலைகளை யேற்படுத்தி அவைகட்குச் சைவப்பிரகாச வித்தியாசாலை என்று பெயர் வைத்துப் பரிபாலனஞ் செய்துவந்தனர். இவர் இலக்கியம், இலக்கணம், வேதம், ஆகமம், உபநிடதம், சித்தாந்தம், ஸ்மிருதி, நியாயம் முதலிய கலைகளில் வல்லவர். வடமொழி தென்மொழிகளினன்றி ஆங்கில பிறபாடைகளினுந் தேர்ந்தவர். பிரசங்க வன்மை, வாக்குச் சாதுர்யம், சுசியுடைமை, நல்லொழுக்கம், சிவபக்தி, சிவனடியார்பக்தி முதலிய நற்குண நற்செய்கைகளுக்கோர் வித்து. சைவசித்தாந்த பயிர்க்கோர்வானம். திருக்கோவையார் முதற் பதிப்பிட்ட போது அதன்கண் அச்சிடுவிக்கும் நூல்களின் பெயரட்டவணைகளைக் காட்டினர். அவைகளெல்லாம் அவராற் பதிப்பிக்கப்பட்டிருப்பின் மிகநன்றேயாம். சைவப்பிரகாச சபையென ஆங்காங்குப் பல சபைகள் தாபித்துப் பிரசங்கம் புரிந்தும் புரிவித்தும் வந்தனர். சைவோதயபானு என்னும் பத்திரிகை யாழ்ப்பாணத்திற் றோன்றி நிகழ்ந்தது இவர் துணையானேயாம். இவர் மாணாக்கர்களாகிய வித்துவசிரோமணிகள் பலர் யாழ்ப்பாணத்தும் சென்னை சிதம்பரம் முதலிய இடங்களிலு மிப்போது மிருக்கின்றனர். இவர் சிறுவயதிலே அனேக தனிப்பாடல்களும், கதிர்காம க்ஷேத்திரத்து அறுமுகக் கடவுண்மீது கீர்த்தனங்கள் சிலவும் பாடியுள்ளார். காத்திராப்பிரகாரம் இந்நாவலர் பெருமான் வயது ஐம்பத்தாறு மாதம் பதினொன்றில் இவ்வுலகைத் துறந்து பரம முத்தியை அடைந்தார் எனக் கேட்டு வருந்தாத தமிழ்நாடுமுண்டோ? அதாவது கஅஎகூம் ஆண்டுக்குச் சரியான பிரமாதி ஆண்டு கார்த்திகை மாதத்திலே முத்தியடைந்தனர். இப்போதும் அநேகர் அவர் குருபூசை நடத்திவருகின்றனர். இவரது சரித்திரங்களையெல்லாம் 'ஆறுமுகநாவலர் சரித்திரம்' என்னும் நூலிற் றெளிவாகக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடசாவதானம்
(திரு. சுப்பராயச் செட்டியார் அவர்கள் பாடியன.)

சிவமே பொருளெனத் தேர்ந்தோன்.

சூர்முத றடிந்த கூர்நுதி வேற்கைக்
கந்தவேட் கன்பார் கந்தவேட் பெயரியோன்
சொல்லியன் றவத்தாற் கல்வியங் குரித்தென
விடலரும் பல்லுயிர் மடனற வந்தோ
னிலக்கண விலக்கிய தருக்கவே தாந்தப்
பெருக்கமுற் றுணர்ந்த பீடுறு பெரியோன்
பதிபசு பாசப் பகுப்பிற் றுமெனப்
பொதிவுறத் தெரித்துப் பொருவிலின் புறுத்துஞ்
சைவசித் தாந்த மெய்வரு பனுவன்
முற்றொருங் குணர்ந்தருள் பொத்திய வசத்தாற்
சிவமே பொருளெனத் தேர்ந்த புந்தியோ
னவநிதி சமழ்ப்ப நல்கருட் கொடையினோன்
கதுவிய புலமைக் கதிர்ப்பின்
முதுபுக ழாறு முகநா வலனே. 1.

கருணையங் கடல்.

நிலமகண் முகமெனக் குலவும்யாழ்ப் பாணத்து
அதிவளஞ் செறிந்து பொதிதலிற் பலகலை
வல்லோர் புகழு நல்லூ ராளி
நந்தலி னலங்கெழு கந்தவேட் குரிசில்
பெரிதுவந் துஞற்றிய வரியமெய்த் தவத்தாற்
பொறையருள் சாந்த நிறைகொடை வாய்மையென்
றின்னநற் குணங்களோர் மன்னிய வுருக்கொடு
வந்ததென் றியாவரும் வழங்கிட வந்தோன்
கல்வியங் கடலைக் கடப்பவர் தமக்கோர்
சொல்வியன் புணையெனத் துரிசற நிற்போ
னிருவகைப் பிரம சரியநன் னெறியின்
மயற்றலை புகுத்தா நயிட்டிக நிலையினன்
கற்பனை கடந்த சிற்பரஞ் சுடர்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவினு நனவினுங் கழலாக் கருத்தினன்
பழிதரு முத்திப் பகுப்பெலா மொருவி
யழிவில்பே ரின்ப மளிக்குறு முத்தியை
யெளிதினிற் றெரித்துப் பளகிலின் புறுத்துஞ்
சைவசித் தாந்த மெய்தரு பனுவலை
யையந் திரிபற வகத்தினன் குணர்ந்தோன்
கையற விகந்த கருணையங் கடலோன்
கூறுசீர் புனையு மாறுமுக நாவலன். 2.

சிவபோகத் தெள்ளமுதருந்தினேன்.

அலகில் பல்சமயக் கலகநா லென்னும்
கான்யா றடைகரை கண்டுளந் தெளிந்து
தானிக ரதுல சைவநா லென்னும்
பெருநதி யுவட்டி னொருவழிச் சென்று
சைவசித் தாந்த தெய்வமாக் கடலை
நணுகியாங் கதனுட் டுணிவொடு திளைத்துச்
சிவபோக மென்னும் தெள்ளமு தருந்தித்
தேக்கெறிந் தென்றுஞ் செருக்கும் பெரியோன்
கனவினு நன்நடை தணவாச் சீலன்
மனமொழி சிறிது மயல்வழி புகுத்தா
தனகன தடிக்கீ ழுமைதர வொடுக்கியோன்
கண்ணக னிலத்தி னண்ணிய மன்பதை
யுள்ளத் தளவிற் கொள்ளக் கொடுக்குங்
கல்வியிற் பெரிய சொல்வன் மையினோ
னென்னொரு நாவாற் பன்ன வமையா
தெனப்புவ னத்தார் தனித்தனிப் புகல
வுரவுநீர் வரைப்பிற் பரவிய புகழோ
னென்னுள நோக்க மிலங்கச் செய்வோன்
மன்னிய சிறப்பின் வரநதி குலத்தோன்
கடிதலில் வாய்மை கனிந்த
முடிவில் சீராறு முகநா வலனே. 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரையா.

(திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள், திருமயிலை.)

நாவலரையாவை யான் நேரிற் கண்டவனல்லன்; அவர்கள் காலம் யான் பிறப்பதற்குப் பலவாண்டுகளால் முந்தினமையின். ஆனால் அவர்களைப்பற்றிச் சில முதியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அல்லாமலும் அவர்கள் நூல்களிற் சிலவற்றைப் படித்துமிருக்கிறேன். அவர்களது இரண்டாம் பாலபாடமும் சைவவினாவிடைகளுமே எனக்கு இளமையிலேயே தமிழ்ச் சுவையையும் சைவப்பற்றையும் உண்டாக்கின. அதனால், பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சிதம்பர மான்மியம், நான்காம் பால பாடம், பெரியபுராண சூசனம், முதலியவற்றைப் பின்னர் படிக்கலானேன். அவற்றால் தமிழ்ச்சுவையும் சைவாபிமானமும் ஓங்கி வளரலாயின. பிறகு, அவற்றின் ஆசிரியராகிய நாவலரிடத்துக் குருத்துவத்தையும் பூணச் செய்தன. இதனால் அவர்கள் உருவப் படத்தை யான் பூசை செய்வதோடு அவர்கள் குருபூசைத் தினத்தையும் யான் இத்தேசத்தவனாயிருந்தும் கொண்டாடுவது வழக்கமாயிற்று.

சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் நாவலருக்கு இணையான புலவரில்லையென்று தொல்காப்பியச் சொல்லதிகாரம் [சேனாவரையம்] அச்சிடும்போது 'தினவர்த்தமானி'ப் பத்திரிகையிற் குறிப்பிட்டதைக் கண்ட இத்தேசப் புலவர்களிற் சிலர் பொறாமையால் மனம் புழுங்கினர். எந்தப் புலவர் இவரைப்போல் தமிழிற்கும் சைவத்திற்கும் வசதிக்குறைவான அக்காலத்தில் சுயநலங் கருதாது உழைத்தவர்? சில புலவர்களுக்கு உரையெழுதத்தான் முடியும். சிலருக்குப் பாடல் இயற்றத்தான் இயலும், வசன நடை வராது. சிலருக்குப் பிரசங்கவன்மை யிராது; ஆனால் பாடஞ் சொல்லும் ஆற்றல் இருக்கும். இலக்கண அறிவு சிலருக்கு இராது. தமிழ்ப் பயிற்சியோடு வடமொழிப் பயிற்சியுமுள்ள புலவர்கள் மிகச்சிலர். ஏட்டுப்பிரதிகளை யாராய்ந்து பாடபேதங்களைச் சீர்தூக்கிச் சிறந்த பாடங்களை நிர்ணயஞ் செய்வது பல புலவர்களால் முடியாத காரியம். இவ்வாற்றல்களெல்லாம் நமது நாவலரிடத்து ஒருங்கே யமைந்திருந்த தல்லாமல் அவர் ஆங்கிலமும் அறிந்திருந்தார். இக்காரணங்களால் அவரை "இணையற்றவர்" என்று பாராட்டியதில் யாது தவறுளதோ யான் அறிகிலேன்.

தாமோதரம்பிள்ளை யவர்கள் தமது தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புரையில் ஏட்டுச் சுவடிகளில் தாம் கண்ட சில தொடர்களின் இயற்கைச் சொரூபத்தை யறிவதற்கு எத்தனை புலவர்களை நாடினா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரென்பதையும் ஒருவரும் தமக்குத் துணைபுரியக்கூடவில்லை யென்றும் நாவலரே தமக்குற்ற ஐயப்பாட்டை நீக்கினரென்றுங் கூறியிருப்பது நாவலரின் இணையற்ற ஆற்றலைப் புலப்படுத்தவில்லையா? ஒருவருக்கு ஈசனளித்த, ஆற்றலைக் கணடு மனம் புழுங்குவது நியாயமன்று. எத்தே சத்தவராயின் என்ன? தமிழ்த் தொண்டரும் சைவப்பிரசாரகருமாகிய நாவலரைப் போற்றவேண்டியது தமது கடனென்பதை அக் காலத்து வித்துவான்கள் மறந்தார்கள். வித்துவக் காய்ச்சலால் உந்தப்பட்டு ஈழத்தேசம் தமிழ்நாட்டிற் சேர்ந்ததென்பதையும் மறந்து மனம் போனவாறு பிதற்றித்திரிந்து மாண்டனர். அவ்வித்துவான்கள் பேர் நிலைநிற்கின்றதா? நாவலர் பேர் நிலவுகின்றதா? என்பதை அறிஞரே சிந்திப்பார்களாக. "நாவலர்" என்றால் யாரைக் குறிக்கின்றதென்பதையும் கவனிக்கற்பாலது.

"நாவலரென் றியம்புபெய ரெவர்பெறினுங், குலவுதமை யேகுறிக்கக் கொண்ட பெருங் குலப்புகழார்"

ஆசிரிய விருத்தம்.

மருவளர் மலர்க்கணயன் மாற்கரிய திருமுடியு
மலரடியும் வையை நதியின்
வான்கரைம ணெளிதுணர மலியன்பு வாய்ந்ததிரு
வாதவூ ரடிக ளருள்செய்
திருவளர் திருக்கோவை யார்நச்சி னார்க்கினியர்
செய்தவுரை சேர்த் தெழுதவுஞ்
சிற்றம் பலத்தந்தை நினையினங் கரமலர்
சிவக்குமென் றுனு முருகவே
ளுருவளரு மோருரு வெடுத்துள முவந்துதற்
குரியதிரு நாம மேகொண்
டுயர்நலூர் தனில்வந்த தெனவாறு முகனென்னு
மொண்பெயர் சுமந்து தெய்வத
தருவளர் கரத்தினு னருளன்பு முதலாய
சற்குணஞ் சார்ந்த பொன்னுச்
சாமிவேள் கொண்டாட வடியர்கட் கின்பந்
தழைப்பவச் சிட்டன னரோ.

—திரிசிரபுரம், திரு. முருகையப்பிள்ளை அவர்கள்.

Digitized by Noolaham Foundation.

THE CHAMPION REFORMER OF HINDUS

(Sir. Pon. Ramanathan Avl. K. T.)

Intolerance on their (the Missionaries) part, it appears, has varied with varying times and circumstances but it is specially observed at the present day, ever since the Champion Reformer of Hindus in the Northern Province died in 1879."

His Excellency the Governor (Hon. Sir. Arthur Hamilton Gorden G. C. M. G.) "Who did you say?"

The Hon'ble Mr. P Ramanathan :—

"The Champion Reformer of Hindus Arumuga Navalar"

தினகரன்.

(நவாலியூர், திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்கள்.)

விருத்தம்.

பொய்யிரு ணிறைந்தறிவு விழியொளி மழுங்கிமெய்ப் பொருணெறிப் புலன் மறைத்து
புறநெறிப் படுகுழிப் பங்கத்தி லுலகம் புகுந்துதடு மாறு பொழுதில்
மெய்யொளி விரித்தா யிரங்கதிர் பரப்பியொரு வித்தைத் தனித் தேரிலே
மேலான செம்மனத் தழியாத பேரன்பு வெம்பரியி னங்கள் பூட்டிச்
செய்யநுண் மதியருண னிறையருட் குசைகொண்டு தேர்கடவ யாழ் நகரிலே
திருமேவு நல்லைநக ரச்செஞ்சி லம்பினிற் றினகர னெனத் தோன்றியே
சைவநெறி யுந்தமிழு மறிவித்து மறுநெறித் தடுமாற்ற நீக்கி யழியாத்
தத்துவப் பொருடந்த வாறுமுக நாவலன் சரணகம லம்வா ழியே.

"ஆறுமுக நாவலர் அவர்கள், சைவசித்தாந்தச் செல்வர். மாயாவாத முதலிய பரசமய கோளரி."

—ஞானமிர்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'பிசாசு யார்'?

நாவலரென்றும், மீனாட்சிசுந்தரம்பிள்ளைக்குப் பின் திருவாவடுதுறையாதீன மகாவித்துவானென்றும் பட்டங்கள் சூடி ஆதீனத்திலிருந்த கோப்பாய் ஸ்ரீ சு. சபாபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்திலொருமுறைவந்திருந்தபோது தர்க்ககுடாரதாலுதாரி என்பவருக்கும் பிள்ளையவர்களுக்கும் இடையிலுண்டான ஒரு விரோதத்தால் தர்க்ககுடாரதாலுதாரிப்பத்திராத்திரப் பிரயோக ஏகவசனதீபிகை என்றொரு பத்திரிகை பிள்ளையவர்களுக்கு மாறாக எழுதினர். அதிலே திருவாவடுதுறைப் பண்டாரச் சந்நிதியையுஞ் சிறிது இழித்தெழுதியிருந்தார். பிள்ளை அதில் இரண்டு பிரதி மடத்துக்கனுப்பி இது சமவாத சைவப் பிசாசாகிய ஞானப்பிரகாசருடைய மரபிற் பிறந்தவனும் நாவலருக்கு மருகன் முறையாயுள்ளவனும் அவருடைய வித்தியாசாலையிற் கற்பவனுமாகிய இன்னனால் எழுதப்பட்டதென்றும் எழுதியிருந்தார். அதிலொரு பிரதியையும் பிள்ளை எழுதிய கடிதத்தையும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் யாழ்ப்பாணத்தில் அப்போதிருந்த நாவலரவர்களுக்கு அனுப்பியிருந்தார்கள். தேசிகரவர்கள் அவற்றை அனுப்புவதற்கு முன்னே அப்பத்திரிகை வெளிப்பட்டதை அறிந்த நாவலரவர்கள் உடனே தர்க்ககுடாரதாலுதாரியை யழைப்பித்துக் கண்டித்தும், தண்டித்தும், எஞ்சிய பத்திரிகைகள் எல்லாவற்றையும் வாங்கிச் சுடுவித்தும் விட்டார்கள். அப்படியிருந்தும் "சமவாத சைவப் பிசாசாகிய ஞானப் பிரகாசர்" என்றதை இவனுமறியட்டு மென்றெண்ணித்தான் பிள்ளை எழுதி கடிதத்தையும் தமக்கு அனுப்பியிருக்கிறார்களென்ற எண்ணம் நாவலரவர்களுக் குண்டாகி மிக்க கோபங்கொண்டு "பிசாசு யார்" என்று மிக நீண்ட கடிதம் ஒன்று எழுதியனுப்பினர்கள். அக்கடிதத்தின் சுருக்கமான சாரமே "நாவலர் பிரபந்தத் திரட்டு" என்னும் நூலிலுள்ள "அகோர சிவாசாரியபத்ததி தூஷண கண்டனம்" "சபாபதிக் குருக்கள் வினா" என்பவற்றி லிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் உடனே ஒருவகையான க்ஷமை வேண்டி நாவலரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள்.

---

* இதுவும், 'இப்புத்தகத்தை விட்டுவிட்டீர்கள்' என்பதும், 'நாவலர் கற்ற நூல்கள்' என்பதும் அருணாசல கவிராயர் இயற்றிய ஆறுமுகநாவலர் சரித்திர முகவுரையிலிருந் தெடுக்கப்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் திருநாள்.

"இந்துசாதனம்" ஆசிரிய வசனம் (25-11-37)

'ஆறுமுகநாவலர் போலே—
அவதார புருஷன்
ஆருமில்லை யினிமேலே'

என்றற் றொடக்கமான ஒரு பாட்டினைச் சங்கீதம் அறிந்தவர்கள் இக்காலத்தில் இங்கே இடையிடையேபடிக்கக் கன்னுமிர்தமாகக் கேட்டுவருகின்றோம். இப்பாட்டுப் பிற்காலத்ததாயினும் பெரிதும் பொருளமைதியுடையதும் பொருத்தமானதும் எனலாம். பறங்கியர் ஒல்லாந்தர் இலங்கையில் இருநூறு ஆண்டுக்கு மேற்பட்ட காலமாகக் கொடுங்கோல் புரிந்ததன் பயனாக இந்த யாழ்ப்பாணத்து மக்கள் தம் சமயாபிமானங்கெட்டு, சாதியபிமானம்இழந்து, பாஷையபிமானங் குறைந்து, தொன்மையை மறந்து அல்லற்படுங் காலத்திலேயே, இறைவனுடைய திருவருளினாற்போலும், ஆறுமுகநாவலர் வந்துதித்தார். நாவலரவர்கள் பிறந்தகாலத்தும் ஆங்கிலேயர் இந்நாட்டினைப் பரிபாலிக்குங் காலமென்பது உண்மையாயினும், சமய நிஷ்டூரம் இல்லாத காலமென்பது மெய்யாயினும், அக்காலத்தில் இங்கு வந்திருந்த பாதிரிமார்செய்த நஞ் சமயத் துரோகமான செயல்கள், பறங்கியர் ஒல்லாந்தர் செய்தவற்றைக் காட்டிலுங் குறைந்ததல்ல. பறங்கியர் ஒல்லாந்தர் நம் சமயத்திற்கு வெளிப்படையாகக் கேடு செய்தனர். ஆனால் இப்பாதிரிமார்களெனிலோ உள்ளொன்று புறம்பொன்றாக நடித்து நச்சுப் பகைமை பாராட்டி நம் சற்சமயத்திற்குக் கேட்டைத் தேடலாயினர். நமது ஆங்கில அரசினரும் இந்த விஷயத்திற் பராமுகமாய் இருந்தனர். இப்படியாக, வழுக்கி விழுஞ் சமையத்திலே ஊன்றுகோல் ஒன்று உற்ற விதமாக ஆறுமுகநாவலர் வந்து அவதரித்தார்.

நாவலப் பெரியார் கொண்ட மேலான நோக்கம் இரண்டு. அவற்றுளொன்று அந்நிய சமயத்து அரசரின் ஆதிக்கத்தினால் தன் உன்னத நிலை குன்றிய சைவத்தைத் தொன்மைபோல் ஓங்கச் செய்தல் வேண்டும் என்பது. மற்றையது செந்தமிழ் மொழியைச் சீர்ப்படுத்த வேண்டுமென்பதாம். இந்த இரண்டு கருமங்களையுஞ் செய்தற்கான குணங்களெல்லாம் அம்மகான் பிறக்கும் போதே உடன் பிறந்தன. சமயாபிமானம் முதலிய நால்வகை அபிமானங்களும், எல்லாவற்றிற்கு மேலான ஈசுரபத்தியும், சுயநலங் கருதாமையும், இச் சத்கருமங்களைச் செய்து நிறைவேற்றும் விஷயத்தில் தம் உயிரைத் திரணமாக மதிக்கும் பெருமையும், சமயத்தையும் பாஷையையும் விருத்தி செய்தற்கு என்ன என்ன உபாயங்களைக் கொள்ளலாமோ, அவைகளை யெல்லாம் உடனுக்குடன் யோசித்து ஆற்றும் நுண்ணிய விவேகமும், அளக்கலாகாக் கல்வியறிவும், வரையறுக்க முடியாத உலக ஞானமும் இப்பெரியார்மாட்டு விளங்கினவாம்!

பாதிரிமார்கள் இங்கே அச்சியந்திரசாலையைத் தாபித்துத் துண்டுப் புத்தகங்களையும் சைவ கண்டனமான பிரதிகளையும் அச்சிட்டு வெளிப்படுத்தித் தம் சமயத்திற்குச் சைவமக்களை இழுக்க முயற்சி செய்வதை நாவலரவர்கள் கண்டார்; உடனே சென்னைக்குச் சென்று அச்சியந்திரமொன்றை அங்கே தாபித்து, அவ்வளவோடமையாது யாழ்ப்பாணத்திலும் தாபித்துப் பழைய நூல்களை ஆதாரமாகக் கொண்டு தாம் எழுதிய வசன நூல்களையும் கிறீஸ்து மத கண்டனப் புத்தகங்களையும் அச்சிட்டுப் பரப்பினார். ஏட்டுப் பிரதிகளாய், படிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினோருக்கு அகப்படாதன வாய்க் கிடந்த கந்தபுராணம், பெரிய பராணம், திருவிளையாடற் புராணம், திருக்குறள் பரி மேலழகர் உரை, நன்னூற் காண்டிகை விருத்தியுரைகள், சைவசமய நெறியுரை, திருவாசகம் முதலிய அரும் பெரும் கலை களைப் பிழையறப் பரிசோதித்து அழகுற அச்சிட்டுப் பரப்பினர். "மாமியும் மருகி யும் மருவி வாழுதல் நானிலத் தில்லையால்" என்ற மாற்றத்திற்கு நேர்விரோதமாக இந் தப் புண்ணிய புருஷனிடத்து இலக்குமியும் சரசுவதியும் ஏககாலத்தில் உடன் விளங்கி னர். சைவவித்தியாசாலைகளை இடங்கள் தோறும் தாபித்தார்; சைவமுறையிற் கல்வி யூட்டவேண்டுமென்று நினைத்துப் பால பாடங்களை எழுதினர். பாதிரிமார் முத லாம் வேதவினாவிடை, இரண்டாம் வேத வினாவிடை யென்னும் புத்தகங்கள் எழு திப் பரப்புவதை இப்பெரியார் பார்த்துத் தாமும் முதலாஞ் சைவவினாவிடை இரண் டாஞ் சைவவினாவிடைகளை எழுதி அச்சிட் டுப் பரப்பினர். செய்யுள் நடையிலுள்ள நூல்கள் தமிழறிவு குறைந்த அக்காலத் திற் படிப்பார்க்குக் கடுமையாக விருந்தமை யைக் கண்டு சில நூல்களைச் செந்தமிழ் வசன நடையில் எழுதி அச்சிட்டு வெளி யிட்டார். இன்னும் இப்புருடோத்தமர் தமது சமயத்தின் பொருட்டும் தாய்மொழி யின் பொருட்டுஞ் செய்த செயற்கருஞ் செயல்கள் பல.

இந் நாவலரவர்களிடத்தில் உள்ள பெ ருங்குணம் இன்னுமொன்றுண்டு. தாம் எதனைப் பிறருக்குப் போதித்தனரோ, தாம் எவைகளைத் தம் நூலில் எழுதி வெளியிட் டாரோ. அவைகளை முதல் தாமே அநுட் டித்து நடந்துகொள்ளுவர். இந்த மேலான குணத்தினாலுஞ் செயலினாலுமே ஆறுமுக நாவலரவர்கள் பிறந்து நூறு வருடங்கட்கு மேற்பட்டும், இறந்து ஐம்பது வருடங்கட்கு அதிகமாகியும் இன்னமுஞ் செத்துஞ் சாகா தவர்போல் விளங்குகின்றார்.

இம் மகாத்மா தாம் நைஷ்டிகப் பிரம சாரியாக ஒழுகினரேனும் உலக விஷயம் அரசியல் விஷயங்களை நன்கு அறிந்து அவற்றிலும் அவ்வக்காலங்களிற் பல சீர் திருத்தங்களைச் செய்துள்ளார். நாவலர் சரித்திரம் செய்யுள் நடையாகவும் வசன நடையாகவும் இயற்றப்பட்டுள்ளன. சைவ நன்மக்கள் தமிழகத்தார் அவைகளைத் தவ றாது ஒருமுறை இருமுறை மும்முறை படித்தல் ஆவசியகமாகும்.

இப்படிப்பட்ட பெரியார் சிவகதி யடைந்தினம் இற்றைத் தினமேயாகும். இத்திருநாள் இப்பொழுது சென்னை, சிதம் பரம், கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் முதலிய பல ஊர்களிற் கொண்டாடப் பட லாயின.

"..... அகில மெல்லாந்
தூயநய கவிப்புலவர் தமை நிறக்குந்
துலையென்னத் தோன்றி நின்ற
ஞானமிகு யாழ்ப்பாண நல்லூர்வாழ் ஆறுமுகநாவலன்"

—மகாவித்துவான் நெல்லையப்பன் கவிராஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன் பாங்கனை
முன்னிலைப்படர்க்கையாகக் கழற்றெதிர் மறுத்தல்.

(திரு. சிவங் கருணைய பாண்டியன் அவர்கள்.)

அகவற்பா (குறிஞ்சி.)

இழுமெனும் பண்ணொடு விழுமிய காமத்துப்
பழுனிய தண்பெருந் தீஞ்சுவை யுணரா
ராறலை செய்ஞ்ஞரிற் கொடியர் மாதோ
கருக்கில் பச்சிள வரிமடற் றலைமுளைச்
5 சிறுகுறும் பனைகட் கிடைதொறு நிரைஇய
வவரை வேலிச் சின்மெல் லொதுக்கிற்
பிள்ளை வெருகு வெள்ளெலி தேரும்
ஞெமலொலி வெரீஇப் புலரிப் புன்னுனிப்
பனித்துளி நுகர்முயற் பறழ்வெயில் வெள்ளிடை
10 வளங்கவர் கள்வரின் மருண்டுபுடை நோக்கும்
யாழ்ப்பா ணாட்டான் றூட்டொழும் பாளர்
வதிநல் லூர்வேண் முதுகுடித் தோன்றிக்
கற்றுத்துறை போகிக் காமந் துறந்து
தேனினுந் தீவிய தென்றமிழ் மொழியு
15 மானே றூர்தி யருட்டிரு நெறியு
மந்தோ பொன்றுமா றருந்தமிழ் மக்கள்
கிரைத்த மதத்திற் கெடப்புக்க ஞான்றதற்
கருள்சுரந் துரனினத் தமரை மீட்பச்
செவியறி வுறுத்தவல் செம்புலச் செல்வ
20 ராறுமுக நாவல ரிவரே கொல்லோ
வறிவுஞ் செறிவு மாற்றலும் நாணும்
பிறவுங் குன்றலன் மன்னே யானே
யாங்கவை காப்பவென் னகனிடங் கொண்டென்
வன்றோ ணெகிழ்த்த மென்றோள் வேயும்
25 நெஞ்சுரீஇ யோடுகண் ணஞ்சுண் வேலும்
நிறையுள மவிழ வவிழ்பூங் குழலு
முற்றலின் முலையினுதிர் மூரலின் முத்தும்
முற்றுணர் முருகவேண் முதுகதிர் காமத்
தேமச் சாரலிற் காணு ராதலிற்
30 றூமத் துறக்கத்தின் வந்தனர் போலக்
காமத்தின் மீட்பவெற் கழறு வோரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய குரு.

(திரு. சே. சோ. ஜகதீச சுந்தரம்பிள்ளை அவர்கள், மைலாப்பூர்.)

சித்தாந்த சாகரஞ் செந்தமிழ்ப் பேழை திகழ்மதுரப்
பத்தோடு மேலெண் புராணக் களஞ்சியம் பாங்குசிவ
வித்தான திட்ட விளைநில மென்று விளம்புகின்ற
முத்தான வாறு முகநா வலரெம் முடிமணியே.

ஈழ நாட்டின்கண் செம்மை நிறைந்த, புலமை மலிந்த, சைவம் பழுத்த, தமிழ் வளர்த்த சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே. தமிழர்கள் மாண்பினையும், நிலைபினையும், வாழ்க்கையினையும் உயர்த்திச் சமயப் பற்றுள்ளவர்களாக்கின உத்தமத் தமிழ் நாவலர் இவரே. 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற மூதுரையைத் தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டு நம் தமிழ்நாட்டிற்காக உழைத்த மகான், நாவலர் பெருமான் என்பது அனைவரும் அறிந்த விஷயமாகும்.

நான் பாலபாடம் தொடங்கிய நாள் முதல் மேல்வகுப்புக்கு வரும்வரை இப் பெரியார் வரைந்த புத்தகங்களையே ஆர்வத்துடன் செவ்வனே பயின்றுவந்தேன். நான் என் சின்னஞ் சிறு வயதிலிருந்து தமிழ்ப்பாலை யூட்டிவளர்த்த தமிழன்னையைக் கண்டதாக உணர்ந்தேன். உரை நடைநூல்கள் மிகக் குறைவாயிருந்த அக்காலத்தில் - எடுத்ததெல்லாம் செய்யுள் வடிவிலேயே அமைந்துகிடந்த அக்காலத்தில், சிறுவர் வகுப்புக்குப் புத்தகங்களெழுதிச் சிறுவர்களையும், சொல்வன்மை, பொருள் வன்மை மிகுந்த நூல்களாகிய பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் முதலிய புராணங்களைக் கத்திய ரூபமாக்கிப் பெரியோர்களையும் மகிழச் செய்து தமிழை வளர்த்துவந்தார். இம்மட்டோ! இறந்துபட்டொழிய விருந்த ஏட்டுப்பிரதிகளிலுள்ள அநேக நூல்களைப் பரிசோதித்து வெளியிட்டார். அன்றியும் அநேக நூல்களுக்கு எளிதில் பொருள் விளங்கப் புத்துரை செய்தும், சைவசமயத்தை வளர்த்தற்கு ஆவசியகமான நூல்களைத் தாமே இயற்றியும் வெளிப்படுத்தினார்.

ஆங்கில பாஷையிலே காணப்படுகிற காமா, ஸெமிகோலன், கோலன், டாஷ், புல்ஸ்டாப் முதலிய வாக்கிய லக்ஷணத்திற்கு மிகவும் இன்றியமையாத குறியீடுகளை முதன் முதலில் தமிழ் வசனநடையில் நன்கு உபயோகப் படுத்தினவர் இப் பேரறிஞரே. நாவலர் காலத்துக்கு முன்னர் குறியீட்டிலக்கணங்கள் தமிழ் வசனங்களிலே செவ்வனே இடம்பெறு திருந்தன. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரும் தமது தமிழ்மொழி வரலாறு என்னும் நூலின் கண்ணே,

"ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளிலே மிகவும் பிரயோசன முள்ளதாகக் காணப்படுகிற குறியீட்டிலக்கணம் தமிழின்கண் முழுதும் தழுவிக்கொள்ளப்படுதல் வேண்டும். அதனால் பொருட்டெளிவும் விரைவுணர்ச்சியு முண்டாகின்றன. இவைகாரணமாகப் படித்தானுக்குப் படித்த நூலின்கண் ஆர்வமுண்டாகின்றது. இக்குறியீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலக்கணமெல்லாம் வசனநடை கைவந்த வள்ளலாராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களானே முன்னரே மேற்கொண்டு வழங்கப்பட்டுள்ளன."

என்று நாவலரவர்கள் வசனச் சிறப்பினைச் சிறப்பித்துப் போந்தார்.

நம் நாவலர், இயல்பான ஆற்றொழுக்காகச் சொல்லும் உரைநடை கைவரப் பெற்றவர். அவர் உரைநடை புல்லறிவாளரும் எளிதில் வாசித்து உணர்ந்து கொள்ளும் பொருட்டுச் சந்திவிகாரமின்றிச் சொற்கள் பிரிக்கப்பட்டிருக்கும். அவருடைய தீஞ்சுவைத் தமிழ்நடையை என்னென்பது!

சந்தான குரவர் நால்வரும் சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபாவிருபஃது, சிவப்பிரகாசம் திருவருட்பயன் முதலிய சைவசித்தாந்த சாஸ்திரங்களை அருளிச் செய்து, எல்லாச் சமயங்களையும் கடந்து நின்றது சித்தாந்த சைவசமயமென்று சாதித்தார்கள். அதன் பின்னர் நமச்சிவாய தேசிகர், சிவஞான முனிவர், மாசிலாமணித் தேசிகர், ஞானப்பிரகாச முனிவர், குமரகுருபரசுவாமிகள் முதலிய மகான்கள் பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்யுங் கர்த்தாவாகிய சிவபெருமானே சர்வலோக நாயகரென்றும், அவரை வழிபடு மார்க்கமே முத்திமார்க்கமென்றும், அவரை வழிபடும் அடியார்களே மெய்யடியார்களென்றும் தெளிந்து, அவருடைய பெருமையைத் தங்கள் நூல்களானும் உரைகளானும் உணர்த்தி அடியார்களுக்கும் போதித்துச் சென்றனர்.

நாவலர் காலத்தில் சைவசமயிகளுட் சிலர் பரமத நூல்களைக் கற்றுத் தங்கள் வாணாட்களை வீணாட்களாகக் கழித்து, கண்டதே காட்சி கொண்டதே கோலமாக விருந்து வந்தனர்.

இதனைக் கண்ட நாவலர் பெருமான் மனம் பொறாது அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்த வெண்ணி, பரசமயிகளோடு சமயவாதங்கள் செய்து வென்றார். பரசமயத்திலே புகுந்தவர்களுக்கும் புக வெண்ணியவர்களுக்கும் உண்மைச் சமயமாகிய சைவசமயத்தைப் போதித்து அவர்களைத் திருத்தினார். இதுவுமன்றி, பற்பல விடங்களுக்குச் சென்று பல்லோர் நிறைந்த அவைக்களத்தின்கண், சபைக்குப் பணிவுடைமையும் கம்பீரமும் முகத்திற் றோன்ற இனிய ஓசையுடன் சொற்சுவையும் பொருட்சுவையும் தொடை நயமும் அமைய, எதுகை, மோனை, மடக்கு முதலிய செப்புளிலக்கணங்களை இடையிடையே செறித்து, அமிர்ததாரை வருஷித்தது போலச் சித்தாந்த உண்மைகளைப் பிரசங்கித்தார். தேவாலயந்தோறும் புராணப் பிரசங்கமுஞ் செய்தார். இவருடைய முதல் பிரசங்கம் பிலவங்க ஆண்டு மார்கழி மீ 18-ந் திகதி (1848 Jan.) சுக்கிரவாரத்தில் வண்ணார்பண்ணையிலுள்ள சிவாலயத்திலே நடந்தது. அன்று முதல் ஒவ்வொரு சுக்கிரவாரமும் நியமமாகச் சைவப்பிரசங்கஞ் செய்துவந்தார்.

கேட்டார்ப்பிணிக்குத் தகையவாய்க்கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

என்ற பொய்யாமொழியைப் பொய்யாமொழியாகச் செய்துள்ளார்.

நாவலர் காலத்தில் தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களெல்லாம், ஒவ்வொரு உபாத்தியாயரால் தெருத்திண்ணைகளிலும் கொட்டில்களிலும் வைத்துப் பிள்ளைகளின் சம்பளம் பெற்றுக்கொண்டு படிப்பிக்குமிடங்களாயிருந்தன. படிப்பிக்கப்படும் நூல்களோ ஆத்திசூடி கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய நீதி நூல்களும், சேந்தன் திவாகரம், எண்சுவடி முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிநூல்களுமேயாம். கற்பிக்கும் ஆசிரியர்களோ உபாத்தியாயரின் பிரதிநிதிகளாகிய சட்டாம்பிள்ளைகளேயாவர். சைவசமயவொழுக்க நூல்கள் அங்கே கற்பிக்கப்படவில்லை. சைவசமயிகள் சைவ நூல்களைக் கற்பதில்லை. கற்றறிந்த சிலர், யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி சமயாசாரங்களைப் பிறருக்கு இலகுவில் கற்பிப்பதில்லை. சிறுவராயிருக்கும் போது இவைகளையெல்லாம் அனுபவித்துணர்ந்த இப்பெருந்தகையாளர், தமிழ் நாடெங்கும் பாடசாலைகளைத் தாபித்து, பிள்ளைகளுக்குச் சமயநூல்களையும், அவைகளுக்குவேண்டும் உபநூல்களையும், லௌகிக நூல்களையும் கற்பித்தல் அவசியம் என்றெண்ணி, கற்றறிந்த பெரியோர்களை உபாத்தியாயராக நியமித்து, யாழ்ப்பாணத்திலே வண்ணார்பண்ணையில் இலவச வித்தியாசாலை யொன்றைத் தாபித்தார். அது சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயருடன் விளங்குவதாயிற்று.

அச்சமையத்தில் வர்த்தகசாலையொன்று விற்பனைக்கு வந்தது. அதனைத் தம்முடைய வித்தியாசாலையின் அபிவிருத்திக்காக வாங்க விரும்பினார். கையில் போதிய பணம் இல்லை. அதனால் மனம் வருந்தி, பூசையில் தமது உடையவரை நோக்கி அழுது;

"மணிகொண்ட கடல்புடைகொ ளிந்நாட்டி
வர்த்தன மிலாமை நோக்கி [லுன்சமய
மகிமைபெறு நின்புகழ் விளங்குவான் கருதி
மைப்பொருட் பேறொ ழித்தே [யிம்
கணிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க்
கயவர்செயு மிடர்கள் கண்டுங்
கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக்
கருதுவோ ரின்மை கண்டும்
அணிகொண்ட சாலைய தொழுப்பினமை துணை
மந்நிய மதத்தர் சாலை [யிகழு
யாமென நினைந்தெனெஞ் சற்பகற் றுயருற
லறிந்துமொரு சிறிது மருளாத்
திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யா னு
றிண்ணநீ யறியாத தோ [பிர்விடுத
சிறியேன தன்பிலர்ச் சனைகொளழ கியதிருச்
சிற்றம் பலத் தெந்தையே."

என்றொரு செய்யுளைச் சொன்னார். என்ன ஆச்சரியம் பாருங்கள்! அவர் அழுது புலம்பின அன்றே, உதாரகுணம் படைத்த பிரபுவாகிய நன்னித்தம்பி முதலியார் என்பவர் இவ்வித்தியாசாலைக்காக அனுப்பியிருந்த நானூறு ரூபாயும் வந்து சேர்ந்தது. அப்பணத்தைக்கொண்டு வர்த்தகசாலையை வாங்கினார். பின்னும் யாழ்ப்பாணத்தார் உதவிய பொருள்கொண்டு சிதம்பரத்திலும் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலை ஏற்படுத்தினார். இவருடைய பெருமுயற்சியினாலே யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித்துறை, இணுவில் முதலிய விடங்களில் வித்தியாசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. தமிழ்மக்களுக்கு இவரால் ஏற்பட்ட நன்மைகள் அளவில. சைவசமயத்தின் உண்மைகளைப் போதித்தும், பிரசுரித்தும், பிரசாரஞ் செய்தும், மற்றும் பலவாறு தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்மக்கள் முன்னேற்றத்திற்குமாக இப்பெருந்தகையாளர் ஆற்றியுள்ள தொண்டுகள் கணக்கில்லாதன ஆகும்.

இங்ஙனம் இப்பெருமகனார் தமிழுக்காக ஆற்றின தொண்டினை நினைக்குந்தோறும், தமிழன்னையின் தவப்புதல்வர் என்றும், சமயத்துக்காக உழைத்த உழைப்பினை உன்னுந்தோறும் சமயகுரு என்றும் கொண்டாடுதல் கூடும்.

இப்பெரியாரது குருபூசைப் பெருநாள் நம் தீஞ்சுவைத் தமிழின் திருநாள் ஆகும். நாவலர் நினைவுமலர் வெளியீட்டுக்கு ஆசிரியராக முன்வந்த பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களுக்கும், தொல்புரம் இளைஞர் கலாவிருத்திச் சங்கத்தாருக்கும் தமிழ்நாடு நன்றிகூறக் கடப்பாடுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திரு. தியாகராசச் செட்டியார் அவர்கள் பாடியன.)

பெயரா அறிவிற் பெரியோன்.

நேரிசையாசிரியப்பா.

தென்னீழ நாட்டின் மன்னுயாழ்ப் பாணத்துப்
பல்லூர் புகழு நல்லூர் வாணன்
சந்தத முஞ்சிவ சிந்தனை யகலாக்
கந்தவே டவத்தினில் வந்தவ தரித்தோன்
தொல்காப் பியமுத னல்லிலக் கணங்களு
மொல்காப் பயன்றரும் பல்காப் பியங்களுந்
தவநெறி காட்டுஞ் சிவபுரா ணங்களும்
பதிபசு பாசப் பகுப்பினி துணர்த்துஞ்
செய்தவர்க் கேயுறுஞ் சைவசாத் திரங்களு
மையந் திரிபற வறிந்து தெளிந்து
பெயரா வறிவிற் பெரியோ னாகி
வீறுகொண் டுயர்ந்த வாறுமுக நாவலன். 1.

என்னுளங் குடிகொண்டோன்.

மன்னுறு மீழ நன்னா டென்னும்
பொருவிலாத் தனதற் கொருசிர மாயது
மாணமர் பொழில்யாழ்ப் பாணமச் சிரத்திற்
கணிபெறக் கவிக்கு மணிமுடி நிகர்க்கும்
பன்னூ லுணர்ந்த நன்னா வலர்க
ளொடொறுங் கூடி நவிலுத லுற்ற
பீடுயர்ந் தோங்கு பெருவள னெல்லாந்
துன்னுதன் பெயராந் தொகைநிலைத் தொடர்சொலின்
மன்னுமுன் மொழியின் வயங்கு பொருளாக்கி
யின்னும் பற்பல ரிசைப்ப விடங்கொடுக்குஞ்
செல்லா ரெயில்சூழ் நல்லா ரென்ப
திகழுமம் முடிக்கோர் சிகாமணி யென்னப்
புகரிலா ஞாலம் புகலவந் துதித்தோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமி ழென்னுஞ் சுந்தர மங்கை
கந்தரத் தழகு களிமங் கலநா
ணிலக்கண மனைத்து நலக்க விளக்குந்
துலக்க மிகுந்த தூண்டா விளக்குப்
புணர்தரு மின்ப மணவுறு புராண
முணர்வோர் யார்க்கு மொளியுறு நேத்திர
நல்லறி வுறுத்தித் தொல்பவந் தொலைக்கும்
பல்கலை கட்கெலாம் புல்லுமோ ரில்லம்
பொய்தெரித் தகற்றி மெய்யிது வென்னுஞ்
சைவசித் தாந்தத் தெய்வ வைப்புக்
கண்ணுபுண் ணியங்கட் கண்ணிய வுயிராந்
தண்ணிய மாசிவ புண்ணியப் பிழம்பு
சிவனடி யவரைச் சிவமென மதிக்குந்
தவமது வளர்க்கு மவமறு சீல
னென்னுளங் குடிகொண் டிருக்கு
முன்னுசீ ராறு முகநா வலனே. 2.

பேறு பெரிதடைந்தோன்.

தென்மொழி யென்னு மன்பெரும் பௌவ
மொருங்கு குடித்த பெருங்கும்ப முனிவ
னெல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமுத
விலக்கண மெல்லா நலக்கவைத் தடுக்கிய
திருவ நீண்ட வொருபெரும் பேழை
யாரணம் புகலும் பூரண புராணனே
பொருளெனப் புகலும் புராண வாகரஞ்
சொல்பல சமயமாந் துகளற வடித்துச்
சமயா தீதமாஞ் சைவசித் தாந்தத்
தெய்வவா ரமுதம் பெய்து நிறைத்துப்
பொருவற வைத்த பூரண கும்பம்
பேறுபெரி தடைந்த வாறுமுக நாவலன். 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகாரமுத்திரையும் பரிகாமுத்திரையும்.

சில வித்துவான்கள் தாம் அச்சிடும் நூல்களிலே பிழைகள் வந்தாலும் "இனி என்ன நம்முடைய வித்துவான் பண்டிதன் என்னும் பட்டங்கள் போய்விடப் போகின்றனவா" என்பார்கள். இவரோ அப்படிப்பட்டவரல்லர். ஒருநாட் போசனவிதி யெழுதும்போது இவர் சொல்லச் சொல்ல அடியேன் எழுதிவந்தேன். அப்போது "பரிகாமுத்திரையைச்செய்து" என்று இவர் சொல்ல, அதனை அடியேன் எழுதிவிட்டுச் "சைவசமய நெறியுரையில் பரிகாரமுத்திரை என்று எழுதியிருக்கிறதாக ஞாபகமிருக்கிறது" என்றேன். உடனே இவருக்கு உடம்புமுழுதும் வெயர்த்துவிட்டது. எழும்பச் சக்தி யற்றுப்போய்விட்டது. வேறொரு வரைக்கொண்டு சைவசமய நெறியுரையை எடுப்பித்துப் பார்க்க அதிற் பரிகாமுத்திரை என்று சரியாயிருந்தது. புத்தகங்கள் அச்சிடுவதிற் பிழை வருவதைக் குறித்து இவ்வளவு பயம் இவருக்கிருந்தது. இவர் அச்சிடும் புத்தகங்களிற் பிழையில்லாமையையும் அவைகள் வாசிப்பவர்களுக்கு இலகுவாயிருத்தலையும் கண்ட திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் இவரைக் கூடவிருத்திப் போசனம் பண்ணும் அக்காலங்களிலும் புகழ்ந்து புகழ்ந்து பாராட்டுவார்கள்.

—(ஆறுமுக நாவலர் சரித்திரம்)

நாவலி பொறுத்த நற்குண மலையே நாடெலாம் புகழ்ந்துநின் றேத்துந்
தேவனே சிவனூற் பொருள்களைத் தேற்றித் தெட்சணா மூர்த்தியா யமைந்த
காவல னேஉன் கருணையைப் பிரிந்து கடையரே மிவ்வுடம் புடனே
சாவதில் லாம லிருக்கலேங் கண்டாய் சாற்றுவாய் நமதுசற் குருவே.

—ஆவரங்கால் திரு. ச. நமச்சிவாயபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளருங்காயைப் பிஞ்சிலே தெரியும்.

("உதயதாரகை"ப் பத்திராதிபரும் யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழாசிரியருமாயிருந்த

திரு. அ. சதாசிவம்பிள்ளை அவர்கள்.)

ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணம் நல்லூரிலே, கார்காத்த வேளாளர் மரபிலே, பாண்டிமழவர் குடியிலே, சாலிவாகன சகாப்தம், கஎசரு-க்குச் சரியான கி. பி. கஅஉஉ-ம் வரு மார்கழி மாதத்திலே பிறந்தவர். இவர் தந்தையார் நாமம் கந்தப் பிள்ளை. தாயார் நாமம் சிவகாமியார். தியாகராசர், பரமானந்தர், தம்பு முதலிய ஐவர் இவர்க்குத் தமயமார். அரசாட்சியாரிடம் ஆராய்ச்சி உத்தியோகத்தில் அமர்ந்தமையால் ஆராய்ச்சி கந்தப்பிள்ளை எனச் சிறப்புப்பெயர் பெற்ற இவர் தந்தையார்க்கு ஆறுங் குமாரராகப் பிறந்த இவர், ஐந்துவயதில் வித்தியாரம்பஞ் செய்து, சுப்பிரமணியர் என்னும் உபாத்தியாயரிடம் கல்வி கற்று, அப்பாற் பன்னிருவயதில் அவ்வூரிலிருந்த வேலாயுத முதலியாரிடஞ்சென்று, அவர் புத்திரராகிய சம்பந்தர் என்பவருடன் கூடி இலக்கண இலக்கியம் வாசித்து, மறுபடி இருபாலையில் இருந்த வித்துவ சிரோமணியாகிய சேனாதிராய முதலியாரிடமும், வண்ணார்பண்ணையில் இருந்த மனப்புலி முதலியார் சரவணமுத்துப் புலவரிடமும் அரிய நூல்களைக் கற்றனர். வளரும் காயைப் பிஞ்சிலே தெரியுமெனல் போல இவர் பிற்காலம் மேன்மை பெற்று விளங்குவாரெனல் இளவயதிற்றானே தெரிந்தமை பற்றி, இவரைக் கண்டார் அறிந்தார் எவரும் சிறுமையிற் றொடுத்தே நன்கு மதித்தனர். இவர் தமிழ் வித்துவான்களின் சகாயத்தால் அரியநூல்களை உணர்ந்து பாண்டித்தியம் பெற்றுரன்றிச் சமஸ்கிருதத்திலும் பயிற்சி உடையராய் உவெஸ்லியன் மிஷன் பாடசாலையில் ஆங்கில பாஷையுங் கற்று, உ0 வயதில் அப்பாடசாலைத் தலைவரான பீற்றர் பேர்சிவல் தேசிகருக்குத் (Rev. P. Percival) தமிழ்ப் பண்டிதராகி வேதாகம மொழி பெயர்ப்பில் அவர்க்கு நல்ல உபயோகியாகி அவருடன் கூடிச் சென்னைபட்டினம் போய்த் திரும்பினவர். கஅசரும் வருடம் வரையிலும் அவருக்குத் துணைசெய்து அப்பால் அவரது வேலையை விட்டுத் தம்மூரிலே சைவசமயத்தை வளர்க்கவும், பாடசாலைகளை ஸ்தாபிக்கவும், பிரசங்கம் செய்யவும், கருத்துக் கொண்டவராகி, முன்பின் முப்பத்திரண்டு வருடங்களாக அம்முயற்சியிற் காலம் விட்டார். வண்ணார்பண்ணை, புலோலி, முதலான இடங்களிலன்றி, சிதம்பரத்திலும் ஓர் பாடசாலையை ஸ்தாபித்தார். இவர் சைவரிடம் காணுங் குற்றங்களை வழக்கமாய்க் கண்டிப்பாராதலில் அவருட் பலபேர் இவர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச் சத்துருக்களானார்கள். சைவ சமயிகளைச் சாடுவாரன்றித் தன் மதச் சிரத்தை மேற்கொண்டு கிறீஸ்து மார்க்கத்தையும் சாடுவாராகி அம்மதத்துக்கு விரோதமாய்ச் சில புத்தகங்களை வரைந்து அச்சடித்துப் பிரசுரித்தனர். சைவரிற் சிலரும், கிறீஸ்தமதத்தவரும் இவர் செய்த புத்தகங்களுக்கு எதிர்ப் புத்தகங்கள் எழுதி அச்சடித்துப் பரப்பினர். சிதம்பரத்தில் வசித்த கருங்குளி இராமலிங்கபிள்ளை என்பவராலும் அங்குள்ள பிராமணர் சிலராலும் அவ்விடம் இவர்க்குத் தொல்லைகள் நேரிட்டன. ஆயினும் அவற்றாற் தம் உற்சாகத்திற் தளர்ச்சி கொள்ளாது எடுத்த கருமத்தில் முன்னேறிப் போகும் தன் சுபாவத்தை மென்மேலும் திருட்டாந்தப் படுத்தினர். இவர் முன்னம் வண்ணார்பண்ணையிலும், பின்னர்ச் சென்னை பட்டணத்திலும் அச்சியந்திரசாலைகளை ஸ்தாபித்தார். சென்னைபட்டணத்திற்குப் பலமுறையுஞ் சென்று திரும்பினர். அவ்விடத்தில் இவரது அச்சுச்சாலை இப்போதும் இருக்கின்றது. இவர் மாணக்கருள் ஒருவரான யாழ்ப்பாணம் நல்லூர்ச் சதாசிவம்பிள்ளை என்பவரே அதையும் வண்ணார்பண்ணையிலுள்ள பாடசாலையையும் நடப்பித்து வருகிறார். கந்தபுராணம், சேதுபுராணம், பிரயோக விவேகவுரை, திருவள்ளுவர் பரிமேலழகர் உரை, தொல்காப்பியம் சேனாவரையர் உரை, நன்னூல் காண்டிகையுரை, விருத்தியுரை, நிகண்டு சூடாமணியுரை, இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, கோயிற்புராணவுரை, ஆதியாய்ச் சிறியவும் பெரியவுமான அறுபதுக்கு மேற்பட்ட புத்தகங்களைத் திருத்தி அச்சிட்டுப் பிரசுரித்தாரன்றி, அவ்வாறு செய்தற்காகவே சிலவற்றைப் பாதிவரையில் முடித்தும், சிலவற்றிற் கையிட்டு மிருக்கவே, காத்திராப்பிரகாரம் வயது ஐம்பத்தாறு மாதம் பதினொன்றிற் பிரமாதிவருஷம் அதாவது பிறகிட்ட ௯அஎ௦-ம் ௵ தேகவியோகமாயினர்.

இவரது மாணக்கர் இலைமறை காய்கள்போல யாழ்ப்பாணத்திலும் வடதேசத்திலும் வசிக்கின்றார். பழையபாடல்கள் உரைகளைத் திருத்தி அச்சிடுவித்தாரன்றிச் சிலவற்றிற்குப் புத்துரைகளை எழுதியும், பாலபாடம், சைவவினாவிடை, இலங்கைப் பூமிசாஸ்திரம், இலக்கணச் சுருக்கம், ஆதிய பாடசாலைப் புத்தகங்கள் பலவற்றைப் பிரயாசையோடு புதிதாயும் இயற்றினர். பெரியபுராணத்தோடு சிதம்பரமான்மியத்தை வசனநடையிற் செய்தனர். பாடுந்திறமையிலும் இவர் குறைந்தவரல்லர். இவர் பாடிய கீர்த்தனங்கள் சில கதிரையாத்திரை விளக்கத்திற் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றன. கீர்த்தனங்கள் அன்றித் தனிப்பாக்களும் பாடினர். இரகுவம்சத்தை அச்சடிப்பிக்க முயன்றாரென்றும் நாட்டுக்கோட்டைச் செட்டிகள் சிலருடைய வேண்டுகோளின்படி தேவகோட்டைத் தலபுராணத்தை ஐந்நூறு செய்யுள் வரையிற் பாடினரென்றுங் கேள்வி. இவரது மரணத்தால் தமிழ் நங்கை மிக நஷ்டமுற்றாள்.

—(பாவலர் சரித்திர தீபகம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி.

(சகிருக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் திரு. மு. நல்லதம்பி அவர்கள் பாடியது.)

சந்த விருத்தம்.

திருமி குந்ததமிழ் செழுமை கொண்டசிவ மருவி நின்றமத மென்பன
சீர ழிந்துபுகழ் பேரொ ழிந்துகெடு நாளில் வந்தசிவ மாமணி
மரும லிந்தபல வுரைந வின்றுகொடு மடமொ ழிந்தறிவு விரிகொள
வளமி லங்குபல பனுவல் கண்டுநமர் வளர நன்றுசெயு மொளிமணி
உருகு மன்புசெறி யரிய தொண்டரிசை யுலகு நின்றொளிர மிகமுயன்
றுதவு நல்லைமணி விபூதி கண்டியணி யுடைய மாணிதுணி வுறுமணி
உருவு கண்டரிய புலவ ரும்பரசி யுயர்வு தந்திடு சிகாமணி
ஓது மாறுமுக நாவ லாதிபதி யொளிகொள் பாதமலர் பணிவமே.

"பரசமய கோளரியாய்ச் சைவபாநுவாய் இலக்கண இலக்கியங்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் ஒருங்குணர்ந்து ஏப்பமிட்டு அன்பெனும் கடலில் மூழ்கி பணவாசை கொண்டு பொய்வேஷம் போடுவார் போலன்றி உள்ளும் புறமும் ஒரேவிதமான கருத்தும் செயலுமுடையராய் சிவபக்தியும் அடியாரிடத் தன்பும் உடையராய் பூர்வீகமான சமய சம்பிரதாய வரம்புகளை எட்டுணையும் கடக்க உடன்படாது முன்னோர் சென்ற நல்லவழியே சென்று நல்லொழுக்கமெனும் குன்றிடை நின்றவரும் (—) போன்ற வித்துவான்கள் கனவிலும் திடுக்கிடத்தக்கதாய் சிங்கேறுபோல இருந்தவருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல மகிபன்"

—திரு. வைத்தியநாதசிவன்.

* * *

"இவர் தூற்றுதல் பரமத பானுவாய்ப் பிரகாசிக்கும் ம-ா-ா-ஸ்ரீ ஆறுமுக நாவலர் என்னும் மகாவீரகேசரியைக் கண்டு வெரீஇ அஷ்ட திசாமுகத்தும் ஓடிய வேதாரணியத்துப் பண்டாரங்களென்னும் புல்லியர் புல்லுரை ஒக்கும்."

—தத்துவவிசாரிரணிப் பத்திராதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிப்பயன் பெற்ற பெரியார்.

(சென்னை, லேடி உவிலிங்டன் ஆசிரியகலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதை
திருமதி. S. கிருஷ்ணவேணி அம்மாள் அவர்கள்.)

உலகில் உயிர்கள் பிறத்தலும், இறத்தலும் இயற்கை. இன்றைக் கிருப்போர் நாளைக்கிருப்பர் எனக் கருத உலகியற்கை இடந்தருதல் இல்லை.

"நெருநலுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு." —திருக்குறள்.

இந்நிலைமை வாய்ந்த மக்கட் டொகுதியுள் சிலரே புகழுடலை உலகில் நிலைபெறச் செய்வர். அவருள்ளும் தமிழ்த்தாய்க்கே தம் உடலை உரித்தாக்கித் தமிழ்த் தொண்டு பல புரிந்து தம் பெருங்கீர்த்தியை நிலை நிற்கச் செய்து செல்பவர் மிகச் சிலரே. அவர் தம் உழைப்பினால் உயிர்கொண்டெழும் தமிழ்ப் பணிகள் பலப்பல. அவற்றுள் சில கல்லூரிகளாகவும், சில நூல்நிலையங்களாகவும், கிளர்ந்தெழா நிற்கும். இச்சீரியோர் வைத்துச் செல்லும் நிதிகள் அழியுந் தன்மையுடையனவோ! பல தலைமுறைகளையுந் தாங்கி நடாத்தும் தண்ணிதிகளல்லவோ அவை! அந்நிதிகளல்லவா எம்போன்ற புல்லறிவாளர்க்கு அறிவுச் சுடரைக் கொழுத்துவன! தமிழ்த் தாய் உள்ளத்தைக் குதுகுலிக்கச் செய்து அவள் ஆசியைப் பெரிதும் பெற்ற அச்சீரியர்களின் ஆன்மா இறைகழலை யடைந்து இன்புறும் என்பதில் ஐயம் யாது!

இங்ஙனம் பிறவிப் பயனை எய்திய பெருந்தகையாருள் நம் நாவலரும் ஒருவராவர். நாவீறுடையவர் எவரோ அவரே நாவலர் எனப் பெயர் பெறுகின்றனர். ஈண்டு அப்பருக்கு நாவுக்கரசர், நாவீரர் எனப் பேர் வாய்ந்ததை நோக்குக. நம் நாவலர் இயற்றிய தமிழ்த்தொண்டுகள் பலப்பல.

தமிழரும் மற்றும் பலரும் உயரிய அறிவைப் பெறுதற்கும், பல மதத்தினரும், பல தேயத்தினரும், போற்றுதற்கும் நிலைக்கழனாய்த் திகழும் திருக்குறள் முதன் முதல் அச்சேறுதற்கும் தொல்காப்பியத்தின் சேனாவரையர் உரை வெளிவருதற்கும், காரணராயிருந்த பெரியார் நம் நாவலரேயாவர். தாமின்புறுதலை உலகின்புற விரும்பும் பெருந்தகைமை யாவருக்கும் அமையுமோ! இது தன்னலங்கருதாத தவமுடையார்க்கன்றோ பொருந்தும்! தற்போது திருக்குறளை ஆய்ந்து ஆய்ந்து அதன் அரும் பொருளின் அருமைப் பாட்டில் ஆழ்பவர் பலர். அப் பெருமக்களின் இன்பநிலைக்குக் காரணராய் இருந்தவர் யார்? பின்பு அதன் பல பதிப்புகளும் அச்சேறுதற்கு வழிகாட்டியாயிருந்தவர் எப் பெரியார்? நம் நாவலர் அல்லவோ! திருக்குறளின் சிறப்புணர்ந்து ஒவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொருவரும் நம் நாவலர்க்கல்லவா வாழ்த்துக் கூறல்வேண்டும்.

இவ்வாறு இச்சீரியோர் சில நூல்களை அச்சேற்றி அணிசெய்ததுடன் நிற்கவில்லை. இவர் எழுத்தினாலும், தமிழுலகத்திற்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார். அவற்றுள் சிறந்தது நாயன்மார் நலங்களை ஆடிபோன்று தெளித்துக்காட்டும் பெரிய புராண சூசனமாகும். இவருக்கு முன் வசனநடை ஒன்றும் இத்துணைச் சீரியமுறையில் எழுதப்படவில்லை என்பது அறிஞர் கருத்து. அழகிய நடையில் எழுத விரும்புவோர் ஆறுமுக நாவலர் சூசனத்தைப் படித்தல் நலம் என்னும் வதந்தி ஒன்று இப்போதும் உலவி வரக் காண்கின்றோம். இது புனைந்துரையன்று. நடுநிலையில் நின்று அதைக் காண்போர் உண்மையுணர்வர். இவர் காலத்தில் இவரிடம் பாடங்கேட்டு முன்னேறியவர் பலராவர். இவர் இராமாயணம் பாடஞ் சொல்வதில் மிக்க திறமை வாய்ந்தவர் எனச் சில பெரியார் கூறக் கேட்டுள்ளேன். இது நிற்க,

தந்தையார் ஒருவர் பத்து, பன்னிரண்டு மக்களுக்குமேல் அடைய முடியுமா? அவர்களுள் யாவரும் அறிவுடையராயிருப்பர் என எதிர்நோக்க இயலுமோ! ஒருக்காலுமில்லை. அங்ஙனமின்றி கல்விப் புலமை வாய்ந்த தந்தையரோ நூற்றுக்கணக்கான புதல்வரைப் பெறுகின்றனர். அவர் இருக்குங் காலத்தில் மாத்திரமேயன்றி அவர் இவ்வுலகைவிட்டு நீங்கிய காலத்தும் அவர் நூல்களையும் செய்யுள்களையும் கைப்பற்றி நடக்கும் மக்கள் எத்தனை பேர்! அவர் தம் மாணவர்மூலம் கிடைக்கும் பேரன்மார் எத்தனை பேர்! அவர் கணக்கிலடங்குவரோ! மாதந்தோறும், வருடந்தோறும் பெருகிக்கொண்டேயிருப்பரல்லரோ! அத்தனை பேரும் அறிவிற்சிறந்தவராவர் என இயம்புதற்குத் தடையாது! ஔவைக்கும், திருவள்ளுவருக்கும், கம்பருக்கும், எத்தனை மக்கள், எத்தனை பேரப்பிள்ளைகள்? எண்ணிக்கூற யாரால் இயலும். இங்ஙனமே நம் நாவலரின் பெயரைப் புகழ்ந்து போற்றிவாழும் மக்களும், பேரர்களும் பல்லோராவர். இதைக் காட்டிலும் பெரும் செல்வம் வேறு யாது? இவரே தக்கோராவர்.

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"—திருவள்ளுவர்.

இங்கு காணும் எச்சத்திற்குப் புகழ் என்றும், மக்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

இன்னும் இவர் புத்தகங்களிலிருந்து வரும் பொருளைக் கொண்டு இரு பாடசாலைகள் நடைபெறுகின்றன என அறிகின்றேன். இஃது அவரின் விரிந்த மனோபான்மையைத் தெரிவிக்கவில்லையா? அறம் புரிதல் மக்கள் யாவருக்கும் இன்றியமையாத கடமை என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பினும் அத் தருமத்தைச் செய்யும் வகையறியாது தியங்குபவர் பலராவர். சிலர் செய்யும் அறங்கள் ஒருபோது பாபத் தொழிலாய் முடிதலுமுண்டு. அங்ஙனமின்றி நம் நாவலர் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாததும் சிற்றுயிர்க்குற்றதுணையாய் அறிவை வளர்ப்பதுமான கல்வி நிலையத்தை நிறுவியது எத்துணைச் சீரிய செயல் என்பதை ஊன்றி நோக்குதல் வேண்டும். இஃது அழியும் உடலுக்கு ஊணளித்து நிற்கும் செயலன்றே! உயிரை ஊட்டி வளர்க்கும் உயர்செய்கையன்றோ? இம்முறையில் நம் நாவலருக்கு வருடந்தோறும் எத்தனை மக்கள் உருக்கொண்டெழுகின்றன ரென்பதை நோக்குக. இத்துணை ஆன்மாவன்றோ தவமிழைத்தது! புண்ணியம் பெற்றது. இப்பேறுகளுள் ஒன்றேனும் அழியுமா? இன்றிருந்து நாளைச் செல்லும் செல்வப்பேற்றில் சிறிது திளைத்தாரைச் செல்வரென்றும், புண்ணியர் என்றும், புகழுகின்றோமே! நம் நாவலரை எச்சொற்களால் புகழ்வது. இப்பெரியாரைப் புகழ்தற்குத் தக்கமொழிகள் இல்லையென்றுதான் இயம்பல் வேண்டும். நம் நாவலரின் ஆன்மா இறையருளில் பதிந்து இன்புறுவதாக.

இங்ஙனம் மக்களுக்குப் பேருதவி புரிந்து உலகுள்ளளவும் அழியாப் புகழை நிறுத்திச்சென்ற பெரியாரைப் போற்றுதல் பின்புள்ளார் இன்றியமையாத கடமையாகும். இதுவே நன்றியறிதல். இறைவன் அருளைப் பெறுதற்கும் இஃதோர் திறவுகோலாகும். ஆகவே இத்தொண்டு மற்றத் தொண்டுகளைக் காட்டிலும் சீரியதும், தூயதுமெனக் கொள்க. இத்தொண்டில் அன்புடன் உழைத்த கலாவிருத்திச்சங்க இளைஞரின் பெருந் தகைமையும், ஊக்கமும் பாராட்டத்தக்கதாகும். இத் தொண்டில் அடியாருக்கும் பங்களித்த பெரியாராகிய நினைவுமலர் ஆசிரியர் கா. பொ. இரத்தினம் அவர்கட்கு என் நன்றியறிதல் உரித்து.

அறிவாளர் தொண்டினால் நாவலர்மலர் இதழ் விரித்து மலர்ந்து யாவருக்கும் இன்ப மணத்தையும், ஊக்க அழகையும் அளிப்பதாக.

சபாப் பிரசங்க சிங்கம்.

"சைவதூஷண பரிகார நிராகரண சுப்பிரதீபம்" என்னும் புத்தகத்தையும், நாயன்மாரென்னும் சொல்வழக்கின் மறுதலையாகிய "வழக்கின்மேல் வழக்கு" என்னும் பொய்ப் பெயர் புனைந்த பத்திரிகையையும் நாமும் பார்த்துள்ளோம். அவற்றினை எழுதினவர்களையும் எமக்குத் தெரியும். இவர்கள் தாமெழுதிய விஷயங்கள் உண்மைதானென்று அறிஞர் சபையில் நிலைநாட்டிக் சொள்ளும்படி சபாப் பிரசங்க சிங்கமாகிய ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் வலிந்தழைத்தபோது எதிரிலிருந்து வார்த்தையாடமாட்டாமல் இக் கவியானைகள் இரிந்தோடினமையையும் யாமறிவோம்"

—தத்துவவிசாரணிப் பத்திராதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தாய்!

(நாவலரவர்களுடைய மருகரும், மாணுக்கரும், வித்துவசிரோன்மணியுமாகிய
ஸ்ரீமத். ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள்.)

ஆசிரியப்பா.

கூவிளமறுகு கொன்றைதும்பை
மாவிணர்மத்தம் வதிமதிமுடியு
முடையசங்கர னெண்மலரடியை
யகத்திலிருத்தி யருச்சனைபுரிந்தோய்
தெய்வவிரதனுந் துய்யனேய்க்கு
நயிட்டிகப்பிரம சாரிநீயெனினுந்
தகவெனரிவையை யிதமுறத்தழீஇப்
பல்லுயிர்க்கருளாஞ் செல்வனைத்தந்தே
சிவனடியவரா மவமில்விருந்தைப்
புறந்தந்திடலாற் சிறந்தவறிஞ
ரில்லறத்தோன்மற் றிவனெனக்குழீஇச்
சொல்லிவழுத்த மல்குதூயோ
யெம்பந்தமறுக்குஞ் சம்பந்தநாமனு
மாலமர்கடவுளா மால்விடையோனை
யைங்கதிப்பரியிற் றங்குவித்தோனு
மிடங்கர்வாயி லடங்குமறையோ
னுபவீதமன்ற லுறவிதித்தோனு
மும்மதக்களிறு தன்னைவந்திக்கப்
பரனைவந்தித்த வுரனார்சிலனு
மொருவடிவெடுத்தென வருளொடுபொலிந்தோய்
கொடுங்கோலில்லாக் கடுங்கோன்வழுதியா
னடைபெற்றுலவிய கடையில்காட்சித்
தலைச்சங்கத்துக் கலைப்புலவோராந்
திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளுங்
குன்றமெறிந்த குமரநாயகனுஞ்
சந்தனப்பொதியச் செந்தமிழோனு
மதித்தபுலமை கதித்தமேன்மையோ
டைந்தையடக்கி யாறைவென்றே
யொன்றையுறவுணர்ந் தேழையொருவினை
யிலங்கையிற்கொடுங்கோல் கலங்காதோச்சுபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறங்கள்வளர்த்த பறங்கிமன்னர்
குடியாயுள்ளோ ரிறையாவொவ்வோ
ரான்கன்றன்பா யாமுணவளித்தல்
வேண்டுமென்றிசைத்த வெம்பணிமறும
னுடொறுங்கொடுத்தல் கண்டுளநைந்தே
யிப்பவவரசர்தேத் திருத்தலுங்கொடிதெனத்
திருநெல்வேலியாந் தனதூர்நீங்கி
யுத்தமதிசையெனு முதக்கிற்பொலியுங்
கவுடதேசம் விதியினடையூஉ
வாரியமாகும் பாரியபரவை
வறழப்பருகிப் பிறழ்கருமுகிலா
மகத்துறவுடனே புறத்துறவடைந்த
வரதஞானப் பிரகாசவள்ளல்
பிறந்தையுற்ற வறங்கெழுமரபோ
யடியவருளத்திற் குடியாயிருத்தலி
னிதமயல்விளைக்கு மதன்மதலைக்கலி
னுணவமாயை கன்மமெனப்படு
மும்மதின்ஞான முழுத்தழனகையாற்
பொடிபட்டொழிய வடல்புரிமேன்மையின்
வாதனைபுரியும் பூதனைகடியுயிர்
பாலொடுபருகிய நீனிறமாயோன்
செங்கருங்கரங்களிற் சீர்செறியுங்கர
மொன்றுலிருகுவ டன்றேந்தியதென
வுந்தியொழுக்கேந்திய நிந்தையிலம்மச்
சங்கரிதனையொர் பங்கினில்வைத்த
நிர்க்குணநின்மல நித்தியானந்த
தற்பரனுஞ்சிவ சம்புநிகர்த்தோ
யரனடியவரி னதிகனுதலிற்
செறிதுயிலறச்செறுத் தறிதுயிலமர்தலிற்
றிருமகடழுவிக் கருமைமேவலி
னுலகளந்துண்ட வொருவனெத்தோய்
நாமகள்காமுறு கோமகனுதலின்
வேதவியலை விளங்கவிரித்தலிற்
போதவியலார் வேதன்போன்றேய்
தொல்காப்பியனு மொல்காப்புகழுறு
முனிவரனருளிய துனியினடைசேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்வினைகிளப்பின் முதனிலையியற்றே
யெனுஞ்சூத்திரவிதி யியைவினையிகந்தே
யுட்டெளிவுடைய பட்டணத்தடிகள்போ
லன்னையையடிபணிந் தாதரித்திட்டோய்
தென்கோவையென்னுஞ் சீரார்நகர்வாழ்
மேழிக்கொடியோர் வாழ்விற்குலாவ
வவதரித்திட்ட வருந்தமிழ்க்கவிஞ
மானுவியல்பிற் சேனாதிராய
முதலியுமவன்பாற் கலையெலாங்கற்று
மதியாக்கலைஞக் குதிநவ்விகட்கோர்
புனப்புலிபோத்தா மனப்புலிமுதலி
பெற்றிடுபெற்றி யுற்றிடுசீர்த்திச்
சரவணமுத்து முதலியாம்புலவனுந்
தேடியபல்புக ழானவையடைய
வின்னுநிற்பனவிப் பெருமன்புகழைப்
பொலம்பெறத்தழீஇய நலங்கொள்பேரூலெனச்
சொற்பயில்பண்டிதர் மெச்சுசீர்த்தியோய்
செந்நாப்புலவராஞ் சீர்சான்மணிக
ளோவலின்றி யுறுமாகரமுந்
தென்மொழியதனிற் றுன்னியவணிசே
ரிரகுவம்மிசப்பெய ரியையிலக்கியத்தை
துரிசறவியற்றி வரிசைபடைத்த
வரசகேசரியாம் புரையின்மேதையற்குச்
சேட்டனாய வாட்டமில்கவிகைப்
பரராசசேகர னென்னும்பற்றூர்
பணியுமரசற் கணிகோணகரமு
மாகியநல்லையாம் பேரியநகருறை
சத்தியவுத்தம வித்தகவேளாண்
குலதீபம்மென நிலவியகந்தவே
ளரிதிற்புரிந்த கரிசகனேன்பால்
வானோர்போற்று கான்முளையாகி
யாறுமுகனெனும் பெயராதரித்த
பரமகுரவ வரமிகுநிலைய
பாரினைத்தாங்கு பணடவிபொறுத்த
சேடன்றுதிக்க வேலாச்சீர்த்திய
பத்தரைதாங்குமெய் பயில்காருண்ணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாமணியே நந்தாவிளக்கே
கண்ணேகருத்தே யெண்ணேயமிர்தே
யுயிருக்குயிரே யுலவாவொளியே
பசுபதிமதத்தை வசுமதிநிறுவி
யவனருள்வேதா கமங்களினரும்பொரு
ளேழையேமையந் திரிபற்றுணர
வினிதிற்றிரட்டி யியம்புமெந்தாய்!

வெண்பா.

செஞ்சடையன் வெண்ணீற்றன் சிற்றம் பலமுதல்வன்
மஞ்சடையுங் கண்ட னடிமறவா—நெஞ்சுடைய
வாறுமுக வையற்கே யாட்செய்யப் பெற்றனம்யாம்
வேறறங்கள் வேண்டா வெமக்கு.

சங்கேந்து மாற்கரிய சங்கரனைத் தன்னிதய
பங்கே ருகம்வைத்த பண்பானை—யெங்கோனை
யாறுமுக நாவலனை யர்ச்சித் தடிபணியிற்
பாறும் பவநோய் பறிந்து.

தாடலைபோற் சங்கரனைச் சார்ந்தடங்கி நின்றிடுநின்
பாடலையா நற்பதத்தைப் பாடளியா—லாடலையா
வாறுமுக நாவலசீ ரத்தசிற்ப நாயடியேம்
வீறுமின்ப வீடடைதன் மெய்.

கலித்துறை.

திருவஞ் செழுத்தின் றிகழ்ச்சியெங் கேசெப கண்டியெங்கே
யுருவஞ் சிறக்க வொளிவிடு நீற்றி னுயர்ச்சியெங்கே
யருவம் படைத்த மதனற்ற லட்ட வறுமுகனு
மொருவன் சிவமதம் போல்யேசு மார்க்கத்தை யுன்னிடினே.

கற்றவர் பற்றுங் கனியைக் கணிப்பி லறம்புரியப்
பெற்றவர் பெற்ற பயனைப் பிறவிக் கடல்கடக்க
வுற்றவர்க் கென்று முதவுறு மோடத்தை யாறுமுக
நற்றவ வெந்தையைப் போற்றிடிற் கூற்று நடுங்கிடுமே.

அமரர்க் கரிய வமலனை யன்பர்க் கெளியவனைக்
குமரக் கடவுடன் ரூதையைக் கூற்றை யுதைத்தவனைத்
தமரப் பெருஞ்சீர்ப் பதியெனச் சாதிக்குஞ் சைவமதை
யெமர்கட் கருளு மறுமுக வெந்தையை யேத்துமினே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் புலமை.

(வெள்ளவத்தை, திரு. குல. சபாநாதன் அவர்கள்.)

"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே—யெல்லவரு
மேத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
யாத்தனறி வெங்கே யறை." (சி. வை. தா.)

நாவலர் எனுஞ் சொல் வன்மை யுடையார் பலர்பாலும் செல்லும் காரணப் பொதுப் பெயராயினும், காரணவிடுகுறிச் சிறப்புப் பெயராகப் பெற்ற ஆண்தகை யார் ஒருவரைப் பலரும் அறிவர். அவர் தாம் நம் புலவர்பெருமானார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்.

"நிலவுலகி லொருமதிய
நிலவியதென் றேநிகழ்த்தப்
பலகலையு நிரம்பியயாழ்ப்
பாணமெனும் பாற்கடலி
லிலகியெழீஇ நாவலரென்
றியம்புபெய ரெவர்பெறினும்
குலவுதமை யேகுறிக்கக்
கொண்டபெருங் குலப்புகழார்."

எனச் சேற்றூர் சமஸ்தான வித்து வான் அருணாசலக் கவிராயர் அவர்கள் கூறியதும் ஈண்டு நினைவுகூர்தற்பாற்று. இனி, புலமையாவது:— இச்சொல் புல முடைமை எனப் பொருள்படும். புலத் தின் தன்மையெனக் கொள்ளவும் படும். புலம் என்பது இயற்பெயராகவேனும், ஆகுபெயராகவேனும் நின்று ஐம்பொறி, ஐம்புலன், கல்வியறிவு, நூற்பொருள், வேதம், மெய்யுணர்வு முதலிய பல பொரு ளுணர்த்து மொருபெயர்ச்சொல். "புலமிக் கவரைப் புலமை தெரிதல் புலமிக் கவர்க்கே புலனும்" எனும் பழமொழிச் செய்யுளில் புலம் என்பது கல்வியறிவு எனும் பொரு ளிற் காணப்படும்.

அறிவு இருவகை. அவை பொது அறிவு, சிறப்பறிவு என்பன. ஐம்பொரு ளுணர்வு பொது அறிவு. அதாவது பொருள் கள் தோன்றியவாற்றைக் கண்டொழிதல். அவ்வளவில் நில்லாது அப்பொருளின்கண் நின்று அதன் காரண காரியங்களை உய்த் துணர்தல் சிறப்பறிவு. இதுவே கல்வி யறிவென வழங்கப்படுவது. கல்வியுணர்வு, மெய்யுணர்வு, ஆராய்ச்சியுணர்வு, உய்த் துணர்வு என்பன ஒரு பொருளன. பொது அறிவு, இயற்கை அறிவு. சிறப்பறிவு, செயற்கையறிவு. செயற்கையறிவு இயற்கை யறிவின்றி யமையாதது.

கல்வி, அறிவுக்கல்வி, தொழிற்கல்வி யென இருதிறப்படும். இவை முறையே வித்யாவெனவும் கலாவெனவும் வடநூலா ரான் வழங்கப்படும். இவை தனித்தனியே அளவில்லாத துறைப்படும். வித்தைகளுட் சிறந்தன முப்பத்திரண்டு எனவும், கலை களுட் சிறந்தன அறுபத்து நான்கு என வும் வடநூல்களிற் சொல்லப்படும். தமிழ் நூலோர் இவ்வெல்லாக் கலைகளையும் தொகுத்து மூன்றென வழங்குவர். அவை இயல், இசை, நாடகம் என்பன. இக் கல்விகளுள் யாதானு மொன்றன்கண்ணு யினும் ஐயந்திரிபறியாமையினீங்கி வல்ல னாதலே புலமையெனுஞ் சொற்குப் பொருந் திய பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கல்வி செய்து காட்டற்பால தன்றிச் சொல்லியுணர்த்த வுணருமளவில் நிற்பது. தொழிற் கல்வி சொல்லவும் செய்யவும் படுவது. அறிவுக் கல்வி யுணர்ச்சியுடையார் அறிஞர். இவ்வறிஞர் கவி, கமகன், வாதி, வாக்கி என நால்வகைப்படுவர். தொழிற் கல்வி யுணர்ச்சியுடையார் கலைஞர். இருவரும் புலவர்.

புலமை மீண்டும் இருவகைப்படும். இயற்கைப் புலமை, செயற்கைப் புலமையென. இயற்கைப் புலமை ஓதாதுணர்தல். அதாவது தானே முழுதுமுணர்தல். செயற்கைப்புலமை ஓதியுணர்தல். இயற்கைப் புலமை தெய்வப் புலமையெனப்படும். இயற்கைப் புணர்ச்சி தெய்வப் புணர்ச்சியெனப்படுவதுபோல; இயற்கைப் புலமை வள்ளுவரைத் தெய்வப்புலமை வள்ளுவரென வழங்குவராதலானும் இது பெறப்படும். இயற்கைப் புலமை தொன்று தொட்டு வரும் மரபாகிய காரணம்பற்றி வருவதும், அக்காரணமின்றி வருவதுமென இருவகைப்படும். இறையனார், வள்ளுவனார், நியூட்டன், காளிதாசர், காளமேகம் முதலியோர் இயற்கைப்புலவர். இளங்கோவடிகள், சாத்தனார், சேர். சி. வி. இராமன், தாகூர் முதலியோர் செயற்கைப்புலவர். இயற்கைப்புலமையும் செயற்கைப் புலமையும் ஒருங்குவாய்ந்தோர் சிலர். கம்பர், பாரதியார் இவ்வினத்தைச் சேர்ந்தவராவர். இயற்கைப் புலமையும், செயற்கைப் புலமையும், ஒருதுறைக்கண்ணே வாய்த்தலும், பலதுறைக்கண்ணே வாய்த்தலும் எல்லாத் துறைக்கண்ணும் வாய்த்தலும் வழக்காறு. திருவள்ளுவர் புலமை எல்லாத் துறைக்கண்ணும் வாய்ந்தது. இதுவே சிறப்புடைக் கடவுட்புலமை யெனப்படும். ஒழிந்த புலவர்களுடைய புலமை ஒரு சில பல துறைகளிலே வாய்ந்தது.

இவ்வெல்லாரும் புலவரென வழங்கப்படுபவராயிருக்க, இவருள் இயற்கையிற் செய்யுள்பாடும் ஒருதுறையில் மட்டும் புலமைவாய்ந்தோரே புலவரெனப்படுவார் எனக் கூறுதல் ஆன்றோர் வழக்கொடு முரண்பாடகும். தருக்கத்துள் அவ்வியாத்திக் குற்றமும் தங்கும். முற்கூறிய முறையால் பாவலரும், இயற்கைப்பாவலர், செயற்கைப்பாவலர் என இருகூறுப்படுவர் என்பது பெறப்படும். அப்பாவலரும் நால்வகையர்; கடும்பாவலர், இன்பாவலர், அரும்பாவலர், பெரும்பாவலர் என. சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அவர்களும் புலவர் எனும் சொல்லின் பொருளை நன்கு விளக்கிக் காட்டியிருக்கின்றார்கள். ஒப்பு நோக்கற் பொருட்டு அதனை ஈண்டுக் குறிப்பிடுகின்றாம்.

"புலவர் என்பது அறிஞர் எனப் பொருள்படும். புலம் - அறிவு, அர் ஒரு விகுதி. வடநூலிற் கூறும் வித்வான் என்பதும் இப்பொருட்டு. வித் - அறிதல், வான் ஒருவிகுதி. வித்வானுவான் இருக்கு, யசுர், சாம, அதர்வணம் என்னும் வேதம் நான்கும், சிக்கை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதி, சோதிடம் என்னும் வேதாங்கம் ஆறும், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், அருத்தவேதம், என்னும் உபவேதம் நான்கும், புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி என்னும் உபாங்கம் நான்குமாகிய வித்தைகள் பதினெட்டுங் கற்றவன் என ஆறுமுகநாவலர் கூறுவர். வடநூலார் கூறும் மற்றை நாமங்களாகிய, தோடஞ்ஞன், கோவிதன், புதன், பிராஞ்ஞன், முதலிய நாமங்களும் அறிவுடைமை பற்றி வந்த நாமங்களாம். தோடஞ்ஞன் என்னும் நாமத்தாலே நூலுரை முதலியவற்றிற் காணப்படும் வழுக்களை எடுத்துரைத்தலும் புலவர்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை என்பது புலப்படும். தோடஞ்ஞன் - வழுக்களை அறிவோன். தோடம் - வழு, ஞன் - அறிவோன்."—(தமிழ்ப்புலவர் சரித்ரம் - உபக்கிரமணிகை.)

இறையனு ரொழிந்தாருடைய புலமையும் உற்றுநோக்கின் செயற்கைப்புலமையெனவே படும். அவ்வியற்கைப் புலமை முற்பிறவிகளிற்கற்ற கல்வியின் பயனுதலின் முற்பிறவிகளிற் கற்ற கல்வியறிவு பிற்பிறவிகளிற் தொடர்ந்து வருமென்பது,

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து."

எனும் பொய்யா மொழியாற் பெறப்பட்டுளது. ஆயின் இக்கொள்கை மறுபிறப்பினை யுடன்படாத மேனாட்டாருக் குடன்பாடின்று. இயற்கைப்புலமை வாய்ந்தோரை genius என அழைப்பர் போலும். அங்ஙனம் புலமை யெய்தியதன் காரணம் புலப்படக்கூறுதொழிவர். 'Poet' எனும் ஆங்கில மொழிக்கு நேர்மொழி பெயர்ப்பு "பாவலர்" என்பது. "'புலவர்" எனக் கூறின் அதிவியாத்திக் குற்றம் தங்கும். உடம்பின்கணுள்ள சில ஊற்றினை (gland) மாற்றியமைத்தலால் புலமைக்குணம் வேறுபடுமெனக் கண்ட 'அக நூலாராய்ச்சியாளர்க்கு முற்பிறப்பின் தொடர்பெனக் காரணங்கூறமனமின்றி, புலமை இயற்கையாய் அமைந்துளது எனக் கூறுவதோடு நிறுத்துகின்றனர். அதற்குமேல் ஆராயவில்லை.

முற்கூறிய முறையைக்கொண்டு நம் நாவலர் புலமையினியல்பை யாராய்வாம். அறிவுக் கல்விப் புலவர், தொழிற்கல்விப் புலவர் என்னுமிருசாராருள் நம் நாவலர் சிறப்புடைய அறிவுக் கல்விப் புலவராவர். "செய்யுணடைவாய்ந்த நக்கீரருடை நடையும், விளக்கம் குறைந்த இளம் பூரணமும், கட்டுரைச் சுவை செறிந்த சேனாவரையரது நடையும், பொருட்செறிவுடைய பேராசிரியர் உரை நடையும், தங்கோணிறுத்தும் நச்சினார்க்கினியர் சொன்னடையும், நாவலர் அவர்களின் வசனநடையிலேயே வந்து முடிகின்றன" என சைவசிகாமணியாய் விளங்கிய சபாபதி நாவலர் அவர்கள் கூறியாங்கு நாவலரவர்கள்வசனநடை கைதேர்ந்த வள்ளலாய் மட்டும் திகழ்ந்தாரன்று. 'ஆறுமுகனாருக்கு ஒன்பதாம் வயசாயிருக்கும் பொழுது, ஆனித் திருமஞ்சன உற்சவ காலத்தில் இவருடைய தந்தையார் கந்தப்பர் ஒரு நாடகம் பாடிக்கொண்டிருந்த சமயத்தில், கையில் எழுத்தாணியும் சட்டமும் பிடித்தபடியே சடிதியிற் சிவபதமடைந்து விட்டார். அந்த நாடகத்தின் குறையை அப்போதே யிவர் பாடி முடித்தார்" எனுஞ் சரித்திரக் குறிப்பால் * இளமையிலேயே அவ்வூற்றிருந்ததென்பது பெறப்படும். எனவே புத்தகப் பையுடன் நத்தைபோலூர்ந்து செல்லும் பருவத்தில் கற்றுத் துறைபோன தந்தையார் தொடங்கிய நாடகத்தின் குறையை முற்றுப்பெறச் செய்தார் நம் நாவலர் அவர்கள். நூல்களைப் பிழையின்றி அச்சிடுவதிலும் பெயர்பெற்றவர். வசன நூல்கள் பல இயற்றினாரன்றிச் செய்யுளியற்றும் ஆற்றலுடையாரோவென ஐயுறுவாருமுளர். அவர்கள் தம் ஐயம் அகலுமாறு ஒரு செய்யுளை மட்டும் காட்டுகின்றும். ஒரு பெருஞ் சபையில் கல்விவிஷயமான காரியமொன்று செய்யும்போது எழுந்து நின்று தலையிலே கைகுவித்துக்கொண்டு அங்குநின்ற தம் மாணாக்கருள் ஒருவரை நோக்கி விநாயக வணக்கம் ஒன்று சொல் என்றார். அம்

* ஆறுமுகநாவலர் சரித்திரம் —த. கைலாசபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணுக்கர் "தாங்களே சொன்னால் நல்லது" என்றார். அங்ஙனம் நின்றபடியே,

"சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்க
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்க
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்க
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்க
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேதும்
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்"

என்னுஞ்செய்யுளை ஆசுகவியாக ஒருதடையுமின்றிச் சொல்லிமுடித்தார். * இச் செய்யுளைக் குறிக்கொண்டே ஒரு பெருங் கட்டுரை எழுதிவிடலாம். விரிவஞ்சிவிடுக்கின்றேம்.

நாவலர் அவர்கள் சிறுவயதில் நாடகமொன்றைப் பாடினார். சிறந்த வசனநூல்கள் பல எழுதினார். பாக்கள் சில யாத்தார். கீர்த்தனங்களும் பாடியுமுள்ளார். மூர்த்தி, தலம், தீர்த்தம் எனு மும்மையானுஞ் சிறந்துவிளங்கும் கதிர்காமத்துதித்த ஆறுமுகவேலர் மீது ஆறுமுகநாவலர் ஆறு கீர்த்தனங்கள் பாடியுள்ளார். இக் கீர்த்தனங்களைக் கொண்டுசென்று அத்தலத்தில் இசையுடன் மலைமரங்களுமிரங்கி யுருகப்பாடி அவைக்களனேற்றியவர் விநாயகமூர்த்திச் செட்டியார் அவர்கள். இவ்வரலாற்றின் விரிவினை இவர்பாடிய கதிரையாத்திரை விளக்கத்திற் கண்டின்புறுக. நாவலர் அவர்கள் பாடிய கீர்த்தனங்களுள் ஒன்றைக் குறிப்பிடுகின்றாம்.

இராகம்—ஆகிரி. தாளம்—சாபு.

பல்லவி.

இத்தனை கொடு வேதனைப்படல் கண்டுமுமக்
கின்னு மிரக்க மில்லையா.

அனுபல்லவி.

சித்திமுத்திகடரும் தெய்வமாணிக்கநதி
சேருங்கதிரைநகர்-திகழ்சுப்பிரமணியரேநான்.
(இத்தனை)

சரணங்கள்.

அண்டரிடரகற்றும் போதரே-அன்பர்
அனவரதம்பணி பொற் பாதரே-
கண்டங்கரிய சோதி காதலரே யெனது
கண்ணேயென் கண்மணியே காருண்ய
சாகரமே. (இத்தனை)

எள்ளினெய் போலெங்கும் நிறைவீரே-உமக்
கென்றுயர் தெரியாதோ அறைவீரே
தெள்ளுதமிழால் வைதார்தமக்கு மருள்வி
ரென்று
தீதி லருணகிரி தேவர்சொல் நம்பிவந்தேன்.
(இத்தனை)

உம்மையல்லாது துணையறியேனே—துய
ரோட்டிலீ ரேனு மும்மைப் பிரியேனே
இம்மை மறுமை வீடுமூன்று மும்மாலாகும்
இதுவே சத்தியஞ் சத்தியமென்று துணிந்து
வந்தேன். (இத்தனை)

"நாவலர் அவர்கள் திருவாவடுதுறையாதீனத்திலிருந்து பண்ணில் வல்ல ஓதுவார்களைப் பலமுறை வருவித்து, பண்ணோடு ஓதும்படி பிள்ளைகளைப் பயிற்றுவித்தாரெனவும், இனிமையாகத் தேவாரம் ஓதவல்ல காசிவாசி செந்திநாதய்யர் அவர்கள் பாடும்பொழுது கேட்டுப் பரவசப்படுவாரெனவும் கூறப்படலால் இவருக்குச் சங்கீதத்தில் மிக விருப்பமுண்டென்பது தேற்றம். அதனையும் இறைவன் திருப்பணியாக்கவே விரும்பினர். நாவலர் கதிர்காமத்திற்கு மட்டும் கீர்த்தனம் பாடியிருத்தல் குறிப்பிடற்பாலது. இவற்றால் நாவலர் அவர்கள் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழினும் வல்லுநராயிருந்தாரென்பது தேற்றம்.

புராணங்கள் முதலிய நூல்களுக்கு உரை சொல்வதில் நாவலர் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். கந்தப்புராணத்திலுள்ள ஒரு செய்யுளுக்கே ஒரு நாள் முழுவதும் பலவகைக் கருத்துக்களையும் பொதிந்து பொருள் கூறுமாற்றலுடையராய்த் திகழ்ந்தார். இவர்கள் உரை சொல்லவருகின்றார்கள் என்னுஞ் செய்தியைக் கேள்விப்படின்

* முற்கூறிய சரித்திரத்திலின்றும் எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் திரள்திரளாக இருக்க இடமின்றி வந்து கூடுவார்கள். இவருடைய மாணவர்களாய வித்வசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை, பிள்ளைப்புலவர் முதலியோரும் இத்துறையில் சிறந்து விளங்கினார்கள். ஆயத்தமில்லை எனுஞ் சொல்லைக் குறிக்கொண்டு அதற்குக் கூறிய பல்வேறு கருத்தே இவருடைய உரை சொலுந் திறனை விளக்கும்.

யாழ்ப்பாணத்திலுள்ள சைவர்களுட் பலர் பிறமதத்தவர்களின் போதனையிலெடுபட்டு தம்மதத்தைக் கைவிட்டுச் செல்லும் காலத்தில் நம் நாவலர் அவர்கள் தோன்றினார்கள். பல சைவர்கள் பிறமதம் தழுவாது தம் மதத்தில் பற்றுக்கொண்டு நின்றமைக்குக் காரணம் நாவலரவர்களின் ஆற்றலேயாகும். வேண்டுமிடங்களில் காரணமும் மேற்கோளும் எடுத்துக்காட்டிப் பிறர் மதத்தைக் குறைகூறியும் தம்மதத்தை நிறுவினர்.

கிறீஸ்தவ பாதிரியாரின்கீழ் வேலையாயிருக்கும்பொழுதே சைவப்பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டார் ஆறுமுகனார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பிரசங்கம் செய்யும் வழக்கத்தை, யாழ்ப்பாணத்திலுண்டாக்கி, சைவசமயத்திற்குப் புத்துயிரளித்தவர் நம் நாவலர் அவர்களாகும்.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீன உபய சந்நிதானங்களும், வித்வான்களும் இவருடைய சொற்பொழிவு ஆற்றலில் ஈடுபட்டு மகிழ்ந்து 'நாவலர்' எனும் பட்டத்தைச் சூட்டினார்களெனின் இவருடைய ஆற்றலைக் குறித்து யாம் கூறல் மிகையாகும். மேற் கூறியவாற்றால் நாவலர் அவர்கள், கவி, கமகன், வாதி, வாக்கி, என்னும் நால்வகைப் புலவருமாய் வீற்றிருந்தாரென்பது தேற்றம்.

புலமையுடையாருட் சிலர் ஒழுக்கந் தவறியவராகக் காணப்படுகின்றனர். அன்றியும் புலமையுடையார் நல்லொழுக்கமுடையாரெனும் நியதியுமின்று. நம்நாவலர் அவர்களிடம் புலமைக்கேற்ற தூய ஒழுக்கம் நிறைந்திருந்தது. இவர்களுடைய வரலாறு முற்றிலும் ஒழுக்கத்தை விளக்கப் போதிய குறிப்புகளுள.

நாவலர் அவர்களிடம் புலமைக்கேற்ற ஒழுக்கமிருந்தது. ஒழுக்கத்திற்கேற்ற ஒளியுமமைந் திருந்தது. ஒளியென்பது தாமுள காலத்து, எல்லாராலும் நன்குமதிக்கப்படுதல் என்பர் பரிமேலழகர். இதனை ஆங்கிலத்தில் Personality என்பர் போலும். இவ்வொளியைக் காட்டற்கும் வரலாற்றிற் பல பகுதிகள் உண்டு.

உண்மைக் கல்வியறிவுடையாருக்குப் பெருமிதம் உண்டாகும். இது வீரத்தின் பாற்படும். இது அழுக்காறுமன்று. செருக்குமன்று. கிறீஸ்தவ பாதிரியாரின் கீழ் வேலைகொண்டமர்ந்தபொழுது பயமின்றிச் சைவப்பிரசாரம் செய்தமை; இராமநாதபுரத்து பொன்னுச்சாமித்தேவருடைய செல்வத்தையும் அதிகாரத்தையும் மதித்து தாழ்ந்து தோல்வியெய்தாமை முதலியன இப்பெருமிதத்துக்கு எடுத்துக் காட்டாகும். எனவே, அவை குற்றமாகா.

புலவர்கள் இரத்தலும் பெருமிதத் திழுக்கன்று. இது மானந்தீராத இரவாகும். இதனாற்றான் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரணாறுமுடைய அரசருளேறுக ளாயினும் பொருள் கொடாதவழி யஞ்சாது எதிர்த்து நின்று இழித்துரைக்கும் ஆற்றலுடையராயிருக்கின்றனர் புலவன்மார்.

"மன்னவனு நீயோ மண்ணுலகு
மிவ்வளவோ
உன்னையோ யான்புகழ்ந்திங்
கோதுவது—என்னை

விருந்தேற்றுக் கொள்ளாத
வேந்துண்டோ சோழா
குரங்கேற்றுக் கொள்ளாதோ
கொம்பு." எனவும்,

"காத மிருபத்து நான்கொழியக்
காசினியை
ஓதக் கடல்கொண் டொழித்ததோ—
மாதவா
கொல்லி மலையுடைய கொற்றவா
நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம்."

எனவும் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர், புவிச்சக்கரவர்த்தியாகிய சோழன் முன் அஞ்சாது நின்று கூறியவை இப்பெருமிதமேயாம். இரத்தலுக்கும் கல்விப் பெருமிதத்துக்கும் காரண காரிய இயைபின்று. புலவரின் இரவு அரசனிடம் திறை வாங்குதலையொக்கும். செயங்கொண்டார் இக் கொள்கையிலும் சிறிது ஆழ்ந்து செல்கின்றார். அவர் கூறுவது:—

"காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலே
யாகாப் பொருளை யபயனளித் தான்புகழா
மேகாப் பொருளளித்தேன் யான்."

இச்செய்யுளில் பெருமிதம் எவ்வளவு வீறிட்டு முழங்கி யெழுகின்றதென்பதைக் கண்டின்புறுக. அதனோடு புலவர் புகழ் கொடுத்துப் பொருள் வாங்குதலன்றி, இரந்து புகழ் வாங்குதலின்மையும் உணர்க. இன்னும் பிற்காலத்து ஓலைத்தூக்கினும் (சீட்டுக்கவி) இதனைக் கண்டுதெளிக. மானந் தீராத இரவு பெரும்பாலும் புலவர்கட்கே யுரியதாம். ஞானிகட்கும் இஃதொக்கும். இரவு ஒருவன் தாழ்தற்கு வாயிலாயுள்ளது. அதனையே யுயர்தற்கு வாயிலாகக் கொண்ட புலவர் பெருமை பாராட்டத்தக்கதன்றிப் பழித்துரைக்கப்படுதல் எங்ஙனம் பொருந்தும்.

நாவலர் பெருமை சுருங்கக்கூறின், புலமையாற் சீரும் சிறப்பும் பெற்ற நாவலர் அவர்கள் அந்நன்றி பாராட்டி புலமைக்குச் சீருஞ் சிறப்பும் கொடுத்தனர் என்றலே தகும்.

மேனாட்டார் தங்கள் ஊருக்குப் பெருமை யளிக்கும் பழைய பொருட்களைப் பாதுகாத்தலில் மிக்க விருப்புடையர். நாவலர் அவர்கள் மேனாட்டிற் பிறந்திருப்பின் அவர் இருந்த வீட்டையும், கையாண்ட பொருட்களையும், எழுதிய கடிதங்களையும், இயற்றி அச்சிட்ட நூல்கள், கட்டுரைகள் முதலியவற்றையும் பாதுகாத்து, அவ்விடத்தை அவ்வூருக்குப் பெருமை யளிக்கும் ஒரு புத்திடமாகவும் பாதுகாத்து வந்திருப்பர். இங்கிலாந்தில் பல புலவர்கள் வாழ்ந்த இல்லம், கையாண்ட பொருள் முதலியன இன்றும் அழியாது பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றைக் காண்டலால் அப் புலவர்மீது அன்பும் வியப்பும் மகிழ்ச்சியும் தோன்றுநிற்கும். நம் யாழ்ப்பாணத்தார் அங்ஙனம் பாதுகாவாது விட்டொழியினும், நாவலர் அவர்கள் தம் பெருமையைக் காட்டுவான் வேண்டி 'நாவலர் நினைவுமலரினை'ப் பூத்த தொல்புரம் கலாவிருத்திச் சங்கத்தாரை அடியேன் மனமார வாழ்த்துகின்றேன். அறிவான் மிக்க பண்டிதர் இரத்தினம் அவர்களை இம்மலராசிரியராகத் தெரிந்தெடுத்த சங்கத்தை மீட்டும் பாராட்டுகின்றேன். இந்நினைவுமலர் நாவலர் அவர்களின் பல்வகையாற் றலைக்காட்டும் நந்தா விளக்காய் அமையுமாமாறு இறைவன் இன்னருள் முகிழ்ப்பானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமோத்தமன்.

(திருநெல்வேலி, ஸ்ரீ காயரோகண சுவாமி சந்நிதானம்
பிரம்மஸ்ரீ சி. சதாசிவக் குருக்கள் அவர்கள்.)

ஆசிரியப்பா.

நாவல ரேறு நல்லைமா நகரத்
தேவுதன் செயலைச் செப்புவ தென்னே
தமிழ்தலை யெடுப்பச் சைவநற் பைங்கூழ்
விளைவன விளைத்து விளங்கிமே லோங்கச்
5 சத்தியம் நேர்மை தடுக்கொணா வீரம்
பத்தியின் பெருக்காம் படைபல தாங்கி
ஆரிய திராவிட வளக்கரிற் படிந்து
பாரிய ஆங்கில பாஷையிற் பயின்று
கற்பவை கற்றுக் கற்றாங் கொழுகி
10 முற்றவத் தாற்கலை முழுதொருங் குணர்ந்து
வாக்குவல் லபத்தால் வாணியை வென்று
தேக்குசித் தாந்தத் தெளிவினிற் றிளைத்து
வினைப்பய னன்றி விளைவன இல்லெனும்
முனைப்பினி லன்றோ முறுகி வளர்ந்து
15 அருட்டுணை யன்றி மருட்டுணை யின்றி
அஞ்சா நெஞ்சின் அறப்போர் புரிந்து
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்கி
உய்வகை தானிலத் துதித்ததை யுணர்ந்து
தன்கிளை தன்னு ரென்னு மதின்றி
20 மன்பதை கட்கெலா மாதா வாகி
அச்சுவா கனத்தில் அளவில்பன் னூல்கள்
உச்சிமேற் கொள்ள உளமுவந் தருளி
பச்சிளம் பாலரும் பருணிதர் குழாமும்
இச்சையின் யாரும் ஏத்துபன் னூல்கள்
25 படிப்படி இயற்றிப் பாரகம் முழுவதும்
அடிப்படுத் தருளிய அதுதா னென்றோ
தானமெவ் வகையுளுந் தக்க வித்தியா
தானமே மேலெனச் சாற்றிச் சாற்றித்
தமிழ்நா டெங்குஞ் சைவநற் பள்ளி
30 தாபனஞ் செய்வதே தன்னிலக் காகிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பர மென்னுந் திவ்விய தலத்தில்
சைவ வித்தியா சாலை தாபித்துத்
தில்லைவா ழந்தணர் சிறார்களும் பிறரும்
கல்விகற் பதற்குக் கடுகள வாயினும்
35 திரவியச் செலவொரு சிறிதும் இன்றி
வைத்ததொன் றேயோ வழிவகை இன்றி
உற்றமா ணவரை உணவுடை உதவிக்
கற்கவைத் தந்தக் கழகத் துக்கே
யாழ்ப்பாண வித்தியா சாலைக் கியைந்த
40 பொருளினும் மிகப்பல பொருளியை வித்ததை
அறியா தாரொன் றறியா தாரே
ஏட்டிலன் றித் தமிழ் இயையா தென்ற
மோட்டு மொழியெலாம் முதுகிரி யேறக்
கண்டுங் கேட்டுங் கனவிலு மறியாத்
45 தொண்டென யாருஞ் சொல்லித் துதிக்க
சென்னைமா நகரிற் சிறந்த அச்சுக்
கூடதா பனங்கை கூடிய தொன்றோ
நாவலர் புத்தக மென்றுநாட் டுள்ளோர்
ஆவல்மேற் கொள்ள அளித்த அம்மட்டோ
50 தமிழ்நா டெங்கும் சைவப் பிரசங்க
அமிழ்த மாமழை ஆறெழுந் தோடச்
சங்கிதா னங்கள் தலைநிமிர்ந் தெழுந்து
மன்னிய தீண்டென மதித்ததை மறந்து
தம்மட மதனிலுந் தங்குவான் வேண்டிச்
55 செம்மையிற் பூசனை சிறப்பொடு புரிந்ததை
இம்மையில் அறியார் அறியார் தாமே
மடாதி பதிகளும் மறையா கமங்கள்
தொடாத பார்ப்பனத் தொழுகுலத் தோரும்
தத்த நெறியிற் றலைப்படச் செய்து
60 வித்துவப் பெரியோர் வீண்கவி பாடிப்
பித்தந் தலைக்கொளும் பேதைமை போக்கிச்
செல்வப் பொருளே பொருளென மதித்த
புல்லறி வாளரைப் பொருதமர் தொலைத்து
மெய்ப்புல வோரை மேனிலைப் படுத்திப்
65 பொய்ப்புல வோர்தம் பொள்ளலுக் கிரங்கி
அருள்வழி யில்லார் மருள்வழி மாற்றித்
தமிழக வரைப்பெலாந் தனிக்கோ லோச்சித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிக ரின்றித் தானே யாகி
இம்மட் டேயோ! இம்மட் டேயோ!
70 தமிழறிந் திட்டோர் சைவ சாஸ்திர
அமிழ்தறி யார்க ளஃதறிந் திட்டோர்
தமிழறி யாரிவை சார்ந்தோ ரொழுக்க
நெறியறி யாரெனு நெறியற மாற்றி
அம்மட் டேயோ! அம்மட் டேயோ!
75 ஐயா! சுவாமி நாதபண் டிதனே
அறியாய் கொல்லோ! அறியாய் கொல்லோ!
நின்பெருங் குரவன் நின்னு டதனில்
தேசத் தொண்டிற் சிறந்தோ னெனநீ
பேசக் கேட்டுப் பெரிதுவந் திலையோ
80 அந்நா ளாங்கிலம் பயின்றர சாங்கத்
தின்னு புரிந்த இறைமையி னுரை
நன்னு வன்மையின் நடுக்கி முடுக்கித்
தொன்னு ளரசியற் றுறைகுறை விரித்துச்
சொன்னு னியாரெனச் சொல்லா யோநீ
85 தேசத் தொண்டெனச் சமயத் தொண்டெனப்
பாஷைத் தொண்டெனப் பகர்ந்தமுத் தொண்டில்
முதன்மைபெற் றோங்கிய முதன்மையா ரொருவரைத்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளரை
இருவிர லெடுத்திவ் விருநில வரைப்பில்
90 ஒருவர்மற் றவரென உரைத்தலு மாமே
இத்துணைச் சிறந்த இணையிலாப் பெரியோன்
உத்தமர் தமக்கெலா முத்த மோத்தமன்
ஆறுமுக நாவல அரும்பெருங் குரவனே.

"சென்னை முதல் ஈழ மீறுகவுள்ள இத் தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவரும், இலக்கண விலக்கியங்களில் மகாவல்லவரும் சபாப்பிரசங்க சிங்கமுமாகிய ஸ்ரீ ஆறுமுகநாவலர்"

—தத்துவ விசாரணிப் பத்திராதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A Hindu Luther.

(The following extract is from a letter from Tranquebar correspondent published in the Mofussil Guardian of Februay 1870 and reproduced in the 'Ceylon Patriot.')

"**Mr. Aroomuga Navalar** :— Although this name is one of those crack-jaw names which we often come across, yet, I believe it is one which is susceptible of different meanings. For my own part, I think I might call him in all propriety "a Hindu Luther" What Martin Luther was to the whites in the age of Reformation, that this gentleman is to the Hindus in Modern age; he being a devout and zealous reformer of Hinduism He has arrived here from Chellambarum en route to Jaffna, and has been requested by a worthy friend of his to spend a few days at Poriar. The other day he delivered a lecture in the premises of one Krishnaswamy Chetty on the Divine attributes, many a wealthy and respectable inhabitant having been invited to hear it. Although our much esteemed Sub-Magistrate was kind enough to honour the occasion with his presence, still he was not patient enough to remain there longer than a few minutes. On a sudden he rose up from his seat, to the great surprise of the company, and returned home, the others also, of course, followed his example leaving Mr. Navalar to preach to himself That this reformer is truly a learned man, is a fact that cannot be disputed for a moment, but the style and language which he made use of in the delivery of his lecture were too high-flown and rhetorical to be readily comprehended by people of ordinary understanding."

'இப்புத்தகத்தை விட்டுவிட்டீர்கள்.'

நாவலரவர்கள் ஒருமுறை திருவாவடுதுறை மடத்தில் தங்கியிருக்கும் போது தாம் அச்சிட எழுதிவைத்திருந்த சில நூல்களை ஒத்துப்பார்ப்பதற்காக அங்குள்ள நாலு ஏட்டுப் புத்தகங்கள் தமக்கு வேண்டுமென்று சந்நிதானத்திடம் கேட்டிருந்தார்கள். பின் அவர்கள் புறப்படும்போது சந்நிதானம் அப்புத்தகங்களை எடுப்பித்து நாவலரவர்கள் முன் வைப்பித்துவிட்டு அவற்றுளொன்றைத் தான் பின் எடுத்து வைத்துக்கொண்டது. நாவலரவர்கள் முறைப்படி நமஸ்காரஞ் செய்து விடைபெற்றுக் கொண்டு மற்ற மூன்று புஸ்தகங்களையு மெடுத்துக்கொண்டு சிறிதுதூரம் போனபின் சந்நிதானம், "இப்புத்தகத்தை விட்டுவிட்டீர்கள்" என்று திருவாய் மலர்ந்து கொண்டுபோய்க் கொடுத்தது. எவருக்கும் எழுந்து மரியாதை செய்யும் வழக்கம் மடத்துச் சம்பிரதாயமல்லாமையால் இப்படியோருபாயஞ் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் நல்லிசைக் கும்மி.

(திரு தா. தங்கராசன், அண்ணமலைப் பல்கலைக்கழகம், அண்ணமலை நகர்.)

1. கும்மி யடியுங்கள் கோதையரே போந்து
கொற்றநல் லூரனின் வாழ்வுகூறி
நம்மி லுயர்ந்தநன் னாவலன் தன்னிசை
நாவினிற் பாடி யடியுங்கடி.

2. நல்லூரி லேவந்த நம்பனடி அவன்
நற்றமிழ் போற்றிய நாவலனடி
பல்லூரிலுஞ் சென்று பன்னுசொன் மாரியைப்
பாய்ச்சி வளர்த்தநற் பாவலனடி.

3. வேளாண் குலத்து விளக்க மடியவன்
வேண்டிய யாவர்க்கும் வீசினனடி
தாளாண்மை யாலே தழைத்தா னடியவன்
தன்மையைப் பாடி யடியுங்கடி.

4. சைவந் தழைக்கப் பிறந்தானடி உயர்
சாத்திர வாழி கடந்தானடி
ஒளவியர் தம்மை யணுகானடி அந்த
அண்ணலைப் பாடி யடியுங்கடி.

5. மாணியாய் வாழ்த லரிதென்னும் வாக்கியம்
மாயத்தன் வாழ்க்கையில் வாழ்ந்தவனடி
காணிய வந்தவர்க் கின்சொற் கனியடி
கற்பக மன்ன கவிஞனடி.

6. பண்டைப்பனுவலைப் பௌவங்கொண்டததில்
பம்மி மிகுந்தநன் னூலையெல்லாம்
மண்டு சிதலது கொண்டிடா தேயச்சு
வாகன மேற்றிய வள்ளலடி.

7. நற்றமிழ்ச் சாலைகள் நாட்டிநன் னாட்டினில்
ஞான மணம்வளர் நன்மலராம்
கொற்றவன் றன்புகழ் கூறிக் குறுந்தொடிக்
கோதையரே கும்மி யோதுங்கடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரின் பெருமை.

(அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்
திரு. A. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A.,)

ஆறுமுகநாவலர் தோன்றிய காலம் பாட்டுக்களிலேயே எல்லா நூல்களையும் இயற்றவேண்டுமென்ற நோக்கம் மலிந்த காலம்; அவரவர் கற்ற கல்வியை அவரவர் பொருளேயென நினைத்துக்கொண்டு பிறர்க்கிந்தாற் குறைந்துவிடுமென்று கருதிய காலம்; நாம் அரும் பாடுபட்டு அறிந்த பலவற்றைச் சிலநாளில் அறிந்து செல்ல நினைக்கும் இவர்க்கு நாம் கூறுவதோவென்று கருதிய புலவரிருந்த காலம்; சுவடியொன்றிருக்குமேயாகில் அதனைப் பிறரெவர்க்குங் காட்டாது இல்லையென்றும் பலர் சொல்லி வந்த காலம்; உதாரணமாக, 'மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள், சிவதருமோத்திரச் சுவடி பெற அரிதின் முயன்றும் முடியாமல் சுந்தரம்பிள்ளை யென்ற ஒருவர் செய்த தந்திரத்தாலன்றோ அவரதனைப் பின்னர்ப் பெற்றார்? அம்பலவாண முனிவரிடம் அவர் பாடங் கேட்கச் சென்ற பொழுது விரைவில் அறிந்துகொண்டு செல்ல நினைத்து அவர் வந்திருப்பதாகவன்றோ கருதப்பட்டு முதலிற் பாடஞ் சொல்லி வைக்கப்படுதற்கு உரியரென மதிக்கப்பட்டாரல்லர். "யமகத்திரிபந்தா" திகளும் சொற்சுவை மலிந்த கவிகளுமல்லவோ இப் புலவராலும் அக்காலத்தியற்றப்பட்டன?

இக்காலத்திலே "யாரும் பாடுபுகழ் ஆறுமுகநாவலர்" இருள் நீக்கி ஒளியளிக்க வல்ல ஒரு கதிரவன்போற் றோன்றினார். மடற்பனைகள் நிரம்பியவூரில் தென்னை மரமும், ஆலமரமும்போல வந்து பயனளித்த பெரியாராகிய இவர் 1823-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்து நல்லூரில் கந்தப்பிள்ளை சிவகாமிபம்மையார் இவர்களுக்குப் புதல்வராகத் தோன்றினார். தோன்றிய இவர் நல்ல பரம்பரையில் வந்தவர்; சிவஞான சித்தியாருக்கு ஒரு நல்லுரை இயற்றிய

---

8. ஆங்கிலத் தோடு வடமொழி யாதிய
ஆராய்ந் துணர்ந்த அறிஞனடி
பாங்கிலுள் ளார்களி கொள்ளப் பொழுதிற்
கேற்ற மொழிபகர் ஏந்தலடி.

9. அன்னோன் குலத்துடன் ஆய மறைகளும்
ஆண்டுபல் லாண்டு நிலையுறவே
தன்னல மில்லாநல் நாவலன் தன்புகழ்
தாரணி யெங்குந் தழைக்குதடி.

10. வாழி யவன்தொண்டு வாழி தமிழகம்
வாழிநன் னாவலர் எண்ணமலர்
வாழி யுலகெலாம் வண்டமி ழோங்குக
வள்ள லவன்புகழ் வாழியவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாசர் மரபில் வந்த இவர், கையில் எழுத்தாணியுஞ் சட்டமுங் கொண்டே ஒரு தமிழ் நாடகத்தை யெழுதியக்காலே துஞ்சிய ஒருவாது புதல்வராகப் பிறந்த இவர், புராணப் பிரசங்கங்கட்கெல்லாம் இவரது சிறுவயதில் அழைத்துச் சென்ற மயில் வாகனனாரை மைத்துனராகப் பெற்றிருந்த இவர், சேனாதிராயர் சரவணமுத்துப்புலவர் ஆகிய பெரியார்களை ஆசிரியராகப் பெற்றிருந்த இவர், பிற்காலத்திற் பெருமையும் பீடுமுற்றது வியப்பன்று. ஓய்வு நேரங்களை யெல்லாம் வீணே கழிக்காது குடியில்லாத் தனியிடங்கள் கண்டு ஆங்குச்சென்று புத்தகங்களைப் படிப்பதில் பயன்படுத்திய இவர், உரைக்கப்படும் பொருளை உளத்தமைத்தும் மாணவர் கொள்ளு மாற்றலறிந்து அதற்கேற்பப் பலரைக் கல்வி பயிற்றுவித்த இவர், தம் மாணவரில் ஒருவர் வைசூரி நோயால் வருந்திய பொழுது அவரை இவர் போய்ப் பார்க்கக் கூடாதென்று பலர் ஒருபால் வற்புறுத்திச் சொல்லவும் கேளாது அவர் இருந்த இடஞ்சென்று அவரைக் கண்டுபேசி இருந்து ஆவனபுரிந்து வந்தமையால் மாணவர்பால் இருந்த அன்பினைப் புலப்படுத்திய இவர் சிதம்பரத்திலும், யாழ்ப்பாண வண்ணார்பண்ணையிலும் பள்ளிக்கூடங்களை யமைத்துப் பலருக்கு அறிவு புகட்டி வந்த இவர், பின்னாளிற் பெரிய பிரசங்கியாராகவும் பதிப்பாளராகவும் உரையாசிரியராகவும் ஆனது வியப்பன்று. "வார்த்தை நாறுயிரத் தொருவர்" என்பதில் நம்பிக்கை கொண்டு சிலசொல்லியுஞ் சொல்ல, மக்கள் நிறைந்திருந்த காலத்தில் எடுத்துக்கொண்ட ஒரு பொருள்பற்றித் தொடுத்துப் பலமணிநேரம் ஆடாமல் அசையாமல் இருந்து பிரசங்கிக்கும் ஆற்றல் படைத்தவர் இவர். "ஆயத்தமில்லை", "சைவசமயமே சமயம்" என்ற தலைப்புகளின் கீழே இவர் செய்த பிரசங்கங்கள் மிகச் சிறந்தவெனக் கூறுவர். நன்னூல் விருத்தியுரை, திருக்குறள் பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கணக்கொத்து ஆதியவற்றைப் பிழையறப் பதிப்பித்துத் தமிழுலகிற்கு அளித்த வள்ளலார் இவர். நன்னூற் காண்டிகையுரை கோயிற்புராணவுரை, சிவதருமோத்திரவுரை, ஆகியவற்றை இயற்றிப் புகழைத் தமதாக்கிக் கொண்டவர் இவர். வசனநடை கைவந்த வல்லாளர் என திரு. வீ. கோ. சூரியநாரயண சாஸ்திரியார் அவர்களாற் பாராட்டப்பட்ட பெருமையையுடையவர் இவர். பாலபாடங்கள், சைவவினாவிடை, திருவிளையாடல் வசனம், பெரிய புராண வசனம் ஆகியவற்றை யெழுதித் தமிழ்மக்கள் வசனநடை யெழுதப் பயில்வதற்கு அடிகோலியவர் இவர். இவர் எழுதிய பாலபாடங்களை வசனநடை எழுத முற்படும் சிறுவர்கள் கைக்கொள்ளத்தக்க நடைவண்டியென்று சொல்லலாமென்றும், பெரியபுராண வசனத்தை வசனமுங் கதையு மெழுத முற்படும் பெரியார்களும் விரும்பி நோக்கத்தக்க வழிகாட்டியென்றியம்பலா மென்றும் திருமணம் - செல்வக்கேசவராய முதலியார் கூறுவர். தமிழ் வசனநடைச் சரித்திரத்தில் இவருக்கு என்று மழியாப் பேரிடமுண்டு.

தமிழ்க்கவிகளிற் பயின்ற இவர் கவிஞராக விராது வாழ்ந்திருத்தல் முடியாது. விரும்பினரேயாயின் இவருடைய சமகாலத்தவராகிய மீனாட்சிசுந்தரம்பிள்ளை, இராமலிங்க சுவாமிகளைப் போன்ற கவிஞர்க்கொப்பக் கவியும் இயற்றியிருப்பர். இதன் உண்மை இவர் பற்பல சமையங்களிற் பாடிய தனிப் பாடல்களானும் "கதிரையாத்திரை விளக்கப்" பகுதியானும் பெறப்படும். பலரும் அறியத்தக்க வசனமே அக்காலத்தில் வேண்டப்படுவது என்ற வுணர்ச்சியால் இவர் கவிசெய்து பெறத்தக்க புகழைத் தியாகஞ் செய்தாராகல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு பெருமை வாய்ந்த இவரை அக்காலத்தில் தமிழர் போற்றாதிருந்தாரல்லர். திருவாவடுதுறை யாதீனத் தலைவர் நாவலர் என்ற பட்டத்தை வழங்கியும், மதுரைத் திருஞானசம்பந்த சுவாமி மடத் தலைவர் இவருக்கு ஆறு கட்டிச் சுந்தர வேடங்களை உரியவெனத் தர முற்பட்டும், திருவண்ணாமலைக் குன்றக்குடி மடத்தலைவர் இவரைச் சிவிகையிலேற்றி ஊரெங்கும் உலாவரச் செய்தும், சில சைவ அன்பர் இவரை ஐந்தாங் குரவரென நினைத்துப் பேணியும் வந்ததாக அறிகின்றோம். ஆறு கட்டிச் சுந்தர வேடங்களைத் திருஞானசம்பந்த மடத்தார் கொடுப்ப இவர் அவற்றைப் பெற்றுக்கொள்ளாதது "கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர் கொள்ளென்றல் அதனினும் உயர்ந்தன்று." என்ற பழம் பாடற் பகுதிக்குத் தக்கதொரு பிற்கால உதாரணமாதல் காண்க.

இவர் ஒழுக்கத்திற் றலைசிறந்தவர் என்றும் தமிழுக்கும் சைவத்திற்குந் தொண்டாற்றும் பொருட்டு மணந்து பெறுமின்பத்தை வேண்டாமெனத் துறந்தவரென்றும், தருமசிந்தையுடையவரென்றும், பிறரைப் பாதுகாக்கும் பெற்றியுடையவர் என்றும் அறிகின்றோர். "நனவிலும் நன்னடை தணவாத சீலன்" என்று சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் அவர்களாற் சிறப்பிக்கப்பட்டவர் இவர் கொடுக்கப்பட்ட பொருள்களைப் பற்பல சமையங்களிற் பெற மறுத்தார் என்பதால் இவரது தன்னலமின்மை புலப்படும். இவர் சைவர்களுக்குச் செய்ததொரு விஞ்ஞாபனம் திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் இவரைக் குறித்தெழுதிய புத்தகத்தில் வெளியிட்டிருப்பது இவரது தருமசிந்தையைத் தெற்றெனக் காட்டும். நந்தனார் சரிதம் இயற்றிய கோபாலகிருஷ்ண ஐயர் என்பாரை இவர் பாலித்தது பிறரைப் பாதுகாக்கும் இவரது பெற்றியைக் காட்டும். சென்னையில் வாழ்ந்து வந்த ஒருகாலத்தில் மடைப்பையன் எவனும் இல்லாத காரணத்தினாலே பூசை நைவேத்தியங்களை மாத்திரமே புண்டு பிறிதொன்றும் வேண்டாது இவர் இருந்து வந்தது இவருடைய தியாக புத்தியையன்றோ வுணர்த்தும்.

இவரது சைவப்பற்று சொல்லுந்தரத்ததன்று. "அவநெறியாய வனைத்துங் களைந்து சிவநெறி வளர்க்கும் திவ்விய குணத்தர்" என்றும், "சைவமெனும் பயிர்வளர்க்கும் எழிலிபோல்வார்" என்றும் மீனாட்சிசுந்தர நாவலர் அவர்கள் இவரைப் போற்றியுள்ளாரேயாயின் இவர் திறன் எத்தகைத்தாயிருத்தல் வேண்டும்! திருநீறு பூசியே எக்காலும் வேலைக்கு வருவேனென்ற நிபந்தனையைப் "பர்சிவல்" துரை என்பவரிடத்தில் இவர் செய்துகொண்டனர் என்றால், தமையனார் தியாகராசர் என்பார் பெரிய புராணக் கதைகள், கட்டுக்கதைகள் என்று சொல்லியதைக் கேட்டு வாளினால் அவரைக் கொல்ல முற்பட்டனரென்றால், இவருடைய அழுத்தமான சைவப்பற்று சாதாரண மக்களிடைக் காணப்படுவதொன்றன்று.

"சுண்ணவெண் சந்தனச்சாந்தும்..... திண்ணென் கெடிலப் புனலும்" உடையார் ஒருவரது தமராகிய இவர் அஞ்சத்தக்கதும் உண்டோ? உண்டெனின், இவர் அஞ்சியனவெல்லாம் பழியே. அஞ்சாதிருந்தது வலியுடைய மக்களையாம் இதற்கு உதாரணமாக, செல்வாக்குமிக்க "டைக்" துரையென்பார்க்கு இவர் வாய் பேசாது கையினால் தமையனாருடைய வீட்டைக் காட்டிச் சென்றமை சொல்லப்படுவதுண்டு. அங்ஙனமே பொருள் மிகப் படைத்த சேதுநாட்டுத் தலைவர் பொன்னுச்சாமித்தேவரிடம் இவர் வருவதாயிருந்தால் தேவர் எழும்போதெல்லாந் தாமெழுமாறு வற்புறுத்தக்கூடாதென்றும் அவர்முன் இவர் மேற்றுணி எடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடவேண்டுமென்று பணிக்கக்கூடாதென்றும் இனைய பிறவானும் நிபந்தனைகளைச் செய்து கொண்டு இவர் அங்குச் சென்றார் என்றால், இது பொருளுடையாரிடத்தில் அஞ்சாதிருந்த இவரதாற்றலை வெளிப்படுத்துகின்றதன்றோ?

இவர் பழமையைப் பெரிதும் போற்றியொழுகி வந்தவரென்பது, "ரோசாமலர்" இவரது பூசையில் உபயோகப்பட்டுவந்த தேனும் வடமொழிப் புட்பவிதியில் சொல்லப்படாத காரணத்தால் தாம் இயற்றிய தமிழ்ப் புட்பவிதியில் இவர் சேர்க்காது விட்டமையால் இனிது புலப்படும். இப்பழமை விரும்பியார் "பிரிட்டோ" துரைக்கெதிராக, திரு பொ. இராமனாதன் அவர்களுக்குதவியாக இலங்கைச் சட்ட மன்றத் தேர்தலில் உழைத்ததையறியும் நாம் இவர் புதுமையிலும் சிலகால் இணங்கினவர் என்பதை யறிதல் கூடும்.

எல்லாவற்றிலும் சிறப்பாக இவருடைய வாழ்க்கை வரலாற்றிலிருந்து எனக்கு உவகையளிக்குஞ் செய்தி இவர் சைவமக்களாவார் பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களையே செய்யவேண்டும் என்று வற்புறுத்தியிருப்பது. இவர் இங்ஙனம் நான்காம் பாலபாடப் புத்தக முதற்பாடத்தில் மாத்திரமன்றித் தம் தமையனாருக்கு எழுதிய கடிதமொன்றிலும் வற்புறுத்தியுள்ளார். "சிவ வழிபாட்டிற்கு அங்கம் பாவங்களை வெறுத்தலும் புண்ணியங்களைச் செய்தலும் இவையல்லாத வழிபாடு அபத்தியத்தைத் தள்ளாமலும் பத்தியங் கொள்ளாமலும் தின்கிறமருந்துக்குச் சமானமாகும்" என்னும் பகுதி அக்கடிதத்திற் காணப்படுகிறது.

இப்பெரியார் இவ்வுலகை நீத்து ஐம்பத்தெட்டாண்டுகளாகியும் அவரை இன்றுகாறும் தமிழ்நாட்டாருஞ் சைவரும் போற்றி வருவதொன்றே இவரது சிறப்பை விளக்கும். இவர் பெயர் தமிழ் நாட்டில் புல்லும் பூண்டும் உள்ளவரையில் மக்களால் மறக்கப்படாது என்று கூறுவது மிகையாகாது. இவரைப்பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ளத் தமிழருஞ் சைவரும் முன் வருவாராக.

சற்குருநாத சுவாமிகள்.

ஸ்ரீலஸ்ரீ சற்குருநாத சுவாமிகளாகிய நல்லூர், ஆறுமுகநாவலரவர்களால் எழுதி வெளிப்படுத்தப்பட்ட சைவதூஷண பரிகாரத்தைக் கண்டித்து, சுதுமலை,ம-ா-ா-கறல் விசுவநாதபிள்ளை பி. ஏ., பி. எல். என்பவரால் சைவதூஷண பரிகார நிராகரணமாகிய **சுப்பிரதீபம்** எனப் பெயரிய ஓர் நூல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதைக் கிறீஸ்தவர் புகழ்ந்து பாராட்டி ஆங்காங்குள்ள தத்தம் ஆலயங்களிலும் வித்தியாசாலைகளிலும் காலத்துக்குக்காலம் பலருக்கும் இலவசமாகக் கொடுத்து வந்தார்கள். இந்நூலாசிரியராகும் மேற்படி பிள்ளை அவர்கள் சிதம்பரத்திலே, பல சனசமூகத்திலே, மேற்படி சற்குருநாத சுவாமிகளோடு சமயவாதம் செய்ய நேரிட்டவிடத்து, அவ்வாதத்திலே தோற்று உடனே எழுந்து அஞ்சலியஸ்தராக நின்று சற்குரு எனத் துதித்துப் பிராயச்சித்தம் செய்யப்பெற்றுச் சைவசமயத்தை அநுட்டித்து வந்தனரென்பது யாவரும் அறிந்த சத்தியம். தாம் எழுதிய சுப்பிரதீபத்திற்குத் தாமே மறுப்பெழுதியும் அதனை வெளிப்படுத்து முன்னரே தேக வியோக மெய்தினர். அம்மறுப்பாகிய கரலிகிதப் பிரதியை அவருடைய கிறீஸ்தவ உறவினர் சிலர் கையாடி எரித்துவிட்டனர்.

—"ஸ்ரீலோகரஞ்சனி."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயத்தக்க செய்த பெரியார்.

(உடுப்பிட்டி, ஸ்ரீமத். அ. சிவசம்புப்புலவர் அவர்கள்.)

நேரிசை வெண்பா.

கற்றார் பிறரெல்லாங் காசினிப்பொய் வாழ்விலலைந்
துற்றார் செயற்பால வுன்னாராய் — முற்றார்
நயத்தகைய வாறுமுக நாவலனே யென்றுஞ்
செயத்தகைய செய்தான் றெளிந்து. 1.

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஓங்கியதொல் காப்பியத்திற் குரைமுன் செய்த
வுவப்பினாற் சிலருரையா சிரிய னென்ன
வாங்கிளம்பூ ரணனைவியந் துரைத்தா ரன்னே
னவ்வுரையு மிழிவின்க ணமைந்த தம்மா
தாங்குபுகழ் நாவலனுஞ் சிறப்புப் பேராற்
றன்னியற்பே ருலகமெலாந் தழைக்க நின்ற
வீங்கிவன்செய் நூலுரைகள் பலசற் றேனு
மிழிவின்கட் படுவவென்றியா ரியம்பு வாரே. 2.

வெண்ணீறுங் கண்டிகையும் வெண்பொற் றாசும்
வெண்ணகையும் பவித்திரமும் விளங்கக் காட்டி
யுண்ணீடு பத்தியினர் போலிங் குள்ள
வொருசிலர்தா முரைக்குமொழி யுவந்து கொள்ளே
மண்ணீடு புகழ்த்திருநா வலனார் சொல்லும்
வாசகங்க ளெவையவையே வைய முய்யப்
பண்ணீடு மொழிபங்கன் பகர்ந்த வாக்காப்
பணிந்துகொள்வே மிதுநமக்குப் பயன்பட் டன்றே. 3.

வித்தகமெய்ந் நூலுரைக டுகளிற் பல்கி
விராய்க்கிடந்து வரம்பிகந்த விதங்கள் பல்வே
றத்தனையு மேடுகளின் முன்னர்க் கற்ற
வாசிரியர் பெரிதுணர்வ ரவைநன் றாய்ந்து
சுற்றமுறத் திருத்தியச்சி லிடுவித் தியார்க்குந்
தொலைவிலுணர் வுதிப்பித்தான் றொல்லைச் சீர்த்தி
யுத்தமநா வலனவன்போ லவற்றை யெல்லா
முய்த்துணர்ந்து திருத்தவல்லா ருலகத் தியாரே. 4.

கட்டளைக் கலித்துறை.

மறையோ ரருட்சைவ தேசிகர் பாவலர் வாழ்ந்தனர்நூற்
றுறையோடு சைவந் தலைசாய்த் திடக்கண்டு தூங்கினர்நா
விறையோ னொருதனி யேநின்ற வற்றை யெழுப்பிநிறீஇக்
குறையோ வறவைத்த தற்கென்கைம் மாறு கொடுத்தனரே. 5.

ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை யப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேரூரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே. 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் கற்ற நூல்கள்.

ஐந்தாங் குரவரெனப்படும் ஆறுமுக நாவலர் அவர்களோ வெனின், சாலிவாகன வருஷம் ௪௪௫-க்குச் சமமாகிய சித்திரபானு வருஷம் மார்கழிமீ ௫-ம உ பிறந்தவர்கள். அவர்களுக்கு ஈசுவரன் கொடுத்தருளிய வாணாள் ஷ 56, மீ 11, நாள் 16. இதிற் பாதிக் காலம் கல்விகற்றல், கற்பித்தல், புத்தகங்களை அச்சிடுதல், இயற்றுதல்களிலும், பாதிக்காலம் சைவ சமயத்தை வளர்த்தலிலும் போக்கப்பட்டன. அவர்கள் விவாகம் செய்யவில்லை. பிள்ளைகளில்லை. வைப்பாட்டிகள் இல்லை. அதனால் தட்டார் வீடு, வைத்தியர் வீடுகளுக்குத் திரிவதாகிய வேலையுமில்லை. தாய், தகப்பன், சகோதரர்களுடைய வேலை பார்த்ததுமில்லை. வந்த காரியம் வேறொன்றாயிருந்தமையால் இந்த வேலைகளைக் கடவுள் கொடுத்தருளவில்லை.

அவர்கள் தமது 23 வயசினுள்ளே தமிழிலுள்ள இலக்கண இலக்கியங்கள், சமயநூல்கள், பன்னிரு சைவத்திருமுறை, புராணங்கள், தலமான்மியங்கள்; சமஸ்கிருதத்திலுள்ள பல ஆகமங்கள், அரதத்தாசாரியர், அப்பையதீக்ஷிதர், சிவாக்கிரயோகிகள், ஞானப்பிரகாச சுவாமிகள், அகோரசிவாசாரியார், சோமசம்புசிவாசாரியார், முதலியோர் இயற்றிய நூல்கள்; இங்கிலீசில் விவிலிய நூல் முதலிய பல நூல்கள் ஆகிய இவைகளையெல்லாம் கற்று முடித்துக் கொண்டார்கள். இவ்வளவு நூல்களையும் இந்த வயசினுள்ளே எப்படிக் கற்று முடித்தார்கள் என்பது ஒருகேள்வி. அதற்கு விடை எமக்குத் தெரியாது. ஆனால் இவைகளையெல்லாம் கற்றுணர்ந்தவர்களென்பது அவர்கள் முதலிற் செய்த பிரசங்கங்களாலும் செய்த நூல்களாலும் அச்சிட்ட நூல்களாலும் விளங்கும். நான்காம் பாலபாடத்தால், இறையனாரகப்பொருள், சிவதருமோத்தரம், திருக்குறட் பரிமேலழகருரை, இலக்கணக்கொத்து, திருமந்திரம், சேதுபுராணம், கந்தபுராணம், காஞ்சிப் புராணம், மனுஸ்மிருதி, நீதிசாரம், ஆசாரக்கோவை, திருக்கோவை, சோமவார கற்பம், சங்கற்பநிராகரணம், இறைவனூற்பயன், வருத்தமற வுய்யும்வழி முதலிய பல நூல்களையும், பெரிய புராண சூசனத்தால் சித்தாந்த சாத்திரம் பதினான்கு, பன்னிருதிருமுறை, ஞானப்பிரகாச தேசிகரின் பௌஸ்கரவிருத்தி, அப்பைய தீக்ஷிதருடைய சிவதத்துவவிவேகம் முதலியன, அரதத்தாசாரியரின் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், சூதசங்கிதை, வாயுசங்கிதை, கூர்மபுராணம், இரகுவம்மிசம் சிவபுண்ணியத்தெளிவு, பிரமகீதை காசிகாண்டம், இரத்தினத்திரயம், சிவயோகசாரம், பிரமோத்தரகாண்டம் காலோத்தரம் முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களையும், பெரியபுராண வசனத்தால், சிவானந்தலகரி, சௌந்தரிய லகரி, சிவபுசங்கம், சிவரகசியம், அகோர சிவாசாரிய பத்ததி வியாக்கியானம், ஞானப்பிரகாச தேசிகரியற்றிய சிவயோகசாரம், சிவயோகரத்தினம், சிலப்பதிகாரம், பதினெராந்திருமுறை, வாயுசங்கிதை, காளத்திப்புராணம், காந்தம், சித்தியார் முதலிய நூல்களையும், சிவாலய தரிசன விதியால் உருத்திராக்க விசிட்டம், அருணகிரிப்புராணம், கடம்பவனபுராணம், வருத்தமறவுய்யும்வழி, உபதேசகாண்டம், சிதம்பரபுராணம், ஆசாரக்கோவை, பிரமோத்தரகாண்டம் முதலிய நூல்களையும், திருமுருகாற்றுப்படையுரையால், தொல்காப்பியம், பத்துப்பாட்டு முதலிய நூல்களையும், சுப்பிரபோதத்தால், சைவாகமங்களின் சாரம், கந்தபுராணம் முதலியவைகளையும், சைவதூஷண பரிகாரத்தால், வேதாரணிய புராணம், சிவதருமோத்தரம், பராசரஸ்மிருதி, கூர்மபுராணம், சித்தாந்தசிகாமணி வடமொழிச் சிவதத்துவ விவேகம், கபிலரகவல், பட்டணத்தார்பாடல் முதலிய நூல்களையும் தமது 32 வயசினுள்ளே கற்றுணர்ந்தவர்களென்பது தெரிகின்றது. இந்நூல்களையெல்லாம் ஒருவரிடம் பாடங்கேளாமலே தாமாகப் படித்துணர்ந்தார்கள். தொல்காப்பியம், வீரசோழியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பஞ்சகாவியம் முதலிய நூல்களை அவ்வயசினுள்ளே கற்றுணர்ந்தவர்களென்பது அவர்களச்சிட்ட நூல்களால் விளங்கும்.

நாவலரைப்போல நமக்காளில்லை.

"நாவலர் 'பச்சைப்படி' யாகச் சொல்லுகிறவர். ஒளித்து மறைத்துச் சொல்லத் தெரியாதவர்; 'குத்த' லாகக் 'கிண்ட' லாகக் 'குறிப்' பாகச் சொல்லத்தெரியாதவர்; 'பூசி' 'மெழுகி'ச் சொல்லத் தெரியாதவர்; இந்தக் காலத்து 'நாகரீக' புருடர்கள்போல.

'பச்சைப்படி' யாகச் சொன்னாலும் சொற்கள் ஊடுருவிப் பாய்வன. குற்றவாளியைக் கொதிக்கச் செய்வன. சத்திர வைத்தியம் செய்து திருத்தம் விளைப்பன. இரக்கத்திலே பிறந்த சொற்கள். தம்மவர் பிறர் என்று பாரபட்சம் பாராத சொற்கள் அதனால் யாவரையும் கிடுகிடுத்து நடுங்கச் செய்த சொற்கள். யாவருக்கும் திருத்தம் விளைத்த சொற்கள்.

நாவலரைப்போல நமக்காளில்லை. முற்போக்குப் பேச நமக்காட்களுண்டு; சமரசம்பேச நமக்காட்களுண்டு. தேசியக் கிறிஸ்தவர்களுண்டு; பாதிரிசெய்த நன்மையை நோக்கி உருகுவோருண்டு. இக்காலப் போலிநடிப்பை எடுத்துக் காட்ட நமக்காளில்லை. நாவலரைப்போல நமக்காளில்லை."

(சைவ வித்தியா வீருத்திச்சங்க வெளியீடு இல. க. முகவுரை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிக சிகாமணி.

(சுன்னாகம், ஸ்ரீமத் சிவ. சங்கர பண்டிதர் அவர்கள்.)

ஆசிரியப்பா.

பூரண சிவாநு பூதிமா னுகிய
திருநெல் வேலிச் சீரு ருடையனும்
பெருமைசேர் ஞானப் பிரகாச முனிவரன்
வந்தவ தரித்த சுந்தர மரபினன்
பந்தம தகற்றும் பல்பெருந் தவத்தின
னீதியிற் பெருகிய மேதகு நிதியினன்
கோதிலாக் குசைநுதிக் கூர்மைகொண் மதியினன்
சுருக்கமி லிலக்கணத் தொகைபல விலக்கியந்
தருக்கவே தாந்தப் பெருக்கமுற் றுணர்ந்தோன்
வாதிக ளேங்கி வாய்புதைத் தோட
மேதினி யெங்கணும் வியன்புகழ் படைத்தோன்
வயம்பெறு வண்மையன் வரகுண மேரு
சயம்பெறு சைவ சபைக்குய ரதிபதி
சிவனே யாமெனச் சிவனடி யவரைப்
புவனியிற் பரிவொடும் போற்றிவாழ் புனித
னக்குமா மணிநீ றணிதிரு மேனியன்
மிக்குயர் செந்தமிழ் வேதபா ராயணன்
மேலா கியதனி விசேடச் சுருதியா
மூலாக மங்களின் முப்பொரு ளருளினால்
யுத்திபி னமைத்துணர்ந் துயரானு பூதி
சித்திபெற் றோங்கிய வித்தக சிரோமணி
யவமுறு பரமத வந்தகா ரங்கெடச்
சிவமத கமலந் திகழ்த்திடுந் திவாகரன்
றொழுதுடல் கம்பித் தழுது தொழும்புசெய்
பழுதின்மா ணுக்கர் பாங்குறச் சூழச்
சொல்வளச் சுவையாற் சுருதிகட் கினிதா
யல்கலில் லாத வரும்பொருள் வளத்தாற்
சிந்தையாஞ் செய்யுறீ இச் சிவப்பயிர் வளர்க்கு
மந்தமி லின்பத் தமுதமா மழைநிகர்
மெய்யுப தேசம் விளங்கிட விரித்துரை
செய்திடும் படுதர தேசிக சிகாமணி
மறைதிகழ் பிரணவ மன்ன
முறைதிக ழாறு முகநா வலனே.

'The Hindu of Hindus.'

(Sir. Muttu Kumaraswamy Avl. Kt.)

"It is the Hindu of Hindus, Arumuga Navalar in the north! He is one of those Orientals who can measure swords with even such a giant as my hon'ble friend (the then Queen's advocate, the Hon'ble Mr. R. Cayley) in an argumentative way. His whole life has been spent in preaching and writing against Christianity and he has a following which cannot be despised."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரின் மாணாக்கர்கள்.

(திரு. த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரத்திலிருந் தெடுக்கப்பெற்றது)

கருவி நூல்களையும் சமய நூல்களையும் சில பிள்ளைகளுக்குக் கற்பித்தால் அவர்களால் உலகத்திற்குப் பயன் பெரிது சித்திக்கு மென்றெண்ணிப் பிள்ளைகளைச் சேர்த்து விசுவாவசுஷு தைமீ முதலாக இராத்திரியிலுங் காலையிலும் வேதனம் பெறாது கற்பிக்கத் தொடங்கினர். அப்போது இவரிடத்திலே கல்வி கற்கும்படி சேர்ந்த பிள்ளைகள், சதாசிவப்பிள்ளை, சுவாமிநாதையர், நடராசையர், விசுவநாதையர், ஆறுமுகப்பிள்ளை, கந்தசுவாமிப் பிள்ளை, ஆறுமுகச் செட்டியார் முதலானவர்கள். இவருட் சதாசிவப்பிள்ளை என்பவர், இவரைப்போல நைட்டிகப் பிரமசாரியாய், இவர் எடுத்த கருமங்களுக்கெல்லாம் உடன்சென்று, இவர் எடுத்த கருமங்களுக்கெல்லாம் உற்ற துணையாய், இவர் திருத்திக்கொடுத்த புத்தகங்களை அச்சிட்டு அதனால் இவருடைய சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைப் பொருளை அபிவிருத்தி செய்து, இவருக்குப் பின்னும் ஏறக்குறைய முப்பது வருஷகாலம் இவருடைய வித்தியாசாலைகளை நடத்திவந்து சாதாரணஷு ஐப்பசிமீ அஉ சிதம்பரத்திலே சிவபதமடைந்தனர். நடராசையரென்பவர், சிவஞானசித்தியார் முதலிய தமிழ்ச் சைவசித்தாந்த நூல்களிலும், பௌஷ்கரம் முதலாகிய சமஸ்கிருத நூல்களிலும் பாண்டித்யமுடையவராயும், சிறந்த சைவசித்தாந்தியாயும், பல மாணாக்கருக்குச் சைவசித்தாந்த உபதேசஞ் செய்பவராயும், யோகாப்பியாசஞ் செய்பவராயுமிருந்து, சோபகிருதுஷு மார்கழிமீ சிவபதமடைந்தனர். ஆறுமுகப் பிள்ளை என்பவர் திருவண்ணாமலை ஆதீனத்திற் சேர்ந்து தம்பிரானாகி, சித்தாந்த நூல்களில் அதிக பயிற்சியுடையவராய்ப் பெரிய புராணத்துக்கு ஒரு சிறந்த உரை செய்திருக்கின்றனர்.

இவர்களுக்கு அடுத்த வகுப்பிற் கற்றவர்கள் வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை, மா. வைத்தியலிங்கபிள்ளை முதலானவர்கள். இவருட் பொன்னம்பலபிள்ளை தமிழில் இலக்கண இலக்கியங்களில் மிகச் சிறந்த வித்துவானாயும், புராணங்கள் காவியங்கள் முதலானவைகளுக்கு அர்த்தஞ் சொல்லுவதிலே தம்முடைய ஆசிரியராகிய நாவலருக்கு அடுத்தபடியில் உள்ளவராயுமிருந்து, உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை உபாத்தியாயர், பண்டிதர் வே. கனகசபாபதிஐயர், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் சபாபதிநாவலர், ச. பொன்னம்பலபிள்ளை முதலான பல மாணாக்கருக்குக் கல்வி கற்பித்து ஏவிளம்பிஷு மார்கழிமீ ருஉ சிவபதமடைந்தனர். வைத்தியலிங்கபிள்ளை என்பவர் யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நெடுங்காலம் தலைமை உபாத்தியாயராயிருந்தார்.

தர்க்ககுடாரதாலுதாரி வை. திருஞானசம்பந்தப்பிள்ளையும், ச. பொன்னம்பலபிள்ளையும், வை. விசுவலிங்கபிள்ளையும், அடியேனும், வேறு சிலரும் வித்தியாசாலையில் தூரத்தே நின்று பிற்காலத்தில் நாவலரிடத்திற் கற்றவர்கள்.

இவர் குடும்பப்பற்று அற்றவராயினும், மருமகனாகிய வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையிடத்து மிக்க பற்றுடையவராயிருந்தார். அதற்குக் காரணம் பொன்னம்பலபிள்ளை தமிழிலே சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மருந்து.

(சென்னை, ஸ்ரீமத். தண்டபாணி சுவாமிகள் அவர்கள்.)

சொல்லாக மின்றியிகழ் துட்டமதப் புட்கடமை
வல்லூறு போலடக்கும் வன்மையுறு நாவலன்.
பங்க மலியுநெறிப் பாழிமத யானைகட்கோர்
சிங்க மெனவே சிறந்தபுகழ் நாவலன்.
புண்கா தலித்தரும்பும் பூரியரெல் லாநடுங்க
வண்கார் முகிலெனவே வாய்திறக்கு நாவலன்.
சைவ சமயத் தனிக்கொடிபோற் றூரணியின்
மெய்வழக்கே நாளும் விளக்கியதோர் நாவலன்.
ஈழமுதற் றென்னு டிருண்மூழ்கிப் போகாமல்
வாழவைத்த சைவ மருந்தாய நாவலன்.
செய்யதமிழ் மூன்றும் திறனழிந்து போகாமல்
வையமிசை விளக்கும் வாய்மையுறு நாவலன்.
கள்ளைநிகர் சொல்லாற் கருத்துருக்கும் கன்னியர்மா
லெள்ளையொத்துந் தோயா திலங்குபுகழ் நாவலன்.
நால்வரனை யானொருவ னானிலத்திற் றோன்றுதலாற்
பால்வனநீ றோங்கப் பசுவாழ வேண்டுமென்றுன்
கால் வணங்கு நாவலன்.

வித்துவானுபிருந்து பலருக்குத் தம்மைப் போலக் கைம்மாறு வேண்டாது கல்வி கற்பித்து வந்ததேயாம்.

இவர் பார்சிவல் பாதிரியாருக்குப் பண்டிதராகுங் காலத்தில் இவரோ டுடன்கற்ற மு. தில்லைநாதபிள்ளை என்பவரும், சு. சின்னப்பபிள்ளை என்னும் மற்றொருவரும் பாதிரிமாருடைய துர்ப்போதனையை நம்பிக் கிறிஸ்தவராக எண்ணி இன்னகிழமை மச்சனம் பெறுவோமென்று பாதிரியாருக்கு வாக்களித்திருந்தார்கள். அதனை அறிந்த இவர், அவ்விருவரையும் அழைத்து அவர்களுக்குச் சைவ சமயத்தின் உண்மையையும் கிறிஸ்து சமயத்தின் ஆபாசங்களையும் மனசிற் பதியுமாறு போதித்தார். அப்போதனையைக் கேட்டவுடனே அவர்கள் மனந் திரும்பிக் கிறிஸ்தவராதலை ஒழித்தார்கள். தில்லைநாதபிள்ளை என்பவர் பின் இவருடைய வித்தியாசாலையில் ஓர் உபாத்தியாயராயும் இவருக் கன்புள்ள சிஷனுயும் இருந்தார். மற்றைச் சின்னப்பபிள்ளை என்பவர் கொழும்புசென்று சுப்பிறீங்கோட்டு நியாய துரந்தரராகித், திரும்பிவந்து இவரிடத்தும் சைவசமயத்தினிடத்தும் மிக்க பற்றுள்ளவராயிருந்தார். இன்னும் கிறிஸ்து மதத்திற் பிரவேசிக்க எண்ணியிருந்த சுந்தரப்பிள்ளை முதலான அநேகர் அதிற் பிரவேசியாதபடி இவராலே தடுக்கப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதப் பதிப்பு.

"நாவலரவர்கள் அச்சிட்ட நூல்களுள் பாரதத்தை நாம் மிகவும் மெச்சிக்கொள்ள வேண்டும். சென்னையில் வீராசாமிச் செட்டியார் மாணுக்கர் இராசகோபாலபிள்ளை என்பவர் வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தை முழுதும் மாற்றி அச்சிட வாரம்பித்தார். அதனை அறிந்த இவர் வில்லிபுத்தூராழ்வார் பாடியவாறே அப்பாரதத்தை அச்சிட்டார். இவருடைய பதிப்பு வராதிருந்தாற் பாரதங் கெட்டேபோய்விடும்."

—ஆறுமுகநாவலர் சரித்திரம்.

"மேல் நியாயங்களால் வில்லிபுத்தூராழ்வார் பாரதம் சைவவிஷயங்களை இடம் வந்துழிக் கூறிவருமென்றும், அப்படிக் கூறுதாகப் பிதற்றியது துரஹங்காரத் தெழுந்த மூடாபிமானம் என்றும் மேதாவியர் நிச்சயிப்பரென்க. இவ்வுண்மையை, ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் வெளியிட்ட பாரதத்தாற் கண்டுணர்க."

—ஸ்ரீமத். சுந்தர சிவாசாரிய சுவாமிகள்.

"இராசகோபாலபிள்ளை திருத்தி யச்சிற் பதிப்பித்த, புத்தகத்தைப் பாராதீர். ஏனெனில், அவர், முதனூற் கருத்தறியாதவ ராகையால் வில்லிபுத்தூர் ஆழ்வார் செய்த பாரதத்தைப் பெரியோர் வாக்கை அழிக்கக் கூடாதென்று சிறிதும் அஞ்சாது சிவபரமா யிருந்த பாடங்கள் அநேகத்தைத் தள்ளியும் சில அடிகளை மாற்றியும் சில சொற்களைத் திரித்தும் மனம்போனவாறே அச்சிற் பதிப்பித்தனர். ஆதலால், அதனை நீக்கி வில்லி புத்தூரர் பாடினபடியே ஆறுமுகநாவலர் அச்சிற் பதிப்பித்திருக்கும் புத்தகம் ஒன்று சம்பாதித்துப் பாரும் பாரும் உமது ஐயந் தீரும் தீரும். நாவலர் என்ற பட்டம் அவ ருக்குத் தகுமேயன்றி உமக்கெல்லாமா தகும். புலியை நோக்கிப் பூனை சூடிக்கொண்டாற் புழுத்துச் சாமேயன்றிப் புலியாமா! அதுபோலக் கல்விக் கடலாய ஆறுமுகநாவலரை நோக்கி நீரும் அப்பெயர் தரித்துக் கொண்டாற் பழியும், பாவமும் அடைவீரேயன்றிப் புகழ் அடைவீரா? அடையீர், அடையீர்."

—கூடலூர், ஸ்ரீமத். குமரகுரு சுவாமிகள்.

"ஏட்டுப்பிரதிகளில் திரிந்து, இதுதான் உண்மைப்பாடம் என விளங்கமுடியாது கிடந்த பாடங்களையெல்லாம் நன்கு நோக்கி உண்மைகண்டு திருத்தி அச்சிட்டு நூல்களை யுதவிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்..... முதலிய பெரியோருடைய அறிவின் வன் மையும் அருஞ்செயலும் எத்துணைப் பெரிதென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை."

வித்துவான், பிரம்மஸ்ரீ. சி. கணேசையர் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றமிழ்க் குரிசில்.

(திருவாவடுதுறையாதீன மகாவித்துவான், ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் அவர்கள்.)

ஆசிரியப்பா.

..... யாழ்ப்பாண
நகர்தனினல்லூர் நாமமார்புரத்திற்
பகர்தருசைவ பரம்பரைக்குலத்திற்
றோன்றியகந்தவே டொல்லையிற்செய்த
வேன்றநற்றவத்தா லெழில்பெறவுதித்தோ
னியற்றமிழ்ப்பகுதியி னியல்பெலாந்தெள்ளி
நயத்தகவுணர்ந்த நற்றமிழ்க்குரிசி
றிருக்குறளுரைமுதற் சிறந்தநூலுரையெலாஞ்
சுருக்கமின்றறிந்த துகளில்பேரறிவினோன்
கதிதருசைவா கமங்களிற்கழறும்
பதிமுதன்முப்பொருட் பகுதியினியல்பெலாஞ்
சங்கையொன்றின்றித் தவவிசேடத்தா
லங்கையினெல்லிபோ லளவிட்டறிந்தோ
னரனடியருச்சனை யன்றிமற்றொன்றுந்
திரமுறுபவநோய் தீர்த்திடாதெனவச்
சம்புவின்பூசனை தன்னைநாடோறு
நம்பிமெய்யன்பா னடாத்திடுநல்லோ
னயிட்டிகப்பிரம சாரிநன்னிலையிற்
றியக்கறநிற்குஞ் சீர்மைபெற்றுடையோன்
சங்கரனடியவர் தமைச்சரண்பணிந்தே
யிங்கியான்செய்பணி யென்னெனவியற்றுவோன்
சிவபிரான்மகிமையைச் சீவர்கடமக்குப்
பவமறப்போதனை பண்ணுபாக்கியத்தோன்
கிரியையான்ஞானங் கிடைக்குமதன்றி
யுரியமெய்ம்முத்திக் குபாயமன்றென்னுஞ்
சார்கேவலமுதற் சாற்றுமூவிடத்து
மாருயிர்சிவனுக் கடிமையேயென்றும்
புகல்சிவாகமவாக் கியப்பொருடன்னை
யிகலறத்தேர்வுற் றிதயத்திருத்தினோன்
கல்வியிற்காவல் கழித்தலீங்கிவன்கணென்
றல்விலகுளத்தவ ரறைதரவமைந்தே
யாறு முகனென வவனி
கூறுமியற்பெயர் கொண்டநாவலனே.

ஒழுக்க வரம்பைக் கடவாதவர்.

(திரு. சி. செல்லையாபிள்ளை அவர்கள்.)

தனிமொழியுந் தேன்மொழியுமாகிய தமிழ்ப்பாஷையும், தனக்கு ஒப்பும் உயர்வு மில்லாத சைவ சமயமும் நம் தேயம் வேற்றரசர் கைப்பட்டபின் அருகுதலைக்கண்டு, இருபதாம் வயதிலே தமக்கு வாய்த்த உத்தியோகத்தையும், உறவினர் தொடர்பையும் பரித்தியாகம் செய்து, முப்பத்திரண்டு வருடகாலம் தமது காலத்தையும், கருத்தையும் அவற்றின் விருத்திப்பொருட்டுச் செலவிட்டு ஒழுக்கமெனும் வரம்பைக் கனவினும் கடவாதுநின்று தமிழ் நாட்டிற் கீர்த்தி படைத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஒருவரேயாம்.

அவநெறியாயவை எவையோ அவையாவையும் முற்றக்களைந்து சிவநெறிவளர்த்த திப்பிய குணத்தர் நாவலர் அவர்களேயன்றி அவர்களின் முன்னுவது பின்னுவது வேறெ வருமிலர் என்பதை மறுப்பவர் யாவர்? இக்காரணம் ஒன்றைக் குறித்தே தமிழ் நாட்டிலே அவர்களுக்கு வேந்தனையொத்த செல்வாக்கும், கௌரவமும் யாவராலும் நன்கு மதிப்பு முண்டாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் வசன நடை.

"செய்யுணடை வாய்ந்த நக்கீரர் உரைநடையும், விளக்கங்குறைந்த இளம் பூரணமும், கட்டுரைச்சுவை செறிந்த சேனாவரையரது இலக்கணநடையும் பொருட்செறிவுடைய பேராசிரியர் உரைநடையும், தங்கோணிறுத்தும் நச்சினார்க்கினியர் சொன்னடையும், நாவலரவர்களின் வசனநடைகளிலேயே வந்து முடிவடைகின்றன."

—சபாபதி நாவலர்.

"ஐந்தாஞ் சமய குரவராகவும், அண்மைக்காலத்துரையாசிரியராகவும், தோன்றிய நாவலர்பெருமானின் வசனநடை நூல்களே சைவத்தமிழுலகை உய்வித்தவை."

—அம்பலவாண நாவலர்.

"வசன நடை கைவந்த வல்லாளர்."

—வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், B. A.,

"தூரமொழிகளில் சிறந்து கிடந்த குறியீட்டிலக்கணத்தையும், அதன் மாத்திரைக் கணக்கினையும் நிருமித்துதவிய நாவலரவர்கள் தமிழுரைநடைகளின் தாதையார்."

—மணி. திருநாவுக்கரசு முதலியார்.

நாவலரவர்கள் கையெழுத்து மாதிரி.



ஆறுமுகநாவல சற்குரு.

(மட்டுவில், திரு. ம. க. வேற்பிள்ளைப் புலவர் அவர்கள்.)

ஆறுமுக நாவல னெனுஞ்சபாப் பிரசங்க சிங்கமிங் கவதரித்த
தாருமறி வாரவன தறிவொழுக் கங்கல்வி யறிகிலார் யாதுமறியார்
தேறுமுக மொன்றிலேற் கறிவுசிறி தருள்செய்த தேசிகோத் தமனுமிவனே
செந்தமிழி னூலுரைக டந்ததிங் குரைசெயச் சேடனுன் முடிவதாமோ
நீறுமுக முறுவித் தருங்கண்டி கைக்கலனி னேயமிகு வித்தெங்கனு
நிகமாக மம்பூசை நிலைநிறீஇ விட்டதிவ னிமலப்ர சங்கநிதியே
சாறுதனு மாதத்தி னிற்பத்து வீறவருள் சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே சந்த்ரபுர தலவாசனே.

திருத்தொண்ட ரைச்சிவ மெனக்கொண் டவன்சைவ சித்தாந்த சிகைகண்டவன்
சிவகாம சுந்தரி சபாநடே சன்பாத சீர்த்திக ளெலாம்விண்டவன்
உருக்கொண்ட புண்ணியத் துயிரனுன் றன்பெய ருரூடியாக் கொண்டவழுவன்
உயர்தரத் தருமகல் லூரிபல் லூரினு மொழுங்குற நடாத்துத்தமன்
செருக்கொண்ட யேசுமத மேங்குபு திடுக்கிடத் திறல்கொண் டடர்த்ததீரன்
றிவ்யசிவ பூசா துரந்தரன் சமயகுரு சென்மசை வத்துறவிதீத்
தருக்குண்ட துர்ப்படா டோபநா வலரல்லர் சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே சந்த்ரபுர தலவாசனே.

—ஈழமண்டல சதகம்.

விருத்தம்.

திருவாளன் றிருவெழுத்தைந் திடையறு தொலிக்குமெழிற் றிருவாக் குஞ்சற்
குருபாதங் கருதுளமும் விபூதியொளி தயங்குதிரு மேனி யுஞ்சொற்
பொருளாளுந் திராவிடநின் மலமறைகொ டிருக்கரமும் பொலிந்த நல்லை
யருளாள னுறுமுக நாவலனெங் குருபரனுக் கடிமை செய்வாம்.

நாவலரைப்போல் ஒருவருமில்லை.

(சென்னை, ஹைக்கோட் நீதிபதி, மகா-ா-ா-ஸ்ரீ. தி. சதாசிவ ஐயர் அவர்கள்.)

நாவலரைப் போல முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்களில்லை. ஒருவேளை இருந்தாலும் அவரைப் போலத் தமிழ்ப் பாஷையையும் நல்லொழுக்கத்தையும் சைவ சமயத்தையும் வளர்த்து நல்ல தமிழ் வசனநடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப் படுத்தித் தமிழ் நாட்டாருக்கு உபகாரஞ் செய்தவர் வேறொருவருமில்லை. பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப்போல் ஒருவருமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிவிளக்கு.

(சுன்னாகம், ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள்.)

கலிவெண்பா.

பூமாது வாழ்வுசெய்யும் பொன்னகர மென்னுநல்லைச்
சீமான் சிவன்பாதஞ் சிந்தைசெய்யுங்—கோமான்
சகம்புகழுங் கந்தவே டன்னிடத்தில் முந்திச்
சுகம்பெறுமவ் வள்ளுவனார் சொன்ன—மகன்றந்தைக்
காற்று முதவி அருமைத் திருக்குறளுக்
கேற்ற விலக்கியமா விங்குதித்துச்—சாற்றரிய
திண்மைபெறுஞ் சைவ சித்தாந்த சாகரத்தின்
றண்மை நலம்பருகிச் சைவமெனும்—உண்மையுள
செஞ்சாலி யோங்கச் சிறந்தபிர சங்கமழை
அஞ்சாது பெய்யும் அருண்முகிலே—மஞ்சாருஞ்
சோலைப் பெருங்காழித் தோன்றறிரு நாவலர்கோன்
வேலையிடைக் கல்லின் மிதந்துவந்தோன்—சீலமிக்க
வாதவூர் வந்தவன்றே வாரதிரு வாசகங்கள்
ஓதிச் சிவபெருமா னெண்கழற்செம்—போதைநினைந்
துள்ளநெக்கு நெக்குருக வோட்டந் துடிதுடிப்பக்
கொள்ள வுடம்பு குறுவேர்வை—வெள்ளமெனக்
கண்ணீர் சொரியமயிர்க் கால்சிலிர்ப்ப மெய்ந்நடுங்க
எண்ணுத் தழுதழுப்ப இன்பவெள்ளத்—துண்ணுரும்
ஆனந்த முற்றே யயர்த்துப் பரவசமாய்
மோனச் சிவநூன் முறைப்படியே—ஞானமுறச்
செய்யும் சிவபூசைச் செல்வா சிறியேனுக்
குய்யு நெறிகாட்டு முத்தமனே—துய்யதமிழ்ப்
பாடை யிலக்கியமும் பன்னு மிலக்கணமும்
தோடமறக் கற்றுணர்ந்த தோன்றலே—பீடுபெறும்
பன்னூற் கடல்கடைந்து பாலர்பெற வின்னமுதச்
சொன்னுடி நல்வசன சூத்திரமாச்—சின்னாளில்
இத்தரையில் யாவர்செய்வா ரென்னப் பலப்பலவாம்
புத்தகங்கள் செய்தருளும் புண்ணியனே—பத்தியினர்
பாவந் தொலைத்தருளும் பஞ்சாக் கரவிசிட்டம்
ஆவலொடும் பேசு மாறுமுக—நாவலனே
ஆற்றகில்லே னாற்றகில்லே னந்தோ நினதுபிரி
வாற்றகில்லே னாற்றகில்லே னார்க்குரைப்பேன்—சீற்றமுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் புகழை நானே சொல்லவல்லேன்.

("சைவ உதயபானு"ப் பத்திராதிபர், திரு. க. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள்.)

ஆசிரிய விருத்தம்.

1. சிவம்பழுத்த செஞ்சுவையே தேனே பாகே தெவிட்டாத தெள்ளமிர்தத் திரளே மேலாந்
தவம்பழுத்த தனிவடிவே திருவெண் ணீறு தபங்குகிரு மேனியுடைக் குருவே மிக்க
வலம்பழுத்த புறச்சமய திமிர மோட்டி யத்துவித சுத்தசித்தாந் தத்தி னுண்மை
நவம்பழுத்த பொருள்காட்டிச் சைவ நாட்டு நாவலனே நினைக்காணு நாளெந் நாளே.

2. தேனூறும் வாசகமோ ராறு நூறுந் திருக்கோவை யென்னுமகப் பொருள்சேர் செய்யு
ளுனூறு முரைத்ததிரு வாத வூர னுவலர்கோன் காழியர்கோ னல்வா கீசன்
போனீறு மைந்தெழுத்துஞ் சைவ நூலும் புவியினிடை நனிவிளக்கும் புனிதா மேலை
வானேறும் பொழினல்லை சேரு நன்னு வலப்பெருமா னினைக்காணு நாளெந் நாளே.

கட்டளைக் கலித்துறை.

3. முன்னுளிற் கம்பன் கவிகாள மேக முதற்புலவர்
தந்நா வலிமையைக் காட்டின ரேயன்றிச் சைவநெறி
நந்நா வலப்பெரு மானுனைப் போனனி நாட்டினரோ
விந்நா ளினும்புல வோர்திரி வார்பல ரென்பயனே.

4. தேனே கனியோ வெனவே சுவைக்குஞ் செழுந்தமிழிற்
றூனே தனக்கிணை யாகி யுதித்துயர் சற்குருவாய்
வானோர் புகழ்நல்லை வந்தரு ளுவலன் வான்புகழை
நானே சொலவலன் சேடனுங் கூறிட நானுவனே.

வந்த விடப்பனவன் வார்த்தைக் கொடுஞ்சரத்தால்
நொந்தேற் கிரங்கியரு ணோக்கதனைத்—தந்தவனே
கூறும் பரசமய கோளரியே மெய்யுணர்ச்சி
தேறு நினதருமை சிந்திக்குந்—தோறுமெல்லாம்
என்னை யயர்த்தே னெம்பெருமா னின்பெருமை
தன்னைப் பெருஞ்சேடன் றானிருந்து—பன்னாளாப்
பேசுகினு முற்றுப் பெறுமோ பெருந்தகையே
ஈசன் பெருங்கருணை யிப்படியோ—பேசியென்ன
கண்ணே யெனதிரண்டு கண்மணியே நாவலனே
மண்ணதி யாமுடம்பு மாய்ந்தாலும்—எண்ணருன்
கீர்த்தி யுடம்பு கெடுமோ கிளக்குமுண்மை
வார்த்தை யரிச்சந்த்ர மன்னவனே—போர்த்தவிருள்
நீக்கும் கிரிவிளக்கே நின்னினைமக் கோர்குரவர்
வாய்க்குநா ளெந்நாளோ மற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M. R. Ry. Arumuga Navalar.

(Extract from the "Mofussil Guardian" of June 12, 1872.)

"In the vicinity of Jaffna is situated the village of Nallur, where there is a great number of people who talk pure Tamil and have sprung from the ancient inhabitants of the celebrated countries of Pandiya and Chola. Of this village is M. R. Ry. Arumuga Navalar—the subject of this article—a native. This person has a thorough knowledge of Sanscrit, Tamil and English, and is called Saivaprakasa Samayajiar,—an expression signifying, in English, the earnest promoter of the pure religion of Siva. He has written and published, among others, a series of Tamil books, known, respectively, as the First, Second and Third Books, which are intended to enlighten and correct those of the Hindus who, from sheer ignorance, are apt to prefer other religions to their own, as well as for the use of schools established by him for the promotion of the Siva faith in the places called Vannarponne, Chidamparam and Vetharaniyam. The First Book is intended for pupils of the first (lowest) class of these schools..... To advert, next, to the Second Book.....We come now to the Third Book.....So much for the works of the Navalar. We will now say a word or two regarding his character and life. He claims to have descended from a rich father who held a high office under Government. While young he received a good Education; and all those who were his fellow-students, are now, we are glad to say, respectable officers of the Government. But so far is he from having any attachment to any earthly object that he has forsaken all his patrimonial possessions as well as all his relatives, and has determined not to marry. It is a fact that the Navalar has spent lots of money in publishing theological works in Tamil We know that considerable property in the shape of donations was set apart by some ancient Hindu monarchs for the propagation of learning and religion. But how did most of the men on whose shoulders lay the burden of making just and equitable use of such property, fulfil their duty? Compare this sort of men with the generous person that is the subject of this article. The Shastras of the Hindus divide the people into four classes, viz, Bramachari, Grahastan, Vanapirastan and Sanniasi. The Navalar heads the list of the first class, and it is beyond doubt that he is true to his principles."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்து.

(கதிர்காமச்வாமி சந்நிதானத்தில், நாவலர் அவர்கள் இயற்றியருளிய கீர்த்தனங்களை அரங்கேற்றிய நல்லூர், ஸ்ரீ. விநாயகமூர்த்திச் செட்டியார் அவர்கள் சொல்லியது.)

"விழித்தேன் அனந்தல் விட்டேன் – காலை — வீதிசென்றேன் தீர்த்த மாடிக் கொண்டேன்
களித்தேன்பின்கோயில்வந்தேன் – நல்ல — கார்த்திகைப்பாலுண்டவனைக்கண்டுதொழுதேன்
மண்டபந் தனிற் சென்றேன் – அங்கு — மருவும் புலவர் செறிதலைக் கண்டேன் [றேன்
தொண்டுசெய்யுமடியவன்யான் – புலவீர் — சொல்லுமொழிகேட்டருள்வீர்மெல்லவேயென்
என்னவென் றவர் வினவ – அப்போ — தெந்தை பிரானடியைச் சிந்தனை செய்தே
சொன்னேன் வர லாற்றை – அவர்க்குச்—சொன்னவிதந் தனையிங்குச் சொல்லுவன் கேளும்
நல்லை நகரில் வாழும் – எங்கள் — நம்ப னடியிணையை வெம்பிறவி நோய்
செல்ல வணங்கி நிற்போன் – கீர்த்தி — சிறக்குங் கவிஞன்கந்தன் செய்ய புதல்வன்
எல்லவர்க ளுந் துதிக்கும் – புலவன் — எறிக்குங் கீர்த்திநில வெங்கும் விரிந்தோன்
வல்லவன் மங்கள பாலன் – ஐந்தாய் — வருக்கு மிலக்கணங்கள் வகையுடன் கற்றோன்
கல்லாலின் கீழிருக்கும் – நல்ல — கண்ணுதற் பரமனரு ளெண்ணரிய தோர்
சைவ சமய மென்னும் – நல்ல — தாமரை யலர்த்தப்புவி வந்த தபனன்
வெண்டா மரை மலராள் – அத்தை — வெறுத்துங்குடி கொண்டருள் விளங்கு நாவான்
சண்ட மாருதம் போலப் – பர — சமயந் தனைக் கடியுந் தனிவீரன்
காலனைச் செயித்த மேலோன் – நல்ல — கஞ்சமலர்க் கர்ச்சனை செய்திடுஞ் சீலன்
தாலம் பரவுந் தீரன் – புலவர் — தம்மைக் கடிந் தோட்டுந் தனிவீரன்
சிவசிவ வென்னு மொழியே – அவனுடை — செய்யநா வெப்போதுந் தரு மொழியே
அவமது நீங்கி நின்றோன் – அந்த — ஆறுமுக நாவலன்சொல் வரும் பதங்கள்
அரங்கேற்றவேண்டுமென்றேன் – புலவர்கள்— அதற்கிசைந்தார்பதஞ்சொலற்கிசைந்தேன்
இரங்குற்று மலை மரங்கள் – உருக — எடுத்துப் பதங்களை நான்படித் தேனே."

—"கதிரை யாத்திரை விளக்கம்".

ஆறுமுக நாவலர்.

(திரு. பிரான்சிஸ் கிங்ஸ்பரி அவர்கள் B. A.,)

நாவலர் பிரமாதிஷ்ரு அடைந்தகாலத்தில் அவரை நன்கு அறிந்தவர் பலர் அவர் குணத்தையும் அவர் சைவசமயத்துக்கும் தமிழ்மொழிக்குஞ் செய்த தொண்டையும் பல செய்யுளில் எடுத்துக்காட்டினர். அச்செய்யுளுட் பல இப்பொழுது காணற்கரியனவாயின. அவற்றைத் தேடித்திரட்டி அச்சிடுவது நாவலரை அறியாதார் அறியும்படி செய்வதாகும்.

ஆறுமுகநாவலர் பிறந்து வளர்ந்து தொண்டு செய்த காலம் யாழ்ப்பாணத்திற்கு நல்லகாலம். நாவலர் பிறத்திலரேல் இன்று யாழ்ப்பாணத்திலே சைவசமயம் இருக்குமோ? யாழ்ப்பாணத்துத் தமிழ் எப்படிப்பட்ட தமிழாய் இருக்கும்?

நாவலர் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் உபகாரஞ் செய்தவரல்லர். 'அளப்பருஞ் சலதி' எனக் கம்பர் புகழ்ந்த தமிழ் பெரும்பாலும் பத்தியரூபத்தமிழ், தமிழில் வசனநூல் சிலவே. நாவலர் காலத்துக்குமுன் வசனநடையும் தமிழிற் குறைவுள்ளதே. தமிழ் மொழியில் ஒருவகை வசன நடைக்கு ஆறுமுகநாவலரே தந்தைஎனின் அது மிகையாகாது. நாவலர் எழுதிய பெரியபுராண வசனம் இன்னும் ஐஞ்ஞூறு வருஷத்துக்குப் பின்னும் நிலவுமெனச் சொல்லலாம். நாவலர் சித்தாந்த சைவசமய அறிவுவளர உழைத்தார். இன்று யாழ்ப்பாணத்தாருட் சித்தாந்த சைவசமய நூல்களை ஆசையோடும் கற்பார் பலரோ? சிலரோ? சிலராயினும் உளரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரிடத்து விளங்கிய குணங்கள்.

(ஸ்ரீமத். அம்பலவாண நாவலர் சுவாமிகள் அவர்கள்.)

நமது நாவலர் சுவாமிகளிடத்தில் நாமறிய உலகறிய விளங்கிய விசிட்ட குணங்களாவன :

1. ஈசுரபத்தி.
2. பாச வைராக்கியம்.
3. ஜீவகாருண்ணியம்.
4. பிர்மஜ்ஞானம்.
5. கொடை. (ஔதார்யம்)
6. அடைந்தவர்களைக் காத்தல். (ஆசிருதசம்ரட்சணம்)
7. எளியராதல். (சௌலப்பியம்)
8. கண்ணோட்டம் (தாட்சண்யம்)
9. இன்சொல்லுடைமை. (மதுரபாஷணப்)
10. இதத்தைச் செய்தல். (ஹிதகாரித்வம்)
11. நியமத்துகடத்தல். (நியாமகத்வம்)
12. லோகோபவாதபயம்.
13. நல்லாரிணக்கம். (சஜ்ஜனசங்கம்)
14. பரகுணப்பிரீதி.
15. சிஷ்டஜனபராதினத்வம்.
16. பாரம்பரிய பரிஜ்ஞானம்.
17. நல்லமணமுடைமை. (சௌஹார்த்தம்)
18. சாதுசன வாற்சல்யம்.
19. நிர்ப்பயத்வம்.
20. யானென்பதில்லாமை. (நிரகங்காரத்வம்)
21. எனதென்பதில்லாமை. (நிர்மமத்வம்)
22. சத்திய விரதம்.
23. சத்திய சங்கல்பம்.
24. பிரபுத்வம்.
25. நியாயத்தின்பின் தொடர்தல். (நியாயாநுவர்த்தித்வம்)
26. உண்மை பேசுதல். (தத்வகதனம்)
27. ஜிதேந்திரியத்வம்.
28. ஆசையின்மை (நிஸ்பிருஹத்வம்)
29. பிரபஞ்சத்தைத் திருணமாக நினைத்தல் (பிரபஞ்ச திருணீகாரம்)
30. கௌரவம்.
31. தள்ளப்பட்ட குணங்களை விடுதல். (ஹேய குணவர்ஜனம்)
32. குருலிங்கசங்கம வழிபாடு. (குருலிங்கசங்கம நம்ரதை)
33. கொள்ளப்பட்ட குணங்களைத் தனதாகக் கொளல். (உபாதேய குணவ்வீகரன்)
34. உயர்வுடைமை. (ஔந்நத்தியம்)
35. சமதிருஷ்டி.
36. சரசோல்லாசம்.
37. பிரசந்நதை.
38. குழைவுடைமை. (ஸிநிகதத்வம்)
39. பிறர்க்கு எவ்விதத்தும் பயத்தைச் செய்யாமை (அகுதோ பயங்கரத்வம்)
40. நேர்மை. (ஆர்ஜவம்)
41. துன்புறுத்தாமை. (அஹிம்சிரத்வம்)
42. அசையாமை. (அசலத்வம்)
43. செய்வதாக மேற்கொண்டதைச் செய்தே முடித்தல். (பிரதிஜ்ஞாதசமாபநம்)
44. உபகாரத்வம்.
45. தைரிய சத்தி. (ஆன்மசத்தி)
46. பாரமார்த்திகதிருஷ்டி.
47. அயாசகத்வம்.
48. பரமோத்தேசியகத்வம்.
49. தைன்னியத்தினது மணமுந் தெரியாமை. (அநாக்கிராததைந்யகந்தத்வம்)
50. அக்ரகண்யத்வம்.
51. பாரமயம்
52. பாவநத்வம்.
53. ஆசாரசீலத்வம்.
54. வாச்மித்வம்.
55. தந்வயத்தனுதல். (ஸ்வ·தந்திரியம்)
56. ஸௌஜந்யம்.
57. இஷ்டஜனபரிபாலனம்.
58. சித்தாந்தத்திற் புகலுடைமை. (சித்தாந்தாபிநிவேசம்)
59. விவேகம்.
60. அநாயாசத்வம்.
61. கோப்யமானத்வம்.
62. காம்பீர்யம்.
63. பிரௌடிமை.

இவை முதலாக நூலும் மகத்மாக்களும் கொண்டாடிய குணங்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்
பரிசோதித்தும், புதிதாய் இயற்றியும் புத்துரை எழுதியும் வெளியிட்ட நூல்கள்.

1. சூடாமணி நிகண்டுரை.
2. சௌந்தரியலகரியுரை.
3. முதற்பாலபாடம்.
4. இரண்டாம் பாலபாடம்.
5. நான்காம் பாலபாடம்.
6. பெரிய புராண வசனம்.
7. நன்னூல் விருத்தியுரை.
8. திருமுருகாற்றுப்படை.
9. திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதியுரை
10. சிவாலய தரிசனவிதி.
11. சைவ தூஷண பரிகாரம்; சுப்பிரபோதம்.
12. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.
13. கந்தரலங்காரம்.
14. கந்தரனுபூதி.
15. ஏரெழுபது.
16. திருக்கைவழக்கம்.
17. புட்பவிதி.
18. மறைசை யந்தாதி.
19. கோயிற்புராணமூலம்.
20. திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி.
21. சிதம்பர மும்மணிக்கோவை.
22. உபநிடதவுரை.
23. பட்டணத்துப் பிள்ளையார் பாடல்.
24. அருணகிரிநாதர் வகுப்பு.
25. சைவவினாவிடை, முதற்புத்தகம்.
26. மருதூரந்தாதியுரை.
27. திருச்செந்தூ ரகவல்.
28. விநாயக கவசம்.
29. சிவ கவசம்.
30. சத்தி கவசம்.
31. திருவள்ளுவர் பரிமேலழகர் உரை.
32. திருச்சிற்றம்பலக் கோவை யுரை.
33. சேதுபுராணம்.
34. பிரயோக விவேக உரை.
35. தருக்க சங்கிரகம்.
36. உபமான சங்கிரகம்.
37. இரத்தினச் சுருக்கம்.
38. இலக்கணக் கொத்து.
39. தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.
40. இலக்கண விளக்கச் சூறாவளி.
41. கந்தபுராணம்.
42. பதினொராந்திருமுறை.
43. நால்வர் நான்மணிமாலை.
44. கோயிற் புராணவுரை.
45. சைவசமய நெறியுரை.
46. தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையருரை.
47. இலக்கணச் சுருக்கம்.
48. சைவவினாவிடை, இரண்டாம்புத்தகம்.
49. சிதம்பர மான்மியம.
50. கந்தபுராணவசனம். (அசுரகாண்டம் வரையில்
51. அநுட்டானவிதி, முதற்புத்தகம்.
52. ஷை இரண்டாம் புத்தகம், குருவாக்கியம்.
53. சிவஞான போதச் சிற்றுரை.
54. யாழ்ப்பாணச் சமயநிலை.
55. இலக்கண வினாவிடை, இரண்டாம் புத்தகம்.
56. இலங்கைப் பூமிசாஸ்திரம்.
57. நன்னூற் காண்டிகையுரை.
58. பெரிய புராண சூசனம்.
59. திருவிளையாடற் புராண வசனம்.

அச்சிற் பதிப்பிக்கும்பொருட்டு எழுதி முடித்தவைகள்.

சிவராத்திரி புராணம்.
அநுட்டானவிதி மூன்றும் புத்தகம்.
சிவபூசாவிதி.
சிராத்தவிதி.
போசனவிதி.
நன்னூல் விருத்தியுரை, இரண்டாம்பாகம்.
நைடதவுரை.
குருசிஷ்யக் கிரமம்.
பூசைக்கிடம்பண்ணும் விதி.
தருப்பணவிதி.

எழுதத் தொடங்கியவைகள்.

தேவாரம்.
அகராதி (தமிழ்.)
அகராதி (இங்கிலீஷ் - தமிழ்.)
அகராதி (சமஸ்கிருதம் - தமிழ்.)
தருக்க பரிபாஷை.
இரகுவம்சம்.
உபதேச காண்டம்.
இலக்கண வினாவிடை முதற்புத்தகம்.
சமஸ்கிருத வியாகரணசாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்வ சூடாமணி.

("தத்துவ விசாரணி"ப் பத்திராதிபர்.)

நாம் ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களைச் சுட்டி சென்னை முதல் ஈழமீறுகவுள்ள தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர் என்று உரைத்ததை மனம் பொறுத நீவிர், ஈழம் தமிழ் நாட்டெல்லையாகுமோவென்று வேடதாரிபோல ஆசிரியஞ் செய்கின்றீர். ஸ்ரீ நாவலரவர்கள் ஜீவவந்தராயிருந்த காலத்திலே யிருந்த தமிழ் நாட்டுப் பிரபுக்களுள்ளே தமிழ்ப் புலமையும் தமிழ்ப்புலவர்களுக்கு உபகரிப்பும், ஔதாரியமும் ஒருங்குடையவர் ம-ா-ா-ஸ்ரீ. இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவரன்றோ! இவர் தமிழிலக்கயங்களிலே மிகச் சிறந்தனவாகிய திருக்கோவையார், திருவள்ளுவர், முதலிய நால்களை அவற்றின் உரைகளோடு பிழையறப் பரிசோதித்து அச்சிட யாரைத் தேடினர்? தற்காலம் தமிழ் வளர்கைக்கு மாதுருஸ்தானராகிய திருவாவடுதுறை யாதீனம் ஸ்ரீ சற்குருநாத தேசிக சுவாமிகள் தமது ஆதீனத்திற் றோன்றிய மகா கடின கிரந்தங்களாகிய "இலக்கணக் கொத்துரை", "தொல்காப்பிய சூத்திரவிருத்தி", "இலக்கண விளக்கச் சூறாவளி" என்னும் மூன்றனையும் பரிசோதித்து அச்சிடத்தக்க வித்துவான் ஸ்ரீ நாவலர் அவர்களே யென்றன்றோ அவரைத் தேடி அங்ஙனஞ் செய்வித்தார். இவர்கள் ஏன் தாங்களே அந்நூற்களைத் திருத்தி வெளியிடப்படாது, இந்த இந்து தேசத்துத் தமிழ் வித்துவான்களாலும் உமது இராமலிங்கபிள்ளையாலும் புகழ்ந்து பேசப்பட்ட வித்துவத் திறத்தினையுடைய திருவாவடுதுறை, திருவண்ணாமலை, மதுரை ஆதீனப் பண்டார சந்நிதிகள் தங்கள் தங்கள் மடாலயங்களிலும் மதுரைச் சிவாலயத்திலும் நாவலரவர்களைக் கொண்டு வெகு சன சமூகத்திலே பிரசங்கஞ் செய்வித்து அவர்களை உபசரித் தருளிய வரிசைகளெல்லாம் நுஞ் செவியின் முழக்கினுர் ஒருவரும் இல்லைப்போலும். இத்தகைய வரிசைகளையும், சின்னங்களையும், கீர்த்தியையும் இத்தமிழ்நாட்டு வித்துவான்களாலேயே கொடுக்கப்பெற்ற உயர் ஒப்பில்லாத அதுல்ய வித்வ சூடாமணியைப் புறங்கூறல் அழகன்று, அழகன்று.

"…. யாழ்ப்பாணத்தில் அவதரித்துத் தமிழ்நாடெங்கும் - சைவசமயமுள்ளளவும் - தமது பெயர் நிலைபெறும்படி சாதனையாலும் போதனையாலும் உதாரணமாக வாழ்ந்து, பூதவுடம்பழிந்தும் புகழுடம்பழியாப் பெரும் பேறுபெற்ற நாவலர் …." — "ஈழகேசரி"

"…. நமது நாட்டுக்கும் சைவத்திருநெறிக்குந் தமிழ் வளர்ச்சிக்குந் தமது வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்து, பிரமச்சரிய விரதம் பூண்டு எதிரேவந்த பனிப்படலங்களையெல்லாம் அஞ்சாது தகர்த்து, ஞான சூரியன்போல் ஒளி தந்துநின்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் …."

— "ஈழகேசரி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ. நாவலரவர்கள் சம்பந்தமான சில வரலாறுகள்.

(இவை, பழைய சாதனங்களில் ஆராய்ந்தெடுத்து
வெள்ளவத்தை, திரு. மு. இராமலிங்கம் அவர்களால் உதவப்பட்டவை.)

"1863-ம் ஆண்டு பிப்ரவரி மீ 8-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலஸ்ரீ. நாவலரவர்கள், திருவிளையாடற் புராணத்திலுள்ள ஒரு திருவிளையாடலைப் பீடிகையாகக் கொண்டு நல்லூர்க் கைலாசபிள்ளையார்கோவில் மண்டபத்திற் பல சன சமூகத்தில் ஒரு சிறந்த பிரசங்கஞ் செய்தார்கள். அச்சமயத்தில் குறித்த கைலாசநாதர்கோவில், நல்லூரை இராசதானியாகக் கொண்டு அரசாண்ட தமிழ் வேந்தரால் கட்டுவித்து நடத்தப்பெற்ற தென்றும், பின் பறங்கியரால் இடிக்கப் பட்டதென்றும் இப்பொழுதுள்ள கைலாசபிள்ளையார் கோவில் தமது தமையனாராகிய ஆராய்ச்சி தம்பு என்பவராற் புதிதாய்க் கட்டுவிக்கப் பட்டதென்றும் தக்க ஆதாரத்தோடு எடுத்துக் காட்டினார்.....

விசேஷமான காலங்களில் ஆறுமுக நாவலரவர்கள் பொன்னினாற் செய்யப்பட்ட பூணூலொன்றைத் தம் மார்பிலே தரித்துக் கொள்ளுகிறார். இப்பூணூல் இப்பெரியாருடைய கல்வியறிவு வாக்கு வன்மைச் சிவதொண்டு என்னுமிவைகட்கு அறிகுறியாக இந்தியாவிலுள்ள மடாதிபதிகளாற் சம்மானிக்கப்பட்டது."....

நாவலரவர்கள் சைவதூஷண பரிகாரம் என்னும் பெயருடைய கண்டன நூலொன்றைஎழுதிவெளியிட்டுள்ளார். இந்த நூலைப் படிப்போர்க்கு இப்பெரியாரிடத்துள்ள சுயமத உணர்ச்சி, சமயாபிமானம், பரசமயங்களைக் கண்டித்துச் சுயமதத்தை நாட்டும் ஆற்றல் எல்லாம் இனிது புலனாகும்

—யாழ்ப்பாணம் "விறிமன்" பத்திரிகை
10-2-1863.

[இவ்வரலாறுகள் காணப்படும் "விறிமன்", "யாழ்ப்பாண நியூஸ்" என்னும் பத்திரிகைகள் அக்காலத்திற் பேர்பெற்ற நியாயதுரந்தராராய் விளங்கிய அட்வக்கேற் கூல்ட் என்பவரால் நடத்தப் பெற்றன.]

II. ஆறுமுகநாவலர்.

"யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த இவர் இப்போது வடதேசவாசம் பண்ணுகிறாரென்பது அநேகரறியாக் காரியமல்ல. இவர் சிதம்பரத்தில் உள்ள தீட்சதர்களைச் சற்றே கண்டிப்பாய்ப் பேசினதையிட்டு அவர்களிற் சிலர் இவர்க்கு விரோதமாய்க் கூட்டங்கூடித் துராலோசனை பண்ணியதாலும், கடலூர் இராமலிங்கபிள்ளையென்றொருவர் அவரது நாமத்திற்குப் பழுதான அர்த்தம் பண்ணி நிந்தாட்சணை பண்ணியதாலும், இவர் அவர்களுக்கு விரோதமாய்ச் சங்கை நஷ்ட வழக்குத் தொடர்ந்தார். இருபகுதியிலும் நியாயதுரந்தரர்மார் நின்று வழக்கை நடாத்தினர். இவருக்காய் திரு. சவுந்தரநாயகம் பிள்ளை ஏற்பட்டார். கடலூரிலே சிலநாட்களாய் விளக்கம் நடந்தது. தீட்சதருள் தலைவராகிய சபாநடேச தீட்சதருக்கு நீதிபதி 50 ரூபா அபராதம் விதித்தாரென "விறிமன்" பத்திரிகையில் வாசித்தோம்."

—"உதயதாரகை" மாசி 3, 1870.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1836-ம் ஆண்டு மார்ச்சு மீ 6-ந் திகதி வெள்ளிக்கிழமை வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாசவித்தியாசாலைமண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள், பலர் சமூகத்தில் ஒரு சிறந்த பிரசங்கஞ் செய்தார்கள் அந்தச் சமயத்தில் அவர்களுடனிருந்த, ஸ்ரீமத் சங்கர நமச்சிவாயப் புலவர் சம்ஸ்கிருதத்திலுள்ள சில பிரமாணங்களை எடுத்துப் படித்துக் காட்டினார். நாவலரவர்கள் பேசும்படி எடுத்துக்கொண்ட விஷயம் வைதிகப் பிராமணர்களோ தேசிகரெனப்படுஞ் சைவக் குருமாரோசிறந்தவர்கள் என்பது. அச்சபையிற் சமூகமாயிருந்தோர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி சைவக்குருமாரே சிறந்தவர்கள் என்று நாவலரவர்கள் பல நியாயங்களைக் காட்டிச் சாதித்துள்ளார்கள்.

—யாழ்ப்பாணம், 'விறிமன்'' 10-3-1863.

[நீர்வேலி ஸ்ரீமத் சங்கர பண்டிதரவர்கள் அக்காலத்தில் சங்கர நமச்சிவாயப் புலவர் என்றும் அழைக்கப்பட்டனரென்ப. இ. சா. பத்திராசிரியர்.]

சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலை 1864-ம் ஆண்டு நவம்பர்மாதம் 11-ந் தேதி ஆரம்பமானதாகும். நாவலரவர்கள் 1870-ம் ஆண்டு பிப்ரவரிமாதம் 24-ந் திகதி இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மீண்டார்கள். இங்கு அவர்கள் வந்து சேர்ந்தமாத்திரத்தே இங்குள்ளாரெல்லாரும் அவர்களைத் தக்கவாறு உபசரித்து நன்கு அலங்காரஞ் செய்யப்பட்ட ஒரு தண்டிகையின்மீது ஏற்றி வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு அழைத்துச் சென்றார்கள். அவ்வித்தியாசாலை மண்டபத்தில் நாவலரவர்கள் ஒரு சுருக்கமான பிரசங்கஞ் செய்தார்கள். மாணிக்கவாசக முதலியார் நாவலரவர்கட்கு ஒரு வாழ்த்துப்பாவைப் படித்தனர். வேறும் ஒருவரால் வாழ்த்துப்பா படிக்கப்பட்டது.

"கீர்த்திவாய்ந்த சமயாபிமானியும் தமிழறிஞருமாகிய இப்பெரியார் இப்பொழுதும் யாழ்ப்பாணத்திற்றானேயிருந்து, வண்ணார்பண்ணையில் தாம் தாபித்த சைவப்பிரகாசவித்தியாசாலையை நன்னிலையில் வைப்பதற்கான முயற்சிகளைச் செய்துவருகின்றார். இந்நாட்டிலே நாவலரவர்களைப்போல திறமை வாய்ந்தவர்களும் அபிமானமுடையவர்களும் சிலரினுஞ் சிலரேயெனலாம். தமிழ்மொழிமீது இம்மகான் கொண்டுள்ள அபிமானமும் அம்மொழியை விருத்தி பண்ணுவதற்கு இவர் செய்யும் விடாமுயற்சியும் பெரிதும் பாராட்டத்தக்கன. முந்தி இவ்வடமாகாணத் தலைவராகக் கடமை பார்த்து இப்பொழுது மத்தியமாகாணத் தலைவராகவிருக்கும் மிஸ்ரர். H. S. O. றசல் அவர்கள், குறித்த வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாசவித்தியாசாலையைப் பற்றி யெழுதிய அபிப்பிராய பத்திரத்தை இப்பத்திரிகையின் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்து அநுவதித்து வெளியிட்டுள்ளோம்."

மிஸ்ரர், றசல் அவர்களின் அபிப்பிராயப் பத்திரம் வருமாறு:— "ஆறுமுக நாவலர், தமது வித்தியாசாலையைப் பற்றிய ஒரு அபிப்பிராய பத்திரம் எழுதி அனுப்புதல் வேண்டுமென்று, யாழ்ப்பாணம் "விஸ்கால்" உத்யோக நிலையத்தில் மொழிபெயர்ப்பு உத்தியோகத்தராகவிருக்கும் மிஸ்ரர், W. இராமலிங்கமென்பவர் மூலமாக எம்மைக் கேட்டிருந்தார். அவருடைய பள்ளிக்கூடத்தை ஒரு முறை நேரிற்போய்ப் பார்த்துள்ள எனக்கு அப்படியான அபிப்பிராய பத்திரம் எழுதுதல் பெருஞ் சந்தோஷமாகும். நான் அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சென்ற சமயத்தில் வித்தியாதிகாரியும் வித்தியாதரிசியும் என்னுடன் கூடிக்கொண்டு வந்தார்கள். குறித்த வித்தியாசாலை சைவசமய சம்பந்தமான நூல்களையும் கொள்கைகளையும் ஊட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் நோக்கத்துடன் பிரதானமாக ஆரம்பிக்கப்பட்டதெனினும்; ஏனைய சமயாதிகட்கு இடையூறு செய்யாத முறையில், பெருந்தன்மையான கொள்கையுடன் நடத்தப்படுகின்றது. இங்கிலீசிலே உள்ள புதிய விவிலியநூல் அவ்வித்தியாசாலையிலுள்ள ஒரு வகுப்பிற்குப் பாடமாக உபயோகிக்கப்படக் கண்டேன்.

அங்கே கல்வி பயிலும் மாணாக்கர்களை நான் பரீட்சித்துப் பார்த்தபோது அவர்கள் துணிவில்லாதவர்களாயினும், நுண்ணிய விவேகிகளாகக் காணப்பட்டனர். அவ்வித்தியாசாலையிலே அவர்கள் பெறுங் கல்வி தமிழகத்தாருள் பிற்காலத்தில் அவர்களைப் பெரிதும் பயனுடையவர்களாக்கும் இயல்புடையது. ரசாயன சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களைப் புகட்டும் நோக்கமான கல்வி அங்கே ஊட்டப்படுவதில்லை. சமயக்கொள்கை ஒழுக்கம் என்னு மிவைகளைக் காலகதியில் அப்பிள்ளைகள் கைக்கொண்டொழுகுவதற்கு அக்கல்வி பெருந்துணை ஆகும்.

தமது வித்தியாசாலையின் சென்ற 20 வருட விருத்தியைப்பற்றி நாவலரவர்கள் ஒரு அறிக்கைப் புத்தகம் வரைந்து வெளியிட்டுள்ளார். அதில் மிகவும் ஆர்வத்துடன் படிக்கக்கூடிய பல அரிய விஷயங்கள் உண்டு. அதுமாத்திரமல்லாமல் நாவலரிடத்துள்ள அபிமானம், விடாமுயற்சி என்னுமிவைகளும் அவ்வறிக்கைப் புத்தகத்தைப் படிப்பார்க்கு நன்கு புலப்படும்."

கனம் P. பர்ஸிவல் பாதிரியாரின் அபிப்பிராயம்:— (16-7-1870) "ஆறுமுக நாவலரவர்களை நான் 30 வருட காலமாக அறிவேன்; அக்காலம் தொடக்கம் இற்றை வரையில் அவருடைய போக்கையும் முயற்சிகளையும் அவதானித்து வருகிறேன். அவருடைய கல்வித் திறமையைப்பற்றியும், பழைய தமிழ் நூல்களைத் திருத்தி அச்சிடும் விஷயத்தில் அவர் கைக்கொண்டுள்ள நுண்மை நேர்மை யென்னுமிவைகளைப் பற்றியும் பாராட்டிச் சொல்வதில் எனக்கும் பெரும் மகிழ்ச்சி உண்டு. இவை காரணமாக அவருக்குள்ள மதிப்பு அதிகமாகும்."

சிதம்பரம், P. M. B. வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராகிய ஸ்ரீ வேங்கட சுப்பையா அவர்கள், (17 ஆக்கஸ்ற் 1870) வெளியிட்ட அபிப்பிராயம்:—

"சிதம்பரத்திலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலை மிகவும் உன்னதமான நிலையில் இருக்கின்றதென்பதை நான் மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றேன்; தமிழ் உயர்தரக்கல்வி இவ்வித்தியாசாலையில் அதிக திறமையுடன் பயிற்றப்படுகின்றது. இக்கலாசாலை மாணவர்களுடைய ஒழுக்கமும் சந்மார்க்கமும் மிகவும் விசேஷமானவை. இங்குள்ள மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் கிரமமாகச் செய்துவரும் மனனப் பிரசங்கங்கள் ஏனைய வித்தியாசாலைகளிற் பயிற்றும் உபாத்தியாயர்கள் தாமும் பின்பற்றிச் செய்யத்தக்கன; சம்ஸ்கிருதக் கல்வி, தொடங்கிச் சிலகாலமாயினும், அதிக விருத்தி அடைந்து வருகின்றது. இந்த மேலான முறையில் நடத்தும் வித்தியாசாலையினால் எங்கள் நாட்டினர்க்குக் கல்வித் தேர்ச்சியும் புத்தி நுண்மையும் ஒழுக்க சீவியமும் அதிகப்படுமென்பது எனது மனப்பூர்வமான எண்ணம்."

—"இலங்காபிமானி" 13-10-1870

"கீர்த்திபெற்ற இப்பண்டிதர் உண்மையான பெரியார். ஆறுவருடகாலமாக இந்தியாவிலே தங்கியிருந்து இன்று பின்னேரம் யாழ்ப்பாணம் வந்து சேர்வாராயினர்; சென்ற ஞாயிற்றுக்கிழமை இப்பெரியார் இங்கு வந்து சேர்வரென இங்குள்ளார் காத்திருந்தனர்; ஆனால், தவிர்த்துக்கொள்ளமுடியாத சில அசந்தர்ப்பங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக ஊர்காவற்றுறைக்கு அவர் போன புதன்கிழமைக்கு முன் வருதல் முடியாதாயிற்று; இத்தமிழறிஞரை வரவேற்பதற்காக யாழ்ப்பாணத்துள்ள பெருமக்கள் பல ஆயத்தங்கள் செய்தனர்; துறைமுகத்தில் ஒரு அலங்காரமான பந்தர் இதற்கென்றே இடப்பட்டது இது மாத்திரமல்லாமல் துறைமுகத்திலிருந்து வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக் கணித்தாகவுள்ள அவருடைய வாசஸ்தானம் வரையிலுள்ள தெருவில் இடையிடையே நடைப்பந்தல்கள் பல இடப்பட்டன.

இங்குள்ள பிரபல வர்த்தகராகிய ஸ்ரீ முத்துக்குமாரச் செட்டியார், துறைமுக உத்தியோகத்தராகிய ஸ்ரீ சுப்பிரமணியர், நாவலரவர்களுடைய மாணுக்கர்களுட் பலர், ஏனைய பல அபிமானிகள் எல்லாரும் ஒருங்கு கூடி நேற்றுப் பின்னேரம் ஊர்காவற்றுறைக்குப் போய்க் கப்பலில் அவரை எதிர்கொண்டு அழைத்து அவருடன் இன்று பின்னேரம் இங்கு வந்தனர். "உவில்லியம்" என்னும் பிரசித்திபெற்ற வள்ளமே அப்பெரியாரையும் அவருடன் வந்தவர்களையும் இத் துறைமுகத்திற் கொண்டுவந்து சேர்த்தது; இக்கரையில் நின்று பார்த்தவர்களுக்கு, கடலில் அவ் வள்ளம் வரும்போது அழகாகத் தோன்றியது எவர்க்கும் மகிழ்ச்சியைத் தந்தது.

மலை 5½ மணிவரையிலாதலும் அங்கு குழுமி நின்றோர் ஆநந்த மேலீட்டினால் ஆரவாரஞ் செய்ய நாவலரவர்கள் இறங்கி, யாழ்ப்பாணத்துள்ள பெருமக்கள் சூழ்தரப் பந்தருள் கீழ்வந்து, விசேஷமாக அலங்காரஞ் செய்யப்பட்ட பல்லக்கில் ஏறி வாத்திய கோஷத்துடன், தம்மை எதிர்கொள்ளும்படி வந்தோரெல்லாம் இருமருங்கும் மெல்ல நடந்துவர அப்பல்லக்கின்மீது வருவாராயினர். கடற்கரைத் தெருவீதி வழியே வந்து நீதிஸ்தலத்தின் பக்கத்திலுள்ள தெருவழியே வடக்கு நோக்கிச் சென்று பெருந்தெருவால் வந்து அக்கூட்டத்தினர் பெரியகடைத்தெருவிற்கு வந்தனர். நாவலரவர்களுடைய மாணுக்கர்களும் அபிமானிகளும் தெருவீதியில் இடங்கள் தோறுங் கண்டு கண்டு அவருக்கு மரியாதை செய்தனர். செட்டிகடைகளுள்ள வீதியினால் வரும்போது இருமருங்குமுள்ள செட்டிப்பிள்ளைகளும் வியாபாரிமாரும் சிவிகை தாங்கிவந்தவர்களுக்கு கோடிவஸ்திரங்களை வழங்கி நாவலரவர்களைச் சிறப்புச் செய்தனர். அதன் பின், அப்பெரியாரால் ஸ்தாபிக்கப்பெற்ற வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு வருதலும் நாவலரவர்களைச் சிவிகையிலிருந்து இறங்கச் செய்து அவர் வரவை உத்தேசித்து முந்தியே அலங்காரமும் ஆயத்தங்களுஞ் செய்யப்பெற்றுள்ள மண்டபத்தில் அழைத்துச் சென்று ஒரு உந்நதமான ஆசனத்தில் அமரச் செய்தார்கள். சந்தனம் தாம்பூலம் முதலியன அந்தச் சமையத்தில் வழங்கப்பட்டன. அங்ஙனமாக, நாவலரவர்கள் தமக்குச் செய்த உபசரணையின் பொருட்டு அங்குள்ளார்க்கு நன்றி கூறி, அதன்பின் சைவசித்தாந்த நூலில் ஒரு செய்யுளைப் பீடிகையாகக் கொண்டு சித்தாந்த உண்மைகள் சிலவற்றைக் கேட்பார்க்குக் கர்ணமிர்தமாம்வண்ணம் சிறிது நேரம் உபந்நியாசஞ் செய்து முடித்தனர்.

நாவலரவர்கள் தாம் செய்த பிரசங்க முடிவிலும் இங்குள்ளார் தமக்கு அச்சமையத்திற் செய்த உபசரணையைப் பற்றியும் தம்மிடத்திற் பாராட்டிய அபிமானத்தை விட்டும் சில பேசினர்; தம்மைப் பற்றிக் குறிப்புரை கூறியவர்கள் தம்மிடமில்லாச் சுகுணங்களையும் நற்செயல்களையும் தம்மீது சுமத்திப் பேசினார்களென்றும், தம்மைச் சமயகுரவர்கட்கு ஒப்பிட்டமை சிறிதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தாதென்றும், அப்பெரியாருடைய அடிப்பொடிக்குள்ள மகத்துவத்தில் ஆயிரத்திலொன்றுதானும் தமக்கில்லையென்றும், செந்தமிழ் விஷயமாகவும் சைவசமய விஷயமாகவும் தாம் ஏதும் அற்பதொண்டு புரிந்திருந்தால், அத்தொண்டு எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருட்களுக்குரியதாகுமென்றும் எவருள்ளமும் உருகும்வண்ணம் கனிவுடன் பேசி முடித்தார்.

பிரசங்கம் முடிந்த பின்னர், யாழ்ப்பாணம் மணியகாரனுகவுள்ளவர் குறிப்புரை கூறத்தொடங்கி, நாவலரவர்களின் செயற்கருந் தொண்டுகளைப் பாராட்டி, தாங்கள் அப்பெரியாருக்குச் செய்த உபசாரம் போதியதன்றென்றும், அவருடைய வருகையை இன்னுஞ் சிலநாள் முந்தி அறிந்திருந்தால் தாங்கள் அதிக உபசரணைக்குச் சித்தப்படுத்தியிருக்கலாமென்றுங் கூறினர். மேலும் இந்தியாவில் நாவலரவர்கள் தங்கியிருந்த காலத்திலே இங்குள்ள சில முழு மக்கள் பொறுமை காரணமாக அவரை இடர்ப்படுத்த முயன்றனரென்றும், சமயத்தைப் போதிப்பதற்கு இப்படியான பெரியார் தங்களுக்கு இலகுவிற் கிடைப்பவரல்லரென்றும், இத் திருத்தொண்டுகளைச் செய்யும்வண்ணம் இறைவன் நாவலரவர்களுக்கு அரோக திடகாத்திரத்தையும் நீடித்த ஆயுளையும் பாலிப்பாராக என்றும் கூறிமுடித்தார். அதன்பின், ஸ்ரீ விநாயக மூர்த்தியென்பவர் சில வாழ்த்துப் பாக்களைப் படித்தனர். ஈற்றில் நாவலரவர்கள் அங்கிருந்து தம்முடைய வாசஸ்தானத்திற்குச் சகல வரிசைகளுடனும் அழைத்துச் செல்லப்பட்டார். யாழ்ப்பாணத்து மக்கள் ஒரு யாழ்ப்பாணப் பெரியாரை இதற்கு முந்தி இப்படியாக உபசரித்துப் பாராட்டியதில்லையெனலாம்.''

—"இலங்காபிமானி" 24-2-1870.

'யாழ்ப்பாணத்துச் சைவப்பிரசாரகராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அணியுஞ் சில விசேஷ நகைகள் களவு போய்விட்டன. கழுத்திலே அணியும் இரு கௌரி சங்கரமணி பொருந்திய கண்டிகையும், ஒரு பஞ்சரத்தின மோதிரம், ஒரு சிவப்புக்கற் பதித்த பவுத்திர மோதிரம், ஒரு சாதாப் பவுத்திர மோதிரம், ஒரு சோடு குவளைக் கடுக்கன், ருத்திராட்ச மணிகளொவ்வொன்றுக்கு மிடையே தங்க இடைசூரிகளுமுள. இவ்வாபரணங்கள் ஏறக்குறைய 750 ரூபாய் பெறும். இதைக் களவாண்டவன் அவருடைய தவசிப்பிள்ளை சுவாமிநாதன், இன்னுமிருவர். அவர்கள் வீட்டேவல் வேலைக்காரர். சுவாமிநாதன் தாசி மயக்காலேயே தோசிகை வைத்தவன். ஒரு காசுக்கடைக்காரனிடமும், ஒரு தாசியிடமும் அகப்பட்டிருந்தவைகள் வெளிப்பட்டன. நகைகளையும் ஆட்களையும் பொலிசிற்கொடுத்து விளக்கம் நடந்தது. எதிரிகள் பிணையில் விடப்பட்டனர். விளக்கப் புத்தகம் அத்துவக்காத்துக்குப் போய்விட்டது. அறிந்தும் பொருளை வாங்கியவர்க்கு, இருந்துந் தண்டனை வேண்டுந்தான்.

—"இலங்கைநேசன்" 24-10-1877.

புலோலிச் சைவ வித்தியாசாலை.

'1877-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19-ந் திகதியாகிய புதன்கிழமை மேற்படி வித்தியாசாலையிலே கல்வி கற்கும் மாணக்கர்கள் பரீட்சிக்கப்பட்டார்கள். பிள்ளைகள் மிகச் சிறு பிராயத்தினையுடையவராயிருந்தும், கல்வியிலே மிகத் தேர்ச்சியுடையவர்களாய்க் காணப்பட்டனர். அப்பொழுது திருவள்ளுவர்குறள் பரிமேலழகருரை முதலிய நீதி நூல்களும், கந்தப்புராணம்முதலிய புராணங்களும், சைவசமயநெறி முதலிய சமய நூல்களும், நன்னூல் முதலிய கருவி நூல்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவுமே அங்கே பரீட்சிக்கப்பட்ட பாடங்கள். பரீட்சை முடிவிலே மேற்படி வித்தியாசாலையைத் தாபித்தருளிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களையும், மாணவர்களது கல்வித் தேர்ச்சியையும் விதந்துரைத்த சில செய்யுட்களுள் ஒன்று வருமாறு:—

நேரிசை வெண்பா.

"சைவமத மாதுந் தமிழ்மாது மாட்டுதந்த
தெய்வசபை யைப்புலமைச் சீர்வாய்ந்த
—மெய்வளரு
மாறுமுக நாவலனு மான்றபெரும் புண்ணியனு
லேறியகல் லூரியென்ப தென்."

—"இலங்கைநேசன்" 24-10-1877.

ஏழாலைச் சைவ வித்தியாசாலை.

சென்னபட்டணத்தில் பி. ஏ., பி. எல். பட்டம்பெற்று ஜெனறல் ஐக்கவுண்டன் என்னும் உத்தியோகத்தராய் இருக்கின்ற ஸ்ரீ. சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகின்ற இந்த வித்தியாசாலையிலே இந்த மாசம் 5-ந் திகதியாகிய ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஸ்ரீலஸ்ரீ. நாவலரவர்களாலே ஒரு பரீட்சை செய்விக்கப்பட்டது.

இந்த வித்தியாசாலையிலே சென்ற மாசத்து 16-ந் திகதியாகிய வியாழக்கிழமை இராத்திரி ஸ்ரீ சங்கரபண்டிதர் குமாராகிய சிவப்பிரகாசபிள்ளையாலே ஒரு பிரசங்கஞ் செய்யப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் எழுதிய "சைவசமயம், சைவசமயி" என்ற பத்திரிகையை வாசித்து விளக்கி அதனின்று பிரசங்கந் தொடங்கினர். விசேஷமாக, கண்ணகி வணங்கப்படத்தக்கவளல்லள் என்பதற்கு அநேகப் பிரபல நியாயங்கள் காட்டிக் கண்ணகியை வணங்குகிறவர்களைக் கண்டித்துப் பேசினர். அங்கு பாடப்பெற்ற செய்யுட்களுள் ஒன்று வருமாறு:—

கட்டளைக் கலித்துறை.

"கன்னர்க்கு மன்னன் வயிரவ நாத
மகிபன்பெற்ற
தன்னைப் பரியவன் தாமோ தரேந்திரன்
ருரணியின்
மன்னன் கவிச்சக் கரவர்த்தி செய்திடுங்
கல்விக்கொடை
என்னச் சொலப்படுந் தானமுண் டோமற்
றெழிற்புவிக்கே,"

[இஃது 1878-ம் ஆண்டு கார்த்திகை மாசம் 13-ந் திகதி வெளிவந்த "இலங்கைநேசனுக்கு", தெல்லிப்பளை, ஞா. சுப்பிரமணிய விப்பிரர் எழுதிய கடிதமாகும்.]

சட்டசபைத் தமிழ்ப் பிரதிநிதி

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் பிறருங்கூடி வண்ணார்பண்ணையிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையில் 1879-ம் ஆண்டு வைகாசி மாசம் 22-ந் திகதி வியாழக்கிழமை உருமத்தின் பின் ஒரு கூட்டம் வைத்தார்கள். மூன்று மணியளவில் தஞ்சாவூரால் வந்திருக்கும் கறல் (விஸ்வநாதபிள்ளை) பண்டிதரே சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் பிரசங்கித்து முடிந்தபின் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் எழுந்து குமாரசுவாமி நயிற் பட்டவர்த்தனரின் கீர்த்திப் பிரபாவத்தை, விஸ்தரித்தபின்னர் அவர் மருமகன் அப்புக்காத்து இராமநாதத் துரையே எங்கள் தமிழ்ப் பிரதிநிதியாகச் சட்ட நிரூபண சபையிலிருக்கத் தகுந்தவரென இலக்கணவழுக்களேதுமின்றித் தருக்கசாஸ்திரமுறை பிறழாது பிரசங்கித்தார். இத்தை, திருவாங்கூரின் நீதிபதி (Magistrate) பொன்னம்பலம்பிள்ளை அநுசரித்தும் மெச்சியும் பேசினர்.

—"இலங்கைநேசன்" 28-5-1879.

தமிழ் முதலாஞ் சுதேச பாஷைகள் குன்றத் தலைப்பட்டுள்ள இக்காலத்திலே, பாண்டிய மன்னர் காலத்திருந்த பழைய புலவர்கள் வித்துவான்களை யொத்த சிலர் இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலும் விளங்குதல் ஒரு பெரும் ஆறுதலாகும். சிலர் என இங்கு யாம் குறித்தவருட் பிரதானமானவர்கள் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் என்னும் இருவருமாவர். இவ்விருவருள் பிள்ளையவர்கள் சிறந்த புலவராவர்; இவர் பாடிய நூல்கள் பல; நாவலரவர்கள் இக் காலத்திற் கிசைந்த சிறந்த தமிழ் வசனநடை இயற்றுவதில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராவர்; இவருக்கு முன்னிருந்த அறிஞர்களும் இப்படியான தமிழ் வசனம் எழுதமாட்டார்கள்.

இனி, வாக்கு வன்மையோடு பிரசங்கஞ் செய்வதிலும் இந்நாவலருக்கு நிகரானவர் எவருமில்லை; இவரைப்போல் இதற்குமுன்னர் உபந்நியாசஞ் செய்தாரை யாம் கேட்டதில்லை; மேலும் இப் பெரியார் ஏட்டுப் பிரதிகளாயிருந்த எத்தனையோ அரிய தமிழ் நூல்களைப் பிழையறப் பரிசீலனை செய்து அச்சிட்டு வெளியிட்டு வருகின்றார்; கேவல நிலைமை யடைந்துள்ள தமிழ்மொழி இப் பெரியார் செய்துவரும் இப்படியான அரும் பெருமுயற்சிகளினால் விருத்தியாதல்முடியும்.

நாவலரவர்கள் தாம் எழுதிய முதன் மூன்று வகுப்புகட்குரிய பாலபாடங்களை அபிப்பிராயம் பெறும்படி எமக்கு அனுப்பியிருக்கின்றார். அவருடைய தமிழ் வசன நடையைப்பற்றி நாம் ஏதும் கூறப்புகுதல் மிகையாகும். பாலபாடங்களை எழுதவேண்டிய முறையிலேயே எழுதியுள்ளார். இந்த அறிஞர் எழுதிய பாலபாடங்களைத் தவறாது இங்குள்ள வித்தியாசாலைகளில் உபயோகித்தல் வேண்டுமென்று நாம் திடமாகச் சொல்வோம்; இச் சென்னையிலுள்ள வித்தியா சங்கத்தார் வெளியிடும் வசன பாட புத்தகங்களைக் காட்டிலும் நாவலர் பாலபாடங்கள் எவ்வாற்றானும் சிறந்தவையாகும். வித்தியாசங்கத்தார் வெளியிட்ட புத்தகங்களை நாவலரவர்கள் எழுதிய பால பாடங்களோடு ஒப்பிட நினைத்தமைதானும் தவறெனலாம். இனி, நாவலர் பாலபாடங்களில் எடுத்தாளப்பட்டிருக்கும் அரிய விஷயங்கள் சாலச் சிறந்தவையாகும். அவர் எழுதிய முதலாம் இரண்டாம் பாலபாடங்கள் இங்குள்ள தமிழ் வித்தியாசாலைகள் எல்லாவற்றிலும் அந்த அந்த வகுப்புக்களில் தவறாது உபயோகிக்கப்படல் வேண்டும்; அவர் எழுதிய மூன்றாம் பாலபாடம் (இது இக்காலத்தில் நான்காம் பாலபாடமாக வழங்குகின்றது—பத்திராசிரியர்) எங்கள் தாலுகாக்களிலுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலும் ஆங்கிலவித்தியாசாலைகளிலும் மேல் வகுப்புக்களில் உபயோகிக்கற்பாலது.

நாவலர் எழுதிய பாலபாடங்கள் மூலமாக அந்நிய நாட்டிலிருந்து இங்கு வருவோர் இந்நாட்டு மக்களின் பழக்க வழக்க ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் அறிதலாகும். ஆனால், இங்குள்ள பாதிரிமாருக்கு இப் புத்தகங்கள் மாறானவை போலத் தோன்றுமென்பதை நாம் அறிவோம். பிறமதத்தையேனும் மதத்தினரையேனும் இப் புத்தகங்களில் நாவலர் கண்டித்து எழுதினாரல்லர்; சில உண்மைகளையே உள்ளபடி அப்பெரியார் எழுதியுள்ளார்; இப்படியான பாடங்களினால் நன்மையன்றி வரக்கூடிய தீமை யாது மில்லை யெனலாம்; இந்த நியாயம் பற்றி இந்திய அரசினரும் இலங்கை யரசினரும் நாவலரவர்களுடைய புத்தகங்களையே வித்தியாசாலைகளில் உபயோகிக்கச் செய்து, இன்னமும் இப்படியான அரிய நூல்களை எழுதும்வண்ணம் அப்பெரியார்க்கு ஊக்கமளிப்பரெனக் காத்திருக்கிறோம்."

[சென்னையில் நடைபெற்ற "**Native Public Opinion**" என்னும் ஆங்கிலப் பத்திரிகையிலிருந்தெடுத்து 1872-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந் திகதி வெளிவந்த "இலங்காபிமானி" என்னும் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.]

—"இந்துசாதனம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரின் கிரக நிலை.

8	சனி	வி	11
சந்			கே
ர			ல
செ சு பு	4	3	2

தமிழ்நாட்டிலுள்ளவர்கள் சைவசமயமே மெய்ச் சமயமெனத் தெளிந்து உய்யும் பொருட்டு வந்த இவர், கலியப்தம் ௪௯௨௪-க்கும், சாலிவாகன சகாப்தம் ௧௭௪௫-க்கும் சமமாகிய சித்திரபானு ஆவு மார்கழி மீ ௫௨ புதன்கிழமை இரவு அவிட்ட நக்ஷத்திரமும் பூர்வபக்க பஞ்சமித்திதியும் வச்சிர யோகமும் பாலவ கரணமும் கூடிய நேரத்திலே சிங்கலக்கினத்திலே நல்லூரிலே தமது தந்தையார் வீட்டிற் பிறந்தனர்.

நாவலர் குருபூசைத்தினம்.

'கார்த்திகைமா தத்துமகங் காசினிக்குச் சைவநிலை
சேர்த்திப் பரசமயஞ் சேதித்துச்—சீர்த்திமிக
மேவுதமிழ் தந்தகந்த வேணல்லூ ராறுமுக
நாவலர்வீ டுற்றதிரு நாள்."

அவதார புருஷர்.

[முளாய் தீர்க்கதரிசியாகிய பண்டிதர் ஸ்ரீமத்: சு. போன்னம்பலபிள்ளை அவர்கள்.]

வீறு புகழ் படைத்த வித்துவ சிரோமணியாகிய ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் சிவபத்தியும் அடியார்பத்தியும் சீவகாருண்யமும் வாய்மையும் தூய்மையும் நீதியும் ஓதியும் நிறைவும் பொறையும் திரண்டு ஓர் உருவெடுத்தாற்போன்று விளங்கிய அவதாரபுருஷர். தோலா நாவினையுடைய மேலோராகிய நாவலர் அவர்கள் பரசமயக் கோடைக் கடிந்து பிரசங்காமிர்ததாரைகளால் சைவப்பயிர் வளர்த்தவர். இன்னும் நாவலர் அவர்கள் செய்த நன்மைகள் அளப்பில. ஸ்ரீ அம்பலவாணநாவல சுவாமிகள் நாவலர் அவர்களை உபாசனைசெய்து கற்றதனாலன்றோ தென்மொழியோடு வடமொழியிலுஞ் சிறந்த வித்துவானாகவும் பிரசங்கசரபமாகவும் விளங்கினர். எல்லாம் வல்ல இறைவர் நல்லருளால் நாவலர் அவர்கள் புகழ் என்றும் நின்று நிலவுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைப்பற்றி ஒன்றுஞ்சொல்லமுடியாது

(திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத் சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.)

பெரிய புராணக் கதைகளைப் படித்து, நாயன்மார்களின் மனநிலையையும் குண விசேஷங்களையுங் கண்டுபிடித்து, அவைகளைப்பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்தக் காலத்துக்கேற்றவாறு எழுதி வெளியிட வேண்டும் என்ற எண்ணம், இரண்டொரு வருடங்களுக்குமுன் ஒருமுறை எனக்குத் திடீரென்று உற்பத்தியானது. ஆனால், அந்த எண்ணம் வளரவில்லை; அது மெல்ல மெல்லத் தேய்ந்து, இருந்த இடமே தெரியாமல் மாய்ந்து கடைசியில், பெரிய புராணக் கதைகளிலேதானும் கதை வேறுபடாமல், ஒரு அக்ஷரத்தைக் கூட மாற்றி அமைக்கிறதற்கு எனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்ற முடிபுக்கு வந்து சேர்ந்தேன்.

இதற்குப் பிறகும் என்னுடைய மனம் சும்மா கிடக்கவில்லை. அதற்கு மற்றொரு பைத்தியம் உற்பத்தியாய் அது வளர்ந்து கொண்டும் வந்தது. அந்தப் பைத்தியம் என்ன வென்றால் அது ஆறுமுகநாவலர்ப் பைத்தியம். மகா வித்துவான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்களைப் பற்றி, மஹாமஹோபாத்தியாயர் டாக்டர் சாமிநாதையர் அவர்கள் எழுதிய விரிவான பெரிய சரித்திரத்தைக் கண்டபோது, எனக்குண்டான குறித்த பைத்தியத்திலே, போதாக் குறைக்குக் கொஞ்சம் பொறாமையும் வந்து கலந்துவிட்டது. பைத்தியமும் நானும் இரண்டறக் கலந்துவிட்டோம். நாவலர் அவர்களுக்குச் சரித்திரம் எழுதியவர்களிலே, எந்தக் காலத்திலும் வாராத ஒரு பெரிய கோபமும் எனக்கு வந்துவிட்டது.

நாவலர் அவர்களின் சரித்திரம் நூற்றுக்கணக்கான பல வேறுதுறைகளில் விரிந்திருக்கவேண்டுமே. நாவலர் அவர்கள் எந்த-நல்ல-துறையிலேதான் கைவைக்கவில்லை. எந்த க்ஷணத்திலேதான், லக்ஷியத்திற்காக உயிரைவிட ஆயத்தமின்றி இருந்தவர்கள். இப்படிப்பட்ட நாவலர் அவர்களின் உரு, திரு, வீரம், மானம், அச்சம், அச்சமின்மை, கோபம், கோபமின்மை, பொறுமை, அயாசகம், பிரபுத்துவம், இரக்கம், ஈகை, தியாகம், ஒழுக்கம், எண்ணம், விவேகம், ஞானம், பத்தி, துணிவு, தெளிவு முதலிய எண்ணிறந்த குண விசேஷங்கள், எழுதிய சரித்திரங்களில் எடுத்து விரித்துக் காட்டப்படவில்லை. ஒவ்வோர் குணத்துக்கும் பல வேறுபட்ட நூற்றுக்கணக்கான கதைகள் கர்ண பரம்பரையில் வழங்கிவருகின்றன. அந்தக் கதைகளைத் தொகுத்து வகுத்தாலுங்கூட, பதினாயிரக் கணக்கான பக்கங்கள் கொண்ட ஒரு பாரிய சரித்திரம் பத்துப் பதினைந்து பாகங்களாக வெளியிட்டிருக்கலாம். இப்பொழுது எழுதிய சரித்திரங்கள் மிகச் சுருக்கமானவை. சுருக்கமென்றால் இவற்றுக்குத்தான் பொருந்தும். சுருக்கு சுருக்கென்று சுருக்கியிருக்கிறார்கள். நாவலர் அவர்களின் உள்ள நிலை இச்சுருக்கங்களிற் புலப்படவில்லை. உண்மையான நாவலர் அவர்களை உள்ளத்திற் சித்திரிக்க முடியவில்லை. இதனாலேதான் சரித்திரம் எழுதியவர்களில் எனக்குக் கோபம் வந்தது. என்ன! கோபம் வராதா!!

ஆனால், ஒருநாள் என்னுடைய கோபம் போய்விட்டது. போய்விட்டது என்றால்- "என் நான் சரித்திரம் எழுதியவர்களிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபிக்கவேண்டும். நானே அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கக் கூடாதா?" என்று இங்ஙனம் மாறிவிட்டது. அன்று தொடக்கம் பாரிய சரித்திரமொன்று என்னுடைய மனசிலே பலதுறைப்பட்டு வளர்ந்தது. பதினாயிரக்கணக்கான பக்கங்கள்-கலிக்கோ பைண்டு செய்த எத்தனையோ பாகங்கள் - நண்பர்களோடெல்லாம் இதுதான் கனவு-நாவலர் அவர்களைப்பற்றிப் பல பிரசங்கங்களும் பண்ணிப்போட்டேன்.

இந்த ஆரவாரத்தைக் கண்ட 'நாவலர் நினைவுமலர்' ஆசிரியர், பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள், தமது நினைவுமலருக்கு ஒரு கட்டுரை எழுதித் தரும்படி என்னைக் கேட்டதில் ஒருபிழையுமில்லை. பண்டிதர் அவர்கள் என்னை ஒன்று கேட்டது கேட்கமுன், "நாவலர் நினைவுமலர் நாவலர் அவர்களை நினைக்கத்தக்கதாயிருக்க வேண்டும்; அவர்களை ஒவ்வொருவர் மனசிலும் சித்திரிக்கத் தக்கதாயிருக்கவேண்டும். நாவலர் அவர்கள் ஒரு கற்பகதரு. அவர்களுடைய குண விசேஷங்கள் ஆயிரக்கணக்கான சாகைகள். ஒவ்வொரு சாகைக்கும் நூற்றுக்கணக்கான கதைகள் உண்டு" என்று தொடங்கினேன். உடனே ஒரு கட்டுரை உதவும்படி கேட்கவந்த பண்டிதர் அவர்கள், பல கட்டுரைகளை என்னிடம் எதிர் பார்த்தார்கள் போலத் தோன்றியது. உண்மையில் எதிர் பார்த்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை.

கடைசியாக ஏதாவது ஒரு கட்டுரையேனும் எழுதித்தான் தீரவேண்டுமென்று, பெரிய முயற்சிகள் எடுத்தேன். நாவலர் அவர்களின் சரித்திரங்கள், நாவலரவர்களே எழுதியவைகள் இவற்றில் அங்குமிங்குமாகப் பல விஷயங்களைப் படித்துப் பார்த்தேன். ஆழ்ந்த யோசனைகளும் பண்ணினேன். என்ன பண்ணியுமென்ன! எனக்கு ஒரு வசனமும் எழுத வரவில்லை. பெரிய பயம் வந்துவிட்டது. சரித்திரச் சுருக்கம் எழுதியவர்களில் எனக்கிருந்த கோபமும் பறந்தது. மனசுக்குள்ளே அவர்களைப் பலமுறை மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். பெரிய புராண விஷயத்தில் என்ன முடிபுக்கு வந்தேனோ, அதே முடிபுக்குத்தான் – "நாவலர் அவர்களைப்பற்றி ஒன்றுஞ் சொல்ல முடியாது". என்ற முடிபுக்குத்தான் – இறுதியில் வந்துசேர்ந்தேன். வேறு என்னதான் செய்யமுடியும். கீழே வாசித்துப் பாருங்கள்.

இவைகள் நாவலரவர்கள் எழுதியவைகள்!

i. "நம்மை ஆளும் இங்கிலிஷார் கிறிஸ்து சமயானுசாரிகள் ஆகையால், நாம் தங்கள் சமயத்தைக் கண்டிக்கவும் நமது சமயத்தை ஸ்தாபிக்கவும் புகுங்கால், எம்மேற் குரோதங் கொள்வார்களன்றோ? அதற்கு நாம் யாது செய்வோம்? என்பீர்களாகில்; சுவதந்திரராகிய சிவன் நாம் செய்த வினைகள் எல்லாவற்றையும் ஒருங்குணர்ந்து, அவ்வினைகளுள் இன்ன காலத்திலே இன்ன வினையை அனுபவிக்கப் பண்ணுவோம் என்று நியமித்து, ஊட்டுமாறன்றி, இவ்விடத்துப் பரதந்திரராகிய பிறர் ஒருவரால் நமக்கு ஓர் தீது வந்தடையாது."

—சைவதூஷண பரிகாரம் 10-ம் பக்கம்.

ii. "இனி இவ்வரசர்களால் நீர்க்குமிழிபோல நிலையில்லாததாகிய இந்தச் சரீரத்துக்கு ஓர் தீது வருமெனினும், வருக. நிலையுள்ளதாகிய ஆன்மலாபத்தின் பொருட்டு, பிராணத்தியாகம் பண்ணியும், சைவ ஸ்தாபனம் பண்ணுதலே அத்தியாவசியகம். நாம் காத்தல் வேண்டுமென அவாவும் இச்சரீரத்தை நாம் பெற்றது முத்திபெறும் பொருட்டன்றோ? சிவதூஷ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம் முதலிய அதிபாதகங்களைப் பரிகரித்தற் பொருட்டுச் சரீரத்தை விடுத்தவர் முத்திபெறுதல் சத்தியமென்பது சிவசாத்திரங்களாலே சாதிக்கப்பட்டதன்றோ? அங்ஙனமாதலின், நாம் சிவதூஷணம் முதலியவற்றைப் பரிகரிக்குங்கால் ஒரோவழி வரற்பாலதாகிய சரீரநாசத்தை ஏற்றுக் கோடலினாலே முத்தி பெறுவேமென்பது சத்தியமாமே. ஆமெனில், முத்தியாகிய சத்தியம் சித்தித்தவழி இச்சரீரமாகிய சாதனம் இருந்தென்! ஒழிந்தென்!"

—சை. தூ. ப. 11-ம் பக்கம்.

iii. "கடவுள் ஒருவரே நம்மோடு என்றுந் தொடர்புடையவராய், நமக்கு நம்மினும் இனியவராயுள்ளவர்; அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள்."

—இரண்டாம் சைவவினாவிடை 145-ம் பக்கம்.

iv. "உங்கள் குருமாருள்ளே யோக்கியருக்குங் கும்பிடு அயோக்கியருக்குங் கும்பிடு, யோக்கியருக்கும் பாதகாணிக்கை அயோக்கியருக்கும் பாதகாணிக்கையானால், திருத்தம் எப்படி உண்டாகும்! யோக்கியரை உயர்த்தி அயோக்கியரைத் தாழ்த்தினாலன்றோ! அயோக்கியர் தொகை குறையக் குறைய, யோக்கியர் தொகை அதிகப்படும்."

—நாவலர் பிரபந்தத்திரட்டு 61-ம் பக்கம்.

v. "நாங்கள் எப்படி நடக்கினும் நடப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்பார்க்கு, நாம் எப்படிக் கண்டிப்பினுங் கண்டிப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்போம். பிறர் செய்யும் அநீதிகளைக் கண்டித்தற்கு நீர் யார்! கடவுளோ அரசரோ என்பார்க்கு, கடவுள் கட்டளைக்கும் அரசர் கட்டளைக்கும் மாறாகவே பிறர் செய்யும் அநீதிகளை, அக்கட்டளைகட்கு அமைந்து, கண்டித்தலாகிய நமது நீதியைக் கண்டித்தற்கு நீர் யாரோ சற்றே பேசும் என்போம். ஆகா! பல மனிதராலும் பகைக்கப்பட்டீர் இனிக் கெட்டீர் என்பார்க்கு, ஓகோ கடவுளுக்கஞ்சும் அச்சம் பெருகப் பெருக மனிதருக்கஞ்சும் அச்சம் குன்றிக் குன்றிவிடும் என்பதறியீர் போலும் என்போம். எவ்விதத்தானும் வாயெடுக்க ஒட்டேம் ஒட்டேம்!!

—நா. பி. தி. 65-ம், 66-ம் பக்கங்கள்.

vi. "நம்மை நீங்கள் எப்படித் தூஷிக்கினும் உங்களுக்கு நன்மையாக முடிப்பவைகளை உங்களுக்கு வெளிப்படுத்துதற்கு நாஞ் சிறிதுந் தடைப்படாவண்ணம் சிவபெருமான் திருவருள் செய்க."

—நா. பி. தி. 65-ம் பக்கம்

vii. "அதி பாதகமாகிய தேவத்திரவியாபகார முதலிய பல பாதகமுஞ் செய்கிற போலிச் சைவர்கள், அதிபாதகத்திற்றாழ்ந்த அதிபாதக துல்லியத்திற்றாழ்ந்த மகா பாதகத்திற்றாழ்ந்த மகாபாதக துல்லியத்திற்றாழ்ந்த உபபாதகத்திற்றாழ்ந்த உபபாதகதுல்லியத்துள் ஒன்றாகிய புலாலுண்டல் செய்யுஞ் சூத்திரரில் உயர்ந்தவர்களாமோ! கெட்டி கெட்டி!!!"

"புலாலுண்டல் மாத்திரம் பாவம், சிவநிந்தை முதலியவை புண்ணியமா!"

—நா. பி. தி. 130-ம் 131-ம் பக்கங்கள்

viii "உலகறிய முற்றேதி போட்டுப் பொய்ப் பற்றுச் சீட்டுகள் தலைமைக்காரர்கள் வாங்கிச் சேர்ப்பார்களானால், யாழ்ப்பாணத்திலே சன்மார்க்கம் எப்படித் தலைப்படும்!!! யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி பொய் கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு (College). அதற்குத் தலைவர் (Principal) துவையினந்துரை; உபாத்தியாயர்கள் "பாவந் தோன்றிய நாளையிற் றோன்றிய பதகன்" ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகள் படிப்பிக்கிற தாலுகாப் பள்ளிக் கூடங்கள் (Taluk Schools) சில தலைமைக்காரர்களுடைய தானங்கள். இப்படியானால் யாழ்ப்பாணம் விரைவிலே தேவனுடைய சாபத்துக்குப் பாத்திரமாவதிற் சந்தேகமா !!!

—நா. பி. தி. 146-ம் 147-ம் பக்கங்கள்.

ix. "நான் இங்கிலிஷிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப்பின் இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சத்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும் உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித் துணை மாத்திரங் கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்த பொழுதும் அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்ம தேசமாகவும், நான் இவ்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்."

—ஒரு விக்கியாபனம்.

x. "சைவசமயத்தை வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வாரில்லையே! இதற்கு யாது செய்யலாம்? சைவ சமய விருத்தியின் கண்ணதாகிய பேராசையை அதனை முடித்தற்குச் சிறிதும் சத்தியில்லாத எனக்குத் தந்தருளிய சிவபெருமான் சத்தியுடைய மற்றையோர்களுக்குக் கொடுத்தருளினாரில்லையே! என்று இரவும் பகலும் பெருங் கவலைகொண்டு பெருமூச்செறிதலினும் பலருக்குப் பிதற்றுதலினுமே பெரும் பான்மையும் என்காலத்தைப் போக்குவேனாயினேன்."

—ஒரு விக்கியாபனம்.

xi. "பூர்வகாலத்திலே சைவசமய விருத்திப்பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்கு மதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செயப்பட்டன. தற்காலத்திலே சைவசமய விருத்திப்பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செயப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை, என்னை அவமதிக்கவுமிலலை. இஃதென்னை யாச்சரியம்!!! சைவசமய விருத்திப்பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறும் செயப்பட்டபோது, நான் தமிழ்க் கல்வியிலும் தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்குவேண்டும் முயற்சிகளிலும் போக்குங் காலத்தை முன்பயின்ற இங்கிலிசிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே நன்கு மதிக்கப்படல் வேண்டும் என்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங் கருணைத் திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடைத்தாயதோர் பெருஞ் செல்வம்."

—ஒரு விக்கியாபனம்.

xii. "என்னுண்மையை அறியாத மற்றவர்களுக்கு இந்தச் சிவபுண்ணிய முயற்சிகளைத் தெரிவித்தல் மாத்திரஞ் செய்கின்றேன். இதற்கு உதவி செய்யும்படி அவர்களை நான் இப்போது கேட்பதில்லை. அவர்கள் தாமே உதவி செய்வார்களாகில் அவர்களைத் தடுப்பதுமில்லை."

—ஒரு விக்கியாபனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xiii. "பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயில் பாவம் செய்பவர்களுமிலர்; ஆதலால் பாவம் செய்பவர்களினும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்."

—இரண்டாம் பாலபாடம் 5-ம் பக்கம்.

xiv. "அவர்களுக்கு (திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீமத் அம்பலவாண தேசிகர், சுப்பிரமணிய தேசிகர் என்னும் உபயகுருமூர்த்திகட்கு) வித்தியாசாலையைக்காட்டி அவர்களாலே செயற்பாலனவற்றை வெகுஜனசமூகத்திலே பிரசங்கிக்கின் அவர்கள் இனியாயினும் தங்கள் தலங்களில் இப்படி வித்தியாசாலைகளைத் தாபித்துக் கல்வியறிவொழுக்கங்களையும் சமயத்தையும் வளர்த்தல் கூடுமே என்றெழுந்த பேராசையால், நான் சென்னபட்டணத்தை விடுத்தலால் எனக்கு விளையும் நட்டத்தை எட்டுணையேனும் நோக்காது, புறப்பட்டுச் சிதம்பரத்தையடைந்தேன்."

—ஒரு விக்கியாபனம்.

xv. "சென்னபட்டணத்திலிருந்த பிரபு ஒருவர் தமக்குத் தாசிவயிற்றிலே பிறந்தபிள்ளை ஒன்றற்குத் தமது வீட்டிலே இவர் வந்து அக்ஷராரம்பம் செய்துவைத்தால் ஆயிரம் ரூபா தருவேம் என்று இவரைக் கேட்டார். இவர் அதற்கு உடன்படவில்லை. பின்னும் அவர் வருந்தி இவருடைய சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைக்குப் பதினாயிரம் ரூபா தருவேம் என்றும் கேட்டார். அதற்கும் இவர் உடன்படவில்லை."

—இது சரித்திரத்தில் உள்ளது. 105-ம் பக்கம்.

இவைகள் இவ்வளவில் இருக்கட்டும்.

இனி, என்னைப்பற்றியும் சிலவார்த்தைகள். நான் பாருங்கள் உபாத்தியாயர் உத்தியோகம் பார்க்கிற ஒரு ஆள். எனக்கு என்னுடைய உத்தியோகம் உயிர். எனது உத்தியோகப் பத்திரத்தைக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வருகிறேன். அதற்குத்தான் அல்லும் பகலும் பூசை. அதற்கு ஒரு இடையூறு, ஒரு 'இன்கிறமென்ற்' தவறுவந்தால் அதைத் தடுக்கிறதற்கு எவர்களையும் எந்த நேரத்திலும் எவ்வளவு கும்பிடும் போடுவேன். இன்னும் ஒரு இரகசியம். எனது சமயத்தில் எனக்கு உத்தியோகம் போய்விட்டால், எந்தச் சமயத்திலும் நான் இறங்க ஆயத்தம். என் பகைவர்களைக்கூட அடி பணிந்து விடுவேன். எனக்கு எனது சீவனந்தான் பெரிது. அது எப்படியும் வரலாம். நல்லது, நாளைக்கு என்மேலதிகாரிகள் கள்ளுத்தான் உடம்புக்கு நல்லது; தண்ணீர் கூடாது என்று படிப்பிக்கச் சொல்லட்டும். பிள்ளைகளுக்கு மாத்திரம் அல்ல, ஊர்முழுவதுக்கும் படிப்பித்துவிடுவேன். இன்னுமொன்று எனக்கு ஒருவர் பதினாயிரம் நன்மை செய்தவர் ஆகட்டும். வேறொரு நன்மை வேறுவழியில் இனிவருவதானால், அதற்காக முன் நன்மை செய்தவரை மல்லாக்கப்பண்ணி அவர்மார்பிலே, அவர் பகைவர்களோடுகூட, மலசலமோசனத்துக்கும் நான் ஆயத்தம். இதில் என்ன ஐயா! பிழை. இதுதானே உலகம். முசோலினி மாமாவைப் பாருங்கள். ஹிட்லர் என்ன செய்கிறார். ஏன்? பழைய காலத்தில் பாரதத்தில் சகுனிமாமா இருந்தார். அவர் ஒரு கட்டையர்; யப்பானியர். அவருக்குச் சாவில்லை. அவர் இப்பொழுதும் எங்கேயாவது இருப்பார். பாலைப் பாராமலிருக்கிற பூனைபோல, உலகத்தைப் பாராதமாதிரி அவர் கண்ணைமூடிக் கொண்டிருப்பார். அந்தக்காலமென்ன! இந்தக்காலமென்ன! எல்லாம் ஒன்றுதான் ஐயா! இப்படியெல்லாம் இருக்க என்னிடம் மாத்திரம் என்ன குற்றம்! எனக்கு இனி அடுத்தநேரச் சோறுதான் பெரியது.

இத்துணைப் பெருமையிற் சிறந்த நான், என்னுடைய ஹிருதய பங்கஜத்திலே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாவலர் பெருமானைச் சங்கற்பித்தால், அந்தப் பெருமானுக்கும் மேலே காட்டிய நாவலர் அவர்களுக்கும் சந்தித்துவருமா? ஒத்துப்பாருங்கள்.

i. யாரோ சில பாதிரிமார்கள் சிவ தூஷணஞ் செய்து போட்டார்களாம். அதற்காக இச்சரீரம் இருந்தென்! ஒழிந்தென்! என்கிறார்கள் நாவலர் அவர்கள். இது என்ன பைத்தியம்! யாராவது தூஷித்தால் நமக்கென்ன. நான் சங்கற்பிக்கும் நாவலர் பெருமானை, இப்படிப் பைத்திய விஷயத்தில் இறங்க விடுவேனா! சிந்தித்துப் பாருங்கள்.

ii. நாவலர் அவர்களுக்கு நல்ல இங்கிலீஷ் வரும். அந்த நாட்களில் எந்த உத்தியோகமும் பெற்றிருக்கலாம். சட்ட சபைக்குக்கூடப் போயிருக்கலாம். கொஞ்சம் அரசாங்கத்தை அணைத்து வைத்திருந்தால், இப்பொழுது சாமிநாதையர் பெற்ற பட்டங்களுக்கு மேலே பெற்றிருக்கலாம். என்ன வீண்வேலை செய்துவிட்டார்கள்! போங்கள்.

iii. திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிக சுவாமிகளைப் பாராட்டாத தமிழ் வித்துவான்கள் தமிழ் நாட்டில் இல்லை. இப்பொழுதுங்கூட டாக்டர் சாமிநாதையரவர்கள் தேசிகரைப் பாராட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தேசிகரை வெகு ஜனசமூகத்திலே திருத்த முற்பட்டதாக நாவலர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுடைய வாய்க்கொழுப்பைப் பாருங்கள். இதனாலேதான் போலும் மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள், நாவலர் அவர்களுக்குச் சிறப்புப்பாயிரம் கொடுப்பதைத் தமக்குப் பெருமையாகக் கொண்டபோதும், டாக்டர் ஐயரவர்கள் அப்படி விடாமல், நாவலரவர்கள் பிள்ளையவர்களிடம் சிறப்புப்பாயிரம் வாங்கத் தவண்டையடித்தார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். ஏன் உந்த இந்துக்கல்லூரியிற் படிப்பிக்கும் சாத்திரியார் ஒருவரும் அப்படித்தான் சொல்லுகிறார். நாலுமனிசர் நடக்கிறதுபோல நடக்கத்தெரியாத நாவலர் அவர்களுக்கு இப்படித்தான் வரணும்! வரணும்!

ஏன்! ஏகசெண்டரைப் பற்றிச் சும்மா விட்டார்களா! கச்சேரியைப் பற்றித்தான் எவ்வளவு ஏச்சு! இப்படிப்பட்ட நாவலரவர்கள் ஐயர்களிடம் வாங்கித்தான் முடியணும்.

iv. அப்பாடா! அந்த நாட்களில் பதினாயிரமென்றால் எவ்வளவு தொகை. ஒரு தாசி பிள்ளைக்கு அக்ஷராரம்பம் செய்து வைத்துவிட்டுப் பதினாயிரத்தை இரண்டு கைகளையும் நீட்டி வாங்குகிறதற்கு எந்தப் பைத்தியக்காரன்தான் பின்வாங்குவான். இப்படிப் பெருந் தொகைகளை உதறித் தள்ளிவிட்டுத்தானே, சைவஸ்தாபனம், தமிழ்ப்பரிபாலனம் என்று நாவலரவர்கள் மார்பிலடித்தவர்கள். ஐயையோ! வலிய வந்த சீதேவியைக் காலால் தள்ளிவிட்டார்களே! இன்னும் இப்படி எத்தனை தொகைகளை உதறித் தள்ளிவிட்டார்களோ! ஆர் கண்டது.

இனி, எந்தச் செயலை எடுத்தாலும் இப்படித்தான் போகும். நான் சங்கற்பிக்கும் நாவலர் பெருமானுக்கும், அந்த உண்மையான நாவலர் அவர்களுக்கும் ஒருமயிரிடையும் ஒத்து வராது. இதனாலேதான் நான் அந்த முடிபுக்கு வந்தேன். அவர்களைப்பற்றி ஒன்றுஞ் சொல்லமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலப் பெருந்தகையார்.

(வித்துவான் பிரமஸ்ரீ. சி. கணேசையர் அவர்கள்.)

நாவலம் பெற்றார் பலர் தமிழ்நாட்டிற் பிறந்துளராயினும், நல்லூரிற் பிறந்த ஆறுமுகநாவலருக்கே அவ்வலம் சிறந்துகாட்டியதாகலின்; யாம் அவரையே ஈண்டு நாவலப் பெருந்தகையா ரென்றும். அப்பெயர் நாவின் வலத்தையுடைய பெருந்தகையார் என விரியும். வலம்-வெற்றி. இவர் "சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை-இகல்வெல்லல் யார்க்கு மரிது" என்னுந் தேவர் வாக்குக்கு இலக்கியமாயமைந்தவர் என்பது புனைந்துரை யாகாமையை, அவர் சரித உண்மையை அறிந்த யாவரும் உணராதே போகார். யாழ்ப்பாணத்திலே சைவசமய நிலையும் தமிழ்மொழி நிலையும் குன்றிய காலத்திலே இவர் பிறந்து, மிகுந்த பிரயாசையோடு, அவ்விரு நிலையையும் மேலோங்கி வளர்ச்சிபெறச் செய்தமையினாலே, இவர் பெயரே யாழ்ப்பாணத்தில் இவருக்கு முன்னும் பின்னும் பிறந்த புலவர்கள் பலர் பெயரினும் மேல் நின்று இன்றும் விளங்குவதாயிற்று. இவர் அரிய தமிழ் நூல்கள் பலவற்றை அச்சிட்டு உதவியும் பிரசங்கங்கள் செய்தும், தமிழ் வித்தியாசாலைகளைத் தாபித்தும், தாபிப்பித்தும் பல்லாற்றானும் தமிழை வளர்த்தனர். யாழ்ப்பாணத்திலே கிறீஸ்துமதம் பெருகிச் சைவசமயம் மிகச் சுருங்கிய காலத்திலே இவர் பிறந்து பலவழியானும் சைவசமயத்தைப் பெருகச் செய்தமையினாலே, இவரைச் சமய குரவர்க்குப் பின்னே சைவம் வளர்க்கப் பிறந்தவராகவைத்து,

"ஆறா னில்லைப் புகலியர் கோனில்லை யப்பனில்லைச்
சீறாரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேறாரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்
நீறாரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே."

என்று இவரைப் புகழ்ந்தாருமுளர். யாழ்ப்பாணத்திலே யன்றி இந்தியாவிலுஞ் சென்று இவர் பற்பலவிடங்களிற் பிரசங்கங்கள் செய்திருக்கின்றார். இவரது நாவலங்கண்டு அங்குள்ள மகாவித்துவான்களும் இவரை மதித்தனர். இவர் நாவலங்கண்டே திருவாவடுதுறையாதீனத்தார் இவருக்கு நாவலரென்னுஞ் சிறப்புப் பெயரைச் சூட்டினரென்றால், நாம் அவரைப்பற்றிப் புகழ்ந்து கூறுவதென்னை? அக்காலத்து இராமநாதபுரம் ஜமீந்தாராயிருந்த மகா-ா-ா-ஸ்ரீ. பொன்னுச்சாமித் தேவரும் இவருக்கு மிகுந்த மதிப்புச் செய்தனர். இவர் சிதம்பரத்திலும் ஓர் தமிழ் வித்தியாசாலையையும், சென்னையில் ஓர் அச்சியந்திரசாலையையும் தாபித்தனர். அத்தருமங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மக்களின் பெருங்கடமை.

(பல்லாவரம் பொதுநிலைக்கழக குரு, சுவாமி வேதாசலம் எனும் மறைமலையடிகள் அவர்கள்.)

இலக்கண இலக்கியப் பிழைகளும் அச்சுப் பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையுஞ் சைவசமய நூல்களையும் பதிப்பிட்டுதவுவார் அரியரான எமது இளமைக் காலத்தில் ஆறுமுகநாவலரவர்களே அந்நூல்களைப் பிழையறப் பதிப்பித்து உதவினவர்கள். எழுத்துச் சொல்லாராய்ச்சிக்கு நாவலரவர்கள் தாம் நன்னூலுக்கு வரைந்த அரிய காண்டிகையுரையும், தொல்காப்பியச் சொல்லுக்குச் சேனாவரையர் வரைந்த சொற்பொருட்டிட்பம் வாய்ந்தவுரையும் அவர்களாற் பதிப்பித்து வெளியிடப்படாவிடில் எம்போல்வார் அஞ்ஞான்று தமிழிலக்கணவறிவு பெறுதல் இயலாமலே போயிருக்கும். இலக்கியத்திலும் திருச்சிற்றம்பலக் கோவையாருரையுந்," "திருக்குறள் பரிமேலழகியாருரையும்" அவர்கள் திருத்தமாக அச்சிடுவித்து வெளியிட்டமையினாலே தான், யாம் நம் பண்டைத் தமிழின் மாட்சியுந் தமிழாசிரியரின் தன்னிகரில்லாத் தெய்வப்புலமையும் ஒருங்குணர்ந்து மேலு மேலுந் தமிழ்நூல் கற்பதில் அடங்கா வேட்கையுற்றேம்.

இனி, இவையெல்லாங் கற்றும் வீட்டு நூல் தனிப்படக் கல்லாக்காற் பயன் என்! அதற்கும் பேருதவியாகச் சிவஞானபோதச் சிவஞான முனிவரின் சிற்றுரையினையும் ஆறுமுக நாவலரவர்களே அச்சிட்டுதவியிருந்தார்கள். இவ்வாறெல்லாம் நாவலரவர்கள் அக்காலத்தில் ஆற்றிய தமிழ்த் தொண்டு சிவத்தொண்டுகளின் மாட்சி அளவிடற்பாலதன்று.

உரையெழுதுந் திறத்தில் நாவலரவர்கள் மிகச் சிறந்தவர்களென்பது அவர்கள் திருத்தொண்டர் புராணம் "என்னும் பெரிய புராணத்திற்கு" எழுதிய சூசனத்தால் நன்கு விளங்கும்.

சொல்வன்மையிலும் நாவலரவர்கள் அக்காலத்தில் தமக்கு நிகராவார் எவருமின்றித் திகழ்ந்த வரலாறு எம்மாசிரியர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் எமக்கு நேரே சொல்லக் கேட்டோம். இன்னும் எத்தனையோ வகையால் தமிழுக்குஞ் சைவசமயத்திற்கும் விழுமிய தொண்டாற்றிய ஆறுமுகநாவலரவர்களைத் தமிழ் மக்கள் அனைவரும் எஞ்ஞான்றும் நினைந்து வாழ்த்துதல் அவர்கட்கு இன்றியமையாப் பெருங்கடமையாகும்.

இன்றும் உள்ளனவாயினும் தம்மை வளர்க்கும் வன்மை அமைந்தாரை இக்காலத்துப் பெற்றுக்கொள்ளாமை அவற்றிற்கு ஒரு பெருங்குறையாகும்.

வாக்கியங்களைத் தூய்மையுடையவாகவும் தெளிவுடையவாகவும் படித்துப் பொருளை எளிதில் விளங்கற்கேற்ற அடையாளங்களை (குறியீடுகளை) யுடையவாகவும் எழுதுதற்கும், நூல்களைப் பிழையின்றி அச்சிடுதற்கும், சைவத்தையும் தமிழையும் வளர்த்தற்கு மேற்ற பிரசங்கங்களைச் செய்தற்கும் வழிகாட்டினவர் இவரே என்று சொல்லுதல் ஒருபோதும் மிகையாகாது. அதுபற்றி எவரும் அவைக்கொரு கட்டளையாக (எல்லையாக) இவரையே எடுத்துக் காட்டுவர். இன்னும் நாவலரின் பெருமை பலவுளவாயினும் விரிக்கிற் பெருகுமாதலின் இவ்வளவில் விடுக்கின்றும். அப்பெருமைகளையெல்லாம் இம்மலரில் வரும் பலருரைகளானு முணர்ந்துகொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றமிழ் நாவலர் நயஞ்சொல் நாற்கவிகள்.

(யாழ்ப்பாணம் வித்தியா கந்தோர்ப் பிரதம லிகிதர்
திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள்.)

வெண்பா.

இறைவன் குறுமுனிக்கன் றின்றமிழைச் சொன்னான்
முறையே முழுதுணர்ந்து முன்னாள்—நிறைமதிநேர்
ஆறுமுக நாவலன் அள்ளமுதா யாற்றிடவேக்
காறுநிலை நின்றமொழி காண்.

ஆசிரிய விருத்தம்.

கனைகட லுலவு நாவாய் கலங்கரை விளக்கங் கண்டால்
அனையது, செறிந்த ஞான அறிவினை யடைய நாடி
அனைமொழி யாகு மத்தி அலைபவர், சற்குரு நாதர்
புனைபல நூல்கள் தங்கள் புலன்பட நினைதல் தானே.

ஆசிரியப்பா.

தாய்பால் ஆர்வம் சேய்கொளல் தர்மம்
ஆன்றோர் நெறியே சான்றோர் முறையே
என்றிதை நாட்டி, குன்ற மெறிந்தவன்
அன்று குடமுனிக் கென்றும் நிலவ
உரைத்த மொழிப்பரம் பரைவந்த நாவல!
முன்னறி தெய்வம் அன்னை மொழியே
தன்னை யீன்ற மென்மொழி யதுவே
எனவகங் குழைந்து மனதிடை வழுத்தி
சீராய்ச் சிறப்பாய் ஆரா அமுதாய்
கண்மணி யாக்கருதி வண்ணமாய் வளர்த்து
அருந்திறல் யாண்டும் பெருகிடப் பேணி
பன்மொழி தம்மிலும் நன்மொழி யாக்கினை!
தெய்வத் தமிழை;
நாவல! நின்னை ஆவலாய்ப் பாடினன்.

கலித்துறை.

பாறேன் பருப்புநெய் தெங்கோ டுயர்கனிப் பல்பொருளும்
வேறே சுவைக்கினும் வீமநற் பாக வினைஞனின்பால்
மேறே வருமோ விரும்பமு தாம்போல் விளங்குதமிழ்
நூறே டியேவிருந் தாற்றினர் நாவலர் நூதனமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் இறந்தபின் நடந்தவை.

(வெள்ளவத்தை, திரு. மு. இராமலிங்கம் அவர்கள்.)

சுத்தசாட்குண்ணிய கருணாநிதியாகிய சிவபெருமான், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்யவேண்டுமென்று தம்முடைய திருவுள்ளத்தே முகிழ்த்த பெருங் கருணைத் திறத்தாற் கொண்டருளிய அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருமேனிக்குச் செயப்படுஞ் சிவார்ச்சனையைப் பெரும் பொருளெனக்கொண்டு, அதனையே பெரு விநோதமாகவுடைய சிவஞான பூசா யோகச் செல்வரும் புறச் சமயமாகிய யானைகளெல்லாவற்றையும் பாழ்படச்செய்த பரசமய கோளரியும், பிரசங்கங்கள் வாயிலாக அஞ்ஞானப் பேரிருளை ஓட்டெடுப்பித்துச் சைவசமயத் தாபனஞ் செய்த சிவஞான சூரியோதயமும் செந்தமிழ்ப் பரமாசாரியருமாகிய ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் 1879-ம் ஆண்டுக்குச் சரியான பிரமாதி வருஷம் கார்த்திகைமாதம் 21-ந் திகதி சுக்கிரவாரத்திரவு பத்துநாழிகையாகிய புண்ணிய காலத்திலே ஸ்ரீ சிதம்பர சபாநாயகருடைய குஞ்சிதபாதத்தின் கீழ்ப் பிறந்திறவாப் பேரானந்தப் பெருவாழ்வாகிய பரிபூரண திசையை யடைந்தனர்.

அவரது பிரிவால் "தமிழ்நாடு தன் சிரமிழந்தது; நாமகளும் தன் மங்கிலியமிழந்தாள்; யாழ்ப்பாணம் தன் அங்கமனைத்தினும் பங்கம் பெற்றது; பொதியமலை சாய்ந்தது; திராவிட சாகரம் வற்றியது; வேதமாகிய போதனுசமுத்திரம் வறண்டது; கொடை மேகங்கள் யாவும் ஓட்டெடுத்தன. ஸ்ரீ. குமாரசுவாமி இறந்தால் தமிழ்நாடு தன் கரமிழந்தது; ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களிறக்கத் தமிழ்நாடு தன் சிரமிழந்தது; ஓதுவார் தேவாரமோத, இன்னும் ஓதுக ஓதுகவெனச் சொல்லச் சொல்லி அம்மதுரமொழி தஞ்செவியுட் தெவிட்டத் தமது ஆன்மாவை விடுத்தார். இருதினங்கட்கேனும் வருத்தமாயிருந்திலர். அவரது பிணச்சடங்கு அடுத்தநாளிரவு 12 மணி வரையில் நடந்தது; அவரைத் தகனஞ் செய்தது சந்தனக்கட்டைகளினாலே" என்பன போன்ற வசனங்களை 1879-ம் ஆண்டு மார்கழிமாசம் 10-ம் திகதி வெளிவந்த "இலங்கைநேசன்" என்னும் பத்திரிகை கூறிப் பிரலாபித்தது.

அன்று தொடக்கம் அடுத்த வருடம் கார்த்திகைமாசம் 24-ந் திகதி வரையும் வெளிவந்த ஒவ்வொரு 'இலங்கை நேசன்' இதழிலும் பின்வரும் விளம்பரம் வெளிவந்தது. "உத்தம சத்தம குணதிசயங்கட்கு ஆதாரபீடமாய், ஆரிய செந்தமிழை உண்டு கர்ச்சனை செய்யும் கலைஞான மேகமாய், விநயபூசனை நியம விரத செப தியானாதிகளில் வழுவாதொழுகும் சிவாசாரியரும் மகானுபாவருமாகிய விதாம்பர ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், பிரமாதிவருஷம் கார்த்திகைமாசம் 21-ந் திகதி சுக்கிரவாரத் திரவு பத்துநாளிகையாகிய புண்ணியகாலத்திலே, தேகவியோக மடைந்துவிட்டார்கள்."

நாவலரவர்கள் தேகவியோக மடைந்தபோது உடுப்பிட்டி, திரு. அ. சிவசம்புப்புலவரவர்கள் பாடிய சரமகவியில் ஒரு கவியை மாத்திரம் எடுத்துக் காட்டுதும்.

என்பிரபந்தங்கள்கேட்டுப்
புலவனெனப் பெயரீந்
தன்பிரியன்மற்பரிசு
செயுமென்றவற்றைந்தெவர்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்பிரியத்திற்றலைமை
யெலாந்தந்தநாவலனு
ரின்பிறவாநிலத்துற்று
ரினித்துணையாரெமக்கே.

வட்டுக்கோட்டை, திரு. மு. ஆறுமுகம் பிள்ளை உபாத்தியாயரவர்கள் பாடிய சரம கவியி னொருபகுதியை மாத்திரம் ஈண்டெடுத்துக் காட்டுதும்.

பாரேறு பரசமய கோளரி யெனத்திசைகள்
பரவியே நிறுவு புகழான்
பங்கயத் தவனைநிகர் மீனாட்சி சுந்தரன்
பன்னுகலை துன்னு புலைமைப்
பண்டுநற் பாவாணர் விண்டசொற் பாமாலை
கொண்டபாண் டித்திய சீலன்
பரசுறு மிலக்கண விலக்கியக் கடலுண்டு
பாரின்மிசை பொழியு மேகம்
பசுபதி யிலக்கணம் பாண்டித்திய நீதிநூல்
பாரித்திய பொக்கிஷ கூடம்
பன்னரிய சுந்தரப் பிரசங்க வாசால
பரமயோக் கியசு மேரு.

வண்ணார்பண்ணை, திரு. உ. வைத்திய லிங்கச் செட்டியார் கேள்விப்படி சுன்னாகம், திரு. அ. குமாரசுவாமிப்பிள்ளை யவர்கள் பாடிய சரமகவியில் ஒரு கவியை மாத்திரம் எடுத்துக் காட்டுதும்.

கல்விக் களஞ்சியங் கற்றவர்க்
கேது கருணைவள்ளல்
சொல்வித் துவப்பிர சாரகன்
பூதி துலங்குமெய்யன்
நல்லைப் பதியின னாறு
முகப்பெரு நாவலனுந்
தில்லைப் பதியின் நடராசன்
சேவடி சேர்ந்தனனே.

நாவலரவர்கள் தேகவியோகமானது கேள்வியுற்றதும் திரு. சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்சென்னபட்டணத்திலிருந்து 'இலங்கைநேசன்' பத்திரிகைக்கு 1879-ம் ஆண்டு கார்த்திகைமாசம் எழுதியனுப்பிய செய்யுட்களில் நான்கை ஈண்டெடுத்துக் காட்டுவாம்.

விருத்தம்.

வேதம்வலி குன்றியது மேதகு சிவகாம
விதங்கள்வலி குன்றினவடற்
சூதன்மொழி மூவறு புராணம்வலி குன்றியது
சொல்லரிய சைவசமயப்
போதம்வலி குன்றியது பொற்பொதிய மாமுனி
புகன்றமொழி குன்றியதுநம்
நாதனினை ஞாலமிசை நாடரிய ஆறுமுக
நாவலர் இறந்தபொழுதே. *

சிலேடைக் கலித்துறை.

தகைசேர் தமிழ்க்குத் தனிமுதல்
வன்கந்த வேற்குமர
னகுவே றலமிசை யான்றல
வோன்குரு நல்லையறு
முகநா வலனர னார்க்கினி
யான்புகழ் மொய்ம்பனிப்பார்
இகல்சூர் மதப்பகை செற்றீச
னருள கெய்தினனே.

நக்ஷத்திர வெண்பா.

கார்த்திகைமாதத்துமகங் காசினிக்குச்சைவநிலை
சேர்த்திப் பரசமயஞ் சேதித்துச்—சீர்த்திமிக
மேவுதமிழ் தந்தகந்த வேணல்லூ ராறுமுக
நாவலர்வீ டுற்றதிரு நாள்.

குறள்.

நாயனார் நாற்குரவர் நாவலர்தென் ஞாலமுய்ய
மேயினா ரீசனருண் மேல்.

வண்ணார்பண்ணை, திரு. வை. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் கேள்விப்படி, சிவசம்புப்புலவர் அவர்கள் மாணாக்கர் ஆவரங்கால் திரு. சு. நமச்சிவாயபிள்ளை அவர்கள் பாடிய சரமகவியில் ஒன்றெடுத்துக் காட்டுதும்.

பண்டிதர்கள் மாண்பகலப் பட்டாரே
பாரிடத்தில்
மண்டுகலை வாணியும்பின் வாங்கினளே—
தொண்டரெல்லாம்
தம்மாவி யற்றார்போற் சார்ந்தாரே
ஆறுமுகப்
பெம்மானே நீபிரிந்த பின்.

* நல்லூர், தி. கை. நாவலர் சரித்திரம் பக்கம்-131 "ஆறுமுகநாவல ரடைந்தபொழுதே" என வருதல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1880-ம் ஆண்டு தைமாசம் ஏழாலைச் சைவவித்தியாசாலை உபாத்தியாயராயிருந்த சுன்னாகம், திரு. அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் 'இலங்கைநேசன்' பத்திரிகைக்குப் பாடியனுப்பிய செய்யுட்களுள் மூன்றை ஈண்டெடுத்துக் காட்டுதும்.

பத்திரிகைத் தலைவர்க்கு வேண்பா.

ஆசில் நடுநிலமை ஐக்கியம் முக்கியம் [னும்
பேசும் விடாமுயற்சி பெற்றலங்கை—நேசனெ
பத்திரிகை மன்னு பரிவாய் இடந்தருவாய்
இத்தனிப்பா மூன்றுக்கும் எற்கு.

முன் மடக்குப் பின்மடுகு வெண்பா.

சைவப்பிர காசனர்கள் தம்வா யினிதடக்குஞ்
சைவப்ர காசவித்யா சாலைமன்னன்—
உய்வடைந்தான்
அர்க்கனக்கி னிக்கணத்தன் அத்தமுத்தமிக்கரு
பர்க்கனக்க னக்கன் பதத்து. [ளும்

பின்மடுகு வெண்பா.

என்கடிதம் என்கவிதை யார்க்கும் இனிதென்று
நன்குறவு பார்ாட்டு நாவலனுர்—எங்கேயோ
கங்கைமுடிச் சங்கரன்பொற் கஞ்சமலர்ச் செஞ்
டிங்குவரு வுங்கருத்தோ என். [சரண்விட்

1880-ம் ஆண்டு தைமாசம் 3-ந் திகதி வெளிவந்த இரங்கூன் 'சிந்தாமணி', "இவ்விலக்கணத்திற் கிலக்கியம் எவ்வுழியிருக்கின்றதென்பதும், இவ்விலக்கியத்திற் கிலக்கணம் எவ்வயின் பெறலா மென்பதும், இச்சமயநெறி எவ்வாகமத்திற் கண்டிருக்கின்றதென்பதும், யாழ்ப்பாண நாவலரைக் கேட்கிற் றெரியுமெனச் சொல்லும் புலவோர்கள் இனி யாரைக் குறித்துக் காட்டுவாரோ! அந்தோ!! அவரைப்போன்ற தமிழிலக்கண விலக்கியச் சைவாகம இலக்கி வேறொருவர் இந்நாளிலில்லையே!!!", எனக் கூறிப் பிரலாபித்தது.

நாவலரவர்கள் தேகவியோகமானது கேள்வியுற்றதும் அக்காலத்தில் கும்பகோணத்துப் பொற்ருமரைவாவிப் பிறைமேறி ஸ்கூலில் (Primary School) தமிழ் உபாத்தியாயராயிருந்த சுன்னாகம், திரு. பூ. முருகேச பண்டிதரவர்களாற் பாடி 'இலங்கை நேசன்' பத்திரிகைக்கு 1880-ம் ஆண்டு மாசிமாதம் அனுப்பப்பட்ட செய்யுட்கள் ஒன்பதில் இரண்டை ஈண்டெடுத்துக் காட்டுதும். ஏனையவற்றை விரிவஞ்சி விடுத்தனம்.

வெண்பா.

ஆறுமுக நாவலனை ஆருமுண ராப்பொருளைத்
தேறுமுகங் கொண்டு தெளிந்தானை—ஆறுமுகம்
என்றிருக்கஓர்முகமும்எங்களுக்குத்தோற்ருமற்
சென்ருெளித்தான் அன்ருே! சிவா.

திங்களணி செஞ்சடையான் தேவனென
வந்ததுவும்
அங்கவனூல் நூலா யமர்ந்ததுவும்—எங்குமிசை
கொண்டியாழ்ப் பாணங் குலாவியதும் ஆறுமுக
அண்டர்பிரான் வந்தபின்பே யாம்.

யாழ்ப்பாணத்துச் சைவப்பிரகாச வித்தியாசாலை மனேசரும் ஆதீனருமாகவிருந்த நாவலரவர்கள் தேகவியோக மடைந்துவிட, அவ்வித்தியாசாலைக்கு மனேசராக திரு. சதாசிவம்பிள்ளை என்பவரைப் பகிரங்க வித்தியாதரிசனகர்த்தர் ஏற்றுக்கொண்டாரென 'இலங்கைநேசன்' பத்திரிகையா லறிகின்ருேம்.

நாவலரவர்கள் தேகவியோகமானது கேள்வியுற்றதும் அவர்கள் மாணுக்கராய்ச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அத்தியாபகராய் இருந்தவரும் அக்காலத்தில் திருவனந்தபுரத்தில் கிர்வாண பாஷாப்பியாசஞ் செய்தவருமாகிய திரு. சி. செந்திநாத ஐயரவர்கள் 'சந்தேச'பத்திரிகை வழியாக 1880-ம் ஆண்டு மாசி மாதம் அனுப்பப்பட்ட செய்யுட்கள் நான்கையும் ஈண்டெடுத்துக் காட்டுதும்.

வெண்பா.

வன்ருெண்டன் நாவலர்கோன் வாழ்வா
வதுமாயம்
என்றுரைத்த தேவாரத் தின்பொருளை—
நன்றியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தைசெய்தேன் நாவலனே செத்தாய்நீ
என்பதனாற்
புந்திநொந்து துக்கமிக்க போது.

நன்னடக்கைப் பத்திரிகை நாவலனே நீயனுப்ப
என்னதவஞ் செய்தேனோ நானறியேன்—
அன்னதனுள்
உள்ளசில வாசகங்கள் உற்றுணரும்
போதெல்லாம்
வெள்ளம் பொழியும் விழி.

சுன்னைக் குமார சுவாமியிடத் தோர்கடிதம்
உன்னைக் குறித்தனுப்பி யுள்ளுவந்தேன்—
அன்னதுன்பாற்
சேருமுன்னம்நாவலனே சென்றாய்சிவலோகம்
யாரும் பதைபதைக்க இங்கு.

கட்டளைக்கலித்துறை.

தேவாரம் யான்சொலக் கேட்டு
மகிழ்ந்து சிரத்தையுடன்
பூவாதி கொண்டு புரிசிவ
பூசைப் பொலிவழகும்
பாவாணர் மெச்சச் செயும்பிர
சங்கமும் பார்த்தினிநான்
நாவார வாழ்த்திடு நாளுமுண்
டோநல்லை நாவலனே.

1880-ம் ஆண்டு மாசி மாதம் 9-ந் திகதி கண்டியில் வசித்த திரு. இ. சரவணமுத்து ஓவசியர் பாடியனுப்பிய இரு செய்யுட்களில் ஒன்றைக் கீழே காண்க.

கம்பன் கலங்குங் கவிக்காள
மேகங் கரங்குவிக்கும்
வம்புரை கூறும் ஒட்டக்கூத்
தனும்மத வாயொடுங்கும்
அம்புவி போற்றும் ஆறுமுக
நாவல னுங்குரவன்
இம்பர்அன் றுற்றிடின் என்செய்யு
மோபுக ழேந்தியுமே.

கொக்குவில், திரு. குகதாசன் அவர்கள் பாடிய தனிச்செய்யுட்களிலே இரண்டை ஈண்டெடுத்துக் காட்டுதும்.

வெண்பா.

தொல்லைமறை நாலோ தோமில் சிவாகமமோ
நல்லைநகர் ஆறுமுக நாவலர்வாய்ச்—
சொல்லமிர்தோ
சித்தியுடைத் தென்னாச் சிந்தைசெயிற்
பின்னையதே
எத்திதியுஞ் சித்திபடைத் தென்.

கலித்துறை.

நாமக ணுவிற் பயிலுகை
பாவலர் நான்முகனாய்த்
தேமரை மாதிடஞ் சேர்தலி
னாற்றிரு மாலவனாய்
மாமறை ஆகம போதனை
ஊட்டலின் மாணரணாய்
பூமிசை மேவிய நாவல
பூபதி போயினரே.

திரிகோணமலை உற்றதுரைட்போன் கூறிய தனிக்கவிகளுள் ஒன்று வருமாறு.

சீர்கொண்ட சிறீசிறீ ஆறுமுக
நாவலனைத் தென்பால் வைகும்
பேர்கொண்ட மலயமுனி காணுமா
றழைத்தனனோ பெருமை கேட்டுக்
கார்கொண்ட முகில்வாகன் பொன்னுலகுக்
கழைத்தனனோ கவின்கொள் கங்கை
நீர்கொண்ட சிவன்றன்பா லழைத்தனனோ
யாதென்று நிகழ்த்து வோமே.

ஆ. ஆ. அவர்கள் பாடிய தனிக் கவிகளுள் ஒன்றை ஈண்டெடுத்துக் காட்டுதும்.

சீராருந் தில்லைக் கனக சபாபதி
செய்தவிந்தப்
பேரார் கருணையை யென்னவென் பேந்திருப்
பேருலகில்
ஏராருஞ் சைவம் வளர்த்திட்ட நாவல
னென்குருவைப்
பாரார் புகழ்ந்திடத் தம்மொளி யோடுறப்
பண்ணினளே.

புலவரிருவர், வித்துவ சிரோன்மணியாகிய திரு. சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களும், திரு. அ. சிவசம்புப் புலவரவர்களும் ஒருவருக்கொருவர் பாடியனுப்பிய பாடல்கள் மூன்றை 1880-ம் ஆண்டு பங்குனி மாசம் 10-ந் திகதி வெளிவந்த "இலங்கைநேசன்" பத்திரிகையிற் கண்டபடி எடுத்துக் காட்டுகின்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலித்துறை.

ஆரூர னில்லையென் காரிகை
யாலிவ் வவனிதொழப்
பேரூறு மாறு முகநா
வல்பெரு மான்பெருமை
சீரூறு மாறு தெரித்தாய்
சிவசம்பு தேசிகநிற்
காரூரி நேரின் றன்றோநின்
சொல்வன்மை யறிந்தனனே.

கற்றூரைக் கற்றவர் காமுறு
வாரெனக் கண்டமொழிக்
குற்றூ யிலக்கிய மாகவென்
பாவை யுவந்துகவி
* சொற்றூய தென்றலைக் கண்ணதென்
னுன்னன்பு தொடர்ந்துகொண்டேன்
மற்றூ ரெனக்கிணை தாமோ
தரம்பிள்ளை மாணிக்கமே.

மன்னருத் தியோகமும் வான்கலை
யாவும்பொன் மன்றுடையான்
பொன்னடிப் பூசையு நீதியு
மெய்யும் புகழுமுத
லின்னவெல் லாங்கொண்ட தாமோ
தரம்பிள்ளை யென்னும்வள்ளால்
நென்னலி லெய்திக்கண் டேனின்
றிருமுக நேசத்தினே.

தேடக் கிடையாத சஞ்சீவியாகிய ஸ்ரீ நாவலர் தேகவியோக மெய்தினரென்னுந் தீயசொல் நாம் கேட்டபோது மதி மயங்கி நாம் புலம்பிய புன்கவியொன்று கீழ்க்காண்க.

ஆறுமுக நாவலரே ஆறுமுகநா வேலவரே
ஆறுமுக மேலவரே அற்றலரே—ஆறுமுகந்
தேடி யொழிந்தீரே தேடில் கிடையாநீர்
தேடி யழகற்றோர் தினம்.

இக்கவியில் தவறிருந்தாலும் கல்விமான்கள் "மதிமயங்கிப் புலம்பிய"தெனக் குறிப்பிட்டபடியால் கவனியார்களென்றெண்ணுகிறோமெனச் சிங்கப்பூர் 'தங்கைநேசன்' என்னும் பத்திரிகை கூறிற்று இஃது. 17-3-1880 'இலங்கைநேச'னிற் கண்டது.

புலோலிப் பசுபதீசுவரசுவாமி கோயிலருச்சகருள் ஒருவராகிய பிரமஸ்ரீ ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் பாடல்களுள் குறள் வெண்பாவை மாத்திரம் காட்டுவாம்.

நனியார்கீ ராறுமுக நாவலனூர் போலிங்
கினியா ரினியா ரெமக்கு.

உடுப்பிட்டி, பிரமஸ்ரீ ச. இராமனுதக் குருக்களின் பாடல்களுள் இரண்டை ஈண்டெடுத்துக் காட்டுதும்.

பாணினியும் பொற்பொதியப் பண்ணவனும் பான்மதியார்
வேணியர னாருளான் மேவியொன்றாய்—நீணிலமே
லாறுமுக நாவலனு மான்றகுரு வாயமர்ந்திட்
டேறினர்பே ரின்பமுத்திக் கே.

சொல்லிறைக்கும் வாதவூர்த் தோன்றலுக்குஞ் சுந்தரற்கு
மொல்லுமெண்பத் தொன்றெண்ணான் கோரறுமூன்—றெல்லையரு
ளார்சண்பை யற்கீரெட் டாறுமுக நாவலர்க்குத்
தீர்வைம்பத் தேழென்றே தேர்.

ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் சிவபதமடைந்த பின்பு சைவப்பிரகாச வித்தியாசாலையிலே சைவப் பிரசங்கம் முதலிய சமயவிருத்திக்குரிய கருமங்கள் காலந்தோறும் செய்யப்படா தொழிந்தமைபற்றிச் சிந்திக்கும் பொருட்டு 1880-ம் ஆண்டுக்குச் சரியான விக்கிரம வருஷம் சித்திரைமாதம் 6-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் 'இலங்கைநேசன்' அச்சுக்கூடத்தில் ஓர் விசேஷ மகாசபை 'இலங்கைநேசன்' பத்திராதிபர், திரு. H. M. சின்னத்தம்பி அவர்களாற் கூட்டப்பட்டது. வட்டுக்கோட்டை ஸ்ரீ. நா. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள் அக்கிராசனாதிபதியாயிருந்து சிவஸ்துதியும்

[* சுன்னாகம், திரு. அ. கு. தமிழ்ப்புலவர் சரித்திரம் பக்கம் 103-ல் "சொற்றூல தென்றலைக் கண்ணதுன் னன்பு தொடர்ந்துகொண்டேன்" என வருதல் காண்க.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையோர்க்கு வந்தனமும் கொடுத்தார். உடனே பத்திராதிபர், திரு. H. M. சின்னத்தம்பி எழுந்து நாவலரவர்களுடைய தேகவியோகத்தைக் குறித்துக் கல்லுங் கரையும்படி சிறிதுநேரம் பிரலாபித்துப் பலதேசத்தின்கண்ணிருந்து பாடி அனுப்பப்பட்ட சரமகவிகளை அக்கிராசனாதிபதியால் வாசிக்கப்பட்டபின் நாவலரவர்களைப் பின்பற்றிச் சைவசமயாபி விருத்திக்கேற்ற சைவப்பிரசங்க முதலியவற்றைச் செய்யக் கடவோமென்று பேசி முடித்தார். பின் நாவலரவர்களின் மாணுக்கன் வட்டுநகர், திரு. அம்பலவாணபிள்ளையும், வண்ணார்பண்ணை, திரு. மாணிக்கம் என்பவரும் பத்திராதிபர் பேசியவற்றைத் தழுவிப் பேசினர். கூட்டம் முடியும் சமயம் வல்வை, இயற்றமிழ்ப் போதகாசிரியர் திரு. ச. வைத்திலிங்கபிள்ளை தம் மாணுக்கரோடுவரச் சபாநாயகர் போதகாசிரியரைச் சில விஷயம் பேசும்வண்ணம் கேட்க அவர் நாவலப் பெருமானது புகழைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்றபடி பேசிமுடித்தார். அன்று தொடக்கம் தமிழ்ப் பிரபல்ய வித்யாசங்கம் என ஓர் சங்கம் இலங்கை நேச முத்திராக்ஷரசாலையிலே தொடக்கம் பெற்று ஒவ்வொரு சுக்கிரவாரந்தோறும் நடைபெற்று வந்தது.

மேலே காட்டிய புலவர்களைவிட, நீர்வேலி, திரு. சிவப்பிரகாசபிள்ளை; பிரமஸ்ரீ மு. கணேசையர்; கொழும்பு, பிரமஸ்ரீ கு. முத்துச்சாமிக் குருக்கள்; கோப்பாய், பிரமஸ்ரீ இ. செகநாதஐயர்; கோ. க. முதலியோரும் நாவலப் பெருமான்மீது பாடியிருக்கின்றார்கள். விரிவஞ்சி அவைகளை விடுத்தனம்.

1880-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21-ந் திகதி கரல் விசுவநாதபிள்ளையும் பரலோக யாத்திரை பண்ணினர். அவர்மீது திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் பாடிய கவிகள் நான்கினுள் மூன்றுவது நாவலரையும் குறிப்பதாலும் அக்கவியின் சொல்நயம் பொருணயம் பற்றியும் அதனையும் ஈண்டெடுத்துக் காட்டி இச் சிறு கட்டுரையை முடிப்பாம்.

ஆறுமுகநாவலரையன் றழைத்தார்போதாதோ
வீறுவிஸ்வ நாதனையும் வேண்டினர்—நீறுதிகழ்
சைவந் தனையங்குந் தாபிக்க வோவிவர்கள்
கைவந்த வர்களெனக் கண்டு.



நாவலர் பேறு.

நற்ற வத்தர் நவின்றநன் னூன்முறை
கற்றுணர் கந்த வேடவத் தாற்பிறந்
துற்ற தென்றமி ழுஞ்சைவ முந்திறன்
பெற்றிடப் பெரும் பேறுயர் நாவலன்.

—நா. பொன்னையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்புரை.

(தொல்புரம், இளைஞர் கலாவிருத்திச்சங்கத்தார் கொண்டாடிய நாவலர் தினக் கொண்டாட்டத்தில், மேற்படிசங்கப் போஷகரும், மூளாய், சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய **பண்டிதர், திரு.கா.போ. இரத்தினம்** அவர்கள் கூறிய வரவேற்புரையின் சுருக்கம்.)

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

சிற்றம்பலமேய செல்வன் கழலேத்தும் செல்வர்களே!

தமிழ்த்தாயினதும் சைவ சமயத்தினதும் எழுச்சிகண் டின்புற எண்ணி ஈண்டு வந்து குழுமியிருக்கும் உங்களை வரவேற்கும் பணியை மேற்கொண்டுளேனாதலின், உங்கள் யாவரையும் திருவருட்டுணைகொண்டு அன்புடன் வரவேற்கின்றேன். உங்கள் வரவு நல்வரவாகுக!

நாட்டின் வளர்ச்சி கருதிப் பலதுறைகளிலும் உழைத்து ஒவ்வொரு நாட்டிற்கும் ஆக்கத்தையும் சிறப்பையும் ஈட்டிவைத்துச் சென்ற பெரியோர்கள் ஒவ்வொரு நாட்டிலும் பலர் உளர். அப் பெரியார்களுடைய புகழுடம்பைப் போற்றி வளர்த்தல், ஒவ்வொரு நாட்டு மக்களுக்குமுரிய கடனாகும். ஒரு நாட்டின் வளர்ச்சி கருதி உழைக்கும் துறைகள் யாவற்றுள்ளும் அந்நாட்டு மொழியும், சமயமுமே சிறந்தன என்பது அறிஞர்கள் துணிபு.

அன்பர்களே! இக்காலை பல துறைகளிலும் சிறப்புற்று ஓங்கி மிளிரும் மேலைத்தேசங்களைப் பாருங்கள். எந்தத் தேசத்திலே தாய்மொழி தலையிடம் பெறாமலிருக்கிறது? தாய்மொழி வளர்ச்சியல்லவா? நாட்டுவளர்ச்சி. தாய்மொழியின் சிறப்பல்லவா? நாட்டின் சிறப்பு. தாய்மொழியின் பெயரல்லவா? அந்நாட்டுமக்களின் பெயர். தாய்மொழியின் பெருமையை எடுத்துக் கூறவும் முடியுமா? இம்மை மறுமை இரண்டிலும் உயிர்க்கு உற்றதுணையாய் உள்ளது தாய்மொழியே! தாய்மொழி மூலமன்றோ ஒரு நாட்டின் கல்வி பெருகும்; அறம்வளரும்; அரசியல் சிறக்கும். தாய்மொழி வளர்ச்சிக் குழைத்தவர்களல்லவா? நாட்டுவளர்ச்சிக்கு அதிகம் உழைத்தவர்கள். இவ் வுண்மையை அறிந்த மேலைத்தேசத்தவர்கள், தங்கள் சிறந்த கவிவாணர்களாகிய ஷேக்ஸ்பியர், ஹோமர், தாந்தே, மில்ரன் முதலியோரைப் பொன்னேபோற் போற்றுகிறார்கள். அவர்கள் பொருட்டு விழா வயர்கின்றார்கள். நம் கீழைத்தேசத்தவர்களோ இவ்விஷயத்தில் மிகவும் கீழ்நிலையில் இருக்கின்றார்கள். இவர்களுள்ளும் தமிழர்களாகிய நாங்கள் உறங்கிக்கொண்டே இருந்தோம்.

இப்பொழுது விழிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. தென் இந்தியாவிலுள்ள அறிஞர்கள் பலர் திருவள்ளுவர், சிவஞான முனிவர், கம்பர் முதலியவர்களைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். திருவள்ளுவர், திருநாட்கழகத்தார் செய்யும் அரும்பெரும் தொண்டுகள் போற்றற்பாலன. அக் கழகத்தார் வெளியிட்ட "திருவள்ளுவர் நினைவுமலர்" குறிப்பிடத்தக்கது. இனிச் சமயத்தைப்பற்றிப் பார்ப்போம். தாம் பிறந்த சமயம் இதுவெனவும், தமது சமயக்கடவுள் இவர் எனவும், தமது பிறப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் அவரை அடைதலே எனவும், அவரை அடையும் நெறிகள் இவையென வும், அறிதலும், அறிந்து உணர்ந்து ஒழுகித் தம் பிறப்பின் பெரும்பயனைப் பெறுதலும், ஒவ்வொருவரினதும் கடனாகும். பிறப்பின் பயனைப் பெறுதற்குச் சமயநெறிகளில் நின்றே ஒழுகவேண்டும். ஆகவே, ஒருநாட்டு மக்களுக்குப் பெரும்பயன் அளிப்பது அவர்களுடைய சமயமே. சமயத்தை வளர்த்தவர்கள் மக்களின் பிறவிப் பயனைப் பெற்றுக்கொடுக்க முயன்றவர்களாவர்.

இதுகாறுங் கூறியவற்றால் தாய்மொழி வளர்ச்சியும், சமயவளர்ச்சியுங் கருதி உழைத்த பெரியார்களே மிகச் சிறந்தவர்களென்பது வெளிப்படை. இவர்களுள்ளும் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ்செய்தவர்களே மிகமிகச் சிறந்தவர்கள். இன்று நாங்கள் கொண்டாடுகின்ற நாவலர் அவர்கள், எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்கும், எங்கள் சமயமாகிய சைவ சமயத்திற்கும் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்த பெரியார் என்பதை நீங்கள் யாவரும் நன்கறிவீர்கள்.

ஆலவா யவிர்சடைக்கடவுள், அகத்தியனார், தொல்காப்பியர், வள்ளுவர், கம்பர் முதலிய புலவர்கள் தமிழாராய்ந்தும், நூல்களையியற்றியும் தமிழை வளர்த்தனர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலியோர் பழந்தமிழ் நூல்களுக்கு உரைகளியற்றித் தமிழை வளர்த்தனர். நக்கீரர் சிவஞானமுனிவர் முதலியோர் நூல்களியற்றியும், உரைகளியற்றியும் தமிழ்மொழியை வளர்த்தனர். பழந்தமிழ் வள்ளல்களும், வேந்தர்களும் தமிழ்ப்புலமை மிக்காராய்ச் செய்யுள்கள் இயற்றியும், நூல்களியற்றியும், தமிழ்ப் புலவர்களைத் தம் உயிர்போலப் போற்றி வேண்டிய பொருள்களைக் கொடுத்து ஆதரித்தும் தமிழை வளர்த்தனர். மெய்கண்டார் முதலிய சந்தான குரவர்கள் சமயநூல்களை இயற்றிச் சைவ சமயத்தை வளர்த்தனர். திருஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர்கள் தேவாரம், திருவாசகம் முதலிய திருவருட் பாக்களைப் பாடியும், புத்தம், சமணம் முதலிய புறச்சமய இருள்களை ஓட்டியும் சமயத்தை வளர்த்தனர். ஆனால், தமிழையும், சைவத்தையும் ஒருங்கு வளர்த்த பெருமை நாவலருக்கே உரியதெனக் கூறுவாம்.

இவர், திருக்குறள், திருக்கோவையார், சேதுபுராணம், இலக்கணவிளக்கச் சூறாவளி, தொல்காப்பியப் பாயிர விருத்தி, திருவிளையாடற்புராணம், பாரதம், நன்னூல் விருத்தியுரை முதலிய பல நூல்களைப் பரிசோதித்து அச்சிடுவித்தார். பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், பெரியபுராண சூசனம், இலக்கணச் சுருக்கம், சைவ வினாவிடைகள், பாலபாடங்கள் முதலிய பல வசனநூல்களை எழுதினார். தமிழ் வசனநடையிற் குறியீட்டைப் புகுத்திச் செப்பஞ்செய்தார். இவருடைய வசனநடை அமுதை உண்டுகளித்த அறிஞர்களால், 'வசனநடை கைவந்த வல்லாள' ரெனப் போற்றப்பட்டார். கோயிற் புராணம், நன்னூல், சிவதருமோத்தரம் முதலிய பலநூல்களுக்கு உரைகண்டார். சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் வித்தியாசாலைகளைத் தாபித்தார். வித்தியாசாலை தாபிப்பதற்குப் பொருளுதவி புரியுமாறு இவர் எழுதி வெளியிட்ட விக்கியாபனங்கள் யாவருடைய மனத்தையும் கொள்ளை கொள்ளத் தக்கன; "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்பதை விளக்கிக் காட்டுவன; அல்லும் பகலும் சைவசமய வளர்ச்சியும், தமிழ் வளர்ச்சியும் கருதியே உழைத்தனர் என்பதைப் புலப்படுத்துவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிலையில்லாத என் சரீரம் உள்ளபோதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது; அக் கருத்து இது. தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலங்கடோறும் வித்திபாசாலைகள் ஸ்தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமே" என ஒரு விக்கிபாபனத்தில் இவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

பிரசங்கஞ் செய்வதில் அதிலும் சமயப் பிரசங்கஞ் செய்வதில் மிகவுஞ் சிறந்து விளங்கினர். இவரால்தான் சைவசமயப் பிரசங்கங்கள் முதன்முதல் தொடங்கப்பட்டதென்பர். பிரசங்கத்திற் சிறந்து விளங்கிய பெருமையும் இவருக்கே உரியதென அறிஞர் கூறுவர். இவரின் நாவீறு போற்றன் மாலையது. இந்த வீற்றைக் கண்டு ஆச்சரியமுற்றே திருவாவடுதுறை உபய சந்நிதானங்கள் பல வித்துவான்கள் முன்னிலையில் இவருக்கு நாவலர் என்னும் பட்டத்தைச் சூட்டினர். சேக்கிழார், வள்ளுவர் முதலியோர் தங்கள் பெருஞ்சிறப்பால் தங்கள் குடிப் பெயர்களையே தங்கள் பெயர்களாகக் கொண்டு விளங்குவதுபோல நாவலரெனும் பட்டப்பெயரால் விளங்கிவந்த தமிழகத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஒருவரே.

"நிலவுலகி லொருமதிய நிலவியதென்
றேநிகழ்த்தப்
பலகலையு நிரம்பியாழ்ப் பாணமெனும்
பாற்கடலி
லிலகியெழீஇ நாவல்ரென் றியம்புபெய
ரெவர்பெறினுங்
குலவுதமை யேகுறிக்கக் கொண்டபெருங்
குலப்புகழார்"

எனச் சேற்றார் அருணாசல கவிராயர் கூறியிருக்கின்றார்.

நாவலரின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு அவர்களது ஒழுக்கத்தின் உயர்வு நன்கு விளங்கும். கல்வியறிவு பொன் மலரைப் போன்றது. அதை நறுமணம் கமழச்செய்வது ஒழுக்கமே.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்பதற்கு இலக்கியமாய் நின்றவர் நாவலரே. இவருடைய ஒழுக்கமே இவருக்கு விழுப்பத்தைத் தந்தது. இவருடைய விழுப்பமே,

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்னும் பொய்யாமொழியில் உள்ள விருப்பம், இவரிடத்தே அறிஞர்கள் போற்றிக் கொள்ளத்தக்க குணதிசயங்கள் பல நிறைந்திருந்தன. இவர் மிக்க புலமை படைத்தவர் என்பதற்கு இவர் பாடிய சில ஆசுகவிகளே போதிய சான்றாகும். 'சீர்பூத்த.....' என்னுஞ் செய்யுள் இவர் பாடிய ஓர் ஆசுகவியாகும். இவர் தம் நுண்மைமானுடை புலம் யாவராலும் எண்ணி எண்ணிப் போற்றுந் தகையது. அதனை விளக்கப் பல கதைகளுண்டு. ஒன்றனை ஈண்டு குறிப்பிடுகின்றேன். நாவலர் அவர்களுடன் நட்புரிமை பூண்ட ஐயங்கார் ஒருவர் இருந்தார். நாவலரும் ஐயங்காரும் ஓரிடத்திற்குச் சென்றனர். செல்லும் வழியில் சாம்பலால் மூடப்பட்டுக் கிடந்த பவ்வீயை ஐயங்கார் கண்டார். கண்டவர் "இதோ நீங்கள் போற்றி நெற்றியிலணியும் விபூதி கிடக்குமிடத்தைப் பாருங்கள்" எனப் பரிகாசமாக நாவலர்க் குரைத்தார். அதுகேட்ட நாவலர் "ஐயங்காரே அஃது ஏன் அங்கிடப்பட்டிருக்கிறதென்று உமக்குத் தெரியாதா? சொல்லுகிறேன் கேளும். அதற்குள் விருப்பதை உங்கள் கடவுள் எடுத்த வராக அவதாரம் கண்டால் உடனே உண்டுவிடு மென்றே" என்றார். ஐயங்கார் வெட்கித் தலைகுனிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பொது நிலையங்களிலும் தர்ம ஸ்தாபனங்களிலும் ஆலயங்களிலுமுள்ள குறைகளை யாவர்க்கும் அஞ்சாது எடுத்துரைத்தார். பிறரிடத்துக்காணப்படும் குறைகளை எடுத்துக் காட்டி அவர்களை நன்னெறிப் புகுத்துவதற்குச் சிறிதும் பின்னில்லார். இவர்கள் எழுதிய கண்டனங்கள் பல. இவற்றை உற்று நோக்கின் இவரது அஞ்சாமை நன்கு விளங்கும். நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றங் குற்றமே என இறைவரோடு எதிர்த்தனர் நல்லிசைப் புலவராகிய நக்கீரர்.

"மன்னவனும் நீயோ வளநாடு முன்னதோ
உன்னை யறிந்தோ தமிழை ஓதினேன்."

எனச் சோழராசனோடு எதிர்த்தார்-கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர். பழந்தமிழ் வேந்தர்களைக் கடிந்து பாடிய புலவர்களும் பலருளர். ஆகவே தெய்வப் புலமையுடைய புலவர்களுக்கு அஞ்சாமையும் இயல்பாயுண்டுபோலும். இவர் தம் அஞ்சாநெஞ்சே இவர்காலத்தில் கிறிஸ்தவசமயத்தைத் தலைகாட்டாதொடுக்கிய தெனலாம். கிறிஸ்தவ பாதிரிமார் உத்தியோகங்கள் கொடுத்தும், பொருள் கொடுத்தும், இலவசமாய் ஆங்கிலக்கல்வி கற்பித்தும், மருந்துதவியும் சைவ சமயத்தவர்களைத் தம் மதத்திற்குத் திருப்பிய காலமே நாவலர் காலம். கிறிஸ்தவ பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் விபூதியை அழித்துவிட்டுப் பாடசாலைக்குச் சென்ற காலமு மஃதே கிறிஸ்தவ பாதிரிமாருடனாடி அவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்பச் செய்யும் முயற்சிகளை அறியும் சந்தர்ப்பமும் நாவலருக்குக் கிடைத்தது. கிறிஸ்தவ பாதிரியாராகிய பார்சிவல்துரைக்குத் தமிழ்ப் பண்டிதராக விருந்து கிறிஸ்தவ சமயநூலாகிய பைபிளையும் மொழிபெயர்த்தமையால் அதிலுள்ள குறை நிறைகளையும் நன்கு அறியலானார்.

பரசமயமாகிய கிறிஸ்தவசமயம் பரவச் சற்சமயமாகிய சைவசமயம் குன்றுகிறதைக்கண்ட நாவலர்உளம் பதைபதைத்தது. சைவசமயத்தை வளர்க்க வேண்டுமென்னுங் கருத்தைப் பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் இவருள்ளத்து உதிப்பித்தார். அக்கருத்தாலுந்தப்பட்டுச் சைவ சமயத்தைப்பற்றிய பல பிரசங்கங்களைச் செய்தார். கிறிஸ்தவ பாதிரிமாரைச் சொற்போருக் கறைகூவி அழைத்தார். கிறிஸ்தவ சமயத்தையும், கிறிஸ்தவப் பாதிரிமார்கள் செய்யும் அட்டூழியங்களையும் கண்டித்துத் துண்டுப் பத்திரங்கள் வெளியிட்டார். அக்காலத்திலிருந்த தமிழறிஞர்களையும் கிறிஸ்தவ சமயக் கண்டனப் பத்திரங்கள் எழுதும்படி தூண்டினார். பாதிரிமார்கள் சைவ சமயத்தை நிந்தித்து வெளியிட்ட துண்டுப் பத்திரங்களுக்கு மறுப்புகள் எழுதி வெளியிட்டார். இன்னும் இவர் கிறிஸ்த சமயத்தை வேரறுத்துத் தொலைக்கச் செய்த முயற்சிகள் அளவிறந்தன. விரிப்பிற் பெருகுமாதலின் விடுக்குதும். இவர் தம் கிறிஸ்துமத கண்டனப் பிரசங்கங்களையும், பத்திரிகைகளையும் கேட்டும் கண்டும் அறிந்த பாதிரிமார்கள் தங்கள் 'Hindu-Paster' என்னும் புத்தகத்தில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டுமிருக்கிறார்கள். 1855-ம் ஆண்டில் இங்கிலாந்தில் அச்சிடப்பெற்ற உவெஸ்லியன்மிஷன் அறிக்கைப் பத்திரத்தில் இவரது சைவசமய தூஷண பரிகாரம் எனும் நூலைப்பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. அந்நூலாசிரியரைப் பற்றிப் பரசமயத்தவர்களாகிய அவர்கள் எழுதியிருக்கும் குறிப்புக்கள் சிலவே இவர் தம் ஒப்புயர்வில்லாப் பெருமையையும் இவர் சைவசமயத்தை வளர்த்தமையையும் கிறிஸ்தவசமயத்தை ஒடுக்கினமையையும் நன்கு காட்ட வல்லன. இப்பரசமய கோளரி அவதரித்திராவிட்டால் யாழ்ப்பாணம் இப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழுது கிறிஸ்தவர்கள் மயமாகவேயிருக்கும். சைவசமயமும் தமிழும் பிரிக்கப்பட்டே போய்விடும்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் இவர் இறந்த சில்லாண்டுகளின் பின் இவரைப்பற்றி இலங்கைச் சட்டநிரூபண சபையிற் பேசியபொழுது, 'The Champion Reformer of Hindus' என்று புகழ்ந்தனர். இவர் சிவபதமடைந்தபோது,

"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே—
எல்லவரும்
ஏத்தும் புராணக மங்களெங்கே
ப்ரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை" எனவும்,

"ஆரூர னில்லைப் புகலியர்
கோனில்லை யப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசக
னில்லைத் திசையளந்த
பேரூரு மாறு முகநா
வலனில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப்
போதிக்கு நீர்மையரே."

எனவும் அறிஞர்கள் கூறியது மிகப் பொருத்தமானதே. நாவலர் அவர்களின் பெருமைகளையெல்லாம் ஈண்டெடுத்துக்கூற நேரமும் போதாது; எவ்வாறெடுத்துக்கூறினும் கூறிமுடிக்கவும் முடியாது. அவர்களைப்பற்றி மிக விரிவாய் இங்கிருக்கும் அறிஞர்கள் கூறுவார்கள். நாவலர் அவர்களைப் பற்றிக் கூறும் நூல்களிலும் அறியலாம்.

இத்தகைய தமிழ்ப் பெரியாரும் சைவப் பெருந் தகையாளருமாகிய நாவலரை ஒவ்வொரு தமிழனும் சிறப்பாக ஒவ்வொரு சைவனும் போற்ற வேண்டியது கடனாகும். நாவலர் அவர்கள் 1879-க்குச் சமமாகிய பிரமாதிவருடம் கார்த்திகை மாதம் உ௧-ந௨ சுக்கிரவாரமும் மகநட்சத்திரமும் சத்தமித் திதியுங் கூடிய புண்ணிய தினத்திலே சிவபெருமானுடைய திருவடி நீழலை அடைந்தார். அவர்கள் சிவபதமடைந்த 58-ம் ஆண்டு இன்று பூர்த்தியாகி 59-ம் ஆண்டு பிறக்கிறது. அவர்கள் சிவபதமடைந்த தினம் யாழ்ப்பாணத்திலும் தென்னிந்தியாவிலும் வருடாவருடம் கொண்டாடப்பட்டு வந்தது. இன்றைய தினமும் பல விடங்களில் கொண்டாடப்படுகிறது. கொழும்பு விவேகானந்த சபையார் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. நிற்க,

இத்தினத்தை இப்பொழுது கொண்டாடும் தொல்புரம் 'இளைஞர் கலாவிருத்திச் சங்க'த்தாருடைய பெருமுயற்சி வியப்பிறந்தது. இளைஞர்களாயினும் யாவரும் போற்றத்தக்க நன்முயற்சிகளைச் செய்ய முனைகின்றார்கள். இவர்களின் முயற்சிகளைக் கண்டு அவமதியாமலும் பொறாமைகொள்ளாமலும் ஊக்கமளித்துப் பொருளுதவி செய்தல் தொல்புரவாசிகளதும் அயற்கிராமவாசிகளதும் பெருங் கடனாகும். இவர்கள் நாவலர் குருபூசையைக் கொண்டாடுவது மாத்திரமல்லாமல் நாவலரவர்களை எப்பொழுதும் நினைவி லிருத்துவதற்கு நாவலர் நினைவுமல ரொன்றை வெளியிடவேண்ணி முயன்றார்கள். ஆனால் கட்டுரை அனுப்ப விரும்பிய தமிழறிஞர்கள் பலருடைய வேண்டுகோளுக்காகவும், தமிழன்பர்கள் அளித்த ஆதரவால் நினைவுமலரை முன்னர் எண்ணியதிலும் பார்க்கப் பெரிதாகவும் சிறப்பாகவும் வெளியிட வேண்டுமென்னும் எண்ணம் உதித்தமையாலும் அம்மலரை இன்று வெளியிட முடியவில்லை. திருவருட்டுணையாலும் தமிழறிஞர்கள் உதவியாலும் அஃது விரைவில் மலர்ந்து நறுந்தேன் பிலிற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இன்று, இக்கொண்டாட்டத்தைத் தலைமை வகித்து நடத்த, சங்கத்தாருடைய வேண்டுகோட் கிணங்கி வந்திருக்கும் தலைவரையும், பிரசாரகரையும் வரவேற்கின்றேன். உங்கள் யாவரையும் மறுமுறையும் மகிழ்வுடன் வரவேற்கின்றேன். இத்தினக் கொண்டாட்டம் சிறப்பாய் நடக்கவும், 'தொல்புரம் இளைஞர் கலாவிருத்திச் சங்கம்' நாளுடன் ஓங்கவும் உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்து நிற்கும் சிவபெருமான் அருள் புரிவாராக.

பூச்சிந்தும் நறுந்தேன்போற் பொருளோடு
சொல்லணிசேர்
பாச்சிந்தும் புலவர்கள் பாடும்புகழ்
படைத்தவனை
காச்சிந்தும் மலர்போலக் கற்றுணர்ந்த
பெரியோர்கள்
நாச்சிந்தும் இசைமலிந்த நாவலனே
வாழிமாதோ.

"வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே !"

நாவலர் திருவடி வாழ்க ! தமிழ்த்தாய் வாழ்க !!

மங்கள விருத்தம்.

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகசொரூப செகதீச திருமங்களம்
தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த திகழீச திருமங்களம்
பேர்கொண்ட சதுர்மறையின் முதலிலகு பிரணவப் பிரகாச திருமங்களம்
பிறைநுதலொ டயில்விழிகொள் வலவையெனு மரிவையிற் பெருநேச திருமங்களம்
ஊர்கொண்ட பரிதிமணி யெனவிலகு முதரமதில் ஒளிர்தேச திருமங்களம்
ஒருவெண்ணெய் நல்லையமர் மெய்கண்ட தேசிகற் குபதேச திருமங்களம்
கார்கொண்ட கரடதட கயமுகவ வங்குசக் கரராச திருமங்களம்
கருணேச நல்லையங் கைலாச புரிவாச கவினேறு கணராசனே.

—நாவலர்.

தொல்புரம் இளைஞர் கலாவிருத்திச்சங்கம்.

போஷகர்: { M. கிருஷ்ணர் J. P.,
பண்டிதர், கா. பொ. இரத்தினம்.
தலைவர்: வழக்கறிஞர் வே. இளையதம்பி.
காரியதரிசி: நா. சிவபாதம்.
தனாதிகாரி: கோ. கந்தையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

முதன்மையான தேசியத்

தமிழ் வார வெளியீடு.

இஃது

இலங்கை, இந்திய, பர்மா, மலாயா, தென் ஆபிரிக்கா, பிஜித்தீவு, பிரிட்டன் முதலாய இடங்களில், ஏராளமான சந்தாதாரர்களையும், விளம்பரகர்த்தாக்களையு முடைய பிரபல்யம் பெற்ற பத்திரிகை.

எல்லாச் சாகியத்தாராலும் ஆதரிக்கப்படுகிறது.

விளம்பரம் செய்து

வியாபாரத்திலோ கைத்தொழில் முதலியவற்றிலோ லாபமடையவேண்டுமானால்

ஈழகேசரியில்

உங்கள் விளம்பரத்தைப் பிரசுரஞ் செய்யுங்கள்.

ஒவ்வொரு தமிழகத்திலும் ஈழகேசரி வாசிக்கப்படுகிறது.

விளம்பரவிகிதம் குறைவாக்கப்பட்டிருக்கிறது.

மாதிரிப்பிரதி இனாமாக அனுப்பப்படும்.

விபரமறிய வேண்டுவோர் எழுதியறியவும.

'ஈழகேசரி' விளம்பர அதிபர்,

சுன்னாகம், இலங்கை.

தமிழ் மகள்

பெண்களின் முன்னேற்றத்தைக்கருதி வெளிவருவதோர்

இனிய தமிழ் மாதாந்தப் பத்திரிகை

ஆண்டுச்சந்தா : இலங்கை, இந்தியா ரூபா 3-00

மலாய்நாடு, தொடுவாய்ப்பகுதி டலர் 5-00 வெளிநாடுகள் சிலின் 10-00

ஆசிரியை, மங்களம்மாள் மாசிலாமணி

'சாந்திநிகேதன்' யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட - இலங்கையில்

வித்தியாசாலைகளுக்குரிய

எல்லாவித புத்தகங்களும்
பள்ளிக்கூட உபகரணங்களும்
பெறக்கூடிய முதன்மையான இடம்

சண்முகநாதன் புத்தகசாலையே!

இலங்கையிலுள்ள பெரும்பான்மையான
கலாசாலைகள், தோட்டப்பாடசாலைகள்
இன்னும்
பிரபல புத்தக வியாபாரிகளுக்கும்
பள்ளிக்கூட உபகரணங்கள்
கொடுத்துவருகிறவர்களும்

சண்முகநாதன் புத்தகசாலையாரே!

உங்கள் பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய
எல்லாவிதமான புத்தகங்களுக்கும்
உபகரணங்களுக்கும்

பின்வரும் விலாசத்துக்கே எழுதுங்கள்!

எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளகாந்தன்

அல்லது

கேசரிவிஜயம்

குறைந்தவிலை !

17 அத்தியாயங்கள்

நிறைந்தபொருள் !

550 பக்கங்கள்

இரண்டு பாகமும் சேர்ந்து ரூபா 2-00

அருணோதயம்

அல்லது

சிம்மக்கொடி

(வீரம் ததும்பும் சிறந்த நாவல்)

16 அத்தியாயங்கள்

331 பக்கங்கள்

விலை ரூபா 1-50

பிரபல புத்தகவியாபாரிகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தனலக்குமி புத்தகசாலை,

சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்வேட்ஸ் கணிதங்கள்

EDWARD'S' TAMIL ARITHMETICS

புதுக்கோட் பிரமாணங்களுக்கியைய வித்தியாபகுதியாரின் சுற்று நிருபத்திற் காட்டிய அளவான எழுத்துகளில் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் மாணவர்களுக் கெளிதில் விளங்கக்கூடிய முறையில் பல நிறப் படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றன.

ஷை புத்தகங்கள் பிரபல புத்தக வியாபாரி களிடமும் எம்மிடமும் தொகைக்கும் சில்லறைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய பதிப்புகள்

விலை விபரம்:-

கணிதங்கள்

1-ம் தரக் கணிதம்	சதம்	30
2-ம் ,,	,,	45
3-ம் ,,	,,	45
4-ம் ,,	,,	65
5-ம் ,,	,,	60
6-ம் ,,	ரூ.	1-35
7-ம் ,,	,,	1-15
8-ம் (J. S C., S. S. C.)பாடீ கணிதம் வீசகணிதம்(அச்சில்)		

மனக்கணிதங்கள்

		சதம்
2-ம் தர மனக்கணிதம்		15
3-ம்	,,	25
4-ம்	,,	30
5-ம்	,,	30
6-ம்	,,	30
7-ம்	,,	35
8-ம்	,,	(அச்சில்)

மேற் குறிக்கப்பட்ட கணிதங்கள் ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்களாக இலங்கையிலுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடங்களெல்லா வற்றிலும் பாவிக்கப்பட்டும் அவ்வக்கால முறைகளுக்கிணங்கக் கணி தம் படிப்பதில் அனுபவமுள்ளவர்களால் எழுதப்பட்டும் உள்ளன.

PUBLISHER:- **J. V. Gunaratnam, Kokuvil.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வே. சிவக்கொழுந்து

அவர்களின்

புதிய பிரசுரங்கள்

புதிய
பூமிசாஸ்திரக் கதைகள்
4-ம் வகுப்பு
விலை சதம் **40**

புதிய பாடத்திட்ட
அமைவு!
இலகுவான உரைநடை!
போன்ற நலன்

புதிய
பூமிசாஸ்திரக் கதைகள்
5-ம் வகுப்பு
விலை சதம் **50**

அழகிய படங்கள்!
முறையான பாடஒழுங்கு!
பலவும் பொருந்தியன.

புதிய பாட கணிதம்

வித்தியாபகுதியாரது 1938-ம்ஆ
ஜே. எஸ். ஸி., எஸ். எஸ் ஸி.
பாடத்திட்டத்துக்கு
அமைவுற்றது.

சிறந்த விளக்க முறைகள்!
நூற்றுக்கணக்கான
உதாரணங்கள்!
விசேட அப்பியாசங்கள்!
யாவும் அடங்கியது.

விலை ரூபா 1-25.

Publishers :

வடலங்கா புத்தகசாலை,

பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புத்தகங்கள் எல்லாப் புத்தக வியாபாரிகளிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது யாவராலும்
சிறந்ததெனக் கொள்ளப்படும் கணிதம் எது?

திருத்திய பாடவமைப்புக் கணிதங்கள்

V. எற்வேட் சரவணமுத்து

அவர்களால்

வித்தியாபகுதியாரின் புதிய பாடத்திட்டத்திற்கும்
பொழிப்பிற்கும் ஏற்ப இயற்றப்பட்டவை.

1. இரண்டாந்தரக் கணிதம் (156 பக்கம்) விலை சதம் 35
2. மூன்றாந்தரக் கணிதம் (192 பக்கம்) விலை சதம் 40
3. நான்காந்தரக் கணிதம் விலை சதம் 50
4. ஐந்தாந்தரக் கணிதம் விலை சதம் 60

குறித்த கணிதநூல்களின் சிறப்பு, இந்நூலாசிரியரா லியற்றப்பட்ட ஏனைய நூல்களிலிருந்து தமிழாசிரியர்கள் நன்கு அறிந்துகொள்ளக்கூடியதா யிருத்தலின், இங்கு காட்டப்படவில்லை.

எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பிரசுரகர்த்தாக்கள் :

சண்முகநாதன் புத்தகசாலை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்

தனலக்குமி புத்தகசாலை.

THANALUCKUMY BOOK DEPOT

வித்தியாசாலைகளின் புத்த

குசேலர் சரிதம் .... -40
(ஐந்தாம் வகுப்புக்கு உபபாடமாக உபயோகித்தற்குரியது)
இரகுவமிச சரிதாமிர்தம் -50
(ஆறும் வகுப்புக்கு உபபாடமாக உபயோகித்தற்குரியது)
தமிழ்மஞ்சரி 1-ம் பாகம் -50
(ஆறும் வகுப்பிற்கு இலக்கியபாடமாக உபயோகித்தற்குரியது)
தமிழ்மஞ்சரி 2-ம் பாகம் (அச்சில்) 60
கிராதார்ச்சுனீயம் .... -60
(ஏழாம் வகுப்புக்கு உபபாடமாக உபயோகித்தற்குரியது)
தொல்காப்பியம் கணேசையர்பதிப்பு
எழுத்ததிகாரம் 4-00
(உரைவிளக்கக் குறிப்புகளுடன்)
சொல்லதிகாரம்-சேனாவரையம் 5-00
(உரைவிளக்கக் குறிப்புகளுடன்)
நாட்டுச்சீவன சாஸ்திர பாடபுத்தகம் 2-00
(J.S.C. வகுப்புத்தொடக்கம் ஆசிரிய தாதர பத்திர வகுப்பு ஈறாக உபயோகிக்கத்தக்கது)
சரித்திரக் குறிப்பு ... -60
பிரித்தானியாவும் அரசன் அயல்நாடுகளும்
உலகசரித்திர வினாவிடை -50
இலங்கைச்சரித்திர வினாவிடை (அச்சில்)
சரித்திர கதாவாசகம்
இரண்டாம் வகுப்பு .. -25
மூன்றும் ,, .. -30
நான்காம் ,, .. -40
ஐந்தாம் ,, .. -60
பாலர் பாமணிமாலை .. .. -15

உபயோகத்துக்குரிய கங்கள்

பூமிசாஸ்திரக் கதைகள்
இரண்டாம் வகுப்பு .. -30
மூன்றும் ,, .. -35
நான்காம் ,, .. -45
ஐந்தாம் ,, .. -50
சிசுபால சரிதம் (புதிய பதிப்பு) -60
நளவெண்பா கலிதொடர்காண்டம் -60
(100 செய்யுள் உரையுடன்)
நளவெண்பாச்சுருக்கம் உரையுடன் 1-00
அகலிகைப்படலம் .. -60
மகாபாரதம் வாரணவதச்சருக்கம் -60
,, சூதுபோர்ச்சருக்கம் உரை 1-25
,, பழம்பொருந்து சருக்கம், நச்சுப்பொய்கைச் சருக்கம், நாடுகரந்துறை சருக்கம் -75
மகோற்சவ சந்திரிகை .. -30
கந்தபுராண விளக்கம் .. -40
திரு-அருட்பாத்திரட்டு .. -15
கண்ணகி கதை .. .. -10
இராமோதந்தம் உரையுடன் -50
ஷை ஆங்கில மொழிபெயர்ப்பு -30
மேகதூதக்காரிகை உரையுடன் -60
சாணக்கிய நீதிவெண்பா .. -20
நம்பியகப்பொருள் .. 1-50
யாப்பருங்கலக் காரிகை (அச்சில்) 1-50
திருக்குறள் 10 அதிகாரம் 49–58 -40
பிரித்தானிய சக்கிராதிபத்தியச் சரித்திரச் சுருக்கம் .. 1-00
ஈழமண்டல தேவாரமும் திருப்புகழும் குறிப்புடன் -0 5
நவராத்திரிப் பாக்கள் .. -20
நாவலர் நினைவுமலர் .. 1-00

வித்தியாசாலைகளுக்குரிய இலங்கை, இந்திய பதிப்புக்களும், உபகரணப் பொருள்களும் கிடைக்கும்.

CHUNNAKAM.

ARCHIVES

University of Jaffna
40797
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED AT THE THIRUMAKAL PRESS, CHUNNAKAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40797

REFERENCE
For Permanent Use in the Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org